# இடது

சமூக அரசியல் கலை இலக்கியக் காலாண்டிதழ்

## வ உ சி சிறப்பிதழ்


புதுமலர் பதிப்பகம்

ஈரோடு.

**இடது ( 21 ) வ உ சி சிறப்பிதழ்**

**[ ஆகஸ்டு - அக்டோபர் 2022 ]** திருவள்ளுவர் ஆண்டு *2053*

ஆசிரியர் : **கண. குறிஞ்சி : - 94433 07681**

ஆசிரியர் குழு : ஓடை பொ. துரை அரசன்,
செ. நடேசன், ரவிகுமாரசாமி.

பொருளாளர் : மகாலிங்கம் (எ) மாலி- 94433 87898
*179*, EPB நகர், ஈரோடு - *638 004.* :

மின்னஞ்சல் : gana.kurinji@gmail.com

ஒளியச்சு / வடிவமைப்பு: புதுமலர் பதிப்பகம், ஈரோடு.

தனி இதழ் : உரூ. *100*
ஆண்டுக்கட்டணம் (நான்கு இதழ்கள்) உரூ.*400*
புரவலர் உரூ.*1000* (ஓராண்டு)

ஆண்டுக்கட்டணம் அனுப்புபவர்கள், தொகை அனுப்பிய பிறகு, **மறவாமல் கீழ்க்காணும் எண்களுக்கு** அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு கனிவுடன் வேண்டுகிறோம். இல்லாவிடின், இதழை அனுப்புவதில் சிரமம் உண்டாகிவிடும்.

**புலனம்(வாட்ஸ்அப்) மூலம் செய்தி அனுப்புவதைத் தவிர்க்கவும்.**

சென்றமுறை ஆண்டுக்கட்டணம் செலுத்திய சிலர், தகவல் ஏதும் தெரிவிக்காததால், யார் அதைச் செலுத்தினார்கள் என்பது இது வரை தெரியவில்லை. எனவே ஆண்டுக்கட்டணம் செலுத்திய உவிவரத்தைத் தவறாமல் தெரிவிக்குமாறு மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறோம்.

ஆண்டுக்கட்டணம் குறித்த தொடர்பு எண்கள்
**94433 07681 / 94433 87898 / 88254 68156**

இடது இதழுக்குப் புரவலர் மற்றும் ஆண்டுக்கட்டணம் செலுத்த வேண்டிய வங்கிக் கணக்கு விவரம்.

Account Holder : S. MAHALINGAM
Bank : CITY UNION BANK, ERODE
S/B A/C No. : 500 101010 346 239
IFS CODE NO. : CIUB 00000 59

G pay: 94433 87898 / S.MAHALINGAM

# உள்ளடக்கம்

பக்கம்

(1) இடதின் குரல் 05

(2) மக்கள் வாழ்வில் வ. உ. சிதம்பரனார் -
அறியப்படாத வாய்மொழிக்கதைகள் -- **ரெங்கையா முருகன்.** 09

(3) வ. உ. சி அவர்களின் மொழியும் பொருளியலும் 17
-- **கதிர் நம்பி.**

(4) வ. உ. சிதம்பரனாரின் சமூகப் பார்வை
-- **கொளத்தூர் மணி.** 28

(5) பெரியாரின் சுயமரியாதையும், வ. உ, சியின் தன் விடுதலையும்
-- **திருமாவேலன்.** 40

(6) சிதம்பரம் பிள்ளை -- ஆங்கிலம் - **சுனில் கில்நானி**
தமிழில் -- **அக்களூர் ரவி.** 50

(7) வ. உ. சிதம்பரனாரின் சிந்தனைப் புலம்
-- **கண. குறிஞ்சி.** 65

(8) வ. உ. சி.யின் காலச்சூழலும் இக்காலச் சூழலும்
-- **குருசாமி மயில்வாகனன்.** 83

(9) வ. உ. சிதம்பரனார் குறித்த கவிதைகள்

(10) ஒவ்வொரு இந்தியனும் ஒவ்வொரு ஜாதியாயிருந்தாலென்ன?
-- **ஆ. அறிவழகன்.** 90

(11) கப்பலோட்டிய தமிழன் திரைப்படம் - சொன்ன செய்தியும் சொல்லாத
சேதியும் -- **நிழல் திருநாவுக்கரசு** 104

12) வ. உ. சி.யின் தொல்காப்பியப் பதிப்புகள் 108
-- **முனைவர் ஜெய்கணேசன்.**

(13) தத்துவஞானிகள் தன்மை குன்றார் 118
-- **முனைவர் திருமூலர் முருகன்.**

(14) சுதேசியம் ஒன்றே சுகம்பல அளிக்கும் 130
-- **முனைவர் யாழ் சந்திரா.**

(15) புத்தகப் பேழை 140

# இடது இதழ்
# புரவலர்களுக்கு நன்றி

| | உரூவா |
|---|---|
| பேரா, சங்கரலிங்கம், கோவை | 1,000 |
| சுப்புலட்சுமி ஜெகதீசன், | 1,000 |
| பேரா. ஜி.கே. இராமசாமி, பெங்களூரு (இரண்டாம் முறை) | 2,000 |
| அவைநாயகன், கோவை | 1,000 |
| முனைவர் பூங்குன்றன், சென்னை | 1,000 |
| புலவர் பொன்முடி. சுப்பையன், கண்ணம்பாளையம், கோவை | 1,000 |
| உஸ்மான் அலி, கோவை (இரண்டாம் முறை) | 1,000 |
| வழ. ப. பா. மோகன், பவானி | 2,000 |

---

"இடது" இதழ் கிடைக்கும் இடங்கள் ---

* **பாரதி புத்தகாலயம்,** சென்னை.
* **டிஸ்கவரி புக் பேலஸ்,** சென்னை.
* **விஜயா பதிப்பகம்,** கோவை.
* **நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்** , கோவை / ஈரோடு.
* **எதிர் வெளியீடு,** பொள்ளாச்சி.
* **பாலம் புத்தக நிலையம்,** சேலம்.

# இடதின் குரல்

**வ**.உ.சிதம்பரனார் ( 1872 -- 1936 ) அவர்களின் 150 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, கப்பலோட்டிய தமிழரைச் சிறப்பிக்கும் வண்ணம் இடது ( 21 ) இதழ் வ. உ. சி. அவர்களின் சிறப்பிதழாக மலர்கிறது.

விடுதலைப் போராட்டத்தியாகி, தமிழறிஞர், தொழிற்சங்கச் செயல்பாட்டாளர், மக்கள் வழக்குரைஞர், பெண்ணுரிமைப் போராளி, எழுத்தாளர், பதிப்பாளர், மொழிபெயர்ப்பாளர், கவிஞர், சமநீதிக் காவலர் எனும் பன்முக ஆளுமைகள் கொண்ட வ. உ. சி. அவர்களின் தகுதிக்கேற்ற அங்கீகாரத்தை இதுவரை இந்திய ஒன்றிய அரசு வழங்கவில்லை. ஒருமுறை அவருக்காக அஞ்சல்தலை வெளியிட்டதோடு சரி.

இதுவரை காட்டிய அலட்சியத்திற்கு ஈடுசெய்யும் வகையில் அன்னாரது 150-ஆம் ஆண்டு பிறந்தநாளை மிகச் சிறப்பாக ஒன்றிய அரசு கொண்டாட வேண்டும். அவருக்கு மீண்டும் ஓர் அஞ்சல்தலை மற்றும் சிறப்பு நாணயமும் வெளியிட வேண்டும்.

சென்னையிலுள்ள கடல்சார் பல்கலைக் கழகத்திற்கு வஉசி அவர்களின் பெயரைச் சூட்ட வேண்டும்.

நாடாளுமன்றத்தில் அவரது முழு உருவப் படம் நிரந்தரமாக வைக்கப்பட்டு, முறைப்படி அஞ்சலி செலுத்த வேண்டும்.

தமிழக அரசைப் பொறுத்த வரை தமிழகத்திலுள்ள முக்கியப் பல்கலைக் கழகங்களில் வஉசி பெயரால் தனி இருக்கை நிறுவி, அவற்றின் வழி வ. உ. சி. அவர்கள் குறித்த ஆய்வுக் கருத்தரங்குகளைத் தொடர்ந்து நடத்திட வேண்டும். ஆய்வு நூல்களையும் வெளியிட வேண்டும்.

வ. உ. சி. அவர்களின் முழுமையான வாழ்க்கை வரலாற்றையும், அவரது படைப்புகளையும் ஆங்கிலத்தில் வெளியிட வேண்டும்.

வஉசி அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 5-ஆம் நாளை **'வழக்கறிஞர் நாள்'** என அறிவித்து, சிறந்த வழக்கறிஞர்களுக்கு வ. உ. சி. அவர்கள் பெயரால் விருது வழங்க வேண்டும். சென்னை உத்தண்டியில் இயங்கிவரும் மத்திய கடல்சார் பல்கலைக்கழகத்தினை வஉசி அவர்கள் பெயரால் மாற்றி அமைக்க வேண்டும்.

அதேபோல், வ.உ.சி அவர்கள் சென்னையில் வாழ்ந்த இடங்களான பரிபூர்ண விநாயகர் கோவில் தெரு, சிந்தாதிரிப்பேட்டை அருணாசல நாயக்கர் வீதி மற்றும் பெரம்பூர் கந்தபிள்ளை தெரு ஆகிய இடங்களில்

வஉசி வாழ்ந்த நாள்களைக் குறிக்கும்படியான நினைவுப்பலகை வைக்கப்பட வேண்டும். கார்ல் மார்க்ஸ் வாழ்ந்த இலண்டன் தெருவில் இப்படிப்பட்ட குறிப்பு இடம்பெற்றுள்ளது.

மேலும் சென்னை வால்டாக்ஸ் சாலையை வ. உ. சி. சாலை எனப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும்.

குறிப்பாக வஉசி அவர்களின் நாட்டுப்பற்று மற்றும் மொழிப்பற்று ஆகியவற்றை இளைஞர்களிடையேயும், மாணாக்கர்களிடையேயும் கொண்டு செல்ல வேண்டியது மிக முக்கியமான கடமையாகும்.

வ. உ. சி அவர்கள் முதலில் தமிழர்களால் கொண்டாடப்பட வேண்டும். அதன் மூலம் இந்தியத் துணை கண்டம் முழுவதும் அவரது புகழ் பரவ வழி பிறக்கும்.

அரசுகளும் மக்களும் இணைந்து மேற்கொள்ள வேண்டிய பணியாகும் இது.

இவை தவிர, வ. உ. சி. அவர்களது காலத்திலிருந்து இன்று வரை தொடரும் விரும்பத்தகாத நிகழ்வுகள் சிலவற்றைக் களைவதும் மிகவும் முக்கியமானது.

ராஜதுரோகச் சட்டத்தின் கீழ் ( 124 - A ) நாடுகடத்தலுடன் கூடிய ஆயுள் தண்டனை வஉசி அவர்களுக்கு வழங்கப்பட்டது என்பது வரலாற்றுப் பதிவு. இந்தக் கருப்புச் சட்டத்தின் கீழ் பகத்சிங் முதல் காந்தியார் வரை எண்ணற்ற விடுதலைப் போராட்டத் தியாகிகள் சிறையில் அடைக்கப் பட்டார்கள். எனவே இந்தியா விடுதலை அடைந்தவுடன், இந்தக் கருப்புச் சட்டம் உடனடியாக நீக்கப்படும் எனச் சவகர்லால் நேரு உட்படப் பலரும் வாக்குறுதி அளித்தனர். ஆனால் விடுதலை பெற்ற பிறகும் இக்கருப்புச்சட்டம் நீக்கப்படவில்லை. மாறாக, எண்ணற்ற சமூகச்செயல் பாட்டாளர்கள், சனநாயகப் போராளிகள் இக்கொடிய சட்டத்தின் கீழ்த் தண்டிக்கப்பட்டுச் சிறையில் தள்ளப் பட்டனர். இச்சட்டத்தை இயற்றிய இங்கிலாந்திலேயே இச்சட்டம் முற்றிலும் நீக்கப்பட்ட விட்டது. ஆனால், இந்தியாவில் இது இன்னும் இந்தியாவில் அரசியல் காரணங்களுக்காகத் தொடர்ந்து நீடித்து வருவது மிகப் பெரும் அவலம்.

இச்சட்டம் குறித்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி. ரமணா அவர்கள் குறிப்பிட்டது கருதத் தக்கதாகும்.

“ஒரு மரத்துண்டிலிருந்து நாற்காலி செய்வதற்காகக் கொடுக்கப்பட்ட ரம்பத்தைப் பயன்படுத்தி ஒட்டுமொத்தக் காட்டையே அழிப்பதற்கு இணையாக 124 - A சட்டப் பிரிவு உள்ளது. இதனால் உண்மையிலேயே தண்டிக்கப் படுபவர்கள் மிகவும்.குறைவு. இதன் விசாரணையே ஒரு தண்டனை போலப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இதற்குப் பொறுப்பேற்கக் கூடியவர்கள் யாரும் இல்லை. ஏதாவது ஒரு காரணத்திற்காகக் கிராமத்தில் உள்ள ஒருவரை ஒரு காவல்துறை அதிகாரி தண்டிக்க விரும்பினால், அவர் இந்தப் பிரிவை பயன்படுத்த முடியும். எனவே மக்கள் இதுகுறித்து மிகுந்த அச்சத்தில் உள்ளனர். விடுதலை பெற்று 75 ஆண்டுகள் கடந்த பின்னும் இந்தச் சட்டத்தை ஏன்

தொடர வேண்டும்?'' எனும் நீதிபதி அவர்களின் கேள்வி மிகவும் பொருத்தமடையதாகும்.

விடுதலைப் போராட்ட வீரர் விபின் சந்திரபால் அவர்கள் விடுதலை செய்யப் பட்டதை வரவேற்று, வ. உ. சி. அவர்கள் தூத்துக்குடியில் பேசக்கூடாது என ஆங்கில அரசு தடை போட்டது. ஆனால், அதை மீறிக் கருத்துரிமையை நிலைநாட்டும் வண்ணம், வ. உ. சி அவர்களும் சுப்பிரமணிய சிவா அவர்களும் மாபெரும் பொதுக்கூட்டத்தில் வீரவுரை ஆற்றினர். இதன் காரணமாக அவர்கள் இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

வ. உ. சி. அவர்கள் காலத்திலிருந்த அதே சூழல் இன்றும் நிலவுகிறது. சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் ( Unlawful Activities Prevention Act - UAPA ) எனும் சட்டத்தைப் பயன்படுத்தி கருத்துரிமைப் போராளிகள் சிறைக் கொட்டடியில் பூட்டப்பட்டுள்ளனர்.

இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் 'தீவிரவாதிகள்' என முத்திரை குத்தப்பட்டு, அவர்களுக்குப் பிணை மறுக்கப் படுகிறது. சிறையில் இருக்கும் அவர்களே தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை மெய்ப்பிக்க வேண்டும் என்பது போன்ற கொடுமையான சட்டப்பிரிவுகள் இதில் அடங்கியுள்ளன.

இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட, பழங்குடி மக்களுக்காகப் போராடிய ஸ்டேன்சாமி அவர்கள் பிணை கிடைக்காமல் சிறையிலேயே மடிந்து விட்டார்.

2014-ல் நரேந்திர மோடி அவர்கள் பதவியேற்ற பிறகு, இந்தியாவில் இதுவரை 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இந்த ஊபாச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களில் மிகப்பெரும்பான்மையோர் ஏழை எளிய அப்பாவி மக்களே ஆவர். இதைத் தில்லி உயர்நீதிமன்ற நீதிபதிகளே குறிப்பிட்டுள்ளனர்.

"போராட்டத்துக்கும் தீவிரவாதச் செயல்களுக்கும் இடையே ஒரே ஒரு கோடு அளவுதான் வேறுபாடு உள்ளது. கருத்து வேறுபாடு கொண்டவர்களை அடக்க நினைக்கும் ஒன்றிய அரசின் முனைப்பைப் பார்க்கும் பொழுது, அதன் மனதில் இருந்து அந்தக் கோடு மெல்ல மெல்ல மறைந்து வருவதாகவே கருத முடிகிறது. அரசின் இந்த எண்ணத்திற்கு வலு சேர்க்கப்பட்டால், அதுதான் சனநாயகத்தின் கருப்பு நாளாகும். சாதாரணக் குற்றங்களுக்கு எல்லாம் ஊபாச் சட்டத்தைப் பயன்படுத்துவது முறையல்ல'' எனக் குடியுரிமைத் திருத்தச் சட்டப் போராட்டத்தில் ஈடுபட்ட ஜவஹர்லால் நேருப் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பிணை வழங்கிய வழக்கில், தில்லி உயர்நீதிமன்றம் இவ்வாறு தெளிவுபடுத்தி உள்ளது. எனவே வஉசி அவர்களுக்கு எதிராகப் போடப்பட்ட அரசு விரோதச் சட்டம் ( 124 - A - இராஜ துரோகச் சட்டம் என இதைக் குறிப்பிடுவது சரியல்ல, இது அரச விரோதச் சட்டம் மட்டுமே ) மற்றும் கருத்துரிமைக்கு எதிரான சட்டங்களைத் திரும்ப பெறுவது இத்தருணத்தில் மிகவும் முக்கியமானதாகும்.

அடுத்து, வ. உ. சி அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டுக் கொடும் துன்பங்களுக்கு உள்ளானார் என்பது வேதனை மிக்க செய்தியாகும். அவரது தலைமழிக்கப்பட்டு, சிவப்புக் குல்லா வழங்கப்பட்டது. முரட்டுத் துணியாலான சட்டை தரப்பட்டது. சணல் இழையைக் கிழிக்கும் பணி தரப்பட்டதால், அவரது கைகளில் இரத்தக் கொப்பளங்கள் உண்டாயின. எனவே இடுப்பில் இரும்புச் சங்கிலியைப் பிணைத்து செக்கின் நுகத்தடியில் அதை இணைத்து, கொதிக்கும் வெயிலில் செருப்புகளின்றிச் செக்கிழுக்க வைக்கப்பட்டார். அவருக்குக் கல்/ மண் கலந்த உணவு வழங்கப்பட்டது. அவர் இருந்த சிறையில் ‘கம்பளி அடி‘ எனும் கொடிய தண்டனை சில கைதிகளுக்கு வழங்கப்பட்டது. சிறையில் உள்ள ஒருவரைக் கம்பளியால் இழுத்து மூடி கொலைக் குற்றவாளிகள் சிறை நிர்வாகத்தின் ஆதரவோடு கண்மண் தெரியாமல் அடித்து நொறுக்கும் இந்தச் சித்திரவதையை எதிர்த்து வ. உ. சி. அவர்கள் போராடினார்.

சிறைச்சாலைகளில் இன்று ‘கம்பிளி அடி‘ இல்லை. ஆனால் சிறைக்கைதிகள் அடிக்கடி ‘வழுக்கி விழுந்து‘ கைகால்களில் எலும்பு முறிவு ஏற்பட்டுக் கட்டுக்களுடன் அவதிப்படுவதைக் காண முடிகிறது. எனவே வ. உ. சி. அவர்கள் முன்னெடுத்தது போல், சிறைச்சீர்திருத்தங்களை இன்றைக்கும் மேற்வேண்டிய சூழல் நிலவுகிறது.

ஆங்கிலேயர்களை எதிர்த்துக் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. என்பதை அனைவரும் அறிவர். ஒரு சில பெரும் பணக்காரர்களை மட்டும் நம்பிக் கப்பல் நிறுவனத்தை அவர் உருவாக்கவில்லை. மாறாக பொதுமக்கள் அனைவருடைய பங்களிப்போடு கூடிய ஒரு பொது நிறுவனமாக அதை வ. உ. சி. அவர்கள் கட்டியமைத்தார்கள். அதன் அடிப்படையிலேயே இந்திய விடுதலைக்குப் பிறகு, பொதுத்துறை நிறுவனங்கள் ஒன்றிய அரசால் பெருமளவு உருவாக்கப்பட்டன. இதனால் எண்ணற்ற மக்கள் பயன்பெற்றனர் வேலை வாய்ப்பு வளர்ந்தது. ஆனால் கடந்த எட்டு ஆண்டுகளில் இந்தியாவில் ஒரே ஒரு பொதுத்துறை நிறுவனம் கூட உருவாக்கப்படவில்லை என்பதோடு, இந்தக் காலகட்டத்தில் 23 பொதுத்துறை நிறுவனங்கள் தனியாருக்கு விற்கப்பட்டன என்பது மிகப்பெரும் அவலமாகும். பொதுத்துறை நிறுவனங்கள் விற்கப்பட்டது மட்டுமல்லாமல், பெரும் பணக்காரர்களுக்கும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் 2014-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை ஏறக்குறைய 10 இலட்சம் கோடி ரூபாய் வராக்கடனாகத் தள்ளுபடி செய்யப்பட்டது என்பது அதிர்ச்சி தரத்தக்க கூடிய செய்தியாகும்.

எனவே வ. உ. சி. அவர்களின் 150-ஆம் ஆண்டு நிறைவு விழா என்பதை வெறும் மாலை மரியாதை, புகழ் அஞ்சலி என்பதோடு நிறுத்திவிடாமல், அவர் பெரு வீரத்துடன் களமாடி உருவாக்கிய பல்வேறு சீர்திருத்தங்களை முன்னெடுப்பதுதான் அவருக்குச் செலுத்தக்கூடிய உண்மையான அஞ்சலியாக இருக்கும்.

☆ ☆ ☆

# மக்கள் நினைவில் வாழும் வ.உ.சிதம்பரனார்

## அறியப்படாத வாய்மொழிக் கதைகள்

**- ரெங்கையா முருகன்**

இந்திய விடுதலை வரலாற்றின் போராட்டக் குறியீடு வ.உ.சிதம்பரனார். வரலாற்றில் தவிர்க்க முடியாத ஒரு பெயராக தனித்துவத்துடன் நிலைத்து நிற்பவர் வ. உ. சிதம்பரனார். மலை அளவு பங்காற்றிய அவரது தியாகத்துக்கு கிடைத்த புகழ் வெளிச்சம் தினை அளவே. சமகால போராட்ட வீரர்களுக்கு அறிவியல்பூர்வமாக ஆவணங்கள் தொகுக்கப்பட்ட போதிலும் வ.உ. சிதம்பரனாருக்கு இன்னும் ஆய்வுமுறைப்படி ஆவணங்கள் தொகுக்கப்படாமல் இருப்பது துரதிர்ஷ்டமே.

குறிப்பாக வ. உ. சிதம்பரனாரின் அரசியல் இயங்கு தளத்திற்கு முக்கிய இடமாக விளங்கிய தூத்துக்குடி பகுதிகளில் பல்வேறு வாய்மொழி மரபுக் கதைகளில் மக்கள் மனதில் வ. உ. சி. அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார். வாய்மொழித் தரவுகள் உண்மையா அல்லது புனைவா என்ற தர்க்கத்திற்கு ஆட்பட்டாலும் முக்கிய ஆளுமையை மையம் கொண்டு, எழுத்து வடிவ ஆவணமாக இல்லாமல் வாய்மொழி மரபில் வாழ்ந்து வரும் வ. உ. சிதம்பரனார் குறித்த சில அரிய கதைகளை எழுத்தில் ஆவணப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் இக்கட்டுரை வரையப்படுகிறது.

### கதை-1 குடியானவருக்குப் பரிவு காட்டிய வ.உ.சி.

ஒரு குடியானவர்(ஏழை விவசாயி) மீது பொய்க் குற்றச்சாட்டின் பேரில் பிரிட்டீஷ் போலீசார் தொடுத்த வழக்கில் நீதிமன்றத்துக்கு வாய்தா என்ற பேரில் மன உளைச்சலுக்கு உட்படுத்தி பல தடவை அலைக்கழிக்க வைத்தனர். நீதிமன்றம் வர ஓட்டப்பிடாரம் அருகே அமைந்துள்ள கிராமத்திலிருந்து தூத்துக்குடி நீதிமன்றத்துக்குக் கால்நடையாகவோ வண்டி மாடு கட்டிக்கொண்டோதான் அந்த நாளில் செல்ல வேண்டும். பல காலமாக நீதிமன்றத்துக்கு அலைவதுடன் தாங்க முடியாத மன உளைச்சலில் அந்தக் குடியானவர் வரும் வழியில் ஒரு நாள் உலகம்மன் கோயில் அருகே மிகவும் கவலையுடன் அமர்ந்திருந்தார்.

அந்த சமயம் தற்செயலாக வ. உ. சி. வந்தவேளையில் மிக்க வேதனையோடு அமர்ந்திருந்த ஏழைக் குடியானவரை நோக்கி வந்து விசாரிக்கிறார். அந்தக் காலத்தில் மேட்டுக்குடி வகுப்பினரைச் சார்ந்தவர்கள் பொதுவாக

எளியவர்களைக் கண்டுகொள்ள மாட்டார்கள். வந்தவரோ பரம்பரை வக்கீல் குடும்பத்தைச் சார்ந்தவர். அந்த ஏழை குடியானவருக்கு உண்மையில் உதவ முன்வந்தவர். நொந்துபோன குடியானவரின் நிலை அறிந்து அவரை ஆசுவாசப்படுத்தி, மன உளைச்சலுக்கு ஆளாக்கப்பட்ட வழக்கு விவரங்களைக் கேட்டுக்கொண்டு குறிப்பு எடுத்துக் கொள்கிறார். மேலும் "இனிமேல் தாங்கள் நீதிமன்றப் படி ஏறவேண்டி இருக்காது. நல்ல செய்தி வீடு தேடி வரும். கவலைப்படாமல் வீடு போய் சேருங்கள்'' என்று குடியானவரை ஆற்றுப்படுத்திவிட்டுக் கிளம்பிச் சென்று விட்டார் வ. உ. சிதம்பரனார்.

மன உளைச்சலுக்கு ஆளான அந்த ஏழைக் குடியானவருடைய வழக்கு வ.உ.சி. அவர்களால் வாதாடப்பட்டு சுமுகமாக குடியானவருக்கு எதிராக இருந்த வழக்கு அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்ட வெற்றிச் செய்தி வீடு தேடி வந்தடைந்தது. அந்த ஏழை குடியானவர் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனார்.

அச்சமயம் அந்தக் குடியானவர் தனது வாரிசுகளிடம் பின்வருமாறு கூறுகிறார்: "அந்த உலகம்மன் தெய்வம்தான் கடவுள் மாதிரி எனக்கு உதவுவதற்காகவே வ. உ. சிதம்பரனாரை அனுப்பியுள்ளாள். அவர் மூலம் எனது வழக்கு வெற்றி அடைந்துள்ளது. ஆகையால் இனி வரப்போகும் நமது வம்சாவளியில் ஆண்குழந்தை பிறந்தால் உலகநாதன் என்றும், பெண்குழந்தை பிறந்தால் உலகம்மன் என்றும் பெயர் வையுங்கள்'' என்று சத்தியம் வாங்கிக் கொண்டாராம்.

இந்தக் கதைக்கு உரிய குடியானவருக்கு ஒருவகையில் உறவுக்காரர் நாவலாசிரியர் சோ. தர்மன். இவரது வம்சாவளியினரின் சடங்குக்குச் செல்கையில் நமது உறவுமுறைகளுக்கு சாஸ்தா கடவுள்தானே குல தெய்வம். உங்களுக்கு மட்டும் எப்படி உலகம்மன் குலதெய்வம் என்று கேட்டபோது அந்தக் குடும்பத்தினர் சோ. தர்மன் அவர்களிடம் இந்தக் கதைப் பின்புலத்தைக் கூறியுள்ளார்கள்.

இந்தச் செவி வழிச் செய்திக்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா என்று தேட ஆரம்பிக்கும்போது வ.உ.சி. தனது சுயசரிதையில் ஓர் இடத்தில் கீழ் வருமாறு குறிப்பிடும் நான்கு வரிகள் இடம்பெறுகிறது. இந்த நிகழ்வை ஒரு அனுமானமாக எடுத்துக் கொள்ளலாம்.

முடிமனில் என்னுடை முன்னோர் நாள்முதல் அடிமை புரியும் அறிவினைக் கொண்ட வேத நாயகம் எனும் மேம்படு பள்ளனை ஏதமில்லாமலே எண்ணிலா வழக்கில் அமிழ்த்தினர் போலீஸார் அனைத்தினும் திருப்பினேன்

முடிமன் என்பது ஓட்டப்பிடாரம் அருகே உள்ள ஒரு கிராமம். வேதநாயகம் எனும் குடியானவர் மீது போலீசாரால் போடப்பட்ட அனைத்து வழக்குகளிலிருந்தும் விடுவித்துத் தந்ததைக் குறிப்பிடுகிறார். இந்த வரிகள்

நம் காலத்தில் வாழ்ந்து வரும் சோ. தர்மன் கேட்ட வாய்மொழித் தரவுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த நிகழ்வு நடந்ததற்கான ஆதார ஆவணமாகக் கொள்ளலாம்.

**(கதை கூறியவர்: நாவலாசிரியர் திரு. சோ. தர்மன்; கதையைக் கேட்டுப் பகிர்ந்தவர்: திரு. லெனா குமார்)**

## கதை-2 வ.உ.சி. சிலம்பம் ஆடிய கதை

வ. உ. சிதம்பரனார் தூத்துக்குடியில் வாழ்ந்தபொழுது சுமார் 60 வயது நடந்து கொண்டிருக்கும் வேளையில் தனது தந்தை வ.உ.சி. கம்பு சுற்றி விளையாடியதை கண்ட காட்சியை அவரது மகன் பின்வருமாறு விளக்குகிறார்.

அம்மன் கோயில் கொடை விழா. அம்மன் சப்பர ஊர்வலம் முன் இரவில் வீதிவலம் வருகிறது. சப்பரத்திற்கு முன்பாக பலர் கேளிக்கை ஆட்டங்கள் ஆடி வருகின்றனர். குறிப்பாகச் சப்பரத்துக்கு முன்பாக சிலம்ப வீரர்கள் சிலம்பம் ஆடி வருகின்றனர். வழக்கமாக வ.உ.சி. வீட்டு முன்பு சிறிது நேரம் சிலம்பம் ஆடி வ.உ.சி.யிடம் வெகுமானம் வாங்கிச் செல்வது வழக்கமாக இருந்துள்ளது. அதாவது வ.உ.சி.யின் கையால் வேட்டியும் நேரியலும் வாங்கிச் செல்வதைச் சிலம்ப விளையாட்டு வீரர்கள் பரம வீர் சக்கர விருது பெறுவது போன்று பெருமை அடைவார்களாம்.

சிலம்பம் ஆடும் வீரர்கள் கம்பு வீசிச் சுழற்றுவதில் தனது அத்தனை திறமைகளையும் காண்பித்துக் கெண்டிருந்தனராம். பார்த்து இரசித்துக் கொண்டிருந்த வ.உ.சி.யால் இருப்புக் கொள்ள முடியாமல், தான் எழுந்து கம்பை வாங்கிக் கொண்டு சுழற்ற ஆரம்பித்தாராம். சுமார் அரைமணி நேரம் கூட்டம் வியக்கும் வண்ணம் பலத்த ஆரவாரத்துடன் கம்பைச் சுற்றி அசத்தியிருக்கிறார். இதனை நேரில் கண்ட மகன் கூறுவது அப்பாவைக் கூட்டத்தினர் கைதட்டி ஆரவாரம் செய்த நிகழ்வு மறக்கவே முடியாது என்று பதிவு செய்கிறார்.

அந்த சமயம் சிலம்பகுழுத் தலைவர் வ.உ.சி. அவர்களிடம் கேட்ட பரிசு, வ.உ.சி. கையால் சுழற்றிய கம்புதான் வேண்டும் என்றாராம். வ.உ.சி.யும் தான் சிலம்பத்திற்குப் பயன்படுத்திய கம்பையும் கொடுத்து, தனது கையால் சிலம்ப வீரருக்கு வேட்டியால் முண்டாசும் கட்டிவிட்டாராம்.

இந்தச் செய்திக்கு முகாந்திரமாக 1922ஆம் ஆண்டு கும்பகோணம் சுவாமிமலைக்கு வ.உ.சி. பயணம் செய்தபோது துரையனார் அழைப்பின்பேரில் விருந்துக்குச் செல்கிறார். அச்சமயம் துறையனாரிடம் வ.உ.சி. ஒரு வேண்டுகோள் வைக்கிறார். இந்த ஊரில் உள்ள அனைத்துச் சமுதாய நாட்டாண்மையாளர்களைச் சந்திக்க வேண்டும் என்கிறார். அதன்படி

அனைத்துச் சமுதாய முக்கியப் பிரமுகர்கள் வ.உ.சி.யைச் சந்திக்க வந்தனர் என்பதுதான். அனைவரிடமும் அவர் கேட்ட முக்கியமான கேள்வி சிலம்பம், மல்யுத்தம், குத்துச்சண்டை போன்ற தற்காப்பு வீரவிளையாட்டுக்களைப் பயில்கிறீர்களா என்பதுதான். ஏனெனில் நம் நாடு வரும் காலத்தில் எப்படியும் சுதந்திரம் அடைந்துவிடும். அச்சமயம் நம் நாட்டை நாம் தற்காத்துக் கொள்வதற்கு இந்த வீரவிளையாட்டுக்கள் அவசியம். நம்முடைய வம்சாவளியினருக்கு இவற்றைக் கற்றுக்கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார் வ.உ.சி. தற்சரித்திரத்தில் தான் விளையாடிய 35க்கும் மேற்பட்ட விளையாட்டுக்களைப் பதிவு செய்திருப்பார்.

**(வ.உ.சி.யின் மகன் திரு. வ.உ.சி. சுப்பிரமணியன் எழுதியது.)**

## கதை-3 செல்வநிலையாமைக் குறளுக்குத் தம் வாழ்க்கையை உவமானமாகக் கூறுதல்

தூத்துக்குடி வீட்டில் வசித்திருந்த சூழலில் சில மாணவர்களுக்குத் திருக்குறள் வகுப்பு எடுத்து வந்தார். ஒரு நாள் செல்வம் நிலையாமை அதிகாரம் சொல்லிக் கொடுக்கும் வேளையில் மாணவர்களுக்குப் பல்வேறு உரைகள் மூலமாக அர்த்தப்படுத்திக் கொண்டிருந்தார். ஒரு மாணவன் எழுந்து செல்வம் நிலையாமை குறித்து உங்கள் சொந்தக் கருத்து என்ன என்ற கேள்வியைக் கேட்டான்.

வசதிமிக்க வக்கீல் பரம்பரைக் குடும்பம். கப்பல் விட்டு ஆங்கிலேயர்களுடைய அடிவயிற்றை கலக்கியவர். கோரல்மில் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்களுக்கு அன்னமிட்டு போரினை வெற்றியடையச் செய்தவர் வ, உ, சி.

அவர் கொண்ட சுதேசிய கொள்கைப் பிடிப்பால் வருமானமிழந்து வறுமையான சூழலில் கேட்கப்படும் கேள்வி இது. அந்த நேரம் வ.உ.சி. சன்னல் வழியே பார்க்கிறார். தனது மனைவி மீனாட்சி அம்மாள் வீட்டின் சுற்றுச் சுவரில் காயவைத்த எரு வரட்டிகளை பிய்த்துக் கொண்டிருப்பதைக் காண்கிறார். கேள்வி கேட்ட மாணவனைப் பார்த்து, ''அம்மா என்ன செய்கிறார் என்று தெரிகிறதா'' என வ.உ.சி. அந்த மாணவரிடம் கேட்கிறார். அம்மையார் எரு வரட்டியைப் பிய்த்து எடுத்துக் கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை என்றார் அம் மாணவர்.. அச்சமயம் வ.உ.சி. அந்த மாணவனிடம் கூறியதாவது, ''இன்றைய வீட்டுச் சாப்பாட்டிற்கான பணத் தேவைக்கு விற்பனை செய்வதற்காக அம்மா எரு வரட்டியை எடுத்துக் கொண்டிருக்கிறார்'' என்றாராம். கலங்கிப்போய் வ.உ.சி.யின் முகத்தைப் பார்க்கிறான் அந்த மாணவன். பின்பு தொடர்கிறார், ''இதுதானப்பா நீ கேட்ட செல்வம் நிலையாமை குறித்த கேள்விக்கு எனது சொந்தக் கருத்து'' என்றாராம்.

செல்வம் நிலையாமையைக் குறித்து தனது வாழ்க்கையையே உவமான விளக்கமளிக்கத் திருக்குறள்படி வாழ்ந்த ஆளுமை வ.உ.சி. அவர்கள்.

**(கதை கூறியவர்: தூத்துக்குடி திரு. சரவணபெருமாள்; கூறக்கேட்டவர்: திரு. குருசாமி மயில்வாகனன்)**

## கதை-4 வ.உ.சி.யும் புத்தகப் பைண்டரும்

புத்தகப் பைண்டர் இசக்கி என்பவர் வ.உ.சி.யை நேரில் பார்த்தவர். வ.உ.சி.க்குப் புத்தகங்களைப் பைண்டிங் செய்து தருபவரும்கூட. வ.உ.சி.யின் வக்கீல் ஆவணங்களைக் காசு பணம் பாராது தேவைப்படும் வேளைகளில் பைண்டிங் செய்து தருவாராம்.

பெரும்பாலும் வ.உ.சி. தான் எழுதிய பதிப்பித்த புத்தகங்கள் எல்லாம் முழுமையாகப் பைண்டிங் செய்யாமல் பாரம் பாரமாகக் கட்டி வைத்திருப்பாராம். புத்தக வாசகர்கள் புத்தகம் ஆர்டர் செய்யும் வேளைகளில் மட்டும் அதுவரை வந்த மொத்த ஆர்டர்களுக்குப் புத்தகத்தைப் பைண்டிங் செய்ய திரு. இசக்கியை அழைப்பாராம். இசக்கி அவர்களும் வ.உ.சி.யின் நிலைமையறிந்து பைண்டிங் செய்து கொடுத்துவிடுவாராம். அதன் பிறகு புத்தக ஆர்டர் செய்தவர்களுக்கு அனுப்பி வைப்பாராம்.

ஒருநாள் இசக்கி புத்தக பைண்டிங் செய்து தந்துவிட்டு பணத் தேவைக்காகத் தன் நிலைமையைச் சொல்ல முடியாமல் தவித்து நின்று கொண்டிருந்தாராம். வ.உ.சி.க்கு இசக்கியின் நிலைமை புரிந்துவிட்டது. உனக்கு நான் பணம் தரவேண்டும். என்னிடம் தற்போதைக்கு கையில் பணம் இல்லை. கொஞ்ச நேரம் காத்திரு. ஏதாவது மணியார்டர் வருகிறதா என்று பார்ப்போம். அப்படி மணியார்டர் வந்தால் நீ கொஞ்சம் எடுத்துக்கோ. எனக்குக் கொஞ்சம் எடுத்துக் கொள்கிறேன் என்று சொன்னாராம். மணி ஆர்டர்கள் வந்தால் ஒவ்வொரு தடவையும் கடன்காரர்களுக்கு இந்த மாதிரி பிரித்துக் கொள்வதை வாடிக்கையாகக் கொண்டவர் வ.உ.சி. என்பது பைண்டர் இசக்கி என்பவருடைய வாய்மொழி மூலம் தெரிய வருகிறது.

**(இந்தத் தகவல் பகிர்ந்தவர்: மூத்த வரலாற்றாய்வாளர் திரு. ஆ. சிவசுப்பிரமணியன்.)**

## கதை-5 வ.உ.சி.யும் அவரது தம்பி மீனாட்சி சுந்தரமும்

வ.உசி.க்கு இரட்டை ஆயுள் தண்டனை வழங்கிய பின்ஹேயின் தீர்ப்பால் சித்தம் கலங்கியவர் வ.உ.சி. அவர்களின் உடன் பிறந்த இளைய சகோதரர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை. தன்னை மறந்தார். தன் நாமம் கெட்டார். அண்ணனுக்கு விதிக்கப்பட்ட தண்டனை ஒன்றே நினைவானார். அன்புத் தம்பியின் சித்தம் பிறழ்ந்த நிலையை எண்ணி வ.உ.சி. அதிர்ந்து போனார்.

தனது மனம் நோகச் சோகக் கவிதையும் வடித்தார்.

அண்ணன் பகைவர் அரனுள் அழிவனெனும்
எண்ணம் உனதறிவை ஏய்த்ததோ கண்ணன்
பகைவர் அரண்புகுந்து பற்பல முன்செய்த
வகையை மறந்தனையோ மற்று

என்ற பாடல் வரிகளைப் பாடற்திரட்டில் காணலாம். வ.உ.சி. தனது சித்தம் கலங்கிய தம்பிக்காக இவர் எந்தக் கடைக்குச் சென்று உணவு கேட்டாலும் கடைக்காரர்களைக் கொடுக்கும்படி வேண்டியும், அதற்குரிய தொகையைச் சிறையில் இருந்து வந்ததும் தாமே தந்துவிடுவதாக வாக்குறுதியும் அளிக்கச் செய்து தண்டோரா மூலம் ஊர் மக்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

மீனாட்சி சுந்தரம் அவர்கள் முறைவைத்து வாழை இலையை எடுத்து வந்து ஏதாவது ஒரு வீட்டு முன்பு வைத்துவிட்டு உங்கள் வீட்டில்தான் இன்று சாப்பாடு என்று வைத்துவிட்டுப் போய்விடுவாராம். அன்றைய நாளில் அவருக்கான நல் உணவைச் சமைத்து வைத்து குடும்பத்தினர் அனைவரும் அவருடன் அமர்ந்து சாப்பிட வைத்து வ.உ.சி. தம்பி மீனாட்சி சுந்தரம் அவர்களை மகிழ்விப்பார்களாம்.

**( இந்தத் தகவல் வரலாற்றாய்வாளர் திரு. ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களுக்கு அவருடைய தாத்தா கூறியது .)**

## கதை-6 தனது வீட்டில் பட்டியல் சாதியைச் சார்ந்த விருதுநகர் இராமையா பரதேசி அவர்களைப் பராமரித்தல்

விருதுநகர் இராமையா பரதேசி அவர்கள் தமிழறிந்த ஞானி. இரு கண்கள் தெரியாத மாற்றுத் திறனாளி. அக்காலத்தில் சாதிச் செறுக்கு மிக்க சைவ வேளாளர் தெருவில் அமைந்த தன்னுடைய வீட்டில் தனது துணைவியார் வள்ளியம்மையின் அனுமதியுடன் வீட்டுக்கு அழைத்து வந்து அன்னமிட்டுப் பாதுகாக்கிறார்.

முரட்டுச் சிதம்பரனாராக இருந்த போதிலும் அக்கால சமூகச் சூழலில் ஒரு பட்டியல் இனத்தவரை வீட்டில் வைத்துச் சாப்பாடு அளிப்பது சாதாரணச் செய்தியல்ல. இருந்தாலும் யாருக்கும் தெரியக் கூடாது என்ற எச்சரிக்கைத் தொனியில் சில ஏற்பாடுகளைச் செய்கிறார் வ.உ.சி.

தனது ஊரில் உள்ள அம்மன் கோவிலில் சின்ன மாலையப்ப பிள்ளை அவர்கள் துணையுடன் ஊரில் உள்ள கம்மாள ஆசாரியைக் கொண்டு இசக்கி அம்மன் சிலையைப் பெயர்த்து வந்து தனது வீட்டின் கதவு முகப்பு முன்பாக வைத்துவிடுகிறார். வீட்டு வாசல் கதவு முன்பாக இசக்கி அம்மன் சிலை, பின்னால் கதவு, கதவைத் தள்ளிவிடாதபடி கதவுக்கு பின்புறம் பலகை

போன்றவை வைத்து யாரும் வீட்டிற்குள் எளிதில் புகுந்து விடாதபடி ஏற்பாடு செய்துள்ளார். பிறகு காலம் செல்லச் செல்ல அரசல் புரசலாக வ.உ.சி. வீட்டில் பட்டியல் இனத்தவர் ஒருவரை வைத்துக் காப்பாற்றி வருவது தெரிந்து விடுகிறது. ஊர்ச் சமுதாயம் அவரை சாதிவிலக்கம் செய்ய முன் வருகிறது. ஆனால் துணைவியார் வள்ளியம்மை துணிச்சலாகத் தட்டில் சோறிட்டுப் பிசைந்து கண் இழந்த இராமையா பரதேசிக்கு வாயில் ஊட்டிவிடவும் செய்தார். இதனை வ.உ.சி. தன் மனைவியை பற்றிக் குறிப்பிடுகையில் “தானக் குறையினை தவிர்த்திட ஊட்டினள்” என்று குறிப்பிடுகிறார்.

**(இசக்கி அம்மன் சிலையை வீட்டின் முன்பாக வைத்த தகவல் தெரிவித்தவர் வரலாற்றாய்வாளர் திரு. ஆ. சிவசுப்பிரமணியன்.)**

## கதை-7 சாமிப் படையல்

திருநெல்வேலி எழுச்சியின் போது போராட்டத்தில் ஈடுபட்ட பலர் பிரிட்டிசு போலீசாரின் பிடியிலிருந்து தப்பித்து பல்வேறு முட்காட்டுப் பகுதிகளில் ஒளிந்து கொண்டார்களாம். அவர்களது வயிற்றுப்பசிக்கு உணவு ஏற்பாடு செய்வதற்காக அவர்கள் ஒளிந்திருந்த முட்காடுகளில் திடீரென சாமிகும்பிடும் வண்ணமாகக் கற்களை நட்டு விபூதி, குங்குமம் இட்டு, சாமிப் படையல் என்ற பேரில் அரிசி, புளி மற்றும் சமைக்கத் தேவையான பொருள்கள் அனைத்தும் அந்தக் கல் முன்பு வைத்து விடுவார்களாம். ஒளிந்து கொண்டிருந்த நபர்கள் ஆள்கள் இல்லாத வேளையில் அந்தப் படையலை முட்காட்டுக்குள் கொண்டு போய் சமைத்துச் சாப்பிடுவார்களாம். மேலும் ஈட்டி, வேல் போன்ற போர்க் கருவிகளினை ஆங்காங்கு சிறுதெய்வக் கோவிலில் நட்டு வைத்துத் தனக்குத் துன்பம் நேர்கையில் அந்தக் கருவிகளைப் பயன்படுத்துவார்களாம். பிரிட்டிஷ் போலீஸ் பார்வையில் இந்தக் கருவிகளை எப்படி தற்காப்புக்காகப் பயன்படுத்திக் கொள்வது என்பது போன்ற பல யுத்த தந்திரங்களை வ.உ.சி. சொல்லிக் கொடுப்பாராம்.

**(தகவல் பகிர்ந்தவர்: ஈரோடு திரு. மணிகிருஷ்ணன்.)**

## கதை-8 கப்பல் கம்பெனிக்கு கட்டணம் வகுத்த கதை

வ.உ.சி. கப்பல் கம்பெனி ஆரம்பிக்கும் வேளையில் பயணக் கட்டணம் வகுப்பதற்காக மற்றொரு கப்பல் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்த தூத்துக்குடி நகர் வடக்கு ரத வீதியைச் சார்ந்த ஏ.டி. திருநாவுக்கரசு என்பவரை வரவழைத்து அந்தக் கப்பல் கம்பெனியில் உள்ள பயணச் சீட்டு விவரக் கணக்குகளை இலாவகமாகப் பேசி வாங்கிக் கொள்வாராம். பின்பு கட்டண விவரங்களைக் குறித்துக் கொண்டு எவ்விதத் தடயமும் தெரியாதபடி துண்டுச் சீட்டை எரித்துச் சாம்பலாக்கி முருங்கை மரத்தடியில் போட்டு விடுவாராம். ஏனெனில் அந்த அளவுக்கு வ.உ.சி.யை பிரிட்டிசு அரசாங்கம் உளவு பார்த்ததாம்.

(தகவல்பகிர்ந்தவர்: ‘சைவ நெறி’ இதழாசிரியர் திரு காந்தி.)

## கதை-9: கப்பல் கவிழ்ந்த கதை

வ.உ.சி. தாத்தாவோட கப்பல் எப்படி கவிழ்ந்துச்சு தெரியுமா? அந்தக் காலத்துல வ.உ.சி. வீட்டுக்கு வந்து போறவங்க எல்லார்க்கும் சோறு வடிச்சு வடிச்சுப் போடுவாங்களாம். பல நாள் அப்படி வடிச்ச சோறு மிச்சமாகிப் போயிடுமாம். அது தாத்தாவுக்குத் தெரிஞ்சா திட்டுவாருன்னு தாத்தாவுக்குத் தெரியாம சாக்கடையில கொட்டிடுவாங்களாம் வீட்டுல இருக்கற பெண்கள். அப்படிச் சோற்றை வீணாக்கியதால்தான் வ.உ.சி. கப்பலே கவிழ்ந்துபோச்சாம். அதனால வேணுங்கற அளவுக்குச் சோறு வாங்கிச் சாப்பிடணும் இப்படி அதிகமா வாங்கி மிச்சம் வைச்சுச் சாக்கடையில் கொட்டக் கூடாது.

‘சோற்றை வீணாக்கிக் கொட்டியதால்தான் கப்பலே கவிழ்ந்து போச்சு’ என்பது உவமானவமாகப் பேச்சு வழக்கில் சொல்லப்படுகிறது.

**(இந்தக் கதையைச் சொன்னவர் வ.உ.சி.யின் ஒருவழி உறவினர் மதுரை திருமதி விசாலாட்சி சோமசுந்தரம்.)**

இது போன்ற ஏராளமான கதைகள் வ.உசி. என்ற ஆளுமையைச் சுற்றி வாய்மொழித் தரவுகளாக விரவிக் கிடக்கின்றன. இந்தக் கதைக்கான தளம் பெரும்பாலும் தூத்துக்குடி பகுதிகளை மையமாக கொண்டே உலவி வருகிறது. இதில் திருக்குறளுடன் வ.உ.சி.யை தொடர்புபடுத்தியே பல கதைகள் மக்கள் மனதில் இருக்கிறது. வீரதீரக் கதைகளும் வ.உ.சி.யை மையப்படுத்தி இருப்பதையும் காணமுடிகிறது. மேற்சொன்ன கதையில் சில எழுத்தாக்கம் பெற்றுள்ளது. பல செய்திகள் இன்னும் எழுத்து வடிவாக்கம் பெறாமல் வாய்மொழித் தகவல்களாகவே சிதறிக் கிடக்கின்றன. நாட்டுப்புறவியல் ஆய்வாளர்கள் வ.உ.சி.யை மையமாகக் கொண்டு தூத்துக்குடி, நாகலாபுரம், விளாத்திகுளம், ஓட்டப்பிடராம் மற்றும் திருநெல்வேலி பகுதிகளில் உலவுகின்ற வாய்மொழிக் கதைகளைச் சேகரித்து பகுப்பாய்வு செய்து புனைவா அல்லது தர்க்கமா என்பதை முடிவு செய்யவும், சில செய்திகள் அறியாத உண்மைகள் வெளிவர உதவி செய்யும். விளிம்பு நிலை ஆய்வுகளில் ( Subaltern studies ) தொகுதி-3ல் சாகித் அமீன் எழுதிய காந்தி குறித்த புனைவுக் கதைகள் ஆய்வு இடம் பெற்றுள்ளது. ஜெர்மன் நாட்டுச் சர்வாதிகாரி இட்லர் குறித்த வாய்மொழிக் கதைகள் தொகுக்கப்பட்டுப் புத்தகமாக வெளிவந்துள்ளது. அதைப் போன்று வ.உ.சி. என்ற ஆளுமையை மையமாகக் கொண்ட வாய்மொழித் தரவுகளை சேகரித்து எழுத்து வடிவில் ஆவணமாக்கினால் பல சுவையான நிகழ்வுகள் தெரியவரும்.

☆ ☆ ☆

# வ.உ.சியின் மொழியும் பொருளியலும்

**கதிர்நம்பி**

'ஒரு மொழி வழங்குவது ஒரு தனி நாடு'[1] இது பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை மெய்யறம் எனும் நூலில் நாடு எனும் அதிகாரத்தில் எழுதியது. நாடு என்பதென்ன என அவர் விவரிக்கும் வரிகளில் இச்சிந்தனை அவரிடமிருந்து வருகிறது. திணைக் கோட்பாட்டின் படி நான்கு நிலம் கொண்டு ஒரு மொழி பேசும் மக்களைக் கொண்டது ஒரு நாடு எனும் கருத்தை அவர் எழுத்தில் காண முடிகிறது. மொழி வழித் தேசியத்தின் முதன்மைக் கூறாக மொழியைக் காணலாமே ஒழிய அதை மட்டுமே முழுமையானதாகக் காண முடியாது. எனினும் மொழி வழித் தேசியம் எனும் கருத்தாக்கமே பிறந்திடாத காலத்தில் வ.உ.சியிடம் இச்சிந்தனை வெளிப்பட்டிருப்பது வரலாற்று வியப்பேயாகும்.

மராட்டிய மண்ணிலிருந்து விடுதலைத் தீ பற்ற வைத்த திலகரின் நம்பிக்கைக்கு உரியவராக, வங்கத்துச் சிந்தனையாளன் அரவிந்தரின் பாராட்டைப் பெற்ற வ.உ.சி, இந்திய ஒன்றியம் முழுக்க அரசியல் செல்வாக்கு பெற்றிருந்தும் இந்த மொழி வழி நாடு காண் சிந்தனை எங்கிருந்து வருகிறது? இச்சிந்தனையின் வேர் எதுவாக இருக்கும்? தேசம்,தேசியம் போன்ற பதங்கள் முழுமையாகப் பரிணமித்துக் கொண்டிருந்த காலத்தில் மொழியையும் நாட்டையும் இணைத்து எழுத எது தூண்டியது? தமிழ் இலக்கிய வாசிப்பும் அதனூடாக அவர் கண்ட தேசக் கட்டுமானமே இந்தச் சிந்தனையின் தோற்றுவாய். 1930-களுக்குப் பிறகு தான் தமிழியச் சிந்தனைகள் முறைப்படுத்தப்பட்டு அதனூடாகத் தமிழரசியல் கருக் கொள்கிறது. வ.உ.சியின் மொழி வழித் தேசியச் சிந்தனையோ 1914களில் அச்சாகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியா என்கிற ஒரு நாட்டிற்கு அரசியலமைப்புச் சட்டம் கூடத் தற்சார்பாக எழுதிடாத காலத்தில் மொழி ஒரு நாட்டின் முதன்மை அலகாக அவர் கருதியதை நாம் ஆய்விற்கு உட்படுத்த வேண்டும்.

மொழியைப் போன்றே பொருளியல் மேம்பாடும் மொழி வழித் தேசியத்தின் முதன்மை அலகாகும். பொருளாதார விடுதலைப் போரை முன்னெடுத்த பெரியவர் வ.உ.சியின் அரசியலில் மொழி வழித் தேசியத்திற்கான கூறுகளையும் பொருளியல் மேம்பாட்டிற்கான செயல் திட்டங்களையும் காண முடிகிறது. மொழியையும் பொருளையும் உள்ளிணைத்த வ.உ.சியின் அரசியல் செயல்பாட்டை இக்கட்டுரை உரசிப் பார்க்கிறது.

ஒரு தேசத்தின் கட்டுமானத்தில் மொழி முதன்மைப் பங்கு வகிக்கிறது. எனினும் மொழியானது மேல் கட்டுமானத்தில் காணப்படுகிற அரசு, ஞாயமன்றம்(நீதி மன்றம்), காவல், கலை,இலக்கியங்களோடு மட்டுமே தொடர்புடையதாகப் பொருள் கொள்ளப்படுகிறது. அடித்தளமாக விளங்குகிற பொருளாதாரத்தில் மொழி பங்கு வகிக்கவில்லையா எனும் கேள்வி எழுகிறது. மொழி என்பது ஒரு தொடர்பாடல் கருவி என்போரே, மொழியை மேல்கட்டுமானத்தின் அங்கமாக பார்க்கின்றனர். மொழி உற்பத்தியோடு தொடர்புடையது. அது வர்க்க பேதமின்றி அடித்தளத்திலிருந்து மேல்கட்டுமானம் வரைக்கும் ஊடு பாவி இருக்கிறது. பன்னெடுங்காலமாக மக்கள் திரள் பரிணாம வளர்ச்சியில் மொழி எனும் தொடர்பாடல் கருவியை உற்பத்தி செய்து அதனூடாக இயற்கை வளங்களைப் பயன்படுத்தினர். அதன்பொழுது விளைந்த அனுபவங்களை அறிவாக தொகுத்துப் பொருள்களை உருவாக்கிப் பண்டங்களாக்கி வணிகம் செய்து குமுகங்களைத் தோற்றுவித்தனர். அவ்வாறு தோன்றிய குமுகங்களில் முதலாளித்துவ பாட்டாளி வர்க்கங்கள் தோன்றின. ஆனாலும் மொழி எனும் கருவியானது அனைத்து வர்க்கங்களுக்குள்ளும் பொதுவாக விளங்கியது. இவ்வாறான வர்க்கங்களுக்கு இடையேயான போராட்டத்தில் தேசங்கள் முகிழ்ந்தன. மொழிகள் தேசங்களைப் பிரசவித்தன. எனினும் சுழல்கின்ற உலகப் பந்தில் எல்லாத் தேசங்களும் வர்க்கப் போராட்டத்தால் பிறந்தன என அறுதியிட்டுக் கூற முடியாது. தொல்குடிகள் வளர்ச்சிப் போக்கில் தேசிய இனங்களாவதும், அவர்களின் மொழி தேசிய மொழியாகி அவர்கள் நிலத்தின் மீதான இறையாண்மைக்கு அச்சாணியாவதும் வரலாற்றுப் போக்கில் நடந்து வருகிறது.

''எல்லா இடங்களிலும் கணங்களின் மொழியிலிருந்து பழங்குடிகளின் மொழியாகவும், பழங்குடிகளின் மொழியிலிருந்து தேசிய இனங்களின் மொழியாகவும் , தேசிய இனங்களின் மொழியிலிருந்து தேசிய மொழிகளாகவும் மாறிய இந்த வளர்ச்சிப் போக்கின் எல்லா கட்டங்களிலும், ஒரு சமூகத்தில் உள்ள மக்களிடையே தொடர்பு ஏற்படுத்துகின்ற சாதனம் என்ற வகையில் மொழியானது, அந்த சமூகத்தின் ஒரே பொதுவான மொழியாகவே விளங்கி வந்திருக்கிறது.''[2]

மேற்கண்ட கூற்றை 'ஒரு மொழி வழங்குவது ஒரு தனி நாடு' எனும் வ.உ.சியின் கூற்றோடு சமன்படுத்திப் பார்க்கலாம். பெரியவரின் இந்தக் கூற்று மொழி வழித் தேசியத்தின் தொடக்க நிலையைப் பிரதிபலிக்கிறது. இன்றைய சூழலில் மொழி வழித் தேசியமானது மொழியை மட்டும் முதன்மைப் படுத்தாமல் மொழி,பண்பாடு,நிலம், பொருளியல், தேசிய இனம் என்ற கூறுகளை உள்ளடக்கிப் பரிணமித்து வளர்ந்து நிற்கிறது. குறிப்பாகத் தமிழ்ச் சூழலில் சிறுபான்மை தேசிய இனத்தவரையும் மொழிச் சிறுபான்மையினரையும்

உள்ளடக்கித் தமிழ்த் தேசியம் பயணிக்க வேண்டிய தேவை இருக்கிறது. தமிழ் நிலப்பரப்பில் வ.உ.சியின் 'ஒரு மொழி' என்பது தேசிய இனத்தின் தேசிய மொழியாகவும் குமுகத்தின் பொது மொழியாகவும் விளங்கும் தமிழ் மொழியைக் குறிப்பதாகப் பொருள் கொள்ளலாம். ஜே.வி ஸ்டாலினின் வரையறை வ.உ.சியின் கூற்றிற்கு வலு சேர்க்கிறது.

''ஒரு தேசம் என்பது, ஒரு பொதுவான மொழி, ஆட்சிப் பகுதி, பொருளாதார வாழ்வு மற்றும் மன இயல்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்று ரீதியாக உருவாகிய நிலையான மக்கள் சமூகமாகும்.''[3]

தமிழ் நாட்டைப் பொறுத்தவரை வட மொழி உட்பட அயல் மொழி வழி ஆதிக்கம் என்பதானது பலநூறு ஆண்டுகளாக இருந்து வந்துள்ளது. 15 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஏறக்குறைய முன்னூறு ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் அரசவை மொழியாகக் கூட இயங்காமல் அதிகாரமற்று வெளியில் நின்ற சூழலும் கவனத்திற்கு வருகிறது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சைவம் எனும் சமயச் சட்டகத்திற்குள் உருவான தமிழியச் சிந்தனை முறைமை அதனை உடைத்துப் பொதுவெளியில் தமிழ்த்தேசியம் எனப் பிற்பாடு மறுமலர்ச்சி கண்டது. எனினும் அதுவும் ஒரு எல்லைக்குள் இருந்தே பாடாற்றியது. மொழிக் காப்பு, பண்பாடு மீட்பு என்ற வகையில் வைதீகப் பண்பாட்டு மேலாதிக்க எதிர்ப்பு இயக்கமாகத் தலைப்பட்டது. மறைமலை அடிகள் தோற்றுவித்த 'தனித் தமிழ் இயக்கம்' இதற்கு ஆகச் சிறந்த எடுத்துக்காட்டு. இந்த இயக்கத்தாருக்கோ அல்லது இதனை அடியொற்றி வந்தவர்களுக்கோ மொழிவழி நாடுகாண் சிந்தனை எழவில்லை. அல்லது அது வளர்ச்சி அடையவில்லை.

வடமொழி மேலாதிக்கத்தின் தாக்கத்தை உணர்ந்த வ.உ.சி அதனின்று தமிழை தனித்துவப் படுத்த முனைந்தார். மொழி என்பது வெறும் தகவல் பரிமாறும் ஊடக கருவியாக பாவிக்காமல் அதனை உற்பத்தியோடு தொடர்பு படுத்தி பார்த்தார். பிறமொழி எழுத்துகளை தமிழில் இணைத்து எழுதுவதை விரும்பாத அவர் இந்த மொழி பேசும் உழைக்கும் வர்க்கத்தினர் எழுத்துகளில் பிறமொழி எழுத்துகள் அவசியமில்லை என்றார்.

''தமிழ்ப்பாஷை எழுத்துகளிற் பிறபாஷை எழுத்துக்களையோ அவற்றின் சப்தத்தைக் கொடுக்கும் குறிகளையோ சேர்ப்பதும், தமிழ்நாட்டுக் கிராமங்களில் உழவுத் தொழில் செய்து ஊரை விட்டு வெளியேறாதிருக்கும் தமிழ் மக்களும் பிற பாஷையினரின் சம்பந்தம் வேண்டாத தமிழ் மக்களும் அவற்றைக் கற்க வேண்டுவதும் அவசியம்தானா என்பதைத் தீர்மானித்து அதனைத் தக்க காரணங்களோடு நமது 'ஞானபாநு ' மூலமாக வெளியிடுவார்களாக''[4]

பாரதியோடு தொடங்கிய 'எழுத்துகுறை' விவாதத்தில் மேற்கண்டவாறு கூறுகிறார். எனினும் அவரும் 'ஜ' போன்ற வடமொழி எழுத்துகளின் தாக்கத்திலிருந்து தப்பவில்லை. நிலைமை இவ்வாறிருக்க இன்னும் புதிய வடமொழி எழுத்துகளுக்கான குறிகள் வந்திருந்தால் தமிழ் எழுத்துகளும் உச்சரிப்புகளும் எவ்வாறு சென்றிருக்கும் என ஆராய வேண்டியதில்லை.

தமிழ்நாடு தமிழர்க்கே எனும் முழக்கம் ஒரு பண்பாட்டு மேலாதிக்கத்தை ( cultural hegemony ) குறிப்பாக இந்தி மொழியின் திணிப்பபை எதிர்த்துக் கிளம்பிய எதிர்வினைவாதம் ( Counter Argument ). ஆனால் 'ஒரு மொழி வழங்குவது ஒரு தனி நாடு' என்பது நேர்நிறைக் கூற்று. வ.உ.சி இந்த எதிர்வினை வாதம் வேர்விட நீர் ஊற்றியவர் என்பதையும் நம்மால் காண முடிகிறது. அந்த முழக்கத்தை அவர் முன்னின்று நடத்தக் கெடுவாய்ப்பாக இயற்கை வாய்ப்பளிக்கவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் உருவான தமிழ்த் தேசிய சிந்தனை தமிழ் இலக்கியங்களினூடாகக் கட்டமைக்கப்பட்டது. தமிழ்த்தேசியத்தின் உருவாக்கத்தில் திருக்குறள் மிக முதன்மையான பங்கு வகித்தது. சமற்கிருத வேத நூல்கள்/காப்பியங்கள்/இதிகாசங்கள் கொண்டு வைதீகப் பண்பாட்டை நிறுவ முயற்சி நடந்த வேளையில் திருக்குறள் எனும் ஒற்றை நூலைக் கொண்டு தமிழ்ப் பண்பாட்டைக் கட்டமைத்தனர். எத்தனை ஆரிய நூல்கள் கொண்டு வந்தாலும் திருக்குறள் எனும் ஒற்றை நூலிற்கு அவை ஈடாகுமா ? அவ்வாறேனும் நூல்கள் இருக்கின்றனவா எனக் கேட்கிறார் வ.உ.சி. ஆரியம் எதிர் செந்தமிழ் என்கிற பண்பாட்டுப் போரில் இந்த கேள்விக் கணைகளைத் தொடுக்கிறார்.

''ஆரியமே ஏற்றமெனும் அன்பருயர் வள்ளுவரின்
ஓரியலே கற்றாலும் ஓதாராங் கீரடியில்
நாற்பொருளும் வள்ளுவர்போல் நன்குரைக்கும் நூல்
கேற்படநாம் கண்டதுண்டோ இன்று ''

(வ.உ.சி பாடற்றிரட்டு)

''ஒரு தேசிய இனமாகத் தம்மை அடையாளம் காணும் முயற்சியில் தமிழர்கள் இறங்கியபோது வடமொழி வேதங்களை உயர்த்திப் பிடித்த பிராமணியத்திற்கு எதிராகத் திருக்குறளைத் தமிழ் வேதம் எனக் கருதினர்''5 என்று தொ. பரமசிவன் தமிழ்த் தேசியக் கட்டுமானத்தில் திருக்குறள் பங்குபெற்றதைக் கூறுகிறார்.

திருக்குறளை விதந்தோதிப் போற்றிக் கொண்டும், புனிதப்படுத்திக் கொண்டும் இருந்த சூழலில் திருக்குறளின் மீதான ஆய்வுகளை நிகழ்த்தியவர் வ.உ.சி . மணக்குடவர் உரையைப் பதிப்பித்துத் திருக்குறளிற்கு உரை எழுதும்

முயற்சியிலும் ஈடுபட்டார். பின்னாட்களில் திருக்குறள் வழியே தமிழ்த் தேசியச் சிந்தனைக்கு அடித்தளம் போட்டவர்களில் பெரியவர் வ.உ.சிக்கும் இடமுண்டு. திருக்குறள் வழிவந்த நூலாக மெய்யறம் எனும் நூலைப் படைத்து ஆய்வுலகினை முடுக்கி விடுகிறார். தமிழர்கள் திருக்குறளை உரையுடன் பாராயணம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யாதவர்களை முற்றும் துறந்த துறவியாயினும் தன்னைப் பெற்ற தந்தையாயினும் அவர்களை மதிக்க மாட்டேன் என சூளுரைக்கிறார்.

புறச் செயல்பாட்டில் 'வந்தே மாதரம்' எனும் முழக்கத்தோடு வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பொருளியல் போர் நடத்தினாலும் அகச் செயல்பாடாகத் தமிழியச் சிந்தனைக் கட்டுமானம் அவருக்குள் நிகழ்ந்து வந்துள்ளதைக் காண முடிகிறது. மேக்ஸ் ஹவேலார், கலிவேலா எனும் நூல்கள் முறையே இந்தோனேசிய, ஃபின்னிஷ் தேசக் கட்டுமானத்தில் பெரும் பங்கு வகித்ததைப் போலத் திருக்குறள் எனும் நூல் தமிழ்த் தேசியக் கட்டுமானத்தின் அடித்தளமாக விளங்குகிறது'. இவ்வாறு வ.உ.சி தமிழ்த் தேசியக் கட்டுமானத்தின் அடித்தளத்தை வலுப்படுத்தியவர் என்பது அவர் சிந்தனைகளில் வெளிப்படுகிறது.

பெரியவர் வ.உ.சி தமிழ்ப்பல்கலைக் கழகம் கோரியதும், அரசில் தமிழர் பிரதிநிதித்துவமின்மையைச் சுட்டிக் காட்டியதும், தமிழ் மருத்துவமாம் சித்த மருத்துவ ஓலைச் சுவடிகளை உரைநடையாக்க வேண்டியதும், தமிழர்களைத் திருக்குறள் கற்கக் கட்டளையிட்டதும், தனித் தமிழ்ச் சொற்களை அறிமுகம் செய்ய அணியமானதும், தமிழ் இலக்கியங்கள் / இலக்கணங்கள் கற்றவரே தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் செய்ய முன்வர வேண்டும் என முன்நிபந்தனை விதித்ததும் ஆகிய அனைத்துமே தமிழ்த் தேசியச் சட்டகத்தில் அடைக்கப்பட வேண்டியவையே. இவை அனைத்திற்கும் மூல காரணமாக 'ஒரு மொழி வழங்குவது ஒரு தனி நாடு ' எனும் சிந்தனை விளங்குகிறது.வெள்ளை ஏகாதிபத்தியத்திடம் தன்னாட்சிக்குப் போராடிய வ.உ.சியிடம் அகச் சிந்தனையாக மொழிவழித் தேசிய தன்மை உறைந்து கிடந்தாலும் புறச் செயல்பாட்டில் அது வெளிப்படவில்லை. மொழிவழி மாகாணம் மற்றும் அதனூடாகப் பேசப்பட்ட மாநில சுயாட்சி ஆகியவை மொழிவழித் தேசியத்தின் சிதைந்த வடிவமாக இன்றைய சூழலில் எச்சங்களாக நம்மிடையே காணக் கிடக்கிறது.

தற்சார்புத் தேசிய (சுதேசியம்) இயக்கத்தினூடாக 'தன்னாட்சி' ஒன்றே தீர்வு எனத் தீவிர விடுதலை அரசியல் செய்த பெரியவர் வ.உ.சி சிறை சென்று வந்த பிறகு அதனின்று விலகி வேறுபாதைகளைத் தெரிவு செய்கிறார். இவையும் கூடத் தன்னாட்சி கோரிக்கையை உள்ளடக்கமாக கொண்டிருந்தாலும் முழுமையாக மக்களிய வழிப்பட்ட நடைமுறைப் பார்வை கொண்டவையாக விளங்குகின்றன.

ஒரு நாடு தன்னாட்சி அடைவதற்கான சாத்திய;க் கூறுகள்(அன்றைய சூழலில்) என்னவெல்லாம் இருக்கின்றன என வகைப்படுத்தி காண்பிக்கிறார்.

முழுநிறை குடியாட்சி ( Republic Government ) கோனாட்சி ( Monarchial Government ) சார்ந்த குடியாட்சி ( Dependent Republic Government ) சார்ந்த கோனாட்சி ( Dependent Monarchial Government) நம்மிடையே நிகழ்வுகிற சாதி, மத ஏற்றத் தாழ்வுகளை நாம் நீக்குகிற வரை குடியாட்சி என்பது சாத்தியமில்லை. அது வரைக்கும் சார்ந்த கோனாட்சியை நாம் தெரிவு செய்யலாம் என்கிறார் பெரியவர் வ.உ.சி .

''நாம் சுய அரசாட்சியை அடைவோமாயின் , நம் தேசத்தில் சிறு தொகையினராயுள்ள ஜாதியார்களுடையவும் நம்மால் அநியாயமாகத் தாழ்த்தப்பட்டிருக்கிற ஜாதியார்களுடையவும் உரிமைகளையும் சுதந்திரங்களையும் நாம் கவர முற்படோம் என்று அந்த ஜாதியார் நம்புவதற்கு நாம் என்ன செய்திருக்கிறோம்? அந்த நம்பிக்கை அவர்களுக்குப் பூரணமாக உண்டாலன்றி, அவர்கள் நம்முடன் சேர்ந்து சுய அரசாட்சி அடைவதற்கு ஒத்துழைப்பார்களா? அவ்விருவகையான ஜாதியார்கள் என்னென்ன உரிமைகளையும் சுதந்திரங்களையும் அடைய விரும்புகின்றார்கள் என்றாவது நாம் தெரிந்துள்ளோமா? '' [6]

ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலையும் அவர்களின் உரிமை மீட்பும் குடியாட்சிக்கு முன்நிபந்தனையாக வைக்கிறார். இவற்றை வென்றெடுக்காமல் குடியாட்சி சாத்தியமில்லை என்கிறார். பெரியவரின் அளவுகோல் இன்றைக்கு நாம் கொண்டிருக்கிற குடியாட்சி முழுமையானதல்ல என்பதை உணர்த்துகிறது.

***

வெள்ளிப்பனி மலை மீது உலவுவோம்
அடி மேலைக் கடல் முழுதும் கப்பல் விடுவோம்

என்ற பாரதியின் கவிதை வரிகளைக் கடலில் கலம் செலுத்தி உயிரூட்டியவர் வ.உ.சி. பாரதியின் பாட்டோ வ.உ.சியின் செயலோ கப்பலைப் புதிதாய்க் காணவில்லை. மாறாக இழந்து போன ஒன்றை மீட்டெடுத்த உற்சாகத்தை தருவதாக அமைகிறது. கப்பல் என்பது தமிழர்களுக்குப் புதியது அன்று. கிறித்துவிற்கு முன்பிருந்தே கீழைக் கடலில் கலம் செலுத்தி அரேபிய, ஐரோப்பிய தேயங்களில் வணிகம் செய்திருக்கின்றனர்.

''கிறிஸ்தவ சகாப்தத்தின் துவக்க காலங்களில் மேற்கொள்ளப்பட்ட கடல்கடந்த நீண்டதூர வர்த்தகத்தில் சோழமண்டலக் கடற்கரை மற்றும் வங்காளப் பகுதிகளை உள்ளடக்கிய இந்தியாவின் கிழக்குக்கடற்கரையின் கடல்சார்ந்த பகுதிகள் ஆர்வமூட்டக்கூடிய வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தன என்று தாலமி குறிப்பிட்டிருக்கிறார்'' [7]

''இந்திய துணைக் கண்டத்தின் கிழக்குப் பகுதியுடன் ரோமருக்கு இருந்த வணிகம் மூன்றாம் நூற்றாண்டில் குறைந்தாலும், தமிழரின் கடற்கரை செயல்பாடுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை''[8]

''தமிழர்கள் தொன்றுத்தொட்டுக் கடல் வணிகம் செய்து நல்ல அனுபவம் பெற்றவர்கள்; கடல் வணிகத்தை வளர்க்கவும் பிற நாட்டாரோடு சுமுகமாய் பழகவும் நன்கறிந்தவர்கள்; முற்காலத்தில் இருந்த கடற் கொள்ளைக் காரர்களைக் கருவறுத்தவர்கள். தமிழ்நாட்டுத் துறைமுகங்கள் வசதியும் பாதுகாப்பும் அமைந்து உலக வணிகர்களின் நன்மதிப்பைப் பெற்றவை''[9]

தமிழ் முடியரசுகளின் வீழ்ச்சியுடன் படையெடுப்பாளர்களின் கையில் கடலாதிக்கம் சென்ற பிறகு தமிழர் கடலுரிமை இழந்து நின்றனர். பிரிட்டிசுக் கிழக்கிந்தியக் கம்பெனி பிற கம்பெனிகளை வீழ்த்தி கடலாதிக்கத்தைப் பெற்று அதனூடாகப் பிரிட்டிசு இந்தியாவைத் தோற்றுவித்தது. கடலை இழந்ததால் வணிகத்தை இழந்து நாட்டை இழந்த சூழலை வ.உ.சி உணர்ந்தார். எனவே தான் மீண்டும் 'தமிழ்க்கப்பல்' செலுத்தி அதன் மூலம் வணிகத்தைக் கைப்பற்றித் தன்னாட்சி அடைய முடியும் என்று 'சுதேசி நாவாய் சங்கம்' தோற்றுவித்தார். எனினும் அம்முயற்சி முழுமையடையவில்லை. கிழக்காசியக் கடல் முழுதும் கப்பல் செலுத்தி வணிகத்தைக் கைப்பற்ற கனவு கண்டார். கப்பல் கட்டும் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தவும் விழைந்திருக்கிறார்.

'நீரிற் செல்பல நாவா யாக்கல்'[10] என்று மெய்யறம் நூலில் அரசியல் பிரிவில் கைத்தொழில் அதிகாரத்தில் எழுதுகிறார். சுதேசி நிறுவனம் முடக்கப்பட்டு சிறைக் கொட்டடியில் கிடந்து கொண்டு நாவாய் பலக் கடலோட வேண்டும் என ஏகாதிபத்தியத்தை மேவிய சிந்தனை கொள்கிறார். முதலாளித்துவ உற்பத்தி முறையில் ஆதிக்கம் செலுத்துகிற அந்நிய ஏகாதிபத்தியத்தை விரட்டிவிட்டு தற்சாற்புப் பொருளாதாரத்தைக் கட்டமைக்கத் தொழில் முனைந்தார். பொருளியலில் அரசியலை இணைத்து ஏகாதிபத்திய மூலதனத்தை அகற்றிடப் பொருளியல் போர் தொடுத்தார்.

''அந்நிய மூலதனத்திற்கும் உள்நாட்டு மூலதனத்திற்கும் முரண்பாடு வரும் போதும், விதேசிப் பொருளுக்கும் சுதேசிப் பொருளுக்கும் முரண்பாடு வரும்போதும், நாம் அந்த முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தி அந்நிய மூலதனத்திற்கும் விதேசிப் பொருளுக்கும் எதிரான நிலையைத் தோற்றுவிக்க வேண்டும்.''[11] என்கிறார் எஸ்.ஏ . பெருமாள். ஆங்கிலேய முதலாளித்துவ வர்க்கத்திற்கு எதிராக அடிமைப்பட்ட வர்க்கத்தின் பிரதிநிதியாகச் சுதேசி நிறுவனங்களை முன்னிறுத்தி வ.உ.சி பிரிட்டிசு ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கு எதிராக முரண்பாட்டை உருவாக்கினார். பொதுவுடைமைத் தத்துவம்

மலர்ந்திடாத சூழலில் சுதேசி நிறுவனங்களைத் தோற்றுவித்து, பொருளியல் புரட்சிக்கு வித்திட்டார். தொழிலாளர் போராட்டமான கோரல் ஆலை போராட்டத்தை ஒருங்கிணைத்து அதனோடு தேசிய விடுதலை கோரிக்கையை உள்ளடக்கி வர்க்க விடுதலைக்கு வழி கோலினார். கோரல் ஆலைப் போராட்டத்தின் வெற்றியும் சுதேசி நிறுவனங்ககளின் வளர்ச்சியுமே வ.உ.சிக்கு 40 ஆண்டு கால சிறைத் தண்டனை கொடுக்க காரணமாகும்.

கோரல் ஆலைப் போராட்டத்தின் வெற்றிக்குள் தேசிய இனத்தின் பங்களிப்பை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். திலகர் கைதைக் கண்டித்து மாராட்டா தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அது வெற்றி பெற்றது. வ.உசி.யின் கைதைக் கண்டித்தும் தூத்துக்குடியில் கோரல் ஆலைத் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் இதற்கு முன் அவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் பெற்ற உரிமைகளையும் இழந்தனர். இதே போன்று விபின் சந்திரபால், அரவிந்தர் ஆகியோரும் கைது செய்யப்படுகிறார்கள். ஆனால் வங்கத் தொழிலாளர்கள் மத்தியில் சலனம் ஏற்படவில்லை. காரணம் வங்கத்தில் பெரும்பாலான ஆலைத் தொழிலாளர்கள் பீகார் போன்ற இடத்திலிருந்து வந்தவர்கள்.

''மராத்தி தேசிய இனத் தலைவரான திலகருக்கு பம்பாய் ஆலைத் தொழிலாளர் மத்தியில் செல்வாக்கு ஏற்பட்டமைக்கும், 1908 இல் அவரது கைதைக் கண்டித்து வேலை நிறுத்தம் நடந்ததற்கும் தொழிலாளர்களில் 90 சதவீதம் பேர்கள் மராத்தி தேசிய இனத்தினர் என்றும் , விபின் சந்திரபால், அரவிந்தர் போன்றோர் கைது செய்யப்பட்டமைக்கு இத்தகைய எதிர்ப்புகள் வங்காளத் தொழிலாளர் மத்தியில் எழாமற் போனதற்கு அவர்கள் வங்களாளர் அல்லாத தன்மை காரணம் என்றும் கருதும் அறிஞர்கள் உண்டு''[12]

தீவிர விடுதலை அரசியலில் ( 1905-1908 ) இருந்தபோதும், அதனின்று விலகி ( 1914-1925 ) இருந்தபோதும் தொழிலாளர் வகுப்பை ஒருநாளும் அவர் விட்டுக் கொடுக்கவில்லை. தொழிலாளரை, உழவர் வகுப்பை இணைத்துத் தான் தற்சார்புப் பொருளியல் விடுதலைப் போராட்டங்களை முன்னெடுத்தார். திலகர் சென்னை வந்திருந்த போது ''இது தொழிலாளர் காலம். தாங்கள், செல்வர் மாடியில் தங்கினால் ஏழை மக்கள் தங்களைக் காண இயலாது வருந்துவார்கள். ஆதலால் எங்களில் ஒருவர் குடிலில் தங்குதற்கு உளங்கொளல் வேண்டும்''[13] என்று திலகரிடம் தொழிலாளர் நலனை முன்னிறுத்திப் பேசுகிறார். சிறை செல்லும் முன்பு கோரல் ஆலைப் போராட்டத்தில் தொழிலாளரோடு கொண்டிருந்த உறவு சிறை மீண்டு வறுமையில் உழன்று கொண்டிருந்த போதும் மாறாமல் இருந்திருக்கிறது.

சென்னையில் தொழிலாளர்களின் ஒற்றுமையில் நாட்டின் அலகுகளான தந்தி, அஞ்சல், காவல், தொடர்வண்டி ஆகிய நிறுவனங்கள் தொழிற்சங்கங்கள் கட்டுப்பாட்டில் வருகிற பொழுது, வெள்ளை அரசாங்கத்தை வீழ்த்தித் தன்னாட்சி பெற முடியும் எனப் பேசியிருக்கிறார் . அதன் பொருட்டுத் தொழிலாளர்களை தொழிற்சங்கங்களில் இணைந்து ஒத்துழைக்க வேண்டினார்.

தொழிலாளர் வகுப்பினர் அரசியல்மயப்படுவதை காந்தியும் விரும்பவில்லை. அன்றைய அனைத்திந்தியத் தொழிற்சங்கத் துணைத் தலைவராக இருந்த அன்னிபெசன்டும் விரும்பவில்லை. தொழிலாளர்களுக்கு அரசியல் கல்வி போதிப்பதை அன்னி பெசன்ட் மறுத்திருக்கிறார். ஆனால் இதே காலகட்டத்தில் (1920) வ.உ.சி தன்னாட்சி அடைய வேண்டுமெனில் தொழிற்சங்கங்கள் வலுப்பெற வேண்டும் என்று விடுதலை அரசியலிற்கான கோரிக்கையைத் தொழிலாளர்களிடையில் முன் வைக்கிறார்.

''அரசாங்கம் எந்தக் காலத்திலாவது தொழிலாளர்களுக்குச் சாதகமாக இருந்ததா? இதுவரை அரசு, ஆங்கிலேய முதலாளிகளுக்கே சாதகமாக இருந்தது. நிலைமை இதுவாக இருந்தால் நாடு ஒரு பொழுதும் முன்னேற இயலாது. ஒருமுறை தொடங்கப்பட்ட கிளர்ச்சி எக்காரணம் கொண்டும் தடுக்கப்பட இயலாது''[14] என்று கேட்கிறார். ஆலை முதலாளிகள் பக்கச் சார்பாகச் சுதேசியம் பேசி வந்தனர். காங்கிரசில் சிலர் அரசியலிற்காகச் சுதேசியம் பேசி வந்தனர். ஆனால் வ.உ.சி முழுநிறை சுதேசியாக அந்நிய முதலாளித்துவ ஏகாதிபத்திய ஆற்றலிற்கு எதிராகச் சமரசமின்றிப் பொருளியல் போர் தொடுத்தார். இன்றைய சூழலில் தொழிலாளர் ஆற்றலெல்லாம் தொழிற்சங்கவாதங்களாகச் சுருங்கி நிற்பதைக் காணும் பொழுது வ.உ.சியின் தொழிலாளர் - தேசிய இயக்கம்- விடுதலை உறவு எவ்வளவு முதன்மையானது எனப் புரிகிறது.

''தொழிலாளர்களை வர்க்க ரீதியாகத் திரட்டுதல் என்பது அவர்களை வர்க்க உணர்வு பெற்றவர்களாக ஆக்குதல் என்பதாகும். வர்க்க உணர்வை மூடியுள்ள பல கருத்து மாயைகளைக் களைதலாகும்''15என்று கோ.கேசவன் கூறுகிறார். வ.உ.சி தொழிலாளர்களுக்கு வர்க்க உணர்வோடு சேர்த்து அரசியலையும் படிப்பித்துக் கொண்டே இருந்தார். அவர்களுடன் சேர்ந்தே இயங்கிக் கொண்டிருந்தார்.

வ.உ.சியின் பொருளியல் தற்சார்புத் தேசியம் ( Self-Reliance Economic Nationalism) அடித்தளமான பொருளாதாரத்தை வலுப்படுத்த முனைந்தது. ஏகாதிபத்திய மூலமுதலை ( Imperial Capital ) விரட்டிப் பொதுமக்களின் பங்களிப்போடு உருவான தற்சார்பு ( சுதேசி ) சங்கங்களினூடாகத் தொழில் நிறுவனங்களைத் தோற்றுவிப்பது என்பதை இலக்காகக் கொண்டு

பாடாற்றியது. எடுத்துக் கொண்ட இலக்கில் சரியாகவே பயணித்தது. எனினும் ஏகாதிபத்தியப் பேரரசிற்கு எதிராக அணிதிரளக் கூடிய அளவிற்கு அது வளரவில்லை. அவரது சிறைக் காலத்திற்குப் பின்னாட்களில் உலக அரசியல் போக்கில் ஏற்பட்ட மாற்றம், இந்திய விடுதலை அரசியலில் நடந்த திசைப் பிறழ்வு போன்ற காரணங்களால் அது அடுத்த கட்டத்தை நோக்கி நகரவில்லை. இன்றைய உலகமயமாக்கல் பல வல்லாதிக்கப் பெருநிறுவனங்களை வளர்த்தெடுப்பதில் தீவிரமாக முனைகிறது. ‘அனைத்தும் சந்தைக்கே’ எனும் போக்கோடு நுகர்வு பண்பாட்டைத் தீவிரமாக ஊக்குவிக்கிறது. இயற்கை மூலவளங்களை வரைமுறையற்ற அளவில் புணர்கிறது. மானுட உழைப்புச் சுரண்டலில் கேட்பாரற்று ஈடுபடுகிறது. நிலம்சார் பண்பாட்டு வாழ்வின் வேரை அறுத்தெறிகிறது. இந்தச் சூழலில் உலகமயமாக்கல் தருவித்த ஏகபோகமயமாக்கலை ( Monoploy ) எதிர்த்துக் ‘கூட்டுறவுத் தொழில் முனைதல்’ எனும் கருவியைக் கையில் ஏந்த வேண்டியுள்ளது. தொழிலாளர்களை , உழவர் வகுப்பை ஒருங்கிணைத்து கூட்டுறவுத் தொழில் நிறுவனங்களைத் தோற்றுவித்து இந்த நிலத்தின் வளங்களையும் மக்களின் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த வாய்ப்பு கிடைக்கிற இடங்களில் எல்லாம் வ.உ.சி செயல்படுத்திய பொருளியல் தற்சார்புத் தேசியத்தை நடைமுறைப் படுத்தலாம்.

எந்த மொழி வழித் தேசியமாயினும் பொருளியல் மேம்பாடு குறித்து சிந்திக்காது போனால், அது ஊர் போய்ச் சேராது. புறவயமாகப் பொருளியல் மேம்பாட்டையும் அகவயமாக மொழிவழித் தேசத்திற்கான கட்டுமானத்தையும் நிகழ்த்திய வ.உ.சியின் அரசியல் மீது புத்தாய்வுகள் நிகழ வேண்டும். தமிழ் மொழியுணர்வோடு அனைத்துமக்களின் பொருளியல் மேம்பாடு குறித்துச் சிந்தித்துச் செயல்பட்ட வ.உ.சியின் செயல்பாடுகளைப் படிப்பினைகளாகக் கொள்வது தமிழ்த் தேசியத்திற்குக் காலத்தின் கட்டாயமாகும்.

**அடிக்குறிப்புகள் :**

(1) மெய்யறம், வ.உ.சிதம்பரம் பிள்ளை

(2) மார்க்சியமும் மொழியியல் தேசிய இனப் பிரச்சனைகளும், ப-34, ஜே.வி.ஸ்டாலின், தொகுப்பாசிரியர் மகாராசன், யாப்பு வெளியீடு, 2022

(3) மேலது,ப-94

(4) வ.உ.சி வளர்த்த தமிழ், ப-58, மா.ரா.அரசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2002

(5) வழித்தடங்கள், ப-60, தொ.பரமசிவன், கலப்பை பதிப்பகம், 2022

(6) அரசியல் பெருஞ்சொல், ப-22, வ.உ.சிதம்பரம்பிள்ளை, யாப்பு வெளியீடு, 2020

(7) தமிழகக் கடல்சார் பொருளாதாரமும் போர்ச்சுக்கீசிய காலனியமயமாக்கமும், ப-47, எஸ். ஜெயசீல ஸ்டீபன், தமிழில் க.ஐயப்பன், NCBH, 2020

(8) சோழமண்டலக் கடற்கரையும் அதன் உள்நாடும், ப-13, எஸ்.ஜெயசீல ஸ்டீபன், தமிழில் ரகு அந்தோணி, NCBH, 2019

(9) நம் நாட்டுக் கப்பற்கலை, ப-59, சாத்தன்குளம் அ. இராகவன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், 2022

(10) மெய்யறம், வ.உ.சிதம்பரம் பிள்ளை

(11) மார்க்சீய தத்துவம் ஓர் அறிமுகம், ப-20, பாரதி புத்தகாலயம்,2019

(12) மார்க்சியம், ப-244, கோ.கேசவன், கோ.கேசவன் அறக்கட்டளை வெளியீடு,2022

(13) திலக மகரிஷி , வ.உ.சி, ப-29 , பதிப்பாசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி, காலச்சுவடு, 2021

(14) மார்க்சியம், ப-391, கோ.கேசவன், கோ.கேசவன் அறக்கட்டளை வெளியீடு,2022

15. மேலது ப-390

☆ ☆ ☆



வ உ சி

# வ.உ.சி அவர்களின் சமூகப்பார்வை

கொளத்தூர் மணி

கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சி. அவர்களுக்குப் பன்முக அடையாளங்கள் உண்டு. தொழிற்சங்கத் தலைவர், தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்றை ஆய்ந்து உரை எழுதிப் பதிப்பித்தவர், இன்னிலை, சிவஞான போதம் ஆகிய நூல்களுக்கு உரை எழுதியவர், ஜேம்ஸ் ஆலனின் நான்கு ஆங்கில நூல்களை மொழி பெயர்த்தவர் என்ற பல சிறப்பு அடையாளங்களைக் கொண்டிருந்த ஓர் ஆளுமை ஆவார். இக்கட்டுரையோ அவரது சமூகப் பார்வை குறித்த சில தகவல்களை முன்வைக்க முயலும் ஒன்றாகும்.

வ உ சி குடும்பத்தில் அவர் மட்டுமின்றி, அவரது தந்தை திரு. உலகநாதம் பிள்ளையும், அவரது பெரியப்பாவும் கூட வழக்கறிஞர்கள்தாம். உப்பளம் வைத்துத் தொழில் நடத்திய குடும்பம். சாதி அடுக்கில் பார்ப்பனருக்கு அடுத்த நிலையினதாகக் கருதப்படும் சைவ வேளாளர் குடும்பம். என்றாலும், வ.உ.சி. அவர்கள் கொண்டிருந்த சமூகப்பார்வை, அதுவும் அந்தக் காலகட்டத்தில் என்பது பெருஞ்சிறப்புக்கு உரியவையாகும். அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

சட்டம் படித்துத் தேறிய பின்னர் 1895ஆம் ஆண்டு முதல் சிறிது காலம் வ.உ.சி அவர்கள் எட்டையபுரத்தில் தொழில் செய்து வந்தார். அதன் பின்னர் 1900ஆம் ஆண்டு முதல் தூத்துகுடியில் தொழில் புரிந்தார்.

எட்டையபுரத்தில் வழக்கறிஞராக அவர் பணியாற்றி வந்தபோது வழக்காடுவதற்கு வந்து போன ஒரு தோழர் மயக்கமுற்றுக் கிடப்பதைப் பார்த்து அவரைத் தேற்றி என்ன ஆனது என்று செய்தியைக் கேட்கிறார். அவர் சொல்கிறார் என் வழக்கு நீண்ட காலமாக நடந்து கொண்டே இருக்கிறது; நானும் வந்து கொண்டே இருக்கிறேன்; முடிந்த பாடில்லை" என்கிறார். அவரிடம் விவரங்களைக் கேட்டறிந்து இனி வராதே என்று கூறி அனுப்புகிறார். வழக்கை நடத்தி வெற்றி பெற்று செய்தியை மட்டுமே அனுப்புகிறார். அதைத் தன்னுடைய ‘தன்வரலாறு’ கவிதையில் கூட எழுதுகிறார்.

"முடிமனில் என்னுடை முன்னோர் நாள்முதல்,
அடிமை புரியும் அறிவினைக் கொண்ட,
வேத நாயகம் எனும் மேம்படு பள்ளனை,
ஏது மில்லாமலே எண்ணிலா வழக்கில்,
அமிழ்த்தனர் போலீசார்; அனைத்தினும் திருப்பினேன்"

என்று குறிப்பிடுகிறார். ஓர் எளிய மனிதனின் மீது, சமூகத்தின் அடிமட்டத்தில் அமுக்கி வைக்கப்பட்டவர் மீது பரிவைக் காட்டும் ஒரு நிகழ்வு

அது. அன்று நிலவிய சாதி ஆதிக்கம், வ.உ.சி. அவர்கள் பிறந்த சாதி ஆகியவற்றோடு பொருத்திப் பார்த்தால்தான் அந்நிகழ்வின் சிறப்பினை அறிய முடியும்.

அதுபோலவே, இரண்டு கண்களையும் இழந்த ஆதரவற்ற சிவப் பொருள் உணர்ந்த இராமையா தேசிகன் என்ற ஒரு 'குலத்தில் குறைந்தவரையும்' தமது இல்லத்தில் உணவிட்டுப் பாதுகாத்தவர் வ.உ.சி. பார்வையற்ற அவருக்கு வ.உ.சி. அவர்களின் மனைவியே உணவு ஊட்டி வந்துள்ளார் என்பதை அவரது தன் வரலாற்றில் எழுதி உள்ள கீழ்க்கண்ட வரிகளால் அறியலாம்.

சிவப்பொருள் உணர்ந்த தேசிகன் ஒருவனென்
தவப்பயனால் இலம் தங்கப் பெற்றேன்
ஊனக் கண்ணினை ஒழித்தவன் நின்றதால்
தானக் குறையினை தவிர்த்திட ஊட்டினள்
..............................................................................................
குலத்தில் அன்னோன் குறைந்தவன் என்றென்
தலத்தில் உள்ளோர் சாற்றினர் குற்றம் ......

எனக் குறிப்பிட்டுள்ளார். விருதுநகர் இராமையா தேசிகர் ஒடுக்கப்பட்ட வகுப்பினர்; துறவி; கண்பார்வை இழந்தவர்; வ.உ.சி. குடும்பமோ சைவ வேளாளர் குடும்பம்; அவருக்கு அவரது மனைவியே உணவூட்டினார் என்பது இந்த நாளிலும் நடக்குமா? அய்யமே!

உணவூட்டியதோடு நில்லாமல் அவரது மனைவி வள்ளியம்மை எழுப்பிய கேள்வி, வ.உ.சி தன்னளவோடு சாதி கருதாப் பண்பினை நிறுத்திக் கொள்ளாமல், தன் மனைவியாரும் ஏற்கும் பக்குவத்தை உண்டாக்கி வைத்திருந்தார் என்பதை அறியலாம். அவரது மனைவி வள்ளியம்மையின் கூற்றாக பதிவு செய்துள்ளார் வ.உ.சி.

எல்லாம் உணர்ந்த என் உயிர்நாத!
எல்லாம் கடவுளாய் இருக்கக் கண்டும்
உருவம் முதலிய ஒன்றினும் பேதம்
மருவுதல் இலாமை மலை போல் கண்டும்
கற்பனையாகக் காணும் குலத்தின்
சொற்பிழை கொளல் எனச் சொல்லியே தூய!
துறந்தவர் தமையும் தொடருமோ குலம் இவண்?
இறந்த அம்மொழியினை ஏற்றிடாது ஒழிப்போம்!
எல்லாவற்றிலும் கடவுள் உண்டு என்று கூறுவோர்
ஒடுக்கப்பட்டோரிலும் அவர் இருப்பார் என்பதை அறியாரா?

என்றும் மேலும் அவரோ துறவி; துறவிக்குக் குலம் இல்லை என்று வேறு சொல்லி வைத்திருக்கிறார்கள். பிறகு ஏன் குலம் பற்றிய பேச்சு? என்றும் கேள்வி கேட்கும் பக்குவத்தையும் உருவாக்கி வைத்துள்ளார் வ.உ.சி!

வள்ளுவ வகுப்பினரான சுவாமி சகஜானந்தர் என்னும் துறவியை தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார் வ உ சி. அவரது மனைவியாரோ சகஜானந்தா சாமியை அகம் முகம் மலர வரவேற்று விருந்தோம்பி மகிழ்ந்திருக்கிறார். இந்த சகஜானந்தர் காங்கிரசில் சேர்ந்து தீண்டாமை எதிர்ப்பு இயக்கத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர்; சிதம்பரம் கோவில் நுழைவு இயக்கத்தில் இறங்கியவர்; அங்கே நந்தனுக்குத் தனி கோயில் எழுப்பியவர்; ஒடுக்கப்பட்ட குடும்பத்துக் குழந்தைகளுக்காகப் பள்ளிகளை நடத்தியவர் ஆவார்.

'தமது பிள்ளை போன்று என்னை வளர்த்தார் அப்பெருந்தொகை வள்ளல்" என்று வ. உ. சி. யைப் பற்றிப் பாராட்டிச் சொல்லி இருப்பது மற்றொரு சான்றாகும்

தமிழக வரலாற்றில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் வீரியம் கொண்டதற்குச் சேரன்மாதேவி குருகுலப் போராட்டமும் ஒரு காரணம். அந்தச் சேரன்மாதேவி குருகுலத்திற்கு 31 ஏக்கர் நிலத்தைத் தன் சொந்தப் பணத்தில் வாங்கிக் கொடுத்தவர் கானாடுகாத்தான் வை.சு. சண்முகம் ஆவார். ஆனால் குருகுலத்தில் பார்ப்பனரல்லாதார் குழந்தைகளைப் பாகுபடுத்தி நடத்துகிறார்கள் என்ற செய்தி தெரிந்தவுடன் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பியது. வரதராசுலு நாயுடுவும், பெரியாரும் கடுமையாக எதிர்த்தார்கள். வைக்கம் போராட்டமும், சேரன்மாதேவிப் போராட்டமும் ஏறக்குறைய ஒரே காலகட்டத்தில் நடந்து கொண்டிருந்தது. அதற்கான கலந்துரையாடல்கள் எல்லாம் கானாடுகாத்தான் சண்முகம் இல்லத்தில்தான் தொடந்து நடைபெற்றது. அவர் சுயமரியாதை இயக்கத்தில் பொருளாளராக விளங்கியவரும்கூட.

1935இல் அவரது மகள் பார்வதி, அவரது திருமண மேடையிலேயே, பெரியாரிடம் நான் தாலிக் கட்டிக் கொள்ளமாட்டேன்; எனக்குக் தாலி கட்டுவதாக இருந்தால் நானும் மாப்பிள்ளைக்குத் தாலிகட்டுவேன் எனக் கூறித் தாலியை மறுத்தவர்.

சேரன்மாதேவி குருகுலத்துக்கு எந்தச் சண்முகம் நிலத்தை வாங்கிக் கொடுத்தாரோ, அவரேதான் சுவாமி சிவானந்த சரஸ்வதி எனும் அறிஞர், வேத, புராண, யாக, பார்ப்பனப் புரட்டுகளை விளக்கி எழுதியிருந்த 'ஞான சூரியன்' என்ற ஒரு நூலினையும் தன்செலவில் வெளியிட்டார்.

அந்நூலுக்கு வ.உ.சி அவர்கள் ஒரு முன்னுரையை எழுதியுள்ளார். 'அவன் (ஞான்சூரியன்) வடமொழி வேதங்களிலும், மனுதர்ம சாஸ்திரங்களிலும், காமிகாகமம் முதலிய ஸ்லோகங்களை எடுத்துக் கூறிப் பொருத்தமான கதைகளைக் கூறியும், ஆரியரின் இழிதகைகளையும், சாதிய

வேறுபாடுகளையும் நன்கு விளக்குகின்றான். அவ்வேதம் முதலியவற்றைத் தமவெனக் கொள்வோரும், அவற்றில் மதிப்பேனும் விருப்பேனும் உடையோரும் ஞானசூரியனைப் படிப்பாராயின் அவற்றைத் தமவெனக் கொள்ளார், மதியார், விரும்பார்'

"பிராமணர்களின் யாகங்களிலும் விருந்துகளிலும் பன்றியூன், எருமையூன், பசுவூன் முதலிய பலவகை ஊன்களை உண்டும், பனங்கள் முதலியபலவகைக் கள்களைப் பானஞ் செய்து வந்தவர்களென்றும், சகோதரன் மனைவியிடத்தும், விதவையிடத்தும், குதிரையிடத்தும் குழந்தைகள் பெற்றுச் சந்ததி விருத்தி செய்து வந்தவர்களென்றும், மேற்படி வேதம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டி காட்டி, ருஜு செய்திருக்கிறான். தாம் மதிக்கப்படுவதற்குரிய ஒரு சாதியார் என்று சொல்லிக்கொள்ள விரும்புவாராயின், பிராமணர், மேற்படி வேதம் முதலியவற்றை அக்கினி பகவானுக்கு ஆகுதி செய்வது இன்றியமையாதது" என்று எழுதியுள்ளார்.

பார்ப்பனர்கள் அனைத்தையும் தீயில் போட்டு எரிப்பார்கள், யாகம் என்ற பெயரால். அதைக் குத்தூசி குருசாமி Spirtual Post Office என்பார். யாகத் தீயில் போட்டால் அவையனைத்தும் நேரடியாகக் கடவுளுக்கும், முன்னோருக்கும் போய்ச் சேரும் என்று பார்ப்பனர்கள் கூறுவதால். அதுபோல வடமொழி வேதங்கள், மனுசாஸ்திரம் ஆகியன இரண்டையும் தீயில் போட்டு எரிப்பதே நமது முதல் கடமை என்கிறார் வ.உ.சி.

அவற்றைக் காட்டித்தான் "இந்து சமயம் என்பதன் பொய்களையும் புரட்டுகளையும், ஆபாசங்களையும் நம்பவைப்பதோடு, அச்சமயப் பெயரால் செய்யப்படும் சடங்குகளின் வாயிலாகப் பிராமணரல்லாதார்கள் தாழ்த்தப்படுவதையும் கூறுகிறது" என்றும் எழுதுகிறார்.

மேலும், "வடமொழி யாகமங்களிற் சிலவற்றைத் தமவெனக் கொண்டு, பிறப்பால் சாதி வேற்றுமைகள் கற்பித்தும், சிவாலயங்களிற் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தும் வணங்கி வருகிற சைவர்களும் 'ஞான சூரியன்' கிரகணத்திலிருந்து தப்பவில்லை. தாம் மதிக்கப் படுகிற ஒரு சாதியார் என்று சொல்லிக் கொள்ள விரும்புவாறாயின், அச்சைவர் வடமொழி ஆகமங்களைத் தமவெனக் கொள்ளும் தவறை ஒழித்தலும் சிவாலயங்கள் சிலவற்றில் காணப்படும் சிவலிங்க உருவினை மாற்றலும் இன்றியமையாதவை." என்கிறார்.

மற்றொரு கருத்தாகச் சாதி பேதமே காணாத திருக்குறள் தமிழ் மக்களிடத்திலும், சிவஞான போத சித்தாந்தச் சைவத் தமிழ் மக்களிடத்திலும் ஞான சூரியன் செல்லாதிருப்பது தகுதியே"என்கிறார். இவ்வணிந்துரையின் வாயிலாக இந்து மதம், வடமொழி வேதங்கள் ஆகியவற்றை மட்டுமின்றி, தாம் பிறந்த சைவ சமயத்தையும் சாடுகிறார் வ.உ.சி.

சைவர்களுக்கு வ.உ.சி மீது கோபம் இருந்தது. ஏனென்றால் சுயமரியாதைச் சைவர்கள் என்றே சில பேரை அவர்கள் விலக்கி வைத்திருந்தார்கள். பெரியாரோடு தொடர்பு கொண்டிருந்தவர்களை அப்படி விலக்கி வைத்திருந்தார்கள். வ.உ.சியை மட்டுமல்ல; சொ.முருகப்பா, கி.ஆ.பெ.விசுவநாதம், கே.ஆர்.பாலசுப்பிரமணியம், மணி திருநாவுக்கரசு முதலியார், கா.அப்பாதுரை போன்றவர்களையும் 'சுயமரியாதைச் சைவர்கள்' என்று சைவர்கள் ஒதுக்கி வைத்திருந்தார்கள். வ.உ.சி.அவர்கள் எழுதிய சிவஞான போத உரையைக் கூட அவர்களெல்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை.

வ.உ.சி. அவர்கள் 1928இல் தேவக்கோட்டையில் மாணவர் சங்க ஆண்டு விழா ஒன்றில் பேசுகிறார், 'மனுநீதி கண்ட சோழனைப் பற்றி கூறியபொழுது இப்போதிருக்கும் மனுஸ்மிருதியை நடத்திக் காட்டியமைக்காகவே 'மனுநீதி கண்ட சோழன்' என்று பெயர் வந்ததென்ற பொருள்படும்படியே சேக்கிழார் கூறினாரென்று கூறினார்கள். அவர் அப்பொருட்படி கூறியிருப்பாராயின் அவர் மனுஸ்மிருதியைப் படிக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். எந்த நூலானாலும் குற்றமிருக்குமானால் அதனைத் தள்ளத் தயங்கக் கூடாது. பிழையிருக்குமானால் ... வள்ளுவரல்ல, சிவபெருமானே கூறினாலும் தள்ள வேண்டியது தான். கடவுளே எழுதினார் என்று கூறப்படும் நூலிலும் பிழை இருக்குமானால் அதனையும் தள்ள வேண்டியதுதான். வேதத்தில் பிழை இருக்குமானால் திருத்த வேண்டியதுதான். சைவத்திலும் அப்படியேதான். எந்த நூலில் பிழைகள் காணப்படுகின்றனவோ இருக்கிறதோ அவைகளைச் சீர்திருத்த வேண்டுவது இன்றியமையாததாகும்' என்று அக்கூட்டத்தில் பேசுகிறார்.

வேடிக்கையாகவும் சிலவற்றைப் பேசியிருக்கிறார், திருவள்ளுவரைப் பற்றி, "திருவள்ளுவர் ஒரு கவி, ஒப்பற்ற அறிஞர், நானும் அவரைக் கடவுளென்றே போற்றுகிறேன். அவர் நூலில் வாளென்றும், வில்லென்றும், வேலென்றும் இருக்கிறதேயன்றித் துப்பாக்கியென்றாவது, பீரங்கியென்றாவது இல்லை. இப்பொழுது யுத்தத்திற்குச் சாதனங்களாகத் துப்பாக்கியும், பீரங்கியுமே இருக்கின்றன. யுத்தத்திற்குச் செல்ல வேண்டிய அவசியம் நேரிடின் என் செய்வது? வள்ளுவர் துப்பாக்கியைப் பற்றியும், பீரங்கியைப் பற்றியும் எதுவும் சொல்லவில்லை. எனவே இச்சாதனங்களைக் கொண்டு போர் புரிய மாட்டேன். வள்ளுவருக்கு என்ன புத்தி இல்லையா? அவரைவிட நாமெல்லாம் மேதாவிகளாகிவிட்டோமா! என்று ஒருவன் இப்போது கூறிக்கொண்டு இருப்பானானால் அது எவ்வளவு பெரிய மூடத்தனம் என்பதை நீங்கள்யோசித்துப் பாருங்கள்." என்று கூறுகிறார். சைவர்களுக்கு ஏன் கோபம் வந்தது என்று புரிகிறதா?

மற்றொன்று, "தென்புலத்தார் கடன் ஓம்புதல் என்பதற்குப் பிதுர்க்கடன்

செய்தல் என்றே பொருள் வைத்துக் கொள்வோம். அப்பொழுதும் குறிப்பிட்ட வகுப்பாருக்கு வெள்ளி லோட்டா, தங்கத் தட்டு கொடுக்க வேண்டும் என்று காணப்படவில்லையே? சபிண்டி, திதி முதலியவை செய்ய வேண்டும் என்று சொன்னால், 'அய்யா, இது எங்கள் அப்பனுக்குப் போகாது; நாங்கள்இப்போது விழித்துக்கொண்டோம்; இனி ஏமாற்றமுடியாது' என்று கூறி விடுங்கள். கொசு யானையை விழுங்கி விட்டது என்று சொன்னால் அதை நம்ப முடியுமா?" என்று பார்ப்பனச் சடங்குகளை விலக்குங்கள் என்று காரைக்குடி சொற்பொழிவில் பேசுகிறார்.

பார்ப்பனர்கள் நம்மை எப்படி ஏமாற்றுகிறார்கள் என்று ஒரு எடுத்துக்காட்டையும் கூறுகிறார், "நண்பர் தியாகராஜ செட்டியார் மனைவியுடன் பர்மாவிற்கு சென்று வந்திருக்கிறார். அதற்காக அவரை ஜாதியை விட்டு விலக்க வேண்டும் என்று சில இடங்களில் கூறப்படுகிறதாம். இது எவ்வளவு அறியாமை. மனைவியுடன் கப்பலேறிச் சென்றதற்காக ஒரு வகுப்பாருக்கு 2000 , 3000 கொடுத்துப் பிராயச்சித்தம் செய்து கொள்வதா? பிராயச்சித்தம் என்பதெல்லாம் நமக்குத்தான், அவர்களுக்கென்றால் வேதப் பிரமாணம் இருக்கிறது; அந்த நாயனார் அப்படிச் சொல்லியிருக்கிறார், இந்த நாயனார் இப்படிச் சொல்லியிருக்கிறார்களென்று கூறிவிடுவார்கள். பொதுக்கோயில்களில் அனைவருக்கும் சம உரிமை வேண்டும்; லஞ்சம் வாங்காத நீதிபதியிடம் தரகர்கள் வேண்டாம்" என பார்ப்பனர்களுக்கு எதிராகச் சாட்டையை சுழற்றுகிறார் வ.உ.சி. ( குமரன், ஜனவரி, மார்ச் 1928 )

காங்கிரஸை விட்டு வெளியேறியதன் அடுத்த ஆண்டு 1926 டிசம்பரில் பெரியாரோடு ஒரு மாநாட்டிற்குச் செல்கிறார். பிராமணர் அல்லாதோர் மாநாடு என்று அந்த மாநாடு மதுரையில் கூட்டப்படுகிறது. அதில் வ.உ.சி பங்கேற்கிறார். பெரியார் அப்போது, நீதிக்கட்சியை மட்டுமல்லாமல் காங்கிரசில் இருந்த பார்ப்பனரல்லாதோரையும் வாருங்கள் என்று அழைப்பு கொடுத்திருந்தார். அந்த அழைப்பில், நீதிக் கட்சிக்காரர்களை விமரிசனம் செய்வதைப் போல 'நீங்கள், பிராமணரல்லாதார் என்றால் 5 விழுக்காடு கூட இல்லாத இராஜாக்களையும், மிராசுதாரர்களையும், ஜமீன்தார்களையும் நினைத்துக் கொண்டு வராதீர்கள். 95 விழுக்காடு உள்ள ஏழைகளும், உழைப்பாளிகளும், பாமரர்களும் சேர்ந்துதான் பிராமணரல்லாதார். இதனை மனதில் கொண்டு வாருங்கள்; அதற்கான திட்டம் தீட்டுவோம்' என்று அந்த நிகழ்விற்கு முன்பான அறிக்கையில் பெரியார் எழுதுகிறார்.

அந்த மாநாட்டில், 'இந்து கோவில்களில் இந்துக்கள் என்று சொல்லப்படும் எல்லா வகுப்பாருக்கும் பிரவேசத்திலும், பூஜையிலும், தொழுகையிலும் சம உரிமை உண்டு என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது" என்றும், சென்னை சட்டசபையில் இரண்டு முறை நிறைவேற்றப்பட்ட 'இந்துமத

தர்மபரிபாலன' மசோதாவை இம்மாநாடு முழுமனதோடு வரவேற்று ஆதரிப்பதோடு, சட்டப்படிக்குண்டான சம்மதம் கொடுக்க வேண்டியது அவசியம் என்று வைசிராய் பிரபுவிற்குத் தெரிவித்துக் கொள்கிறது' என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப் படுகின்றன. அதற்கு முன்பே நீதிக்கட்சி 1925இல் மசோதாஒன்றினை நிறைவேற்றி வைத்திருக்கிறது; அதற்கு வைசிராய் ஒப்புதல் அளிக்கவில்லை அதனால் 1926 மாநாட்டில் இவ்வாறான தீர்மானத்தை நிறைவேற்றுகிறார்கள்.

மற்றொரு தீர்மானம், 'தங்களை விட பிறவியில் உயர்ந்த வகுப்பார் என்ற எண்ணத்தின் பேரில் வேறு வகுப்பாரைக் கொண்டு சடங்குகள் செய்து கொண்டிருப்பது, நாமே நம்மை தாழ்ந்த வகுப்பாரென்று ஒப்புக்கொள்வதாய் இருப்பதாலும் இவ்வித மனப்பான்மையே நமது சுயமரியாதையை அழிப்பதற்கு ஆதாரமாய் இருப்பதாலும் இனி இவ்வழக்கத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது' என்றும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. இந்த மாநாட்டில் தீர்மானங்களை ஆதரித்து விளக்கி வ.உ.சி பேசியுள்ளார்.

1929 இல் செங்கல்பட்டு முதலாவது மாகாண சுயமரியாதை மாநாட்டில் பெரியார் ஒரு தீர்மானம் கொண்டு வருகிறார், 'வணங்கப்படுவதற்கும், வணங்குபவனுக்கும் இடையில் இடைத்தரகர்களோ, வட மொழியோ தேவையில்லை' என்று ஒரு தீர்மானம் கொண்டு வருகிறார். அதை ஏற்றுக் கொண்டுதான் வ.உ.சியும் 'இலஞ்சம் வாங்காத நீதிபதியிடம் தரகர் வேண்டாமே' என்று பேசுகிறார். அதனால்தான் சைவர்கள் வ.உ.சி யையும் ஒதுக்கினார்கள். சைவர்கள் இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பார்களா? அவர்களும் கிளர்ந்தெழுந்து வ.உ.சி யை எதிர்க்கிறார்கள்.

அதில், முத்தையாப் பிள்ளை என்ற ஒருவர், "பிடிவாதத்தால் கப்பல் விடப் போய் அதனால் கிடைக்கும் தண்டனையினால் பாடம் கற்காதவர், சர்வ வல்லமை மிக்க பிரிட்டிஷாரின் கட்டளையையே மதிக்காதவர், அதேபோலத்தான் கடவுள் கட்டளையானாலும் எதிர்க்க வேண்டும் என்று பேசுகிறார். அதற்கான துன்பத்தை அவர் அனுபவிப்பார்" என்று எழுதுகிறார்.

மேலும், "இவர்கள் சுதேசிக் கலகத்தின்போது தூத்துக்குடியில் தனக்குத் தோன்றிய யுத்தியே சாலச் சிறந்ததெனக்கூறி ஆரவாஞ்செய்து, அதனால் தானடைந்த பயனையும் மறந்து, உலகத்துள் ஒரு பகுதியிலும் அரசரையும் அவர் கட்டளையையும் மதியாமையால், சில நாள் மிகக் கடுந்துன்பம் அனுபவித்தவாறுபோல, சர்வலோக நாயகராகியக் கடவுளையும், அவர் கட்டளையையும் மதிக்கவில்லையாயின் நீண்டநாள் ஆற்றொணாத் துன்பத்தை அனுபவித்து வருந்துவார் என்பதையும் மறந்தமை வருந்தத்தக்கது" (சிவநேசன், மார்ச் 1928)

இவ்வாறு, தான் பிறந்த சாதியை எதிர்க்கிறார்; அதனால் அவர்களால் சாடப்படுகிறார். சுயசாதி எதிர்ப்பிலிருந்துதானே ஒரு சமத்துவம் விரும்பும் போராளி எழுந்துவர முடியும்!

வ.உ.சி. 1910ஆம் ஆண்டு டிசம்பர் முதல் விடுதலையான 1912 டிசம்பர் வரை கண்ணனூர் சிறையில் இருந்தார். அங்குதான் ‘மெய்யறிவு’ ’மெய்யறம்’ எனும் இரு நூல்களை எழுதினார்.

அவற்றுள் ’மெய்யறம்’ எனும் நூலினை “திருக்குறளின் வழி நூல்” என்றே வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார். திருக்குறளை ஒட்டி, ஏழு சீருக்குப் பதிலாக நான்கு சீரில், ஒரு வரியில் எழுதுகிறார். அந்நூலின் வழியே வ.உ.சி அவர்களின் சமூகப் பார்வையையும், எவ்வளவு பக்குவப்பட்டவராக இருந்திருக்கிறார் என்பதையும் அறியமுடியும். அதில் வள்ளுவரின் வாழ்க்கைத் துணைநலம் போல ’உயிர்த்துணை கொளல்’ என்ற ஓர் அதிகாரம் வைத்துள்ளார்.

அவ்வதிகாரத்தில் நான்காவது பாடல், ’துணை இழந்தாரை மணப்பது புண்ணியம்’ விதவை மறுமணத்தைப் பற்றி அதிகம் பேசப்படாத காலத்தில் மெய்யறத்தில் ஒரு குறளாகவே அதை எழுதுகிறார். அடுத்து, ’விரும்பாதவரை விரும்புதல் பாவம்’ என்றும் எழுதுகிறார்.

அடுத்த அதிகாரத் தலைப்பு ’உயிர்த்துணை ஆளுதல்’. அதில் ‘இருவருள் அறிவிற் பெரியவர்ஆள்க’ என்றொரு குறள். குடும்பத்தில் உள்ளவர்களில் யார் அறிவானவரோ அவர், ஆணோ பெண்ணோ குடும்பத் தலைவராக இருக்கட்டும் என்கிறார். அவ்வதிகாரத்திலேயே ’ஆண்பால் உயர்வெனல் வீண் பேச்சென்க’ என்பது மற்றொரு குறள்.

’ஓதலின் அந்தணர்க்கு ஒழுக்கம் நன்றென்ப’ மந்திரம் ஓதுவது மட்டும் ஒழுக்கம் அல்ல; ஒழுக்கமாக இருப்பதுதான் உண்மை ஒழுக்கம் என்கிறார்.

விலைமகளிரைப் பற்றியும் எழுதுகிறார். ’பரத்தையை விலக்கல்’ என்பது அதிகாரத் தலைப்பு. அவ்வதிகாரத்தைத் தொடர்ந்து, ‘பரத்தனை விலக்கல்’ என்றொரு அதிகாரம் வைத்துள்ளார். அதில் ’பரத்தை யினுமிகக் கொடியவன் பரத்தன்’ என்பதொரு குறள். அடுத்து அந்த அறிவிலியால்தான் ஒரு பெண் பரத்தை ஆகிறாள் என்ற பொருளில் ’பொதுமகள் ஆதல் அம்முழுமகனாலே’ என்ற குறளால் ஆண்களுக்குக் கற்பு வேண்டாமா என இன்றைய நாட்களில் எழுப்பும் கேள்வியை அன்றே எழுப்பியுள்ளார் வ.உ.சி.

அடுத்துத் துறவறத்தைப் பற்றிப் பேசுகிறார். ’துணை அழத் துறந்து மெய் இணைதல் அன்பிலா அறம்’ என்றுகூறிக் குடும்பத்தைக் கைவிட்டுவிட்டு மெய்யுணர துறவு என்பதை முன்னரே ஒருகுறளில் சாடியுள்ளார்.

'துறவென இவ்வகத் துறவையே மொழிப' மனதளவில் துறப்பதே உண்மைத் துறவாகும். 'புறத்துறவெல்லாம் பொய்த்துறவாமே' ....காவி ஆடை, சடை வளர்த்தல் என்பதெல்லாம் உண்மையான துறவாகாது என்கிறார். அகத்துறவைத்தான் உண்மையான துறவு என்கிறார். 'மழித்தலும் நீட்டலும் வேண்டா' என்ற குறள் தந்த செய்தியும் இது தானே!

'தமரையே அளியார் பிறரை அளிப்பரோ' தம்மைச் சார்ந்துள்ள உறவினர்களை காப்பாற்றாமல் துறவறம் போய் மற்ற உயிர்களையெல்லாம் காப்பாற்றவா போகிறார்கள் என்று வினவுகிறார்.

காங்கிரசில் இருந்து ஒதுங்கி இருந்தாலும், நீதிக் கட்சியில் சேராமலும், அதேவேளை சுயமரியாதை இயக்கத்தோடு உறவுகொண்டும், சுயமரியாதைக் கருத்துகளை ஏற்றவராகவும், பரப்பியவராகவும் விளங்கியுள்ளார். தனது பொருளாதார நிலை எவ்வாறு இருப்பினும் தொழிலாளர் சிக்கல்கள் நிகழும் இடங்களில் எல்லாம் தொழிலாளர்களோடு இணைந்து நின்று போராடியும் வந்துள்ளார். தமிழ் இலக்கியப் பணிகளிலும் ஈடுபட்டுக் கொண்டே இருந்துள்ளார்.

அந்த மாமனிதர் முடிவெய்தியபோது, இந்திய விடுதலைப் போராட்டத்தின் ஒரு பாய்ச்சல் நடவடிக்கையாக சுதேசிக் கப்பல்களை இயக்கியவர், அதன் தொடர்ச்சியாய்ச் சிறையில் அடைக்கப்பட்டுக் கொடுமைகளை அனுபவித்தவர் என்றபோதும் காங்கிரஸ் தரப்பினர் இறுதி மரியாதை செலுத்தக்கூட இல்லை. நமக்கெல்லாம் எப்போதும் ஒரு வருத்தம் உண்டு. தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை வடவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. பார்ப்பனர் அல்லாதார் எனில் பார்ப்பன காங்கிரசார் ஏற்றுக்கொள்வதில்லை.

அந்நிலையில்தான், 1936 நவம்பரில் வ.உ.சி முடிவெதியபோது பெரியார் 'சிதம்பரம் சிதைவு' என்ற தலைப்பில் அக்கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு இரங்கல் செய்தி எழுதியுள்ளார்:

"தோழர் வி.ஓ சிதம்பரம் பிள்ளை அவர்கள் முடிவெய்தி விட்டார். தனக்கு இயங்கும் சக்தி இருந்து ஓடி உசாவித் திரியும் காலமெல்லாம் தனக்கு சரியென்று தோன்றிய வழிகளில் உழைத்துவிட்டு ஒடுக்கம் ஏற்பட்டவுடன் அடக்கமாகிவிட்டார். இது மக்கள் வாழ்க்கையின் நியாயமான நிலையேயாகும்.

மிக்க மந்தமான காலத்தில் அதாவது மனிதன் பொதுநலம் என்றால் மத சம்பந்தமான காரியம் தவிர வேறு ஒன்றும் இல்லை என்றும், அரசியல் என்றால் அது தெய்வீக சம்பந்தமானது என்றும் எப்படி எனில் கூனோ, குருடோ, அயோக்கியனோ, கொள்ளைக்காரனோ ஒருவன் புருஷனாய்

அமைந்து விட்டால் பெய்யெனப் பெய்யும் மழை என்பதற்கு இலக்காகவும் பின்தூங்கி முன்னெழுபவள்போலவும் இருப்பதுதான் பெண்ணின் கற்புக்கு குறியென்றும் அக்கூட்டு தெய்வீக சம்மந்தமாய் ஏற்பட்டதென்றும் சொல்வது போல், அரசன் எப்படிப் பட்டவனாக இருந்தாலும், ஆட்சி எப்படிப் பட்டதாய் இருந்தாலும், அரசனை விஷ்ணுவாய் கருதி ஆட்சியை வேதக் கோட்பாடாகவும் கருதி வாழ வேண்டும் என்று இந்த பார்ப்பனீய ஆதிக்க காலத்தில் மற்றும் தண்டனை, சிறை என்பவைகள் மகா அவமானமாகவும், மகா இழிவாகவும், மகா கொடுமையாகவும், துன்பமாகவும் இருந்த காலத்தில், தென்னாட்டில் முதல் முதல் வெளிவந்து அரசனை எதிர்த்து அரசியலை இகழ்ந்து துச்சமாய் கருதி தண்டனையை அடைந்து சிறைக்கொடுமையை இன்பமாய் ஏற்று கலங்காமல் மனம் மாறாமல் வெளிவந்த வீரர்களின் முதன்மை வரியில் முதன்மை லக்கத்தில் இருந்தவராவார் நமது சிதம்பரம்.

அதன் பலன் எப்படியோ, ஆனாலும் அவராலேயேஅநேக பார்ப்பனரல்லாத மக்கள் உண்மை வீரர்களாகவும் சுய நலமற்றவர்களாகவும் வெளிவர முடிந்தது. தோழர் சிதம்பரம் ஒரு பார்ப்பனராய் இருந்திருப் பாரேயானால் லோக மானியர், முனீந்திரர், சிதம்பரம் கட்டம், சிதம்பரம் உருவச் சிலை, சிதம்பரநாதர் கோயில், சிதம்பரம் பண்டு, காங்கிரஸ் மண்டபங்களில் காங்கிரஸ் பக்தர்கள் வீடுகளில் சிதம்பரம் கழுத்து சிலை, சிதம்பரம் உருவப்படம் இருக்கும்படியான நிலையை அடைந்திருப்பார். ஆனால் அவர் பிள்ளை. அதுவும் சைவப் பிள்ளை ஆனதால் அவர் வாழ்வு அவருக்கே அவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்காமல் இருந்தது என்பதோடு, அவருக்காக ஏற்படுத்தப் பட்ட பண்டுகூட வெளியிட யோக்கியதை இல்லாததாய் இருந்து வருகிறது.

சிதம்பரம் பிள்ளையின் அனுபவத்தை மற்ற தேசாபிமான பார்ப்பனரல்லாதாரும் அறியட்டும் என்பதற்காகவே இதைக் குறிப்பிட்டோம்.

அரசியல் உலகம் அவர் இறங்கின காலத்தில் ஒரு விதமாகவும் இப்போது ஒருவிதமாகவும் இருக்கிறபடியால் ஓர் அளவுக்கு பார்ப்பனரல்லாத தேச பக்தர்களைப் பற்றி ஆறுதல் அடைகிறோம். எப்படியெனில் பார்ப்பனரல்லாத தேச பக்தர்களை பார்ப்பனர் ஓர் அளவுக்காவது வேஷத்துக்காகவாவது அணைத்துத் தீரவேண்டிய நிலையில் வேறு பல இயக்கங்கள் நிர்பந்தித்துக் கொண்டிருப்பதால் அதிகம் பயப்பட வேண்டியதில்லை. ஆகையால் சிதம்பரம் பிள்ளையை ஓர் உதாரணமாகக் கொண்டு மற்ற தேசபக்தர்கள் அதற்கேற்றபடி நடந்து கொள்வார்களாக. ( 22-.11.-1936 குடிஅரசு )

அதைத் தொடர்ந்து மற்றொரு கட்டுரையும் பெரியார் எழுதுகிறார்,

ஹிந்து, மெயில், மித்திரன், ஜெயபாரதி, தினமணி இடம் கொள்ளுமா? பிறப்புக்கும் பேருக்கும் அடிமையான பித்தலாட்ட தேசம் இதுதானே? என்பது அதன் தலைப்பு. "ஏ -பி வகுப்பு சிறையில்லாத முப்பதாண்டுகட்கு முன்பு சிறை புகுந்து, வக்கீல் தொழிலிழந்து, தியாகம் பலபுரிந்து, கஷ்டநஷ்டங்கள் அடைந்து, கடைசி வரையில் ஏழையாகவே வாழ்ந்து, சென்ற 18ஆம் தேதியன்று, 65ஆவது வயதில் உயிர் துறந்த வ.உ. சிதம்பரம் பிள்ளை பிரம்மா தலையிலிருந்து வெடித்தெழுந்த வ.உ.சிதம்பர அய்யராயிருந்தால், ஹிந்து, சுதேசமித்திரன், ஜெயபாரதி, தினமணி முதலிய பழுப்பு வெள்ளை பத்திரிகைகளிலும், மெயில் போன்ற வெளுப்பு பார்ப்பன பத்திரிகைகளிலும் வேறு விஜயங்களுக்கு இடமிருக்குமா?

இது வரையில் இந்நாட்டில் இறந்த வடநாட்டு படேல்களாயிருந்தாலும் சரி - தென்னாட்டுப் படேல்களாயிருந்தாலும் சரி - சிதம்பரம் பிள்ளை தியாகத்துக்கு ஒப்பாகுமா?

ஜெயிலிருக்கும் திக்கே தெரியாத கஸ்தூரி ரங்கய்யங்கார், ரங்கசாமி அய்யங்கார் முதலியோரின் சேவையும் தியாகமும் பிள்ளை அவர்களின் தியாகம் முன்பு உறை போடவும் கூடுமா? ரவுலட் சட்டத்தில் கையொப்பமிட்ட சர்.சி.வி. குமாரசாமி சாஸ்திரிக்கும், பார்ப்பனரல்லாதாரிடமே பத்து லட்சக் கணக்கில் கொள்ளையடித்து, எல்லா சொத்தையும் பார்ப்பனருக்கே உதவ வேண்டுமென்று உயில் எழுதி வைத்துவிட்டு இறந்து போன டாக்டர் ரங்காச்சாரிக்கும் கொடுத்த இடத்தில் 100இல் ஒரு பங்குகூட, தேசபக்த சிங்கம் சிதம்பர தங்கத்துக்கு, ஹிந்து முதலிய தேசிய பத்திரிகைகள் கொடுக்கவில்லையென்றால் இந்த வகுப்புவாதமே உருவெடுத்த சண்டாள பத்திரிகைகள் தேசியம் பேசி, பாமர மக்கள் தலையில் எத்தனை காலம் மிளகாய் அரைக்க உத்தேசித்திருக்கின்றனவோ தெரியவில்லையே?

போதாக்குறைக்கு சிதம்பரம் பிள்ளை காங்கிரஸ் என்று சொல்லியே உயிர் துறந்தாராம்!

சி. ராஜகோபாலாச்சாரி போன்ற பார்ப்பனத் தலைவர்களின் சூழ்ச்சியை கண்டித்தும், காங்கிரசை விட தேசமே பெரிதென்று கர்ஜித்த சிங்கமா, அக்ரஹாரப் புலிகள் அதிகாரம் செலுத்தும் காங்கிரசைப் பற்றி மகா கவலை கொண்டு இறந்திருப்பார்? ஒரு வேளை காங்கிரசின் பேரால் பாமர மக்கள் தலை மேல் கல் விழப் போகிறதே என்று வேண்டுமானால் கவலைப் பட்டிருக்கலாம். தாலி அறுப்பு, ஜவஹர் கூட்டத்தில் யானையை விட்டது, ருக்மணி லட்சுமிபதியை சுந்தரராவ் குத்தப் போனது - போன்ற தேர்தல் அபாண்டங்களோடுதான், சிதம்பரம் காங்கிரஸ் காங்கிரஸ் என்று உயிர்விட்டார் என்ற அபாண்டத்தையும் சேர்க்க வேண்டும்.

சிதம்பரம் பிள்ளை விஜயத்தில் மவுனம் சாதிக்கும் ஜாதிப் பித்து பிடித்த பார்ப்பன பத்திரிகைகளின் போக்கைக் கண்ட பின்னாவது, பார்ப்பனரல்லாதாருக்கு ஆத்திரம் பொங்குமா? ( 29.-11.1936, குடிஅரசு )

☆ ☆ ☆



பெரியாரும் வ உ சி யும்

# பெரியாரின் சுயமரியாதையும் வ.உ.சி.யின் தன் விடுதலையும்!

ப. திருமாவேலன்

'ஈ.வெ.இரா.விடத்தில் உள்ள சிறப்புக் குணம் என்னவென்றால் மனதில் படும் உண்மைகளை ஒளிக்காமல் சொல்லும் ஒரு உத்தமக் குணம் தான். அவரை எனக்கு இருபது ஆண்டுகளாகத் தெரியும். அவரும் நானும் ஒரே இயக்கத்தில் சேர்ந்து வேலை செய்து வந்தோம். அந்த இயக்கத்தில் அயோக்கியர்கள் சிலர் வந்து புகுந்த பிற்பாடு நானும் அவரும் விலகிவிட்டோம். பிறகு அவர் ஆரம்பித்து நடத்தப்பெறும் சுயமரியாதை இயக்கத்தைப் பார்த்து இது எல்லா இயக்கத்திலும் நல்ல இயக்கமாயிருப்பதால் என்னால் ஆன உதவியை அவ்வியக்கத்திற்கு செய்து வருகிறேன். அவரைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்வதாக இருந்தால் தமிழ்நாட்டில் எல்லாத் தலைவர்களைவிட பெரிய தியாகி என்றுதான் சொல்ல வேண்டும். ஆகையினால் அவருடைய திருஉருவப் படத்தை ஒவ்வொருவரும் வைத்து காலை, மாலை பகல் முதலிய வேளைகளில் வணங்கவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்' ( நாகப்பட்டினத்தில் பெரியார் படத்தை திறந்து வைத்துப் பேசியது - குடிஅரசு 10.6.1928 ) என்று சொன்னவர் பெருந்தமிழர் - பேரறிஞர் - தியாகிகளுக்கெல்லாம் பெரிய தியாகியான வ.உ.சிதம்பரனார்.

அதே விழாவில் பெரியார் படத்தை நோக்கி விழுந்து வணங்கினார் வ.உ.சி. "இப்படி நீங்கள் பேசலாமா? இப்படி எனது படத்தை விழுந்து வணங்கலாமா?' என்று கேட்டிருக்கிறார் பெரியார். "அதில் என்ன தவறு?" என்று திருப்பிக் கேட்டுள்ளார் வ.உ.சி.

தலைவர்களுக்கெல்லாம் தலைவர்களான பெரியாருக்கும் வ.உ.சி.க்கும் இடையில் இருந்த தலைமைப் பண்புக்கு உதாரணமான காட்சிகள் இவை.

வ.உ.சி.யைப் பார்த்து அரசியலுக்கு வந்தவர்தான் பெரியார். இதனைக் கோவில்பட்டியில் நடந்த கூட்டத்தில் வெளிப்படையாகவே பெரியார் சொல்லி இருக்கிறார். " அவர் வங்காளப் பிரிவினையின் போது தமிழ்நாட்டில் சிறப்பாக இந்த ஜில்லாவில் அரும்பெரும் தலைவராயிருந்து நடத்திய கிளர்ச்சியின் போது நான் உல்லாசத்துடன் விடலைப் புருஷனாய் விளையாடிக் கொண்டிருந்தேன். அவரையும் அவர் போன்றோரையும் கண்டே பொதுத்

தொண்டில் இறங்கினேன்' என்று பேசியவர் பெரியார். ( குடிஅரசு 26.6.1927) இத்தகைய காவிய நட்பு அவர்கள் இருவருக்குள்ளும் இருந்துள்ளது.

## அரசியல் விடுதலையுடன் சமூக விடுதலையும்!

வ.உ.சி.யின் வாழ்க்கையை இரண்டாகப் பிரித்து பார்க்க வேண்டும். 1904-1912 அரசியல் விடுதலைக் காலம் 1918-1936 சமூகவிடுதலைக் காலம் - என்பதாக பிரித்துக் காண வேண்டும். இதில் சமூக விடுதலைக் கால வ.உ.சி.குறித்த சில பதிவுகளை மையமாக வைத்து இக்கட்டுரை விரிகிறது.

வ.உ.சி. அவர்கள் 1908 ஆம் ஆண்டு கைதாகி 1912 வரை சிறையில் இருக்கிறார். இது பெரியார் அவர்கள் தீவிர அரசியலில் இறங்காத காலம் ஆகும். சுதேசி கப்பல் நிறுவனத்தை வ.உ.சி. தொடங்கிய காலத்தில் ஈரோட்டில் நிதி திரட்டித் தந்ததாக பெரியார் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். ( 7.11.1948 சேத்துப்பட்டு வ.உ.சி. இளைஞர் கழக இலவச நூல்நிலையத் திறப்பு விழா ) சிறையில் இருந்து வெளியில் வந்த வ.உ.சி. தீவிர அரசியலில் இருந்து விலகி நிற்கிறார். அப்போது காங்கிரசு கட்சிக்குள் சென்னை மாகாண சங்கம் என்ற அமைப்பு உதயமானது. நீதிக்கட்சி எனப்படும் தென்னிந்திய நல உரிமைச் சங்கமானது பார்ப்பனரல்லாதார் நலனுக்காக பேசத் தொடங்கிய ( 1916-17) காலம் அது. இது காங்கிரசு கட்சிக்குள் நெருக்கடியை ஏற்படுத்துகிறது. காங்கிரசுக்குள் இருக்கும் பார்ப்பனரல்லாத தலைவர்கள் இணைந்து - ஒரு அமைப்பைத் தொடங்குகிறார்கள். அதற்கு **'சென்னை மாகாண சங்கம்'** என்று பெயர். இதில் முக்கியப் பங்கு வகித்தவர் வ.உ.சி. அவருடன் இணைந்து திரு.வி.க., பெரியார், டாக்டர் வரதராஜீலு ஆகியோர் இயங்கினார்கள்.
இந்த சென்னை மாகாண சங்கத்தின் இரண்டாம் ஆண்டு விழா ( 1919 ) ஈரோட்டில் நடந்துள்ளது. அதன் தீர்மானத்தை வடிவமைத்ததில் வ.உ.சி. முன்னின்றதாக பிற்காலத்தில் பெரியார் பேசி இருக்கிறார். ( குடிஅரசு 20.12.1925 ) அந்த வகையில் சுயமரியாதை இயக்கத்தின் தொடக்க ஊக்கியாக இருந்தவர் வ.உ.சி.அவர்கள்.

## வ.உ.சி.யின் இரண்டு தீர்மானங்கள்!

1925 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாநாட்டில் வகுப்புரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வர முடியாமல் பெரியார் அவர்கள் காங்கிரசை விட்டு வெளியேறினார். ஆனாலும், இதன் தொடக்கம் என்பது 1920 திருநெல்வேலி மாநாடு ஆகும். இங்கு அடித்தளமாக இருந்தவர் வ.உ.சி. 1920 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடந்த 26 ஆவது சென்னை மாநில அரசியல் மாநாட்டில், வகுப்புவாரி உரிமைத் தீர்மானத்தை வ.உ.சி. அவர்கள் கொண்டு வந்தார்கள்.

அப்போதுதான் காங்கிரசில் இருந்த பார்ப்பனரல்லாத தலைவர்கள் அனைவரும் வஞ்சகமாக ஏமாற்றப்பட்டார்கள்.

பெரியார் தலைமையில் அந்த மாநாட்டுப் பந்தலில் பார்ப்பனரல்லாதார் கூட்டம் ஒன்று நடந்துள்ளது. வகுப்புரிமைத் தீர்மானத்தை இம்மாநாட்டில் நிறைவேற்ற வேண்டும் என்று அதில் கலந்து கொண்ட பலரும் வலியுறுத்தினார்கள். இதில் மிக முக்கியமானவர்கள் நாவலர் சோமசுந்தரபாரதி, வ.உ.சி., தண்டபாணி ( பிள்ளை ) உள்ளிட்டவர்கள். மாநாட்டுத் தீர்மானங்களை வடிவமைக்கும் கமிட்டிக்கு அன்றைய பெயர் விஷயாலோசனைக் கமிட்டி என்பதாகும்.

அக்கூட்டத்தில் இத்தீர்மானத்தைப் பெரியார் முன்மொழிகிறார். வ.உ.சி.யும் தண்டபாணியும் வழிமொழிகிறார்கள்.

அப்போது என்ன நடந்தது என்பதை இதோ 'குடிஅரசு' சொல்கிறது:

" காலஞ்சென்ற திரு. எஸ். கஸ்தூரி ரெங்கய்யங்கார் எழுந்து வீதாசாரம் (Percentage) என்கிற வார்த்தைக்குப் பதிலாக 'போதுமான' என்னும் அர்த்தத்தைக் கொடுக்கத் தகுந்த (Adequately) 'அடிகுவேட்லி' என்கிற பதத்தைப் போட்டுக் கொள்ளும்படி ஒரு திருத்தப் பிரேரேபணை கொண்டு வந்தார்.

இந்த 'அடிகுவேட்லி' என்ற பதத்திற்கு என்ன பொருள் என்று திரு. ராமசாமி நாயக்கர் அம் மாநாட்டுக்கு அக்ராசனாதிபதியாக இருந்த திரு. சீனிவாசய்யங்கார் அவர்களைக் கேட்க, அவர் இரண்டும் ஒரே அர்த்தந்தான்; ஆனால், பர்சன்டேஜ் என்பதைவிட அடிகுவேட்லி என்பது நல்ல வார்த்தையென்று சொல்லி தீர்மானத்தை நிறைவேற்றி விட்டார்.

இது சமயம் திரு. ராஜகோபாலாச்சாரியார் முதலியோர்களும் அக்கூட்டத்தில் ஆஜராகித்தானிருந்தார்கள். அதோடு ராஜாங்கக் கல்வித்துறைகளில் சமஸ்கிருதக் கல்விப் பயிற்சிக்கு உள்ள யோக்கியதையும் செய்முறையும் தமிழ் கல்விக்கும் இருக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் திரு. ராமசாமி நாயக்கரால் பிரேரேபிக்கப்பட்டு திரு. வி.ஓ.சிதம்பரம் பிள்ளையால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.(ஆனால், விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் முடிந்ததும் வெளியில் வந்து திரு. ஈ.வெ. ராமசாமி நாயக்கர் சில ஆங்கிலம் படித்தவர்களைக் கண்டு 'அடிகுவேட்லி' என்பதற்கும் 'பர்சென்டேஜ்' என்பதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டபோது அவர்கள், அடிகுவேட்லி என்பது இருபொருள் கொண்டதென்றும், அதாவது யோக்கியதைக்குத் தகுந்த என்கிற பொருள்கூட கொள்ளலாமென்றும், பர்சன்டேஜ் என்கிற வார்த்தைதான் மிகத் தெளிவானது என்றும் சொன்னார்கள்.)

பிறகு மாநாட்டில் இத்தீர்மானம் வரும்போது 'பர்சன்டேஜ்' என்கிற வார்த்தையையே போட்டுக்கொள்ள வேண்டும் என்று திரு. நாயக்கரும், திரு.

தண்டபாணி பிள்ளையும் அக்ராசனர் திரு. சீனிவாசய்யங்காரிடம் சொன்னார்கள். அவரும் அப்படியே ஆகட்டுமென்று ஒப்புக்கொண்டார்.

கடைசியாக மாநாட்டில் இது தவிர மற்ற தீர்மானங்கள் முடிந்தவுடன் அக்ராசனாதிபதி எழுந்து திடீரென்று தமது முடிவுரையை ஆரம்பித்து விட்டார். திரு. தண்டபாணிப் பிள்ளை தன்னுடைய வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ தீர்மானம் என்ன ஆயிற்றென்று அக்ராசனரைக் கூட்டத்தில் கேட்டார்.

அக்ராசனர் திரு. சீனிவாசய்யங்கார், அது பொது நன்மைக்கு விரோதமான தீர்மானமானதால் அவற்றை ஒழுங்குத் தவறானதென்று தீர்மானித்து விட்டதாகச் சொல்லிவிட்டார். உடனே திரு. தண்டபாணிப்பிள்ளை எழுந்து, விஷயாலோசனைக் கமிட்டியில் நிறைவேற்றப் பட்டதன் தீர்மானம் இங்கு எப்படி ஒழுங்குத்தவறு என்று கேட்டார். அப்போது, அங்கிருந்த பிராமணர்கள் திரு. பிள்ளையை உட்காரும்படி கூச்சல்போட்டு அடக்கி விட்டார்கள்'

கடைசியாக முடிவுரையில் திரு. அய்யங்கார், காஞ்சி மாநாட்டில் திரு. முதலியாரைக் கொண்டு சமாதானம் சொல்லச் சொன்னதுபோல் வருத்தப்படுவதாகப் பொய் வேஷம் போட்டு மறைத்து விட்டார்.'( குடி அரசு 6.12.1925)

- இதுதான் உண்மை வரலாறு. இதில் வ.உ.சி.யின் பங்களிப்பை முழுமையாக அறியலாம். வகுப்புவாரி உரிமையை மட்டுமல்ல, தமிழ்க் கல்விக்காக பெரியாரும் வ.உ.சி.யும் இணைந்து கொடுத்த குரலையும் நாம் அறியலாம். சமூகநீதி வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்த்தேசிய வரலாற்றிலும் கவனிக்கத் தக்கவராக வ.உ.சி. இருந்துள்ளார். நெல்லையில் தோற்ற தீர்மானத்தை தஞ்சை, திருப்பூர், மதுரை, திருச்சி,சேலம், திருவண்ணாமலை ஆகிய மாநாடுகளுக்கும் கொண்டு சென்று அங்கும் தோற்ற பிறகுதான் காஞ்சிபுரத்திலும் கொண்டு வந்தார் பெரியார். அங்கும் காங்கிரசில் நுழைக்க முடியவில்லை. காங்கிரசை உடைத்து வெளியேறினார் பெரியார். அந்த வகையில் திருநெல்வேலி மாநாடு ( 1920) தொடக்கமாக அமைந்தது. வ.உ.சி.முக்கியக் காரணமாகவும் அமைந்திருந்தார்.

## சீர்திருத்த சைவர்!

பெரியாரின் வாழ்வில் பெரும் மாறுதலை ஏற்படுத்திய நூல், **'ஞானசூரியன்'.** இதனை எழுதியவர் சுவாமி தயானந்தசரஸ்வதி. இந்நூலை முதலில் வெளியிட்டவர் கானாடுகாத்தான் வை.சு.சண்முகம். இந்நூலைப் பெரியாருக்கு கொடுத்தவரும் அவரே. இதனை 1928 ஆண்டு மறுபதிப்பு செய்து பெரியார் வெளியிட்டார். இந்நூலுக்கு மூன்று பேரிடம் சிறப்புரை பெற்றுள்ளார் பெரியார்.

வ.உ.சி., மறைமலையடிகள், கா.சுப்பிரமணியனார் ஆகியோரே அந்த மூவர். இந்தச் சிறப்புரையை 7.10.1927 அன்று கோயிற்பட்டியில் இருந்து எழுதியதாக வ.உ.சி. குறிப்பிட்டுள்ளார். சுயமரியாதை இயக்கக் கொள்கைகள், பார்ப்பனர் எதிர்ப்பில் மட்டுமல்ல, எத்தகைய சீர்திருத்தச் சைவராகவும் வ.உ.சி. இருந்துள்ளார் என்பதை இதன் சிறப்புரை மூலமாக அறியலாம்.

'பிராமணப் புரோகிதர்களும் பூசாரிகளும் பிராமணரல்லாதாருடைய பொருள்களைக் கவருவதற்குத் தொன்றுதொட்டுச் செய்து வரும் சூழ்ச்சிகளையும் மோசங்களையும் கொலைகளையும் எடுத்துக்கூறிப் பிராமணரல்லாதவர்கள் இன்னும் பிராமணப் புரோகிதர்களையும் பூசாரிகளையும் விரும்புகிறார்களா என ஞானசூரியன் வினவுகிறான். இந்து சமயம் என்பதன் பொய்களையும் புரட்டுகளையும் ஆபாசங்களையும் அச்சமயப் பெயரால் செய்யப்படும் சடங்குகளின் வாயிலாகவும் பிராமணரல்லாதாரின் பொருள்கள் கொள்ளையிடப் படுவதையும் பிராமணரல்லாதார் தாழ்த்தப்படுவதையும் அக்கொள்ளைகளின்றும் தாழ்வினின்றும் பிராமணரல்லாதார் தப்புவதற்குரிய அவசியத்தையும் வழிகளையும் ஞான சூரியன் நன்கு விளக்குகின்றான்" என்று அதில் குறிப்பிட்டுள்ளார் வ.உ.சி.

".. வடமொழி யாகங்களிற் சிலவற்றைத் தமவெனக் கொண்டு பிறப்பால் சாதிவேற்றுமைகள் கற்பித்தும் சிவாலயங்களிற்சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வணங்கியும் வருகின்ற சைவர்களும் 'ஞானசூரியன்' கிரணங்களினின்று தப்ப வில்லை. தாம் மதிக்கப் படுவதற்குரிய ஒரு சாதியார் என்று சொல்லிக் கொள்ள விரும்புவாராயின் அச்சைவர் வடமொழி ஆகமங்களைத் தமவெனக் கொள்ளும் தவற்றை ஒழித்தலும் சிவாலயங்கள் சிலவற்றில் காணப்படும் சிவலிங்க உருவினை மாற்றலும் இன்றியமையாதவை" என்று எழுதியுள்ளதன் மூலம் வ.உ.சி.யின் தீவிரத்தன்மையை அறியலாம். ( ஞானசூரியன் பக்கம் 8 )

15.3.1928 அன்று காரைக்குடியில் சிவஞான யோகிகள் தலைமையில் வ.உ.சி. ஆற்றிய உரையில், பிராமணர் - பிராமணரல்லாதார் சண்டைக்குக் காரணம் உத்தியோகமென்றே கூறலாம் என்று பேசி உள்ளார். ஆதிதிராவிடர் கல்வி குறித்தும், பெண்களைச் சமைக்கும் இயந்திரமாக்கிவிட்டார்கள் என்றும் பெண்களுக்குக் கல்வி வேண்டும் என்றும் கணவனின் எச்சில் இலையில் மனைவி சாப்பிடக்கூடாது என்றும் உரிமைகள் பெறப் பெண்கள் போராட வேண்டும் என்றும் பேசி இருக்கிறார். ( திராவிடன் இதழில் அது வெளியாகி உள்ளது, இந்திய வரலாற்றில் வ.உ.சி. பக்கம் 365-369 )

சைவர்கள் மத்தியில் வ.உ.சி.க்கு இருந்த எதிர்ப்பை ஆ.இரா.வேங்கடாசலபதி விரிவாக எழுதியுள்ளார். செட்டிநாட்டில் ஆற்றிய உரைக்காகக் கடுஞ்சைவர்கள்

வ.உ.சி.யை கடுமையாகத் தாக்கியுள்ளனர் என்று 'சிவநேசன்' இதழில் நடந்த கருத்து விவாதங்களை வெளியிட்டுள்ளார். 1929 மார்ச் மாதம் நெல்லையில் நடந்த சைவர் கூட்டத்தில் கலந்து கொண்ட வ.உ.சி. சீர்திருத்தச் சைவர் அணியையே சார்ந்திருந்தார் என்றும் சலபதி சொல்கிறார். சைவ சமயத்தைச் சீர்திருத்த வேண்டிய முறைகளைப் பற்றி வ.உ.சி. கூறியது ஏற்கப்படாததால் அதில் இருந்து வெளியேறியதாக குமரன், குடிஅரசு இதழ்களை மேற்கோள் காட்டிச் சலபதி எழுதுகிறார்.

## வ.உ.சி.யின் திராவிடவியல் பெருஞ்சொல்!

1927 ஆம் ஆண்டு சேலத்தில் நடந்த காங்கிரஸ் கட்சியின் மூன்றாவது அரசியல் மாநாட்டில் ( 5.11.1927) அவர் ஆற்றிய உரை என்பது வ.உ.சியின் முழு முகத்தைக் காட்டும் உரையாகும். அந்தக் காலக்கட்டத்தில் தன் மீது என்னமாதிரியான விமர்சனங்கள் எல்லாம் வைக்கப்படுகின்றன என்பதை வ.உ.சி.பட்டியலிடுகிறார்.

* தேசாபிமானமும் என்பால் உளதோ - என்று சிலர் ஐயப்படுகிறார்கள்.

* ராஜாங்கத்தாரிடம் கைக்கூலி பெற்றுக்கொண்டு தேசத்துரோகம் செய்து கொண்டிருக்கிறான் சிதம்பரம் பிள்ளை- என்று பத்திரிக்கை அதிபர் ஒருவர் சொல்லி இருக்கிறார்.

* பிராமண அபிமானி - என்று பிராமணரல்லாத சிறுவர்கள் சிலர் சொல்கிறார்கள்.

* வஞ்சக சொரூபி - என்று பிராமணர்களாலும் தான் அநியாயமாகப் பழிக்கப்படுவதாக அந்த உரையில் சொல்கிறார்.

" இந்த மாநாட்டில் குழுமியிருப்போரில் பெரும்பாலும் பிராமணரல்லாதார் தாம். யானும் ஒரு பிராமணரல்லாதான்.

இந்த ஜில்லா சிறந்த ஓர் தமிழ்நாடு. யானும் ஒரு சிறந்த தமிழன்' - என்ற தனது இரட்டை அடையாளத்தைச் சொல்கிறார். தமிழன் - பிராமணரல்லாதான் என்று தன்னை அறிமுகம் செய்துகொள்கிறார். ஜாதியால் வேளாளன் ஆனாலும் அனைவரையும் சமமாகக் கருதுவதால் ஜாதியார்களால் விமர்சிக்கப்படுவன் என்றும் சொல்லிக் கொள்கிறார்.

சுய அரசாட்சி இந்தியாவில் உருவாக வேண்டும் என்று சொல்லும் அவர், பல ஜாதி, மதத்தலைவர்கள் ஒன்றுபட்டு ரத்தம் சிந்தினால் தான் அதனைப் பெற முடியும் என்கிறார். இந்து - முஸ்லீம் மதக் கோட்பாடுகளுக்குள் இருக்கும் வேற்றுமையைக் களைய வேண்டும் என்றும், உயர்ந்த ஜாதி - தாழ்ந்த ஜாதி பாகுபாடு என்ற எதுவும் இல்லை என்றும் சொல்கிறார். மத, ஜாதிகளில் இருக்கும் இதனைக் களைந்தபிறகுதான் போராட முடியும் என்கிறார். சுய அரசாட்சி உருவாகிவிட்டால், மக்களுக்குள் இருக்கும் வேறுபாடு தானாக நீங்கிவிடும் என்று சிலர் சொல்லியதை அவர் ஏற்கவில்லை. பொதுவானவை

அனைத்தும் அனைவர்க்கும் பொதுவானவை என்று சொன்னார்.
இது நீதிக்கட்சி ஆட்சி அமைந்திருந்த காலம் என்பதால் வகுப்புவாரி உரிமை தொடர்பாக வ.உ.சி. விரிவாகப் பேசுகிறார். 'வகுப்புவாரி உரிமையானது நாட்டில் உள்ள ஒற்றுமையின்மையையும் பகைமையையும் குறைக்கவல்லது' என்கிறார் வ.உ.சி.' நமது தேசத்தில் நிலவும் பிறப்பை ஆதாரமாகக் கொண்ட அநியாயமான ஜாதி வேற்றுமைகளையும், உயர்வு தாழ்வுகளையும் கடுமையாக நான் எதிர்க்கிறேன்' என்றார்.

நம் நாட்டு மக்களிடம் ஒற்றுமை ஏற்படாமல் போனதற்குக் காரணம் அரசு பணிகளிலும் சட்டசபைகளிலும் பொது நிறுவனங்களிலும் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வழங்கப்படாததுதான் என்றும், வகுப்புவாரி உரிமை வழங்குவதே உண்மைத் தேசாபிமானி ஒவ்வொருவரது கடமையாகும் என்றார்.

இதே உரையில்தான் பிராமணர், பிராமணரல்லாதார் குறித்தும் விரிவாகப் பேசினார். பிராமணரல்லாதார் யார் என்பதற்கு வ.உ.சி. கொடுத்த அடைமொழிகள் அழுத்தமானவை.

'பிராமணரல்லாதார்' என்னும்போது முகமதியர்கள், இந்தியக் கிறிஸ்தவர்கள், தாழ்த்தப்பட்ட ஹிந்துக்கள், தாழ்த்துக்கின்ற ஹிந்துக்கள் என்னும் நான்கு வகுப்பினர்களையும் குறிக்கின்றேன் - என்பது வ.உ.சி.யின் வரையறையாகும். பிராமணர் - பிராமணரல்லாதார் வேற்றுமையை உருவாக்கியவர்கள் ஆங்கில ஆட்சியாளர்கள் என்று அப்போதும் சிலர் சொல்லி இருக்கிறாரகள். ( தமிழ்நாட்டின் இப்போதைய ஆளுநர் ஆர்.என்.ரவி சொல்வதைப் போல! ) இதனையும் மறுத்து வ.உ.சி. பேசி இருக்கிறார். 'இது முழுமையான பொய்' என்கிறார் வ.உ.சி. பிரிட்டிஷார் ஆளாத சுதேச மன்னர்கள் ஆட்சியில் பிராமணர் - அல்லாதார் வேறுபாடு இல்லையா என்றும் கேட்கிறார் அவர்.

* பிராமணர்கள்தான் மேல், மற்றவர்கள் கீழ் என்று சொல்வதால்தான் இது ஏற்படுகிறது.
* பிறப்பு முதல் இறப்பு வரையிலான பிராமணரல்லாதார் சடங்குகள் அனைத்திலும் புகுந்து பிராமணர்கள் பணம் பறித்து வருகிறார்கள்.
* அரசு பணிகள் அனைத்தையும் தாங்களே அபகரித்துக் கொள்கிறார்கள் பிராமணர்கள்.

- இந்த மூன்றும் தான் பிராமணர் - பிராமணரல்லாதார் மோதலுக்கு முக்கிய காரணம். இதனை ஒழிக்க வேண்டும் என்கிறார் வ.உ.சி. இதற்கு தீர்வும் சொல்கிறார் வ.உ.சி.

* பிராமணர்கள் உங்களை எப்படி இழிவாக நடத்துகிறார்களோ அதே போல் நீங்கள் அவர்களை நடத்துங்கள்.
* பிராமணர்களை வைத்து சடங்கு செய்யாதே என்று திருவாளர்

ஈ.வெ.ராமசாமி அவர்கள் சொல்லி வருகிறார்கள். அதைக் கடைப்பிடியுங்கள்.

* அனைத்து அரசுப் பணிகளும் ஒவ்வொரு சமூகமும் எவ்வளவு எண்ணிக்கையில் இருக்கிறதோ அதற்கு ஏற்ற விகிதப்படி தர வேண்டும்.

- இவைதான் வ.உ.சி. சொல்லும் தீர்வுகள்.( வ.உ.சி.யின் சேலம் மாநாட்டு உரையை முழுமையாக வாசிக்க வ.உ.சி. பன்னூல் திரட்டு பக்கம் 199-236, தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்விக்கழகம் )

வ.உ.சி.யும் பெரியாரும் ஒரே குரலில் பேசி வந்த காலம் இது.

1926 - மதுரையில் நடந்த பார்ப்பனரல்லாதார் மாநாடு, 1927 சூலை மாதம் கோவையில் நடந்த பார்ப்பனரல்லாதார் மாநாடு, அதே ஆண்டு நவம்பரில் சேலத்தில் நடந்த மூன்றாவது காங்கிரசு அரசியல் மாநாடு ஆகிய அனைத்திலும் வ.உ.சி. ஆற்றிய உரைகள் அவரது நாட்டுவிடுதலையுடன் கூடிய தன் விடுதலை உரைகளாக அமைந்திருந்தன.

## இலக்கிய நூல்களிலும் தெறித்தன!

திருக்குறள் - மணக்குடவர் உரையை பதிப்பித்தவர் வ.உ.சி.

திருக்குறளில் நான்காவது அதிகாரம்தான் அறன் வலியுறுத்தல். முதல் மூன்று அதிகாரங்கள் கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை ஆகியவை ஆகும். இந்த மூன்று அதிகாரமும் வள்ளுவர் எழுதியது அல்ல, உரையாசிரியர்கள் சிலர் எழுதிச் சேர்த்தது என்பது வ.உ.சி. அவர்களின் கருத்து. சிறப்புப் பாயிரமாக அவர்கள் எழுதியதை வள்ளுவர் எழுதியதாக பிற்காலத்தில் சேர்த்து விட்டார்கள் என்றும் மொத்தமே 130 அதிகாரங்கள் தானே தவிர 133 அதிகாரங்கள் அல்ல என்றும் வ.உ.சி. சொல்கிறார். ஆதி என்ற புலைச்சிக்கும் பகவன் என்ற அந்தணருக்கும் பிறந்தவர் வள்ளுவர் என்பது கட்டுக்கதை என்கிறார் வ.உ.சி.

தொல்காப்பியத்தில் இளம்பூரணர் உரையை 1928 ஆம் ஆண்டு பதிப்பித்தார் வ.உ.சி. அதில் ஆரிய இடைச்செருகல் உள்ளதாக எழுதுகிறார். ‘ இவ்வகைத் தனிச்சிறப்பு பொருந்திய இத்தமிழ் இலக்கணத்துள்ளும் ஆரியமொழிகள் சிலவற்றையும் ஆரியர் பழக்க வழக்கங்கள் சிலவற்றையும் ஆரியர் கொள்கைகள் சிலவற்றையும் இந்நூலின் கண் நுழைத்திருத்தலை ஆங்காங்கு காணலாம்‘ என்று எழுதுகிறார் வ.உ.சி.

வ.உ.சி.யின் சிவஞானபோதம் உரை 1935 ஆம் ஆண்டு வெளியானது. அவர் மறைவுக்கு முந்தைய ஆண்டு இது.

ஏனைய உரைகளில் காணப்படும் பல்வேறு மதக்கோட்பாடுகள் இந்த உரையில் இருக்காது என்று சொல்லும் வ.உ.சி., அனைத்து மதங்களும் ஒரே இறைவனைப்

பற்றியே பேசுகின்றன என்கிறார். மத, ஜாதி உள்ளிட்ட மற்ற அனைத்து வேற்றுமைகளையும் பேசுபவர்கள் தேசத்துக்கு தீங்கிழைப்பவர்கள் என்றும் சொல்கிறார்.

அரசியல் மேடைகளில் மட்டுமல்ல இலக்கிய உரைகளிலும் தனது சிந்தனைகளை முழுமையாக பதிவு செய்துள்ளார் வ.உ.சி.

## அனைத்துக் கட்சிப் பார்ப்பனரல்லாதாருக்கும்...!

1936 நவம்பர் 18 ஆம் நாள் வ.உ.சி. மறைகிறார். அதே ஆண்டு மே 3 ஆம் நாள் அன்று திருச்சியில் பார்ப்பனரல்லாதார் மாநாடு நடக்கிறது. அது தொடர்பாக அனைவர்க்கும் ஒரு வேண்டுகோள் கடிதம் அனுப்புகிறார் வ.உ.சி. நமது சென்னை மாகாணத்தில் - அதிலும் முக்கியமாக தமிழ்நாட்டில் என்று அந்தக் கடிதத்தைத் தொடங்குகிறார். அதாவது 1936 ஆம் ஆண்டே 'தமிழ்நாடு' என்று சொல்லத் தொடங்கிவிட்டார் அவர். பார்ப்பனரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டு பார்ப்பனரல்லாதார் பின்னிலைக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்றும், பார்ப்பனருடைய ஆதிக்கத்தை உதறித் தள்ளிவிட்டுப் பார்ப்பனரல்லாதார்கள் முன்னிலைக்குச் செல்லத் தொடங்கும் நன்னாளின் வரவை நான் மிகுந்த ஆவலுடன் எதிர் நோக்கி இருக்கிறேன் என்றும், அதற்கு அனைத்துக் கட்சியிலும் இருக்கும் பார்ப்பனரல்லாதார் அனைவரும் ஒன்று சேர வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறார் வ.உ.சி.
இதைச் செய்தால் உங்களைத் தேசத்துரோகிகள் என்பார்கள் என்கிறார் வ.உ.சி. (இன்று வரை இது தான் நடக்கிறது!) அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்.

பார்ப்பனரல்லாச் சகோதரர்களே ! சாதி வேற்றுமை, மத வேற்றுமை, கட்சி வேற்றுமை, கோட்பாடு வேற்றுமை முதலியவற்றை யெல்லாம் விடுத்து நீங்களெல்லாம் ஒன்று சேர்ந்து பார்ப்பனரல்லாதார்கள் சமூகத்தை முன்னிலைக்கும் தன்னிலைக்கும் கொண்டு வருவீர்களாக. உங்கள் அன்புள்ள வ.உ.சிதம்பரம் பிள்ளை' என்பதுதான் வ.உ.சி. விடுத்த வெளிப்படையான குரல். இதுதான் கப்பலோட்டிய தமிழனின் இறுதிக் குரல். (குடிஅரசு 17.5.1936)

இந்த அறிக்கை குறித்து வ.உ.சி.க்குப் பெரியார் ஒரு கடிதம் எழுதி இருக்கிறார் என்பதை அறிய முடிகிறது. அதற்கு வ.உ.சி. ஒரு பதிலைப் பெரியாருக்கு எழுதுகிறார். மே மாதம் 11 ஆம் நாள் பெரியாருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார் வ.உ.சி. அக்கடிதம் இதுதான்:

கடவுள் துணை. ஈரோடு குடிஅரசு ஆசிரியர் ஸ்ரீமான் ஈ.வெ. இராமசுவாமி நாயக்கரவர்களுக்கு. தோழரவர்களே. காஞ்சிபுரம் தமிழர் மகாநாட்டுக்கு

ஈ.வெ.ரா. வேண்டுகோளையும் தாங்கள் 10.5.1936ல் எனக்கு எழுதியனுப்பிய கடிதத்தையும் படித்தேன்.

சர்வக சாதிப் பார்ப்பனரல்லாதார்களும் ஒன்று கூடுவதற்குத் தாங்கள் சொல்வதே சரியான உபாயம். அவ்வாறு சர்வக சாதிப் பார்ப்பனரல்லாதார்களின் மகாநாடு ஒன்று காஞ்சிபுரத்தில் வருகிற சூன் மாதத்தில் நடக்கப் போகும் தமிழர் மகாநாட்டுப் பந்தலிலேயே கூட்டுவிக்கும்படியாக நமது நண்பர் திரு.வி.கலியாணசுந்தர முதலியாரவர்களுக்கு நான் இதனுடன் ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன். அவர்கள் பதிலை எதிர்பார்ப்போம். கடவுள் துணை, தங்களன்புள்ள வ.உ.சிதம்பரம் பிள்ளை " - என்கிறது அந்தக் கடிதம். மரணிப்பதற்கு ஆறுமாதத்துக்கு முன் எழுதிய கடிதம் இது. அனைத்துக் கட்சியிலும் இருக்கும் பார்ப்பனரல்லாதாரை ஒன்று சேர்த்து பார்ப்பனரல்லாதாரை முன்னிலைக்கும் தன்னிலைக்கும் கொண்டு வர வேண்டும் என்பதுதான் அவரின் இறுதி விருப்பமாக அமைந்து இருந்தது.

வ.உ.சி.யின் மரணம் நிகழாமல் போயிருந்தால் வ.உ.சி, திரு.வி.க., பெரியார், டாக்டர் வரதராஜுலு ஆகிய தலைவர்கள் ஒரே மேடையில் நின்று பார்ப்பனரல்லாதார் உரிமைக் குரலைக் கொடுக்கும் காட்சியைத் தமிழ்நாடு கண்டிருக்கும்.

காங்கிரசைத் திருத்த முடியாது என்று வெளியேறினார் பெரியார். காங்கிரசைத் திருத்த முடியும் என்று நினைத்தார் வ.உ.சி.
சமூக விடுதலைக் கொள்கையைக் காங்கிரசுக்குள் புகுத்த நினைத்தார் வ.உ.சி. அது பயன்தராது என்று நினைத்தார் பெரியார்.
காங்கிரசுக் கட்சியில் இருக்கும் பார்ப்பனரல்லாதாரையும் சேர்த்துக் கொள்ள நினைத்தார் வ.உ.சி. காங்கிரசுக் கட்சியில் அப்படி ஒருவர் இருப்பதாக ( காமராசருக்கு முன்பு வரை! ) பெரியாருக்கு யாரும் அகப்படவில்லை.
பிரிட்டிஷ் ஆட்சி வெளியேறுவதோடு பார்ப்பனர் ஆதிக்கமும் ஒழிய வேண்டும் என்று நினைத்தார் வ.உ.சி. பிரிட்டிஷார் போனபிறகு இது முழுக்க பார்ப்பனநாயகமாகவே ஆகும் என்று பயந்தார் பெரியார்.
இத்தகைய நடைமுறை வேறுபாடுகள் தவிர வ.உ.சி.க்கும் பெரியாருக்கும் கொள்கை வேறுபாடுகள் இல்லை. அவரின் சுயமரியாதையும் இவரின் தன்னிலை, தன் விடுதலையும் ஒன்றே!

☆ ☆ ☆

# சிதம்பரம் பிள்ளை ( 1872- 1936 )

ஆங்கிலம் - **சுனில் கில்நானி**
தமிழில் -- **அக்களூர் ரவி.**

( சென்னை சந்தியா பதிப்பகம் தமிழில் வெளியிட இருக்கும் புகழ் பெற்ற Idea of India நூலின் ஆசிரியர் சுனில் கில்நானி எழுதிய Incarnations நூலில் இந்தக் கட்டுரை இடம்பெற்றுள்ளது. மொழியாக்கம் - அக்களூர் இரவி )

ருஷ்ய-ஜெர்மனிய வரலாற்றாளரும் தத்துவவாதியுமான ஃபெதோர் ஸ்டெபுன் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவ்வாறு எழுதினார்: 'உலகப்போருக்கு நீண்ட காலத்திற்குமுன்,[1] அரசியல் உணர்வுள்ள மக்கள் அனைவரும் எரிமலையின்மீது வாழ்வது போலத்தான் வாழ்ந்தனர்.' போருக்கு முந்தைய பத்தாண்டில், எரிமலைகள் கொதிக்க ஆரம்பித்துவிட்டன. ரஷ்யாவில் 1905ல் புரட்சி வெடித்தது. மெக்ஸிகோவில் 1910ல் புரட்சி தொடங்கியது. சீனாவில் பேரரசாட்சியை முடிவுக்குக் கொண்டுவந்த சீனப்புரட்சி இதற்கு அடுத்த ஆண்டு நடந்தது. அயர்லாந்தில், 1912ல் அறிமுகமான ஹோம் ரூல் மசோதா நாட்டை சுதந்திரத்திற்கு அருகில் நகர்த்தியது; பத்தாண்டிற்குப் பின்னர்தான் அதை அடைய முடிந்தது. இந்த ஆண்டுகளில் பிரிட்டிஷார் வங்காள மாகாணத்தைப் பிரிக்க முயன்றனர். பிரிட்டிஷ் ராஜ்ஜியத்திற்குப் பெரும் சீர்குலைவைக் கொண்டு வந்த இயக்கம் தோன்றுவதற்கு இச்செயல் வழிவகுத்தது. 1857ல் நடந்த கிளர்ச்சியைக் காட்டிலும், பொருளாதாரம் சார்ந்தும் அரசியல் சார்ந்தும் அதிகம் சேதத்தை ராஜ்ஜியத்திற்கு தந்தது.

நிர்வாகம் செய்ய முடியவில்லை என்ற அடிப்படையில் வைஸ்ராய் ஜார்ஜ் நாதனியல் கர்ஸான் மிகப் பெரிய மாகாணமான வங்காளத்தை 1905ல் இரண்டாகப் பிரித்தார். ஆனால், அதற்கு ஓர் அரசியல் நோக்கமும் இருந்தது. கல்கத்தாவின் ஹிந்து அறிவுஜீவிகளின் அரசியல் மிகைச்செயல்பாடுகள் பிரிட்டிஷாரை உறுத்தின. மாகாணத்தின் கிழக்குப்பகுதியில் முஸ்லீம்கள் அதிகம் வசித்த மாவட்டங்களை இவர்களின் செல்வாக்கிலிருந்து விலக்கி வைக்க அவர்கள் விரும்பினர். கர்ஸானின் உள்துறைச் செயலரும், இந்திய மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் சிற்பியுமான ஹெர்பெர்ட் ரிஸ்லீ இவ்வாறு கூறுகிறார்: 'ஒன்றுபட்ட வங்காளம்2 ஒரு பெரும் சக்தி; பிளவுபட்ட வங்காளம் அனைத்துத் திசைகளிலும் இழுக்கப்படும்.' அரசாங்கத்திடம் மேலதிகப் பிரதிநிதித்துவம் கேட்டுக்கொண்டிருந்த, சர்ச்சைகளால் நிரம்பியிருந்த காங்கிரஸ் கட்சியை, இந்தப் பிரிவினை மேலும் பலவீனப்படுத்தும் என்று அவர்கள் நம்பினர்.

பிரிட்டிஷார் முடக்க நினைத்த கோரிக்கைகளை விஞ்சியதாகப் பிரிவினைக்கு எதிரான பொதுமக்களின் போராட்டம் இருந்தது. அடுத்துவந்த ஆண்டுகளில், வங்காளப் புரட்சிக்காரர்கள் கவர்னர் பயணித்த ரயிலை வெடிவைத்துத் தகர்க்க முயன்றனர். பின்னர், அவரைச் சுட்டுக்கொல்லவும் முயன்றனர். மிகக் கடுமையாக நடந்துகொள்ளும் நீதிபதி ஒருவரின்மீது குண்டு வீசப்பட்டது; ஆனால் அவர் தப்பிவிட்டார்; மாறாக, பாரிஸ்டர் ஒருவரின் மனைவியும் மகளும் இறந்துபோயினர். புரட்சிக்காரர்களின் தாக்குதல் உத்திகளில் துல்லியம் போதவில்லை எனினும் அவர்களுக்கு ஆதரவாளர்கள் குறைவாக இல்லை. வங்காளத்திற்கு வெளியிலும் தீவிரவாதம் பரவத் தொடங்கியது. அகமதாபாத்தில் புதிய வைஸ்ராய் மிண்டோ பிரபு மீது நடந்த வெடிகுண்டுத் தாக்குதலில் அவர் உயிர் தப்பிவிட்டார். பஞ்சாபில் புரட்சிகர இயக்கம் ஒன்று தோன்றியது; அதன் பாசறைகள் அமெரிக்காவிலும் கனடாவிலும் இயங்கின. இலண்டனில், தெற்கு கென்சிங்டனின் இம்பீரியல் நிறுவன வளாகத்தில் புரட்சிகர இளைஞன் ஒருவன் பிரிட்டிஷ் அதிகாரி ஒருவரைக் கொலைசெய்தான். பேரரசின் சொந்த மண்ணிலேயே இப்படி ஒரு படுகொலை! அதன் வரலாற்றில் அரிதான நிகழ்வு. பிரிட்டிஷ் மக்கள் அதிர்ச்சியும் திகிலுமடைந்தனர்.

பிரிட்டன் செய்தித்தாள்கள் வெளியிட்ட செய்திகளிலிருந்து, இந்த வன்முறைப் போராட்டங்கள் விடுதலை எழுச்சியின் சிறிய பகுதிதான் என்று முடிவு செய்வது கடினமாக இருந்தது. பிரிட்டிஷாரிடமிருந்து அதிகாரத்தை வென்றெடுத்து, இந்தியாவின் உற்பத்திச் சக்திகளை மீண்டும் கைப்பற்றி, வெளியேறிக் கொண்டிருந்த பொருளாதார, பண்பாட்டுச் செல்வத்தைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்பதற்காகவே இந்த அழுத்தம் கொடுக்கப்பட்டது. மிதவாத காங்கிரஸ் உறுப்பினர்கள்மீது இந்தியர்கள் பலரும் நம்பிக்கை இழந்திருந்தனர். படித்த, உயர்ஜாதி மனிதர்களின் அமைப்பாக அந்த இயக்கம் இருந்தது; பெருந்தன்மையுடனும், அவர்கள் கூறும் கொள்கைகளுக்கு உண்மையாகவும் பிரிட்டிஷார் நடந்து கொள்ள வேண்டும் என்று விரும்பினர். இதற்கு நேர்மாறாக இந்தியாவின் புதிய தலைவர்கள் பிரிட்டிஷ் பொருட்களைப் பகிஷ்கரிக்க அறைகூவல் விடுத்தனர்; இந்தியர்கள், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களை மட்டுமே பயன்படுத்தவேண்டும்; இலாபம் ஈட்டமுடியாத நிலையைக் காலனியத்திற்கு ஏற்படுத்திவிட்டால், பிரிட்டிஷார் நாட்டைவிட்டு வெளியேறி விடுவர் என்று வாதிட்டனர். ஜாம்செட் டாடாவின் பம்பாய் பருத்தி ஆலையின் முழக்கமாக 'சுதேசி' அல்லது 'சுய-தயாரிப்பு' என்பது இருந்தது; விரைந்து பரவிய அரசியல் நடவடிக்கையின் பெயராக அது மாறியது. 1905க்கும் 1908க்கும் இடைப்பட்ட காலத்தில் இறக்குமதி 20 சதவீதம் சரிந்தது.

விடுதலைக்கான இந்த ஆரம்பகாலப் போராட்டத்தின் தென்னிந்தியப்

போர்முனையாக, இன்றைய தமிழ்நாட்டின் தூத்துக்குடி இருந்தது. இந்நகரில்தான், நெஞ்சுரம் மிக்க இளைஞரான வழக்குரைஞர் வ.உ.சிதம்பரம் பிள்ளை கப்பல்களைக் கொண்டு சுதேசிக் கனவைத் துரத்திக்கொண்டிருந்தார். பேரரசின் கப்பல் போக்குவரத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த பிரபலமான நிறுவனத்தை அவர் எதிர்த்து நின்றார்; வரலாற்றில் தென்னிந்தியர்கள் ஆதிக்கம் செய்த கடலின் கட்டுப்பாட்டை மீண்டும் தன்வசமாக்க முயன்றார். நீராவிக் கப்பல் போக்குவரத்து நிறுவனம் ஒன்றை உருவாக்கினார். சுதேசி இயக்கத்தின் பெரும் நடைமுறை வெற்றிகளில் ஒன்றாகக் குறுகிய காலத்திற்கு அது இருந்தது; ஒட்டுமொத்தக் கிளர்ச்சியின் அடையாளமாகவும் விளங்கியது. அவரது ஆதரவாளர்கள் அவரை 'சுதேசி பிள்ளை' என்றழைத்தனர். அவரது தேசப்பற்றிற்காக நாடு முழுவதும் அவர் கொண்டாடப்பட்டார். ஆனால், பிள்ளையின் வீரஞ்செறிந்த போராட்ட வாழ்வு குறுகிய காலம் மட்டுமே நீடித்தது; சுதேசி இயக்கம் போலவே, இறுதியில் சரியத் தொடங்கியது.

1905ம் ஆண்டைத் தொடர்ந்த ஆண்டுகளின் இந்திய வரலாற்றைப் படிக்கையில், சுதந்திர இந்தியா விரைந்து உருவாகியிருக்கலாம் என்ற உணர்வு தோன்றக்கூடும். எனினும், ரஷ்யா அல்லது சீனா அல்லது மெக்ஸிகோவைப் போலன்றி, இந்திய எரிமலையின் வாய் மூடப்பட்டுவிட்டது; மேலும் ஒரு நாற்பதாண்டுகளுக்கு விடுதலையைப் பெறமுடியவில்லை. சுதந்திர இந்தியாவை நோக்கிய அந்த நெடிய பாதையில் சிதறிக் கிடந்த சில தோல்விகளில் ஒன்றாகப் பிள்ளையும் இருந்தார். அந்தக் கதைகளில் பல இப்போது மறக்கப்பட்டுவிட்டன. ஆனால், மீண்டும் நினைவுகூரப்பட வேண்டிய அளவுக்கு இவர் பெறுமதியானவர். குறிப்பாக, சுதேசி இயக்கம் இறுதியாக சந்தித்த ஏமாற்றத்தை அந்த நினைவுகூரல் வெளிப்படுத்துகிறது.

சுதேசி இயக்கத்தின் வீழ்ச்சிக்குப் பல காரணிகள் இருந்தன: பல வேறுபாடுகளுடன் கூடிய இந்தியப் பண்பாடு; இயக்கத்திற்குள் மோதல்கள்; குறைந்த கூலிக்கு வேலைசெய்யும் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் மீதான அக்கறையிலிருந்து விலகி நின்றது ஆகியன. அத்துடன், 'இந்திய லெனின்' ஒருவர் இங்கு இல்லாமலிருந்தது. ஆனால், சாதிப் படிநிலை போன்று, இந்தியச் சமூகத்தின் ஆபத்தான பெரும் பிளவுகள், விடுதலையை எட்டாத தூரத்தில் தள்ளிவைக்க உதவின. அந்த இடைவெளியை நிரப்பும் செயலில் ஈடுபட்ட, பெரும்பாலான தலைவர்களைக் காட்டிலும் பிள்ளை ஏறத்தாழ அதைச் சாதித்துவிட்டார் என்று சொல்லலாம். ஆனால், இயக்கத்தின் தோல்வியை உறுதிப்படுத்திய மற்றொரு அம்சமான பிரிட்டிஷாரின் அடக்குமுறையை அவர் எதிர்கொள்ளத் தொடங்கிவிட்டார்:

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும் வகையில் தென்னிந்தியா தேசிய அரசியலுக்கு எதிராக இருந்தது என்பது

பிரிட்டிஷாரின் பார்வை. வரலாற்றாசிரியர் டேவிட் வாஷ்ப்ரூக் இவ்வாறு எழுதினார்: ‘1895ம் ஆண்டிற்கும் 1916க்கும் இடைப்பட்ட காலத்தில்[3] மெட்ராசின் வீதிகளில் பிரிட்டிஷாரை எதிர்க்கும் நாய் அரிதாக ஒன்றுகூட குரைக்கவில்லை’. ஆனால், இந்தியாவின் கிழக்குக் கடற்கரையிலிருந்த தூத்துக்குடி தென்னிந்தியாவின் விதிவிலக்கு.

அந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பிள்ளை தூத்துக்குடியில் குடியேறினார். அந்நகரம், முத்துக்குளிக்கும் தொழிலின் மையமாக, முக்கியத் துறைமுகமாகச் செழித்துக்கொண்டிருந்தது. அங்கிருந்து முப்பது கி.மீ உள்நாட்டிலிருந்த ஊரில் 1872ல் அவர் பிறந்தார்; தூத்துக்குடியில் வழக்குரைஞராகப் பணிபுரிய வந்திருந்தார். பணக்கார, நிலவுடைமை, பிராமணரல்லாத வேளாளர் சாதியைச் சேர்ந்தவர். அவரது குடும்பத்தில் பலர் வழக்கறிஞர்களாக இருந்தனர். ஆங்கிலேய நிர்வாகத்தின் கீழிருந்த நீதிமன்றங்களில் பணிபுரிந்தனர்; போட்டியாளர்களாகவும் சில நேரங்களில் சந்தித்துக்கொள்வார்கள். ஒருமுறை பணக்காரர் ஒருவருக்கு எதிராக இளைஞரான பிள்ளை ஏழை ஒருவருக்காக வாதாடினார்; எதிர்த்தரப்பு வழக்குரைஞரை வாதத்தால் மகிழ்ச்சியுடன் தோற்கடித்தார்: அது அவரது தந்தை. எனினும் அவர் அமைதியற்றவராகத்தான் இருந்தார்.

இந்தியாவில் தீவிரவாதம் நோக்கிச் சென்ற பாதை பெரும்பாலும் மதத்தின் ஊடாகவே சென்றது. தனது இருபதுகளில் இருந்த பிள்ளை, தமிழ்ச் சைவ நெறிமுறைகள் கற்பிப்பதை மையமாகக் கொண்டு செயலாற்றிய அமைப்புகளில் சுறுசுறுப்பாக இயங்கினார். இந்தச் ’சைவ சபைகள்’, மூலம் அரசியல் சார்ந்து சுறுசுறுப்புடன் இயங்கிய எழுத்தாளர்களுடனும் அறிவுஜீவிகளுடனும் பிள்ளைக்குத் தொடர்பு கிடைத்தது. தனது அரசியல் குரு இவர்தான் என்று அவர் விரைவில் அறிவிக்கப்போகிற மனிதரின் பணிகளுடன் பிள்ளையை அவர்கள் இணைத்தனர்; புகழ்பெற்ற மகாராஷ்டிர தீவிரவாதியும் மதப்பிரச்சாரகருமான பால கங்காதர திலகர் அவர். திலகரின் எழுத்துகள், ‘இந்தியா என் தேசம் என்று என்னை உணரவைத்தன.[4] பிரிட்டிஷார் தவறான வழியில் அதைத் தக்கவைத்துக் கொண்டுள்ளனர்; தேசத்தை அவர்களிடமிருந்து திரும்பக் கைப்பற்றவேண்டும்’ என்று பின்னாளில் அவர் கூறினார்.

வங்காளப் பிரிவினைக்குப்பின் லாலா லஜபதி ராய், பிபின் சந்திர பால் ஆகியோருடன் காங்கிரஸ் கட்சியின் தீவிரவாதக் குழுவின் தலைவராகத் திலகர் எழுச்சிப் பெற்றார். இந்த மூவரும், லால், பால் ( Bal ) பால் ( Pal ) என்று அழைக்கப்பட்டனர்; இவர்கள் சுதேசி முழக்கத்தைக் கையிலெடுத்தனர். பின்னர் அதை, ஒரு ஹிந்துத் தேசமாக இந்தியாவின் பண்பாட்டு ஒற்றுமையைக் காப்பதற்கு பிரிட்டிஷாருக்கு எதிரான புனிதப்போராக

மறுவரையறை செய்தனர். இந்தப் போராட்டத்தின் அரசியல் இலக்கு, சுயராஜ்ஜியம், அதாவது சுய-ஆட்சி. இதை அடைவதற்கு, பணிந்துபோகும் அரசியலமைப்பு சார்ந்த வழிமுறைகளைக் காங்கிரஸ் கட்சி கைவிடவேண்டும்; நேரடி நடவடிக்கையில், தேவையெனில் வன்முறைப் போராட்டங்களிலும் ஈடுபடவேண்டும் என்று வாதிட்டனர். திலகரின் சிந்தனைகளுடன், பிள்ளை தன்னைத் தீவிரமாகப் பிணைத்துக் கொண்டிருந்தார். வங்காளத்தைப் போன்ற எதிர்ப்புகள் பிரதிபலிக்கத் தொடங்கிய ஒற்றை நகரமாகத் தென்னிந்தியாவின் தொலைதூரத்திலிருந்த தூத்துக்குடி மாறியது.

பிரிட்டிஷ் புலனாய்வுத் துறை கோப்புகளில், 1905க்கு முந்தைய பிள்ளை குறித்த சில ஆவணங்கள் காணக்கிடக்கின்றன: அரசியல் கூட்டம் ஒன்றில் அவர் கலந்துகொண்டது; குறுகிய காலம் நடத்திய சமூக சீர்திருத்தம் குறித்த மாத வெளியீடு போன்றவை. ஆனால், வங்காளப் பிரிவினைக்குப் பின்னர், காலனியத்தின் கோப்புகள் விரைந்து பெரிதாகின. ஏனெனில் அவரும், மிதவாதிகள் அல்லாத ஏனைய தேசியவாதிகளும் இந்தத் துறைமுக மாவட்டத்தில் விரைந்து செயலாற்றினர். டிசம்பர் 1906ல் கல்கத்தாவில் நடந்த காங்கிரசின் ஆண்டுக் கூடுகைக்கு முன்னதாகவே சுதேசித் திட்டம் ஒன்றைக் கையில் எடுத்துவிட்டனர். வெளிநாட்டில் தயாரான பொருட்களையும், வெளிநாட்டு நிறுவனங்களையும் பகிஷ்கரிப்பது என்ற கொள்கை முடிவு அது. கல்கத்தாவில் இருப்பதுபோல், சுதேசி வர்த்தக நிலையங்களும், சுதேசி உடற்பயிற்சிக் கூடங்களும் தூத்துக்குடி நகரிலும் தோன்றின.

காந்திய அரசியலுடன் இப்போது தொடர்புப்படுத்தப்படும் போராட்ட உத்திகள் பலவற்றை அன்றைக்குச் சுதேசிகள் பயன்படுத்தினர்: அதாவது அமைதியான முறையில் கீழ்ப்படியாமையும் ஒத்துழையாமையும். சற்று விலகி நின்று பார்க்கையில் சிரமமற்றவையாக இந்த உத்திகள் தோன்றினாலும், நடைமுறையில் கடினமானவை; மிரட்டும் தன்மை கொண்டவை. எடுத்துக்காட்டாக, பிரிட்டிஷ் பொருட்களைப் புறக்கணியுங்கள் என்று மட்டும் ஆதரவாளர்களைப் பிள்ளை கேட்கவில்லை; அத்துடன் பள்ளிகளையும் நீதிமன்றங்களையும் புறக்கணிக்கச் சொன்னார். அவர்களிடம் பிள்ளை புனித நதி ஒன்றில் மூழ்கி எழுந்து, இறைவி காளியின் பெயரால் சபதம் ஏற்று, புறக்கணிப்பு உறுதிமொழி எடுத்துக்கொள்ளும்படி கூறினார். கொடுத்த வாக்கை மீறினால், ‘விலக்கி வைக்கப்படுவார்கள்’5 என்று அமைதியாக அவர்களை மிரட்டுவார்.

தூத்துக்குடி போன்ற இடத்தில் பிள்ளை நடத்திய இயக்கம் பெருமளவிற்கு வங்காளத்தின் விடுதலை போராட்டத்தைப் பிரதிபலித்தது. 1906ல், வங்காளப் பிரிவினைக்கும் சற்று முன்னதாக, ரஷ்யக் கப்பற்படையை டுஷிமா என்ற இடத்தில் ஜப்பானியர்கள் தோற்கடித்தனர். அதனால் தூண்டப்பட்ட பிள்ளை

அதன் பின்னர் பலரையும் போல், கப்பல்கள் பக்கம் தன் கவனத்தைத் திருப்பினார்.

ராஜராஜ சோழன் காலத்திலிருந்தே கோரமண்டலக் கடற்கரை இந்தியக் கப்பல் போக்குவரத்தின் முனையமாக இருந்தது. குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே தமது துறைமுகங்களிலிருந்து பாய்மரக் கலங்களை இந்தியர்கள் இயக்கினர். ஆனால், 1870களிலிருந்து, இந்தியர்களின் முக்கியமான கடல்வழிகளைப் பிரிட்டானிய நீராவிக்கப்பல்கள் திறமையுடன் கைப்பற்றிக்கொண்டன. பிரிட்டிஷ் இந்திய நீராவிக் கப்பல் போக்குவரத்து கம்பெனியின் மூலமாகப் பருத்தியையும் ஏனைய சரக்குகளையும் தவிர்த்து, ஆண்டிற்கு ஓர் இலட்சம் பேர் பயணம் செய்தனர். இது தூத்துக்குடியிலிருந்து மட்டும். இவர்களில் பெரும்பாலோர், தமிழ்த் தொழிலாளர்கள்; சிலோன், தென்னாப்பிரிக்கா, மலாயா நாடுகளுக்குக் கடினமான உடலுழைப்பை அளிக்கச் சென்றவர்கள்.

அந்தக் கம்பெனி 'B.I.' என்று அழைக்கப்பட்டது; 1906ல் காலனியக் கப்பல் போக்குவரத்தில் அது ஒரு 'கோலியாத்'; நூற்றிற்கும் மேற்பட்ட கப்பல்கள் அதனிடம் இருந்தன. ஜேம்ஸ் லைல் மெக்கே என்பவர் அதை நடத்தி வந்தார். அந்தக் காலகட்டத்தில் பிரிட்டிஷ் கப்பல் போக்குவரத்தில் மிக முக்கியமான நபர் அவர்; அத்துடன், ஒருமுறை அவருக்கு அதிகாரப்பூர்வமற்ற முறையில் வைஸ்ராய் பதவி அளிப்பது பற்றிச் சிந்திக்கும் அளவுக்கு இந்தியாவில் அரசியல் அதிகாரம் பெற்றவராக இருந்தார். தூத்துக்குடியின் தேசியவாதப் போராட்டங்களால் அவரும் பிரிட்டிஷ் அதிகாரிகளும் வெறுத்துப் போயினர். தங்களுக்கு இணக்கமான மனிதர்கள் இருக்கும் இடமொன்றில் புதிய துறைமுகம் ஒன்றை உருவாக்கும் பணிகளில் ஏற்கனவே அவர்கள் ஈடுபட்டிருந்தனர்.

அவர் எதிர்கொள்ள வேண்டிய பெருநிறுவன-அரசாங்கக் கூட்டமைப்பின் பரிமாணத்தை சந்தேகமறப் பிள்ளை உணர்ந்திருந்தார். எனினும், மெக்கே நிறுவனச் செயல்பாடுகளுக்குப் போட்டியாக ஓர் அணியைத் திரட்ட அவர் கொஞ்சமும் தயங்கவில்லை. பிரிட்டிஷ் புலனாய்வு அறிக்கைகள் இதைக் கூறுகின்றன. 1906 ஏப்ரலில் உள்ளூர் வியாபாரிகளைச் சந்தித்து இதற்கான சாத்தியங்கள் குறித்து விவாதித்தார். ஆறுமாதங்களுக்குப்பின், கூட்டு-பங்கு நிறுவனம் ஒன்று தோன்றியது. ஒரு பங்கு இருபத்தைந்து ரூபாய் என்ற அளவில் 40,000 பங்குகளை விற்றுப் பத்து இலட்சம் ரூபாய் திரட்டுவது அவரது திட்டம். பரந்த அளவில் முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக ஒப்பீட்டளவில் குறிக்கப்பட்ட குறைந்த விலை இது. ஆனால், ஒரேயொரு நிபந்தனை: பங்குகள் 'இந்தியர்கள், சிலோன் மற்றும் கிழக்கு நாடுகளைச் சேர்ந்தவர்கள் வசம் மட்டுமே6 இருக்கவேண்டும்'. கல்கத்தாவிலும் பம்பாயிலும்

இருந்த செயல்பாட்டாளர்கள் உற்சாகத்துடன் இதை வரவேற்றனர். சிலோனிலும் நிதி திரட்டப்பட்டது. எனினும், உள்ளூரில் ஆதரவாளர்களைக் கண்டுபிடிப்பதுதான் மிகச் சிரமமான பணியாக இருந்தது.

பிரிட்டிஷ் அறிக்கை ஒன்று இப்படிக் கூறுகிறது: பிள்ளையிடம் அவர்கள் பார்த்த குறிப்பிட்டுச் சொல்லமுடியாத 'சில பழக்கவழக்கங்கள்'[7] காரணமாக உள்ளூர் வியாபாரிகள் அதில் பங்குபெறத் தயங்கினர். ஆகவே பிள்ளையும் அவரைச் சேர்ந்தவர்களும் வீடு வீடாகச் சென்று இத்தகைய சந்தேகங்களை போக்குவதற்கு முயன்றனர். அவரது ஆசான் திலகர் விரும்பியதுபோல், பிள்ளையிடம் ஹிந்துப் பேரினவாத அணுகுமுறை இல்லை. துறைமுகத்தில் இஸ்லாமிய, கிறித்துவ வியாபாரிகள் ஹிந்துக்களுடன் இணைந்து வேலைசெய்தனர். குறைந்த கட்டணத்தில், நம்பிக்கையான கப்பல்போக்குவரத்தின் மீது அவர்கள் மதிப்புக் கொண்டிருந்தனர். அவர்களும் பங்குகள் வாங்க வேண்டும் என்று வ.உ.சி. விரும்பினார். சிலர் வாங்கவும் செய்தனர். அடுத்தமாதம், தூத்துக்குடியிலிருந்து முதல் நீராவிக் கப்பல் போக்குவரத்துத் தொடங்கியது.

சுதேசி நீராவிக் கப்பல் போக்குவரத்து நிறுவனம் என்று அதற்குப் பெயர் சூட்டப்பட்டது. நாடுமுழுவதும் தேசியவாதிகள் இதைக் கொண்டாடினர். பிரிட்டிஷார் எரிச்சலடைந்தனர். தென்னிந்தியாவின் முன்னணி நாளிதழ் 'தி ஹிந்து' பிள்ளையின் நிறுவனத்திற்கும் B. I.-க்கும் இடையில் நடந்த தீவிரமான போட்டி குறித்து டிசம்பர் மாதத்தில் இப்படி எழுதியது: 'இரண்டு நிறுவனங்களும் தினந்தோறும் பயணக்கட்டணத்தைக்[8] குறைத்துக்கொண்டிருக்கின்றன'. பிரிட்டிஷ் நிறுவனம் பயணிகளுக்கு இலவசக் குடை போன்றவற்றை அளித்தது. இந்தியர்களைக் குழப்பிப் பயணச்சீட்டு வாங்கவைக்கும் நோக்கில் 'சுதேசி' என்ற அறிவிப்புப் பலகையையும் தொங்கவிட்டது. பிரிட்டிஷாருக்குச் சொந்தமான தென்னிந்திய இரயில்வேயுடன் கூட்டுச் சேர்ந்துகொண்டது. துறைமுகத்திற்கு வரும் பயணிகள் இறங்கும்போதே, அவர்களை நெருங்கிப் பேசி, இணங்கவைக்க, பிரிட்டிஷ் கப்பல்களுக்குப் பயணச்சீட்டு விற்கும் அதிகாரிகள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். இந்தத் தடையை மீறும் சுதேசி நிறுவனத்தின் அதிகாரி கைதுசெய்யப்படுவார். மெட்ராஸ் கவர்னரின் உத்தரவின்படி, உள்ளூர் பிரிட்டிஷ் நிர்வாகம், அச்சுறுத்தும் செயல்களிலும் விரைந்து இறங்கியது. சுதேசிக் கப்பலில் பயணிப்பவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை மற்றும் சுங்கச் சோதனை அனுமதி வழங்குவதைத் தாமதப்படுத்தியது.

பிள்ளை, எதற்கும் அஞ்சாமல் செயலாற்றினார். குத்தகைக்கு எடுத்திருந்த முதல் கப்பலைத் திரும்பக் கொடுத்துவிட்டு, சீரமைக்கப்பட்ட இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார். பயன்பாட்டிலிருந்த அந்தச் சிறிய பிரிட்டிஷ்

கப்பல்களைக் காட்டிலும் மேம்பட்ட வசதிகள் கொண்டவை. அந்தக் கப்பல்கள் பிரிட்டனிலிருந்தும் பிரான்சிலிருந்தும் 1907ம் ஆண்டு ஏப்ரலிலும், ஜூனிலும் துறைமுகத்திற்கு வந்துசேர்ந்தன. அவற்றில் நாற்பத்திரண்டு முதல் வகுப்புப் பயணிகள், இருபத்து நான்கு இரண்டாம் வகுப்புப் பயணிகள், இதர பயணிகள் 1300 பேர் பயணிக்க முடியும்; 4000 சாக்குப் பைகள் சரக்கு ஏற்றமுடியும். ஆனால், பிரிட்டிஷாரை மிகவும் உறுத்தியது அந்தக் கப்பல்களின் வண்ணங்களும், பச்சை, மஞ்சள், சிவப்பு வண்ணங்கள் கொண்ட 'சுதேசிக் கொடியும்'. கொடியின் மையத்தில் 'வந்தேமாதரம்' என்று எழுதப்பட்டிருந்தது. வந்தேமாதரம் என்ற வங்காளக் கவிதையிலிருந்து எடுக்கப்பட்ட தேசிய முழக்கம் அது. பிரிட்டிஷார் இந்த முழக்கத்தையும், ஒட்டுமொத்தத் தொழில் முயற்சியையும் தேசத்துரோகமாகக் கருதினர்.

சுதேசி இயக்கத்தின் தடங்கள் இந்தியா முழுவதும் பரவத்தொடங்கின; பிரிட்டிஷ் நிர்வாகிகள் எதிர்வினையாற்றவும், இயக்கத்தை நசுக்கும் நடவடிக்கைகளிலும் இறங்கினர். 1906க்கும் 1907ன் கோடைக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒன்பது செய்தித்தாள்கள் மீது பிரிட்டிஷார் வழக்குப் பதிந்தனர். சுதேசித் தலைவர்கள் பலரையும் விசாரணை ஏதுமின்றி நாடுகடத்தினர். ஆனால், இயக்கத்தின் வீச்சை இதனால் அணைக்கமுடியவில்லை. எனவே, நவம்பர் 1907ல் தேசத்துரோகத்திற்கு எதிராகப் புதிய சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அந்தச் சட்டம் இருபதுபேருக்குமேல் கூடுவதைத் தடைசெய்தது. சட்ட விரோதமானவை என்று கருதப்பட்ட கூட்டங்கள் மீது இது பிரயோகிக்கப்பட்டது. தலமட்டத்தில் பிள்ளை நடத்திய இயக்கங்கள் மீதும் இச்சட்டம் பாய்ந்தது. சுதேசி இயக்கத்தின் முக்கியமான போராளிகளை இச்சட்டம் சிறைக்கு அனுப்பியது.

ஏறத்தாழ இந்த நேரத்தில்தான் தனது ஆசான் திலகரை, காங்கிரசின் ஆண்டுக் கூடுகை ஒன்றில் பிள்ளை சந்தித்தார். சூரத்தில் நடந்த அந்தக் கூட்டத்தில் மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே சண்டை வெடித்தது; ஒருவரையொருவர் தூற்றிக் கொள்வதும் செருப்பு வீச்சுமாக அந்தக் கூட்டம் கட்சிப்பிளவில் சென்று முடிந்தது. திலகர் தலைமையிலான தீவிரவாதிகள் இதில் வெற்றிபெற்றனர்; தென்னிந்தியாவின் அதிகாரப்பூர்வப் பொறுப்பு பிள்ளைக்கு அளிக்கப்பட்டது.

தலமட்டத்தில் தலைவராக ஆவதற்குமுன்னதாகவே, பிள்ளை, மேல்தட்டு மனிதர்கள் நிறைந்திருந்த தேசிய காங்கிரசின் நாயகன் ஆகியிருந்தார். பொதுமக்கள் அவரது உரை நீதிமன்றத்தில் பேசுவதுபோல் இருப்பதாகக் கருதினர். அலைந்து திரிந்து நிதி சேகரிப்பதிலும், சுதேசி இயக்கத்திற்கு அணி சேர்ப்பதிலும் அவருடன் இப்போது வேறொருவரும் சேர்ந்துகொண்டார்; சுப்பிரமணிய சிவா. வறுமையில் வாடிய அவர், மெட்ராசில் சைவ சமயப்

பேச்சாளராக இருந்தவர்; அரசியல் செயல்பாட்டாளர்; கவர்ந்திழுக்கும் பேச்சு வன்மை கொண்டவர். 1908 வாக்கில் அவர்கள் இருவரும் இணைந்து பேசிய பொதுக்கூட்டங்களைக் கேட்க ஆயிரக்கணக்கானோர் திரண்டனர். தலமட்டத்தில் உண்மையான அரசியல் சக்தியாகப் பிள்ளை வளர்ந்துகொண்டிருந்தார். கல்கத்தாவின் புரட்சிகர அச்சு ஊடகங்கள், மற்றொரு இந்திய வழக்குரைஞரான மோகன்தாஸ் காந்தி வழிநடத்திய ட்ரான்ஸ்வால் போராட்டத்துடன் இவரது செயல்பாடுகளை ஒப்பிட்டு எழுதின.

இந்தியாவை அடிமைப்படுத்தவே, ஒன்றாக இருந்த தேசத்தை 'இழிந்த பாவிகளான'[9] பிரிட்டிஷ்காரர்கள் துண்டாடினர் என்பது பிள்ளையின் கருத்து. பிரிட்டிஷாரின் வருகைக்குமுன் மதஞ்சார்ந்த, சாதி சார்ந்த பிரிவுகள் இந்தியாவிலிருந்தன; எனினும் பொது இலக்கான சுயராஜ்ஜியத்தை அடைவதற்காக அவற்றை ஒதுக்கிவைக்க வேண்டும் என்றார் அவர். துறைமுகப் பகுதியில் மதப்பிரிவினைகளைக் காட்டிலும் இணக்கம் ஏற்படுத்தமுடியாத வகையில் சாதிப் பிரிவினைகள் தீவிரமாக இருந்தன. தென்னிந்தியாவில் மதஞ்சார்ந்த விஷயங்களைப் பின்பற்றுவது ஆழமாக வேரோடியிருந்தது; பிராமணர்களின் ஆதிக்கம் கணிசமாக இருந்தது. பிள்ளையின் காலத்தில், பத்துப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளில் ஏழு பேர் பிராமணர்கள்; மெட்ராஸ் மாகாண நிர்வாகத்தின் பெரும்பாலான உயர் பொறுப்புகளில் அவர்கள் இருந்தனர். பிள்ளையின் சாதியினர், பிராமணர்கள் இல்லையெனினும், மாவட்ட நிர்வாகத்தின் முக்கியமான சக்தியாக இருந்தனர். திலகர் போன்ற பிராமணர்களும், பிள்ளை போன்ற வெள்ளாளர்களும் ஆதிக்கம் செலுத்தும் உயர்-சாதி இயக்கத்தின் மீது கீழ்நிலைச் சாதிகளைச் சார்ந்த தமிழர்களுக்குச் சந்தேகம் இருந்தது. அவர்கள் வாழும் சமூகத்தின் படிநிலையைத்தான் இந்த இயக்கமும் பிரதிபலிக்கும் என்று அவர்கள் நம்பினர்.

இந்த விஷயத்தில், மிகக்கூர்மையான எதிர்ப்பைக் கீழ்நிலைச் சாதியினரான நாடார்களிடமிருந்து அவர் எதிர்கொண்டார். பிரிட்டிஷ் ஆட்சியில் அந்த இனத்தவர் மேலே வந்துகொண்டிருந்தனர்; புதிய இந்தியர்களின் ஆட்சி, பனைமரம் ஏறுதல், கள் இறக்குதல் போன்ற பழைய வேலைகளையே அவர்களைத் திரும்பவும் செய்யவைத்துவிடுமோ என்று அச்சப்பட்டனர். பிரிட்டிஷ் கோப்பு ஒன்றின் பதிவு இவ்வாறு கூறுகிறது; கூட்டமொன்றில் பிள்ளை பேசும்போது நாடார் ஒருவர் அவரை நேரடியாகக் குற்றம் சாட்டினார்; 'சுயராஜ்ஜியம் கிடைத்துவிட்டால், நீங்கள் எங்களை உங்களுக்குக் குற்றேவல்10 செய்ய வைத்துவிடுவீர்கள்.' திலகருடன் அமர்ந்து உணவருந்த முடியாத அளவுக்கு மிகவும் தாழ்ந்த சாதியினனாகத் தன்னை அவர் நினைத்துவிடுவாரோ என்று ஒருகாலத்தில் பிள்ளை கவலைப்பட்டவர். அத்தகையவர், இந்த இயக்கத்தின் நலனிற்குப் பங்களிக்காத சாதியினரைச்

சேர்த்துக்கொள்வதில் தயக்கம் காட்டியதாகத் தோன்றுகிறது. அந்தக் காலத்து அரசியல் கிளர்ச்சியாளர்கள் பலரையும் போலவே, மனதளவில் சமூகப் பழமைவாதியாகவே அவர் இருந்தார்.

**(வ.உ.சி. அவர்கள் சாதிகளை மறுத்தவர். இராமையா தேசிகர், சாமி சகஜானந்தர் ஆகிய பட்டியலினத்தவர்களை தனது வீட்டில் வைத்துப் பேணியவர். இதுகுறித்து விரிவான தகவல்கள் வஉசி அவர்களது வரலாற்றிலேயே உள்ளது. ( இடது ஆசிரியர் )**

**வேறொரு சமயத்தில், 'சங்கம் என்பதன் பொருள், நாம் அனைவரும் ஒன்றாக உணவருந்துவது[11], கட்டித் தழுவிக்கொள்வது என்பதல்ல' என்று ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார்.' சுயராஜ்ஜியம் அடைந்த பல ஆண்டுகளுக்குப் பின்னர்தான் இத்தகைய விஷயங்கள் நடைபெறக்கூடும்'.**

ஏழைகளை, குறிப்பாக விவசாயிகளை அக்கறையின்மையுடன், அலட்சியத்துடன் பார்க்கும் சாதி மற்றும் வர்க்கம் சார்ந்த விஷயங்கள் தேசிய அளவில் இந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கு இடையூறாக அமைந்தன. வங்காளத்தைச் சுற்றியிருந்த சில மாகாணங்களில் மட்டுமே இயக்கம் பரவியிருந்தது. கல்கத்தா, பம்பாய் போன்ற நகரங்களில் மட்டுமே இயக்கத்தின் மையங்கள் செயல்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தின் தூத்துக்குடி நகரில் பரந்து விரிந்த இயக்கத்தைப் பிள்ளை கட்டமைப்பதற்குத் தொழிலாளர்களின் பணி நிலைமைகள் மீது சிவம் காட்டிய ஆழ்ந்த அக்கறை உதவியது.

கோரல் மில் என்ற பிரபலமான பருத்தி ஆலையில் பல சாதிகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் குறைந்த கூலிக்கு வேலை செய்தனர்; இவர்கள் இருவரும் 1908ல் தொழிலாளர்களது பிரச்சனைகளைக் கையிலெடுத்தனர். B.I. நிறுவனத்தை நடத்திய அதே பிரிட்டிஷ் ஏஜென்சிக்கு இந்த ஆலையும் சொந்தம் என்பது தற்செயலானதல்ல. ரஷ்யாவில் தொழிலாளர்கள் நடத்திய வேலைநிறுத்தங்களின் தாக்கங்கள் குறித்து மிக நெருக்கமாகச் சிவம் கவனித்துவந்தார்; 'புரட்சிகள், உலகத்திற்கு எப்போதும் நன்மையே12 கொணர்பவை.' என்றார் அவர். இந்தியர்களின் ஊதியம் சிறிதளவு உயர்ந்தாலும், அது இந்தியாவை பிரிட்டிஷார் விரும்பாத நாடாக்கிவிடும் என்று அவர் வாதிட்டார் . உரிய நிவாரணம் கிடைக்கும் வரை விட்டுக்கொடுக்காமல் வேலைநிறுத்தத்தில் ஈடுபடும்படி சிவமும் பிள்ளையும் ஆலைத் தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தினர்.

இந்தியாவில் மிகவும் தொடக்கத்தில் நடந்த வெற்றிகரமான போராட்டங்களில் ஒன்று அது. வேலைநிறுத்தம் தொடங்கிய சில நாட்களிலேயே,

பேச்சுவார்த்தைமூலம் பிள்ளை தீர்வு ஒன்றை எட்டினார். உழைக்கும் வர்க்கத்தினரிடம் இந்தச் செய்தி பரவியது; அவரது புகழை அதிகரிக்கச் செய்தது. ஓரளவுக்கு அவரது விதியையும் இது முடிவு செய்தது எனலாம். தொழிலாளர்களின் ஒரு போராட்டம், மேலும் பல போராட்டங்களுக்கு வழிவகுக்கும் என்று பிரிட்டிஷார் அஞ்சினர். வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்த ஒரு வாரத்தில், 'எலி-பூனை' விளையாட்டை அவர்கள் நிறுத்தினர்; பிள்ளையின் மீதும், சிவத்தின் மீதும் தேசத் துரோகக் குற்றம் சாட்டினர்.

இதற்கான நேரடியான காரணம் ஓர் ஊர்வலம்; வங்காளத்தின் முன்னணித் தீவிரவாதியான பிபின் சந்திர பால் கல்கத்தா சிறையிலிருந்து விடுதலையானதைக் கொண்டாட இருவரும் ஏற்பாடு செய்த ஊர்வலம். ஊர்வலத்திற்கு வருபவர்கள், ஆயுதம் எதையும், ஏன் கைத்தடியையும் வீட்டிலேயே வைத்துவிட்டு வரும்படி பிள்ளை அறிவுறுத்தியிருந்தார் என்கிறது போலிஸாரின் பதிவு; 'ஏதேனும் அசம்பாவிதம் நடந்துவிட்டால்[13] பாதிக்கப்பட்டவர்களாக நாம்தான் இருக்கவேண்டும்; தாக்கியவர்களாக இருக்கக் கூடாது' என்று அவர் கூறியதாகச் சொல்லப்படுகிறது. எனினும், நியாயமான கருத்துகளைக் கொண்ட அவரது அறிக்கைகளை சட்டவிரோதமானவை என்று போலீசார் அறிவித்தனர். அதுமட்டுமின்றி, சிவத்தின் தேசத்துரோக நடவடிக்கைகளுக்குத் துணையாக இருந்தார் என்றும் பிள்ளை மீது குற்றம் சாட்டினர்.

கைது நடவடிக்கைகளால் பிரிட்டிசார் பயந்த வன்முறைகள் நகரெங்கும் வெடித்தன. எதிர்ப்புப் போராட்டங்கள் உடனடியாக எழுந்தன. தூத்துக்குடி நகராட்சி அலுவலகமும், நீதிமன்றமும், போலீஸ் தலைமையகமும் கொளுத்தப்பட்டன. அச்சத்தின் வசப்பட்ட ஐரோப்பியர்கள் படுகொலைகளை எதிர்பார்த்தனர். துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த கப்பல் ஒன்றில் அவர்கள் தஞ்சமடைந்தனர். ஆசிரியர் ஒருவர் கூறியதாக, பெண்கள் பள்ளியொன்றின் முதல்வர் பின்னர் இவ்வாறு எழுதினார்: 'இன்றிரவு ஏற்றப்பட்ட தீப்பந்தம் கன்னியாகுமரியிலிருந்து கல்கத்தாவரை பரவப்போகிறது.[14] ஆங்கிலேயர்களை எதுவும் காப்பாற்றாது.' தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் இறங்கினர். அச்சத்தின் வயப்பட்ட நிலையில் பிரிட்டிஷார் பிள்ளைக்கு இரட்டை ஆயுள் தண்டனை அளித்தனர்.

அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனையின் கடுமை பிரிட்டிஷாரது கொண்டாட்டத்தின் காரணமாகியது; பிரிட்டிஷ் அதிகாரிகள் சிலரை வெட்கப்படவும் வைத்தது. இந்தியா முழுவதும் அவருக்கு வழக்கு நிதி திரட்டப்பட்டது. தென்னாப்பிரிக்கத் தமிழர்களும் நிதியளித்தனர்; இறுதியில், அவரது தண்டனை ஆறு ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது. ஆனால், அவருக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டது என்ற பொதுமக்களின் உணர்வை

முற்றிலும் அது குறைக்கவில்லை. 1911ல், பிள்ளைக்கு ஆதரவாக இயங்கிய இளைஞன் ஒருவன், பிள்ளையின் கைதுக்குக் காரணமானவர் என்று கருதப்பட்ட மாவட்டத்தின் பிரிட்டிஷ் கலெக்டரைச் சுட்டுக்கொன்றான். தென்னிந்தியக் காலனிய வரலாற்றில் இந்த ஒன்று மட்டுமே அரசியல் படுகொலை. பிள்ளையின் இயக்கத்திற்கும், இந்திய அளவிலான பரந்துபட்ட எதிர்ப்பிற்கும் எழுதப்பட்ட இறுதி வரிகள் அவை. அந்த ஆண்டின் தொடக்கத்தில் கர்ஸானின் வங்கப்பிரிவினை இரத்துச் செய்யப்பட்டது. தலமட்டங்களில் உருவான தீவிரவாதத்தின் இழைகள், உண்மையான தேசிய இயக்கமாக ஒன்றிணைந்து உருவாகத் தவறின. தேசிய அளவிலான போராட்டத்தின் எழுச்சி, இப்போதைக்கு முடிந்துபோனது.

இன்றைக்கு, 'சுய-உருவாக்கம்' என்பது வரம்பிற்குட்பட்டது என்பதை நினைவுபடுத்தும் இடங்களில் ஒன்றாகத் தூத்துக்குடி இருக்கிறது; பொதுமக்களது நலன்-இழப்பில் இலாபம் சம்பாதிப்பது காலனிய சக்திகளுக்கு மட்டுமே உரியதல்ல என்பதையும் அது நினைவூட்டுகிறது. வீசும் கடல் காற்றையும் மீறி, தமிழ்நாட்டின் மிகவும் மாசுபட்ட இடமாக இந்தத் துறைமுக நகரம் இருக்கிறது. கந்தகம் படிந்த, வெப்பமான, மீன்களைக் கொல்லும் கடல் நீரில், தாமிர உருக்காலைகளிலும் அனல் மின்நிலையங்களிலும் எரிக்கப்படும் நிலக்கரியின் கழிவுகளும், இரசாயனத் தொழிற்சாலைகளின் கழிவுகளும் கலக்கின்றன. இங்கு எடுக்கப்படும் உப்பிலும் சாம்பல் தூசு படிந்திருக்கிறது. பிள்ளையைப் பற்றி இந்த நகரில் விசாரித்தால், ஒருகாலத்தில் பிரபலமாக இருந்த தலைவரைப் பற்றி உரையாடுகிறோம் என்பதுபோல் அவர் பெயரைத் தாங்கி நிற்கும் துறைமுகத்திற்குப் போகும் வழியை நமக்குக் காட்டுவார்கள். பண்பாட்டு வரலாற்றாசிரியர் ஏ. ஆர் வெங்கடாசலபதி இப்படிக் குறிப்பிடுகிறார்: 'அவரது சாதி மக்களால் மட்டுமின்றி இந்த மாநிலத்தைச் சேர்ந்த அனைவராலும் உரிமை கொண்டாடப்படும் சில தேசியவாதிகளில் அல்லது இலக்கிய ஆளுமைகளில் இவரும் ஒருவர்'. ஆனால், பரவலாக விரும்பப்பட்டவராக அவர் இருந்தாலும், அந்தப் பிரியம் ஆழமானதல்ல. சுதேசி இயக்கத்திற்கான அவரது பங்களிப்பை நினைவுகூரும் வகையில் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று அவ்வப்போது வேண்டுகோள்கள் எழுகின்றன; எனினும், பலனேதுமில்லை. இவ்வளவு ஆண்டுகட்குப் பின்னரும், திரளான மக்களின் ஆதரவைப் பெறாதவராக அவர் இருப்பதுபோல் தோன்றுகிறது.

உலகம் முழுவதுமான இருபதாம் நூற்றாண்டு விடுதலை வரலாறு குறித்த கதைகளில், பள்ளிக்கூடத்து விளையாட்டு மைதானம் போன்றே சிறைச்சாலை தெரிகிறது; நாயகர்கள் உருவாக்கப்படும் இடம் அது: காந்தி, நேரு, ஹோசிமின், கென்யாட்டா, மார்ட்டின் லூதர் கிங், மண்டேலா: இவர்களின் கதை ஒவ்வொன்றிலும் அவர்கள் எதிர்கொண்ட சிரமங்கள், பின்னோக்கிப்

பார்க்கையில் நற்பயனைத்தான் தந்திருக்கின்றன. அவர்களை, அவை தலைவர்களாக வடித்தன. பெரும்பாலும், தனிமனிதர்கள் உடைந்துபோகிற இடமான சிறைச்சாலை அதன்பின் மறக்கப்படுகிறது. மலபாரின் கண்ணனூரில் சிறையிருந்த பிள்ளை, சணல் கயிறு திரிப்பது, செக்கில் எண்ணெய் எடுப்பதென்று கடினமாக வேலை வாங்கப்பட்டார்; கவிதைகள் எழுதி தன்னை அவர் ஆறுதல்படுத்திக்கொண்டார். பிள்ளை எழுதிய வெண்பா ஒன்றை வெங்கடாசலபதி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

'வந்தகவி ஞர்க்கெல்லாம் மாரியெனப் பல்பொருளும்
தந்த சிதம்பரன் தாழ்ந்தின்று - சத்தமில் வெண்
பாச்சொல்லிப் பிச்சைக்குப் பாரெலாம் ஓடுகின்றான்
நாச்சொல்லும் தோலும் நலிந்தே.15

நான்கு ஆண்டுகள் சிறைவாசத்திற்குப்பின் 1912ல் பிள்ளை கண்ணனூர் சிறையிலிருந்து வெளியில் வரும்போது, அவரை வாழ்த்தி வரவேற்க மக்கள் திரள் காத்திருக்கவில்லை; சுறுசுறுப்பாகச் செயலாற்ற அரசியல் பணி இல்லை; தொடர்வதற்கு வக்கீல் தொழிலும் இல்லை. சிறைத் தண்டனை வழக்குரைஞர் பணியைத் தொடர முடியாமல் செய்துவிட்டது. அவர் சிறையிலிருந்தபோது, கப்பல் நிறுவனமும் தகர்ந்துபோனது. பங்குதாரர்களின் முதலீடு அவருக்கு இழப்பாக அமைந்தது. தனது இயக்கத்திற்கு எதிரானவர்களை விலக்கிவைக்க வேண்டும் என்று நினைத்த மனிதர், அவரே விலக்கப்பட்டவராக நின்றிருந்தார். சிறைக்கு வெளியில் சிவம் மட்டுமே இவருக்காகக் காத்திருந்தார். அவரும் சமீபத்தில்தான் சிறையிலிருந்து வெளிவந்திருந்தார்.

அதிக அளவில் தொழிலாளர் போராட்டங்கள் நடந்திருந்தால், இயக்கத்தின் பரவல் மேலும் அதிகரித்திருக்குமோ என்று சுதேசி இயக்கத்தை ஆராயும் வரலாற்றாளர்கள் வியக்கிறார்கள். வெறுமனே, படித்த மேல்வர்க்கத்தினரின் வேட்கைகளைப் பிரதிபலிப்பதாக மட்டும் சுதேசி இயக்கம் இருந்திருக்கவில்லை என்பதை இவை காட்டுகின்றன. ஆனால், அத்தகைய போராட்டங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத்தான் நிகழ்ந்தன. 1908-ல் நடந்த பம்பாய் ஜவுளித் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் குறித்து லெனின் ஆராய்ந்து எழுதினார்; எழுத்தாளர்களுக்கும், அறிவுஜீவிகளுக்கும் ஆதரவாக, இந்திய மக்கள் தெருவிலிறங்கிப் போராடத் தொடங்கிவிட்டனர் என்று நம்பிக்கையை வெளிப்படுத்தினார். ஆனால், பெரிய அளவில் அவ்வியக்கம் எழுச்சிப்பெறவில்லை; அதற்கு முற்றிலும் அறிவுஜீவிகள் காரணம் என்று சொல்லமுடியாது. 1908ல் இயக்கத்தின் பெரும்பாலான தலைவர்களை பிரிட்டிஷார் நாடுகடத்தினர்; சிறையிலடைத்தனர்; அதன்பின் பலரும் அரசியலுக்குத் திரும்பவில்லை. சிறையில் அவரைப் பீடித்த தொழுநோயால் அவதியுற்ற சிவம் இறுதியில் இறந்துபோனார். மேலும் இருபதாண்டுகள்


பிள்ளை உயிர்வாழ்ந்தார்; பல்வேறு பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள முயன்றார்; ஆனால், இந்த உலகம் அவர் மீது வெறுப்பைக் காட்டியது. அதன்பின் திரளாக மக்கள் அவரை நோக்கி வரவில்லை.

சுதேசி இயக்கமும், அதிலிருந்து தோன்றலாம் என்று காந்தி அஞ்சிய தீவிரவாதச் செயல்களும், இந்திய அரசியல் குறித்து அவரைத் தீவிரமாக எழுதத் தூண்டின: அவரது தீவிரமான முதல் படைப்பான 'ஹிந்த் சுயராஜ்' 1909ல் வெளிவந்தது. நூலின் நோக்கங்களில் ஒன்றாக, வன்முறைப் போராட்டங்களிலிருந்து இந்தியர்களைத் திருப்புவது இருந்தது. ஆறு ஆண்டுகட்குப்பின் ஜனவரி 1915ல் அவர் பம்பாயில் வந்திறங்கினார். பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராகத் தேசிய அளவிலான, வன்முறையற்றப் போராட்டத்திற்காக இந்தியர்களை ஒன்றிணைத்தார்; அவர் தொடங்கி சில பத்தாண்டுகளுக்கு நடந்த முனைப்பான, அவ்வியக்கம் இறுதியில் வெற்றி பெற்றது.


1. 'Long before the World War . . .': cited in Stephen Kotkin, Stalin, vol. 1: Paradoxes of Power, 1878-1928 (London, 2014), p. 87.
2. 'Bengal united is a power . . .': cited in Sumit Sarkar, The Swadeshi Movement in Bengal, 2nd edn (New Delhi, 2010), p. 15.
3. 'Between 1895 and 1916 . . .': David Washbrook, The Emergence of Provincial Politics: The Madras Presidency 1880-1920 (Cambridge, 1976), p. 233.
4. 'made me feel that India . . .': V. O. Chidambaram Pillai, in S. V. Bapat (ed.), Reminiscences and Anecdotes of Lokamanya Tilak, vol. 3 (Poona, 1928), p. 158.
5. 'expect to be "shunned"': Pillai, speech on 7 March 1908; reported in Criminal Investigation Department Madras, 'History of V. O. Chidambaram Pillai', G. O. no. 1502 Judicial and Secret (3 October 1911), p. 391.
6. 'to be held exclusively . . .': W. H. Coates, The Old 'Country Trade' of the East Indies (London, 1911), p. 203.
7. 'dissolute habits': CID Madras, 'History of V.O Chidambaram Pillai', p. 373.
8. 'each company lowering its tariff . . .': from The Hindu, 10 December 1906; cited in R. A. Padmanabhan, V. O. Chidambaram Pillai (New Delhi, 1977), p. 36. 1ST_9780141981437_Incarnations_TXT.indd 446 9/13/16 6:11:05 PM 447 References

9. ‘despicable sinners’: CID Madras, ‘History of V. O. Chidambaram Pillai’, p. 375.
10. ‘If you get swaraj . . .’: CID Madras, ‘History of V. O. Chidambaram Pillai’, p. 389.
11. ‘Union does not mean . . .’: CID Madras, ‘History of V. O. Chidambaram Pillai’, pp. 389-90.
12. ‘revolutions always brought good . . .’: cited in Sumit Sarkar, Modern India: 1886-1947 (Noida, 2014), p. 112.
13. ‘if anything goes wrong . . .’: CID Madras, ‘History of V. O. Chidambaram Pillai’, p. 391.
14. ‘The torch is lighted . . .’: Maud Boyton to Mary Ashe; cited in A. R. Venkatachalapathy, ‘In Search of Ashe’, Economic and Political Weekly, vol. XLV, no. 2 (9 January 2010), p. 41.
15. ‘Chidambaram, who once bestowed . . .’: translated by A. R. Venkatachalapathy, personal communication, 25 May 2015.

☆ ☆ ☆



சுனில் கில் நானி

# வ உ சிதம்பரனாரின் சிந்தனைப்புலம்

கண. குறிஞ்சி

ஒருவரின் கருத்துக்களே அவரின் ஆளுமையை நமக்கு அடையாளம் காட்டக் கூடியவை. ஒருவரின் தளராத முயற்சி, செயல்திறன், பிறரது ஆதரவு போன்றன அவரது கருத்துக்களின் வெற்றியைத் தீர்மானிக்கின்றன. சந்திரனை இலக்காகக் கொண்டால்தான், ஏதாவது ஒரு நட்சத்திரத்தையாவது நாம் வசப்படுத்த முடியும். இதை வஉசி அவர்களது வாழ்வும் கருத்துக்களும் நமக்கு உணர்த்துகின்றன.

பிரித்தானிய வல்லரசின் கீழ் அடிமைப் படுத்தப்பட்ட இந்தியாவை விடுதலை செய்வதற்குப் பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. அதில் வ.உ.சி அவர்களின் முன்னெடுப்பு, தனித்துவமானது. முன் உதாரணம் அற்றது.

பிரிட்டனின் முதுகெலும்பை முறிக்கக் கூடிய ஒரு காரியத்தை வஉசி அவர்கள் மேற்கொண்டார். இத்தகையதோர் முயற்சியை இந்தியத் துணைக்கண்டத்தில் அவரது காலகட்டத்தில் யாரும் சிந்தித்துக்கூடப் பார்த்திருக்கவில்லை.

வெள்ளையரை எதிர்த்துக் கப்பல்
ஓட்டுவது என்பது, தற்சார்புப் பொருளாதாரத்தையும், அரசியல் விடுதலையையும் இணைத்த முயற்சி ஆகும். இந்தப் புதுப் பரிசோதனையில் அவரது தனிப்பட்ட வாழ்வும், அரசியல் வாழ்வும் நாசமாகும் சூழல் வந்தபொழுதும், அவர் சிறிதும் பின்வாங்கவில்லை. அதுதான் ஒரு தலைவருக்கு அழகு.

> ‘என்மனமும் என்னுடம்பும் என்சுகமும் என்னறமும்
> என்மனையும் என்மகவும் என்பொருளும் என்மனமுங்
> குன்றிடனும்யான் குன்றேன் கூற்றுவனே வந்திடனும்
> வென்றிடுவேன் காலால் மிதித்து‘

எனச் சங்காரமிட்டார் வஉசி அவர்கள்.

1908 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் மூன்றாம் நாள் நிகழ்த்திய சொற்பொழிவிலும் இத்தகைய மன உறுதியையே அவர் வெளிப்படுத்துகிறார்.

‘இனி என் பேரில் கலகக் குற்றம் சாட்டப்படும். ஆங்கிலேயர்கள் எச்சரிக்கின்றபடி விலகாவிட்டால் என்னையும் சுட்டு தள்ளிவிட இருக்கிறார்கள். யாரோ ஒரு பெரிய போலீஸ் அதிகாரி தம் படையோடு வந்து சுட்டுத்தள்ளும் பட்சத்தில் என்ன செய்யக்கூடும் என்று என்னையே கேட்டால், 35 கோடி ஜனத்தில் 3000 / 4000 பேர் சுடப்பட்டால்தான் என்ன? அப்பேற்பட்ட சாவு எங்களுக்கு விதிக்கப்பட்டதானால், நானும் சிவாவும் சுடப்படத் தயார்தான். மனிதன் இறக்கவே பிறக்கிறான். இன்ன விதமாய் இறக்கிறோம் என்பதைக் கவனிக்கவில்லை. நாங்கள் இறப்பதற்கு அஞ்சவில்லை‘ எனும் அவரது பிரகடனம் அவரது உருக்குப் போன்ற வைராக்கியத்தை வெளிப்படுத்துகிறது.

மேலும் காந்தியாருக்கு அவர் எழுதிய கடிதத்திலும் நாட்டுக்கான தனது அர்ப்பணிப்பைத் தெளிவு படுத்துகிறார்.

‘எனது தேசப்பற்றாளர்களுக்காக எனது வாழ்க்கை முழுவதையுமே நான் செலவிடத் தயாராக இருக்கிறேன். என்னுடைய அனைத்து நேரமும் எனது நாட்டுக்கும், நாட்டின் மீது பற்று உள்ளவர்களுக்கும் மட்டுமே ஒதுக்க விரும்புகிறேன். இவை இரண்டுக்கும் பிறகுதான் கடவுளுக்கே கூட நேரம் ஒதுக்குகிறேன்‘ எனும் அவரது வாழ்வுதான் அவர் தரும் செய்தியாகும்.

அது மட்டுமல்ல, அவர் இயற்றிய மெய்யறிவு நூலில் ‘மறங்களைதல்‘ எனும் தனியே ஓர் அதிகாரத்தை அமைத்து, அதில் எவற்றை எல்லாம் களைய வேண்டும் என அறிவுறுத்துகிறார். அதில் மிக முக்கியமானதோர் கருத்தைப் பதிவு செய்கிறார்.

> ‘நல்லுயிரை நல்வினையை நற்பொருளைக் காத்தற்குச்
> சொல்லியவெல் லாஞ்செயினுந் தோடமிலை - யல்லாமல்
> தீயுயிரைத் தீவினையைத் தீப்பொருளைக் காத்தற்காங்
> காயவெலாம் பாவ மறி‘

நன்மையை விளைவிக்கும் உயிர்களையாவது, நன்மையை விளைவிக்கும் செயல்களையாவது, நன்மையை விளைவிக்கும் பொருள்களையாவது பாதுகாக்கும் பொருட்டுப் பாவச் செயல்கள் செய்தாலும் குற்றம் இல்லை. ஆனால், தீமை விளைவிக்கும் உயிர்களையாவது, தீமை விளைவிக்கும் செயல்களையாவது, தீமை விளைவிக்கும் பொருள்களையாவது பாதுகாக்கும் பொருட்டுச் செய்யப்படும் செயல்கள் எல்லாம் பாவச்செயல்களாகும். இதனை நன்றாக அறிவாயாக! - எனும் வஉசி அவர்களது கருத்து, காந்தியாரிடமிருந்து வேறுபடும் அவரது அணுகுமுறையைப் புலப்படுத்துகிறது.

இந்த அணுகுமுறை இலக்கு -- வழிமுறை தொடர்புடையதாகும். இலக்கு, பலருக்கும் நன்மைபயக்கும் என்றால், வழிகளில் சில தவறுகள் இருந்தாலும், அதைப் பொருட்படுத்த வேண்டியதில்லை என்பது வஉசி அவர்களது முடிவாக

இருந்தது. ஆனால், காந்தியாரோ இலக்கு - வழிமுறை இரண்டிலும் புனிதத்தை எதிர்பார்த்தார். இரண்டிற்கும் வரலாற்றில் இடம் உண்டு என்பதுதான் மெய் நடப்பாகும்.

'அறத்திற்கே அன்புசார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை'

எனும் பேராசான் வள்ளுவரது அன்புடைமை அதிகாரக் குறளோடு வஉசி அவர்களது கருத்து இசைந்து செல்வது குறிப்பிடத் தக்கதாகும்.

காந்தியாரோடு பல்வேறு கூறுகளில் வஉசி அவர்கள் வேறுபட்டிருக்கிறார். அரசியல் அணுகுமுறையில் இருவருக்கும் இடையே ஆழமான வேறுபாடு நிலவியது. காரைக்குடிக்கு அருகிலுள்ள சிறாவயல் கிராமத்திலிருந்த தோழர் ப. ஜீவானந்தம் அவர்களின் ஆசிரமத்திற்கு வ உ சி அவர்கள் வந்தபொழுது, அங்குள்ள இளைஞர்கள் இராட்டையில் நூல் நூற்கிறார்களா எனக் கேட்டறிந்தார். ஆம் எனும் ஜீவாவின் பதிலைக் கேட்டதும், 'வாளேந்த வேண்டிய கைகளில் இராட்டை சுற்றச் சொல்கிறாயே' எனத் தெரிவித்து ஜீவாவை வ உ சி அவர்கள் கடிந்து கொண்டார் என்பது வரலாறு.

சுயராஜ்யக் கோட்பாட்டில் தீவிரப் பற்றுக் கொண்ட வஉசி அவர்களால், காந்தியாரின் சாத்வீகக் கருத்துக்களுடன் இசைந்து போக முடியவில்லை. நேதாஜிக்கு முன்பே காந்தியாரின் கொள்கைகளைத் தீவிரமாக எதிர்த்தவர் அவர். காந்தியாரின் செல்வாக்கு உச்சத்தில் இருந்த பொழுது கூட, வஉசி அவர்கள் தனது நிலைபாட்டில் சமரசம் செய்து கொள்ளவில்லை.

அரசியலில் திலகரின் வழி நின்று தீவிரமாகக் களமாடினாலும், சமூகம் குறித்த திலகரின் கருத்துக்களை வஉசி அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

எடுத்துக்காட்டாக, பார்ப்பனர் அல்லாத ஏனைய பிற்பட்ட சாதிகளை மிகவும் இழிவாகக் கருதியவர் திலகர். அவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவதைத் திலகர் ஒருக்காலும் ஏற்றுக் கொள்ளவில்லை.

எண்ணை எடுக்கும் செட்டியார்களும், புகையிலைக் கடைக்கார்களும், சலவையாளர்களும், அவரைப் போன்ற ஏனையோரும் சட்டமன்றத்திற்குச் செல்ல வேண்டுமென்று ஏன் ஆசைப்படுகிறார்கள் என்பதைத் தம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று திலகர் கூறினார். தமது அபிப்பிராயத்தில் சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்து கொள்வதுதான் அவர்களது கடமையே தவிர, சட்டங்களை இயற்றும் அதிகாரங்களைப் பெறுவதற்கு அவர்கள் விழையக் கூடாது' எனச் சோலாப்பூரில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் திலகர் பேசியதாக அம்பேத்கர் அவர்கள் குறிப்பிடுவது கருதத்தக்கது.

இந்திய சமூகத்தில் சாதி குறித்த ஒருவரின் கண்ணோட்டம் எவ்வாறு உள்ளது என்பதைப் பொறுத்துத்தான் அவரை மதிப்பீடு செய்ய முடியும். தமிழகத்தில் பிள்ளைமார் சமூகம், உயர்சாதியாகக் கருதப்படுகிறது. அந்தச் சமூகத்தில் பிறந்த வஉசி அவர்கள், சாதி வேறுபாடுகளைக் கடுமையாக எதிர்ப்பவராக விளங்கினார். சாதிகளை வகைப்படுத்தும் பொழுது பார்ப்பனர் எனவும், பிற சாதிகள் அனைத்தையும் 'தாழ்த்தும் சாதிகள் ' எனவும் சுட்டுகிறார்.

மேலும் ஒடுக்கப்பட்ட பட்டியல் சமூகத்தைச் சேர்ந்த விருதுநகர் இராமையா தேசிகர் எனும் கண்ணிழந்தவரைத் தன்னுடைய வீட்டில் தங்க வைத்திருந்தார் வஉசி அவர்கள். அவரது முதல் மனைவியான வள்ளியம்மை தன் கையால் தேசிகருக்கு மிகுந்த அன்புடன் உணவு ஊட்டுவதைக் கண்டு ஊரார் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஒரு கட்டத்தில் வஉசி அவர்களைச் சாதி விலக்கம் செய்யத் துணிந்தனர். ஆனால், வஉசி அவர்கள் இந்த எதிர்ப்புகளை எல்லாம் சிறிதும் பொருட்படுத்தவில்லை.

அதேபோல், தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்த சகஜானந்தர் என்பவரை வ உ சி அவர்கள் சென்னையில் தம் வீட்டிற்குக் கூட்டிச் சென்று உணவு கொடுத்துப் பராமரித்து வந்தார். அவருக்குத் தொல்காப்பியம், திருக்குறள் போன்ற நூல்களைக் கற்பித்ததோடு, சென்னையை விட்டு ஒட்டபிடாரத்திற்குச் சென்ற போதும் சகஜானந்தரை உடன் அழைத்துச் சென்றார். தாம் கலந்து கொண்ட எல்லா நிகழ்ச்சிகளுக்கும் அவரையும் அழைத்துச் சென்றார்.

வஉசி வாழ்ந்த காலகட்டத்தில் இப்படிப்பட்ட செயல்கள் வியக்கத்தக்கவை என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

ஆனால், சிறையில் இருந்த பொழுது, 'பார்ப்பான் அல்லது பாண்டி வேளாளன் உணவு சமைத்தால்தான் உண்பேன்' எனத் தாம் கூறியதாக, வஉசி அவர்களே சுயசரிதையில் குறிப்பிடுகிறார் என்ற விமர்சனம் முன்வைக்கப் படுகிறது. இது மிச்சேல் எனும் சிறை அதிகாரிக்கும் வஉசிக்கும் நடைபெற்ற உரிமைப் போராட்டம் குறித்ததாக நாம் காண முடியும். ஏனெனில்,

'மதகுல வேற்றுமை மனத்திலும் கொள்ளேன்' என்று அதே சுயசரிதையில் அவர் பதிவு செய்வதையும் ஒப்பு நோக்கிக் காண வேண்டும்.

மேலும் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சார்ந்த இராமையா தேசிகர் மற்றும் சகஜானந்தர் ஆகியோரைத் தனது வீட்டிலேயே வைத்து வஉசி அவர்கள் பராமரித்த செயலும் இத்தோடு இணைத்துக் காணப்பட வேண்டும். சாதி ஒழிப்பு பற்றி வெறுமனே பேச்சில் முழங்காமல், செயலில் வாழ்ந்து காட்டியவர் வஉசி அவர்கள்.

மேலும் திலகர் மற்றும் காந்தி போன்றோர் பகவத் கீதைக்கு உரை எழுதிய பொழுதும், வஉசி அவர்கள் சாதிக் கட்டமைப்பை உயர்த்திப் பிடிக்கும் கீதைக்கு ஒருக்காலும் உரை எழுதவில்லை. மாறாக,

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்' - போன்ற சமத்துவ விழுமியங்களை வலியுறுத்தும் வள்ளுவரின் திருக்குறளுக்கு உரை எழுதினார்.

தவிரவும், 1928-ல் செட்டிநாட்டுக்குச் சென்று ஆற்றிய சொற்பொழிவுகளில் பல்வேறு சீர்திருத்தக் கருத்துக்களை அவர் பதிவு செய்துள்ளார். அவற்றில் சுயமரியாதை இயக்கத்தின் செல்வாக்குத் தெளிவாகக் காணப் படுகிறது. 'பிறப்பினால் உயர்வு தாழ்வு நமது நாட்டு வழக்கமன்று. ஆரியர் நூல்கள் தமிழ் நூல்களில் கலந்த பின்னரே பிறப்பினால் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற கோட்பாடு வந்தது. தமிழ்நாட்டு நூல்களில் பிறப்பினால் உயர்வு தாழ்வு கூறப்படவில்லை. புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களில் பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் உண்டெனக் காணப்படவில்லை' எனத் தெளிவு படுத்துகிறார்.

மேலும், 1920 ஆம் ஆண்டு திருநெல்வேலியில் நடைபெற்ற சென்னை மாநில அரசியல் மாநாட்டில் பங்கேற்ற வஉசி அவர்கள், அரசு வேலை வாய்ப்புகளில் பார்ப்பனர் அல்லாதாருக்குப் போதிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் எனும்.தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

அதுமட்டுமின்றி 1927 - ஆம் ஆண்டில் சேலத்தில் நடைபெற்ற மூன்றாவது அரசியல் மாநாட்டில், பார்ப்பனர் அல்லாதோருக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பது குறித்து மிக விரிவாக அவர் உரையாற்றியதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

சாதி குறித்து முற்போக்கான கொள்கையைக் கொண்டிருந்தது போலவே, மதம் குறித்தும் வஉசி அவர்கள் நல்லிணக்கக் கண்ணோட்டம் உடையவராக இருந்தார். குறிப்பாக மெய்கண்டாரின் சிவஞானபோதத்திற்கு அவர் எழுதிய உரையைக் குறிப்பிட வேண்டும். அதன் உரைப்பாயிரத்தில் வஉசி அவர்கள், ' இவ்வுரையில் ஏனைய உரைகளில் காணப்படும் பல மதக் கோட்பாடுகளும், அவற்றின் கண்டனங்களும் காணப்படா. அவை காணப்படாமைக்குக் காரணம், மக்கள் பல்வேறு பெயர்களோடும், வடிவுகளோடும் காணப்படினும், அவர்களெல்லாம் மக்கள் சாதியினர் ஆவது போல, மதங்கள் பல்வேறு பெயர்களோடும், கொள்கைகளோடும் காணப்படினும் அவைகளெல்லாம் ஒப்புயர்வற்ற ஒரே இறைவனைப் பற்றிய பேசுகின்றன என்று யான் கருதுகின்றமையே ' எனக் குறிப்பிடுகிறார்.

அதைத் தொடர்ந்து அவர் சுட்டிக்காட்டும் கருத்துக்கள் சமகாலப்

பொருத்தப்பாடு மிக்கவையாகும். 'மத வேற்றுமை காண்பவர்களும், பேசுபவர்களும், 'யான்' 'எனது' என்னும் மதவெறி பிடித்த மாக்களே என்றும், நமது நாடு தற்காலம் இருக்கிற ஒற்றுமையற்ற நிலைமையில், மத வேற்றுமைகளையோ, சாதி வேற்றுமைகளையோ, வேறு வேற்றுமைகளையோ காண்பவர்களும், பேசுபவர்களும் தேசத்திற்குத் தீங்கிழைப்பவர்களே என்றும் யான் கருதுகின்றேன்' என்ற அவரது கருத்து, மதவெறியால் நாட்டைத் துண்டாட நினைப்பவர்களுக்குச் சரியான பாடமாகும்.

அது மட்டுமல்ல, இறை நம்பிக்கையும் சைவ சமய சித்தாந்தங்களில் நல்ல புலமையும் கொண்டிருந்த வஉசி அவர்கள், தனது அரசியல் வாழ்வில் மதத்தைக் கலக்கவில்லை. சமயம் என்பது தனி மனிதனின் தொடர்புடையது என்பதில் அவர் தெளிவாக இருந்து வந்தார். இந்தக் கருத்தில் அவர் காந்தியாருடன் வேறுபட்ட போதும், தமது கருத்தில் உறுதியாக இருந்து வந்துள்ளார். இறுதிவரையிலும் அதில் அவர் சமரசம் செய்து கொள்ளவில்லை.

சுதேசாபிமானம், சுதேச ஸ்டீமர் விக்ஞாபனம் ஆகியவையே இதுவரையில் கிடைத்துள்ள வ உ சி அவர்களின் அரசியல் கட்டுரைகளில்.தனித்தன்மை வாய்ந்தவையாகக் கருதப்படுகிறது.

வ உ சி அவர்களின் முதல் அரசியல் கட்டுரையான 'சுதேசாபிமானம்' பகுதியில், ' சுதேசத்தார் ஒன்று சேர்வதற்கும், ஒற்றுமையாக இருப்பதற்கும் முக்கியத் தடைகள் ஜாதிய அபிமானம், மதாபிமானங்களே! உலகத்தில் தாழ்ந்த நிலைமையை அடைந்த ஒவ்வொரு தேசத்தின் சரித்திரத்தையும் கவனிப்போமாயின், சுதேசத்தார் ஜாதி பேதம் / மத பேதம் ஏற்பட்டுச் சுதேச ஒற்றுமையையும் பேதப்படுத்தி, சுதேச நிலைமையையும் பேதப்படுத்தினதாகத் தெரியவரும் ' எனத் தெளிவு படுத்துகிறார்.

இவை தவிர, பல்வேறு மூட நம்பிக்கைகளை எதிர்த்தும் வஉசி அவர்கள் தனது கண்டனத்தைப் பதிவு செய்துள்ளார். 'சிரார்த்தம் என்ற பெயரால் பார்ப்பனர்களுக்கு அளிக்கப்படும் அரிசி, காய்கறி முதலியன பிதுர்களுக்குப் போய் சேரும் என்று கூறுவது பொய்யாகும். இது அப்படி போய் சேர்வது உண்மையானால், பிதுர்கள் தங்கள் பிள்ளைகள் மூலம் வாங்கப் பிரியப்படுவார்களே அன்றி, பிறர் மூலம் வாங்கப் பிரியப்பட மாட்டார்கள். தென்புலத்தார் என்பதற்கு ஏன் பிதுர்கள் என்று பொருள் கூற வேண்டும்? வள்ளுவர் அவ்வாறு கூறினாரா? தென் -- அழகிய / குலத்தார் -- அறிஞர்கள் அதாவது ஞானிகள் என்றே பொருள்படுகிறது. தென்புலத்தார் கடன் ஆற்ற வேண்டும் என்றால், ஞானிகள் விட்டுப்போன வேலைகளை முடிக்க வேண்டும் என்பதே பொருளாகும். மனுநீதி கண்ட சோழனைப் பற்றிக் கூறும் பொழுது, இப்பொழுது இருக்கும் மனுஸ்மிருதியை நடத்திக் காட்டியமைக்காகவே, மனுநீதி

கண்ட சோழன் என்று பெயர் வந்தது என்று பொருள்படும்படியே சேக்கிழார் கூறினார் என்று கூறினார்கள். அவர் அப்பொருட்படி கூறியிருப்பாராயின், அவர் மனுஸ்மிருதியைப் படிக்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். கன்றுக் குட்டியைக் கொன்றதற்காக, கொன்ற மனிதனையே கொல்ல வேண்டும் என்று சொல்லப்பட்டு இருப்பதை எடுத்துக்காட்டினால், மனுஸ்மிருதியில் இதுவரையில் நாங்கள் பார்த்துள்ள கொடுமைகளோடு இதனையும் சேர்த்துச் சொல்கிறோம். எந்த நூலானாலும் குற்றம் இருக்குமானால், அதனைத் தள்ளத் தயங்கக் கூடாது. நமக்குக் கடவுள் பகுத்தறிவைக் கொடுத்திருக்கிறார். அதனைக் கொண்டு ஆராய்வோம் கடவுளே எழுதினார் என்று கூறப்படும் நூலினும் பிழை இருக்குமானால், அதனையும் தள்ளவேண்டியதுதான்'' எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார்.

மேலும், பிதுர்கடன் செய்தல் குறித்தும் தனது கருத்துக்களை வெளிப்படையாகத் தெரிவித்தார். 'தந்தை தாய் இறந்து போனால், பிணத்தைச் சுட்டுவிட்டு ஏழைகளுக்குச் சாப்பாடு போடலாம். சபிண்டி, திதி முதலிய செய்ய வேண்டும் என்று சொன்னால், ஐயா அது எங்கள் அப்பனுக்குக் போகாது. நாங்கள் இப்பொழுது விழித்துக் கொண்டோம். இனி ஏமாற்ற முடியாது என்று கூறி விடுங்கள்' என அறிவுறுத்துகிறார்.

வ உ சி அவர்கள் காலம் கடந்து சிந்தித்தவர். பெண்கள் குறித்த அவரது பார்வை இன்றைய பெண்ணியச் சிந்தனைகளுக்கு முன்னோடியாக இருக்கின்றன. மனித குல வரலாற்றில் ஆண் - பெண்ணிற்கு இடையே தோன்றிய பாகுபாடுதான் முதன்மையான பிரிவினையாகும். புராதனப் பொதுவுடைமைச் சமுதாயம் தவிர்த்து, ஏனைய சமுதாயப் படிநிலைகளில் பெண்களுக்கான உரிமைகளும், அவர்களது தலைமைப் பாத்திரமும் மறுக்கப்பட்டே வந்துள்ளது. 'குடும்பத்தில் ஆண் பூர்ஷ்வா வர்க்கமாகவும், பெண் பாட்டாளி வர்க்கமாகவும் இருக்கின்றனர்' என்று ஏங்கெல்சு இது பற்றிக் குறிப்பிடுகிறார்.

எனவே இத்தகைய பாகுபாட்டைக் களைவதற்காகப் பெண்களுக்கு உரிய கல்வியை அளிப்பதுதான் சரியான அணுகுமுறையாக இருக்கும். அவ்வகையில் வஉசி அவர்களது முன்னெடுப்புகள் போற்றத்தக்கதாக உள்ளன.

'நம் நாட்டில் பெண் மக்களைச் சமைக்கும் இயந்திரமாகச் செய்துவிட்டனர். மேலும் அவர்களைப் பிள்ளை பெறும் எந்திரமாகவும் அனைவருமே செய்து விட்டோம். நம்மைப் போல் பெண்களுக்கும் சம உரிமை இருத்தல் வேண்டும். எல்லா விஜயங்களிலும் அவர்களை ஆலோசித்துச் .செய்தல் அவசியமாகும். ஆனால் அவர்கள் அதற்குத் தகுதியுடையவர்களாக என்று பார்க்கின், இல்லை. ஏன்? அவர்கட்க்குக் கல்வி இல்லாமையே! எனவே பெண்களுக்குக் கல்வி

கற்பிக்க வேண்டியது அவசியமாகும்' என அவர் 1928 -ல் பரிந்துரைத்தார்.

அந்தக் கால கட்டத்தில் கல்வி கற்றிருந்த பெண்களின் விழுக்காடு மிகமிகக் குறைவாக இருந்தது என்பதை அரசின் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

1921 -- 1.8%, 1931 - 2.9%, எனும் பரிதாப நிலையில்தான் இந்தியப்பெண்களின் கல்வி விழுக்காடு அமைந்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. எனவே மக்கள் தலைவராக விளங்கிய வ உ சி போன்றவர்கள் பெண்கல்வி குறித்து அந்தக் காலகட்டத்திலேயே விழிப்புணர்வு ஊட்டியது பாராட்டத் தக்கதாகும்.

அது மட்டுமல்லாமல், கணவரின் எச்சில் இலையில் மனைவி உண்ணும் வழக்கத்தைக் கடுமையாகக் கண்டித்தார் அவர். 'எச்சில் இலையை நாய்கள் அன்றோ தின்னும்?' எனக் குறிப்பிட்டுவிட்டு, 'எச்சில் இலையில் மனைவி சாப்பிடாவிட்டால், 'புருசன் இலையில் சாப்பிடாத தேவடியாள்' என்று சொல்லுகின்றனர். எனக்குக் கல்யாணம் ஆனது முதல் எனது எச்சில் இலையில் உண்ணக்கூடாது என்று என் மனைவிக்கு உத்தரவிட்டு விட்டேன். பெண்களுக்கு சமசுதந்தரம் கொடுக்க வேண்டும்' எனத் தனது செயல் மூலம் அவர் சமத்துவத்தை நிலை நாட்டினார்.

பெண்களை மிக உயர்ந்த நிலையில் வைத்துப் போற்றியவர் வஉசி அவர்கள். தனது மனைவி வள்ளியம்மை குறித்து ஓர் இலக்கியப் படைப்பையே முதன் முதலில் வெளியிட்டவர் அவர்.

'உயிரெனக் கருதி ஊழியம் புரிந்த
செயிர் இலா மனத்தள்; தெய்வமே அணையள்' எனத் தனது துணைவியாரை மிகுந்த மதிப்புடன் கொண்டாடினார்.

மேலும் பால்ய விவாகத்தைக் கடுமையாகக் கண்டனம் செய்தார் அவர். இதனால் விதவைகள் பெருகி விட்டனர். பால்ய விவாகத்தினால் பிறக்கும் குழந்தைகளும் ஆரோக்கியமாக இருக்கவில்லை. அப்பிள்ளைகளால் குடும்பத்திற்கும், தேசத்திற்கும் தீங்கே உண்டாகும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார். ( குமரன் இதழ் -- மார்ச்சு 15 / 1928 )

மெய்யறம் இல்வாழ்வியலில் உயிர் துணை கொள்ளல் எனும் அதிகாரத்தில் 'துணையிரந்தாரை மணப்பது புண்ணியம்' எனக் குறிப்பிடும் வஉசி அவர்கள், உடன்கட்டை ஏறுதலின் கொடுமை குறித்தும், விதவைத் திருமண ஆதரவு குறித்தும் பதிவிடுகிறார். ஆனால் அவருடன் தோளோடு தோள் நின்று அரசியல் போராட்டம் நிகழ்த்திய சுப்பிரமணிய சிவா இதற்கு மறுப்பு தெரிவித்தது குறிக்கத்தக்கது

‘இல் வாழ்வியலில் உயிர்த்துணை கொள்ளல் எனும் அதிகாரத்தில் ’துணை இழந்தாரை மணப்பது புண்ணியம்’ என்று பிள்ளை அவர்கள் எழுதியிருக்கின்றனர் இதனால் இவர் விதவா விவாகம் செய்யலாம் என்ற கொள்கையைப் பின்பற்றுபவர் என்று தெரிகிறது. விவாகம் செய்யலாம் என்று மாத்திரம் அன்று; புண்ணியம் என்றும் கூறியிருக்கின்றனர். ஆதலால் நமது தேச நன்மைக்கு விதவா விவாகம் அவசியம் என்பது இவர் கருத்துப் போலும்! நாம் இவ்வபிப்பிராயத்திற்கு முற்றிலும் மாறுபடுகின்றோம்‘

( ஞானபாநு , செப்டம்பர் 1914 ) எனத் தனது மறுப்பைத் தெரிவிக்கிறார். இப்படிச் சகதோழரே எதிர்த்தாலும், மகளிருக்கு ஆதரவான தன் நிலைபாட்டில் வஉசி அவர்கள் உறுதியாக நின்றார்.

இத்தருணத்தில், 22/08/1926 குடியரசு இதழில் தந்தை பெரியார் எழுதிய ‘விதவைகள் நிலைமை‘ கட்டுரையை ஒப்பு நேரக்கிப் பார்க்க வேண்டும். அதில் அக்காலத்திலிருந்த விதவைகளின் கொடிய துன்பங்களை விரிவாகக் குறிப்பிடும் தந்தை பெரியார் அவர்கள்,

‘ இப்போது நமது நாட்டில் விதவைகள் மணம் செய்து கொள்ள கூடாது என்றிருக்கும் வழக்கம், உடன்கட்டை ஏறுவதை விட மிகக் கொடியதாய் இருக்கின்றது. உடன்கட்டை ஏறுவது ஒரு நாள் துன்பம், விதவையாய் வாழ்வதோ வாழ்நாள் முழுவதும் தாங்க முடியாத சித்திரவதைக்கு ஒப்பான துன்பமாக இருந்து வருகிறது ............ இந்து சமயத்தார் என்று கூறப்படுபவர்கள், இவ்வாறு தங்கள் சமூகம் அநியாயமாய் அழிந்து வருவதைப் பார்த்துக்கொண்டு வருவது பெரிதும் வருந்துவதற்குரிய செயலாகும். சுருங்கக்கூறின், இது ஒருவிதச் சமுதாயத் தற்கொலையே ஆகும்‘ எனக் குறிப்பட்டதோடு, ‘உலகில் மனித வர்க்கத்தினருக்குள் குடியிருக்கும் அடிமைத்தன்மை ஒழிய வேண்டுமானால், பெண்ணுலகை அடிமையாகக் கருதி நடத்தும் அகம்பாவமும், கொடுமையும் அழிய வேண்டும். அது அழிந்த நிலையே சமத்துவம், சுதந்திரம் என்னும் முளை முளைக்கும் இடமாம். இதற்கு விதவைகளுக்கு மறுமணம் செய்து கொள்ள உரிமை ஏற்படுத்துவதே முதல் காரியமாகும்‘ எனத் தந்தை பெரியார் பரிந்துரைக்கிறார்.

மேலும் ‘ 1921 ஆம் வருஷத்திய ஜன சங்கியைப்படி இந்துக் கைம்பெண்ணின் தொகையினை நோக்குகையில் அய்யகோ! என் நெஞ்சம் துடிக்கின்றது‘ எனக் குறிப்பிட்டு விட்டு, 1 வயதுள்ள விதவைகள், 1 முதல் 2 வயதுள்ள விதவைகள் / 2 முதல் 3 வயதுள்ள விதவைகள் எனத் தொடங்கி,

25 முதல் 30 வயதுள்ள விதவைகள் வரையிலும் உள்ள விதவைகளின் எண்ணிக்கையைத் தனித்தனியே குறிப்பிட்டு விட்டு, இறுதியில் மொத்தமுள்ள

விதவைகளின் எண்ணிக்கை 26 இலட்சத்திற்கும் அதிகம் என்பதைத் தந்தை பெரியார் சுட்டிக் காட்டுகிறார்.

இவ்வளவு கொடூரமான சூழ்நிலையை மாற்றுவதற்கு வஉசி அவர்கள், தனது சமகாலத்திய தலைவரான தந்தை பெரியாரைப் போலவே மிகுந்த முன்னெடுப்புகளை மேற்கொண்டார் என்பது கருதத்தக்கது.

அரசியல், சமூகம் போன்ற துறைகளில் புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்டிருந்ததைப் போலவே, மொழி குறித்தும் தனித்துவமான கருத்துக்களை வஉசி அவர்கள் கொண்டிருந்தார். அவர் வாழ்ந்த காலத்தில் வடமொழி குறித்த பெருமிதம் பொதுவாக மேலோங்கி இருந்தது. ஆனால், வஉசி அவர்கள் வடமொழியைக் காட்டிலும் தமிழ் உயர்ந்தது எனும் கருத்தில் உறுதியாக இருந்தார்.

> ‘ஆரியமே ஏற்றமெனும் அன்பருயர் வள்ளுவரின்
> ஓரியலே கற்றாலும் ஓதாராங் - கீரடியில்
> நூற்பொருளும் வள்ளுவர்போல் நன்குரைக்கும் நூல்ஒன்றங்
> கேற்படநாம் கண்டதுண்டோ இன்று‘ எனும் பாடலில்,

திருக்குறளைப் போன்றதொரு சிறந்த நூல் வடமொழியில் உண்டோ என்று வினவுகிறார்.
திருக்குறளைப் பெற்றதால், ஆரியத்தினும் தமிழ் உயர்ந்த மொழியே எனச் சாற்றுகிறார்.

> ‘ஆரியரும் செந்தமிழும் ஆராயின் செந்தமிழில்
> ஆரியநன் நூலெல்லாம் ஆகியுள - சீரியநம்
> செந்தமிழில் இன்றுமுள சீர்சான்ற நூல்களுக்கோ
> அந்தமிலை காண்மின் அடுத்து‘

எனும் பாடலில் தமிழ் மொழியில் தொடர்ந்து நூல்கள் முடிவில்லாமல் வந்து கொண்டே இருக்கின்றன. இந்த நிலை வடமொழியில் இல்லை என எடுத்துக்காட்டித் தமிழின் சிறப்பை வெளிப்படுத்துகிறார்.

அதேபோல் தமிழ் மொழியில் சில எழுத்துக்கள் குறைவாக உள்ளன என்றும், அக்குறையைச் சரிசெய்யப் பிறமொழி எழுத்துக்களோ, பிற சில குறியீடுகளோ தமிழில் சேர்க்கப்பட வேண்டும் எனவும் சிலர் கூறிவந்தனர். வஉசி அவர்களின் மிக நெருங்கிய நண்பராகிய பாரதியும் இத்தகைய கருத்தினை வெளிப்படுத்தி வந்தார். அதாவது பிற மொழிகளின் மனிதப் பெயர், நகரப் பெயர் முதலியவற்றில் சிலவற்றை அந்த மொழியைச் சார்ந்தவர்கள் உச்சரிக்கும்

சப்தத்தில் நாம் உச்சரிக்குமாறு செய்யத் தக்க சில எழுத்துக்கள் நமது தமிழ் மொழியில் இல்லை என்பது பாரதியின் கருத்து.

ஆனால், நமது தமிழ்ச் சொற்களான பழனி, கிழவி, மன்றம், கன்று போன்ற சொற்களைத் தமிழ் மொழியின் சப்தத்தில் பிறமொழியினர் உச்சரிக்கின்றனரா என வஉசி அவர்கள் வினவுகிறார். ழ, ற, ன போன்ற தமிழ் எழுத்துக்களையாவது, அவற்றின் ஒலிகளைக் குறிக்குங் குறிகளையாவது பிற மொழிகளில் சேர்ப்பதற்கு பிறமொழியினர் ஆயத்தமாக உள்ளனரா எனவும் கேட்கிறார். பிறமொழியாளர் அப்படித் தயாராக இல்லாத பொழுது தமிழர்கள் மட்டும் ஏன் பிறமொழிக் கலப்பை ஏற்க வேண்டும் என்பது அவரது வினா.

தமிழ் எழுத்துக்களில் குறை உள்ளது எனக் கூறுவோர், குறிப்பாக சமசுகிருத ஆதரவாளர்கள், தமிழ் எழுத்துக்களையாவது, தமிழ்க்குறிகளையாவது சமசுகிருதத்தில் ஏற்றுத் திருத்தம் செய்யத் தயாராக இல்லாமல், தமிழ் மொழியைக் குறை கூறுவது ஏற்கத்தக்கதல்ல என்பது வஉசி அவர்களது வாதம்.

புதிய அறிவியல் சொற்களைத் தமிழாக்கம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் பொழுது, பொருள் புரிவதற்காக அச்சொல்லின் பக்கத்தில் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தலாம் என்பது வஉசி அவர்களின் பரிந்துரை. ஒவ்வொரு. மொழியிலும் பிற மொழிச்சொற்களை வகைதொகை இன்றிச் சேர்த்துக் கொண்டே போவது ஏற்கத்தக்கதல்ல!
பார்லிமென்ட், கவர்னர் போன்ற சொற்களை மொழி மாற்றம் செய்யலாம் என அப்பொழுதே அவர் முன்மொழிந்து உள்ளார். ( இன்று நாடாளுமன்றம் / ஆளுநர் ஆகிய சொற்கள் பேச்சு வழக்கிலேயே வந்து விட்டதைப் பார்க்கிறோம் )

மேலும் இது குறித்து வஉசி அவர்கள் கூறும் மற்றொரு கருத்தும், இங்கு கருதத்தக்கது. ' யான் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஒரு சிலவே கற்றுள்ளேன். அவ்வாறு இருந்தும், யான் அறிந்துள்ள எந்தப் பாஷையின் எந்த மொழியையும் நம் தமிழ் மக்களில் எவரும் எளிதில் அறியுமாறு ( சமஸ்கிருத சொற்களின் கலப்பே இல்லாத ) தனித்தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்கத்தக்க திறமையை உடையேன் என்றால், என்னினும் அதிகமாகத் தமிழ் இலக்கண இலக்கியங்களையும் கற்றுள்ளவர்கள் அவ்வாறு செய்யத் தக்க திறமையை உடையவர்களாய் இருப்பார்கள் என்பதை யான் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை'

இவ்வாறு மொழிக்கலப்பு இல்லாமல், எளிய தனித்தமிழில் எழுதுவது இயலக்

கூடிய ஒன்றே எனத் தனது உயிர் நண்பரான பாரதிக்கு மறுப்புத் தெரிவித்தது, வஉசி அவர்களின் மொழிப் பற்றினையும், நேர்மையையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

'தனித்தமிழ் இயக்க வரலாற்றைப் பொதுவாக நான்கு நிலைகளாகப் பகுப்பர் தனித்தமிழ் இயக்க ஆய்வாளர்கள்.( இரா. இளங்குமரன்)
முதன் முதலில் தனித்தமிழ் பற்றிச் சிந்தித்த பரிதிமாற்கலைஞர் (1903) பாம்பன் சுவாமிகள் (1906) விருதை சிவஞான யோகிகள் (1908) மாகறல் கார்த்திகேயர் (1913) ஆகியோர் தனித்தமிழ் இயக்கத்திற்கு ஆற்றிய பணிகள் முதல் நிலையினவாகவும், சிவம், வ உ சி இவர்கள் ஆற்றிய பணிகள் இரண்டாம் நிலையினவாகவும், மறைமலை அடிகளாரின் தனித்தமிழ் இயக்கம் தனித்த - சிறப்பு வாய்ந்த - மூன்றாம் நிலையினதாகவும், தேவநேயப் பாவாணரின் பணிகள் நான்காம் நிலையினதாகவும் கணிக்கப்படுகின்றன' எனவும், 'தனித்தமிழில் எழுத வேண்டும் என்ற எண்ணத்தைப் பரவலாக
விதைத்தவர் என்ற வகையில் சிவமும், தனித்தமிழில் எழுத முடியும் என்ற நம்பிக்கையை வளர்த்த வகையில் வ.உ.சி.யும் தனித்தமிழ் இயக்க வரலாற்றில் மறக்க முடியாதவர்களாகின்றனர்' எனவும் பேராசிரியர் மா.ரா.அரசு அவர்கள் சுட்டிக்காட்டுவது கருத்திற்கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

அதேபோல், திருக்குறளைப் பரப்பப் பாடுபட்டவர்களின் முதல் தலைமுறையைச் சேர்ந்தவர் வ உ சி அவர்கள். கோவை சிறையில் தம்மைச் சந்திக்க வந்த இருவரிடம், ' தமிழர்கள் எல்லோரும் திருக்குறளை உரையுடன் அறிந்து பாராயணம் செய்தல் வேண்டும். 1330 குறளையும் பொருளுடன் உணர்ந்தில்லாத தமிழர் முற்றும் துறந்த முனிவரே ஆயினும், என்னைப் பெற்ற தந்தையே ஆயினும், யான் பெற்ற மக்களே ஆயினும் யான் அவரைப் பூர்த்தியாக மதிப்பதும் இல்லை, நேசிப்பதும் இல்லை' என்று கூறினார். இக்கூற்று 1910-ல் கர்மயோகி என்ற பத்திரிகையில் மார்ச்சு இதழில் வெளியாகி உள்ளது.

மொழித்தளத்தில் மட்டுமல்லாது சமூகத்தில் பல்வேறு புரட்சிகர நடவடிக்கைகளிலும் வஉசி அவர்கள் தனது பங்களிப்புச் செய்துள்ளார்.

கோவையில் 1921-ல் மே நாள் பேரணியை என். எஸ். இராமசாமி ஐயங்காருடன் இணைந்து வ உ சி அவர்கள் நடத்திக் காட்டினார். தவிரவும், 1921 -ல் மலபார் மாப்பிள்ளை முசுலிம்கள் ( மாப்ளாஸ் காக்காமார் ) எழுச்சியை ஆதரித்து, மத வேற்றுமை பாராமல் கோவையில் வஉசி அவர்கள் உரையாற்றினார். அதனால் வெள்ளையர் அரசாங்கம் அவர் மீது வழக்குத் தொடுத்தது. அதையும் அவர் எதிர்கொண்டார்.

விடுதலை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுவதற்கு வஉசி அவர்கள் தமிழைப் பயன்படுத்தினார். அதுவரையில் தமிழகம் அதிகம் அறிந்திராத மேடைப்பேச்சு என்பதை மக்களுக்கு முறையாக அறிமுகம் செய்தவர் அவர். மக்களை ஒருங்கிணைத்து அவர்களைச் சிந்திக்கப் பழக்கியவர் அவர். பொது மக்கள்கருத்து என்ற ஒன்றை அரசியல் சார்ந்த நிலையில் உருவாக்கிய அரிய சாதனையை 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிகழ்த்திக் காட்டியவர். அதற்கு மேடைப்பேச்சு கருவியாகியது. மேடைப்பேச்சு என்பது ஒரு கலையாக, ஒரு தனித்துறையாக, ஆற்றல்மிக்க படைக்கலனாகப் பின்னாளில் தழைத்தோங்கப் புதுப்பாதை வகுத்தவர்.

வஉசி அவர்கள் தனது சிந்தனைகளை மக்களிடம் எடுத்துச் செல்வதற்கான மிகச் சிறந்த உத்தியாக அரசியல் மேடைகளைப் பயன்படுத்தினார். அவரது சொற்பொழிவுகள், அவரது சிந்தனையின் திறப்புக்களாக அமைந்தன.
அதனாலயே ' பேச்சுக்குச் சிதம்பரம்' எனச் சுத்தானந்த பாரதி பாராட்டினார். திரு. பிள்ளை அவர்களின் பேச்சு, இரத்தத் துடிப்பை அல்ல, எலும்புகளையும் துடிக்கச் செய்யும்' எனத் தமிழறிஞர் கி.ஆ.பெ..விசுவநாதன் அவர்கள் குறிப்பிட்டார். வஉசி அவர்களது பேச்சைக் கேட்கப் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டதை பி.ஸ்ரீ. / வையாபுரி பிள்ளை / பொ.திருகூடசுந்தரம் போன்ற பலரும் பதிவு செய்துள்ளனர்.

' வறுமையினும், வியாதியினும் சகிக்கொணாக்
கொடியது அடிமைத் தனமே'

எனச் சுட்டிக்காட்டி, மக்களிடையே விழிப்புணர்வை ஊட்டியதோடு, வெள்ளையர்களை எதிர்க்க முடியுமா எனும் தாழ்வுமனப்பான்மை கொண்டிருந்த மக்களிடம், நாட்டுப்பற்று எனும் கனலை மூட்டிய தீப்பறவையாகத் திகழ்ந்தவர் வஉசி அவர்கள்.

'அயல்நாட்டவர்களால் நடத்தப்படும் ஒரு நிர்வாகம் சுதேசிகளின் பயன் கருதிச் செயல்படும் என எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது. நீண்ட காலத்திற்கு அரசாங்கம் ஆங்கிலேயர்களின் கரங்களில் இருந்தால் இந்நாடு கட்டாயமாகப் பாதிக்கப்படும் ............ இந்தியா ஒவ்வொரு ஆண்டும் மேலும் மேலும் ஏழையாகிக் கொண்டிருக்கிறது. அதன் உண்மையான வளங்களைப் புதுப்பிப்பதற்கு மூன்று வழிகள் இருக்கின்றன. அவை சுதேசியம், அந்நியப் பொருள்கள் புறக்கணிப்பு மற்றும் தொழிற்சாலை ஆகியன' என வஉசி அவர்கள் பேசிய பகுதியைக் கருத்தில் கொண்டு, அவர் மீது 124 A மற்றும் 153 A ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குத் தொடரப்பட்டது. இத்தகைய 'கலக' வழக்குகளுக்காக மொத்தம் 927 சாட்சிகள் சேர்க்கப் பட்டிருந்தனர். சென்னை மாகாணத்தில் முன்

எப்பொழுதும் இல்லாத வகையில் ஒரு வழக்கில் அதிக எண்ணிக்கையிலான சாட்சியங்கள் சேர்க்கப்பட்டது இதுவே ஆகும்.

ஆளும் வர்க்கத்திற்கு அவர் சிம்ம சொப்பனமாக விளங்கினார் என்பது அவர் மீது பாய்ச்சப்பட்ட வழக்குகளும், அவருக்கு அளிக்கப்பட்ட தண்டனைகளுமே சான்றாக விளங்குகின்றன.

ஆனால், இதைப் பற்றி எல்லாம் சிறிதும் கவலைப்படாமல், தமிழ் மண்ணுக்குத் தேவையான அனைத்துக் கூறுகளைப் பற்றியும் அவர் சிந்தித்துக் கொண்டே இருந்தார். தமிழ்ச் சித்த மருத்துவமுறையை மேம்படுத்த வேண்டியதன் தேவை பற்றியும், தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவ வேண்டியதன் அவசியம் பற்றியும் காலத்தை மீறிச் சிந்தித்தவராக அவர் ஓடிக் கொண்டிருந்தார். உடல் - உள்ளம் ஆகியவற்றைப் பேணி ஆளுமை மிக்க மனிதனை உருவாக்க வேண்டியதன் தேவை பற்றியும் அவர் கருத்துக்களை முன்வைத்தார்; கனவுகளை வெளிப் படுத்தினார்.

வஉசி அவர்கள் ‘செயலே சிறந்த சொல்‘ என வாழ்ந்தவர். தனது வாழ்வே தான் அளிக்கும் செய்தி என மெய்ப்பித்தவர். அவர் தொடாத துறைகளே இல்லை எனலாம். அரசியல், பொருளாதாரம், பண்பாடு, இலக்கியம், மொழியாக்கம் என அவர் ஈடுபட்ட துறைகளில் எல்லாம் தனது முத்திரையைப் பதித்தவர். தேசிய விடுதலை அவரது இலக்காக இருந்தாலும், தமிழ் - தமிழ்நாடு - தமிழர் எனத் தனது வாழ்வைச் செழுமைப் படுத்திக் கொண்டவர். அதனாலேயே ஆய்வாளர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள்,
‘வஉசி அவர்கள் தமிழ்த் தேசியத்தில் காலூன்றிக் கொண்டுதான் இந்திய தேசியத்தைப் பார்த்தார்‘ எனக் கணிக்கிறார்.

1917 தொடங்கி பார்ப்பனர் அல்லாதார் நலன் சார்ந்த சமூக நீதி அரசியலை அவர் இறுதிக்காலம் வரை பற்றி நின்றார் என்பதை அவரது இறுதி விண்ணப்பமே நமக்குத் தெளிவாக்குகிறது. ‘ பார்ப்பனர் அல்லாத சகோதரர்களே! ஜாதி வேற்றுமை, மத வேற்றுமை, கட்சி வேற்றுமை, கோட்பாட்டு வேற்றுமை முதலியவற்றை எல்லாம் விடுத்து, நீங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து பார்ப்பனர் அல்லாதார்கள் சமூகத்தை முன்னிலைக்கும் நன்னிலைக்கும் கொண்டு வருவீர்களாக!‘ ( குடியரசு இதழ் 17/05/1936 ) என இறப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே மக்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

சமத்துவமும், சமூக நீதியும் தேவைப்படும் இன்றைய காலகட்டத்தில் வஉசி அவர்களது வாழ்வு நமக்கு வழிகாட்டும் கலங்கரை விளக்காக மிளிர்கிறது.

பார்வை நூல்கள்


(1) தமிழ்நாட்டில் தேசியம், சுதேசியம் - துணைவேந்தர் நா. இராஜேந்திரன் கிளியோ வெளியீடு.

(2) இந்திய விடுதலைப் போரில் வ உ சி - என்.திரவியம் - விஜயா பதிப்பகம்.

(3) காந்தி கணக்கு, அனிதா கு கிருஷ்ணமூர்த்தி, சூரியன் பதிப்பகம்.

(4) வஉசி ஒரு பன்முகப் பார்வை, முனைவர் எஸ். கண்ணன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

(5) வஉசி பன்னூல் திரட்டு, வீ.அரசு, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்.

(6) வஉசி - வாழ்வும் பணியும் - ஆ.சிவசுப்பிரமணியன் அகல்யா வெளியீடு.

(7) அரசியல் பெருஞ்சொல் - வ.உ.சிதம்பரனார் யாப்பு வெளியீடு.

(8) வ உ சிதம்பரனாரின் தமிழ்ப் பணிகள் - மா.ரா.அரசுஆசிரியர், மா.ரா. அரசு நினைவு அறக்கட்டளை.

(9) சிதம்பர வேங்கை - கதிர் நம்பி, யாப்பு வெளியீடு

(10) கப்பலோட்டிய கதை, குருசாமி மயில்வாகனன், நீந்தும் மீன்கள் வெளியீட்டகம்

(11) தமிழ் பெரியார் வஉசி - ஆ. அறிவழகன் பரிசல் புத்தக நிலையம்.

(12) வ.உ.சிதம்பரனார் மா.ரா. அரசு சாகித்திய அகாதெமி

(13) தமிழ் தந்த வ.உ.சி. முனைவர் தி. லீலாவதி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

(14) கப்பலோட்டிய தமிழன் வ.உ, சிதம்பரம் என்.வி. கலைமணி

(15) சுடர் - வ.உ.சி. மலர் தில்லித் தமிழ்ச் சங்கம்.

(16) வ.உ.சிதம்பரம் பிள்ளை வாழ்க்கைச் சித்திரம்
எம்.கிருஷ்ணசாமி அய்யர் மெட்ராஸ் ஹரிஹர அச்சகம்

(17) கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் முல்லை முத்தையா
முல்லை பதிப்பகம்

(18) பெண் ஏன் அடிமையானாள்? தந்தை பெரியார் நன்செய் பிரசுரம்

(19) குடும்பம் - அரசு - தனிச்சொத்து ஆகியவற்றின் தோற்றம் பிரடெரிக் ஏங்கல்சு நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

(20) Census *2011*. India *2016*.


மற்றும்

பண்டிதர் அ.கி.நாயுடு, முத்தமிழ்ச்செல்வர் கி.ஆ.பெ. விசுவநாதம், தவத்திரு குன்றக்குடி அடிகளார், நாரண - துரைக்கண்ணன், பரலி சு. நெல்லையப்பர் பி.ஸ்ரீ. ஸோமாஸ், பொ. திருகூடசுந்தரம், மு.சி.வீரபாகு, வஉசி, ஆறுமுகம் ஆகியோரது கட்டுரைகள்.

☆ ☆ ☆

# மாவீரன் வ உ சிதம்பரன்

**பாவேந்தர் பாரதிதாசன்**

வெள்ளையன் கப்பலாலே
வரிந்தஇந் நாட்டின் செல்வம்
கொள்ளை கொண்டோ டல்கண்டு
கொதிப்புற்ற சிதரம்பரன் பேர்
பிள்ளைதான் பேரூக்கத்தால்
பிழைக்கவந் தடிமை கொண்ட
நொள்ளையர் மாயச் செய்தான்
நோன்மைசேர் கப்பல் விட்டான்!

கடல்பிறக் கோட்டிச் சென்ற
கால்வழி வந்த எங்கள்
அடல்மிகு விடுதலைப் போர்
அரிமாக்கள் ஆயிரத்தை
தடந்தோளில் நெஞ்சில் சேர்த்த
தமிழனை நினைக்கும் வெள்ளைக்
குடலெலாம் கலங்கும் தூத்துக்
குடியதன் குடிமை காத்தான்.

இந்தியத் தலைவர் எல்லாம்
இந்திய வீரர் எல்லாம்
செந்தமிழ்ச் சிதம்பரத்தின்
செந்தணல் சிந்தனைக்கே
முந்தித்தம் செவி கொடுப்பார்
முடிவினை எடுப்பார் வெல்வார்.
அந்தமிழ்ப் பாரதிக்கும்
அவனன்றோ அரிய அம்மான்.

பகைவனைப் பரங்கிப் பேயைப்
பாரத நாட்டிருந்து

*தகைப்பதும் உரிமை நாட்டில்*
*தலைநிமிர்ந் துயர்ந்து வாழ்தல்*
*வகையென வேங்கையாகி*
*வடக்கொடு தெற்கனைத்தும்*
*தொகை தொகை மறவர் கூட்டம்*
*தொகுத்தனன் வெடிமருந்தாய்!*

*விடுதலை மறவனுக்கு*
*வெள்ளையர் சுரண்டல் கூட்டம்*
*கெடுதலை கோடி தந்தார்*
*உலகினைக் கெடுக்க வந்தார்*
*படுகொலை வழக்கு நூறு*
*பாய்ச்சினர்; சிறைக் கோட்டத்துள்*
*கொடுதலை என்றார், வீரச்*
*சிறுத்தையா கோழை யாகும்?*

*கல்லுடைஎன்றார் வெள்ளைக்*
*காரரின் அதிகாரத்தின்*
*பல்லுடைப் பதனைப் போல*
*பாறைகள் உடைத்தார், நெஞ்சின்*
*மல்லுடைத் திட்டதில்லை*
*மறத்தமிழ் நெஞ்சம் இன்பச்*
*சொல்லுடை படாத பாக்கள்*
*சொல்லிடும் துயர் துடைக்கும்!*

*திக்கெலாம் திருடவந்த*
*சிவந்த தோல் பரங்கியர்கள்*
*வெட்கிட புரட்சித் தீயின்*
*வெடிகளாய்ச் சிதம்பரத்தின்*
*சுக்கு நூறாக்கும் தோழர்*
*தொல்லை கண்டிடிந்த போது*
*செக்கினை இழுக்கச் செய்தார்*
*சிதம்பரப் பெரியோன் தன்னை.*

எண்ணெயைப் பிழிவதைப் போல்
ஏ வெள்ளைக் கார ரேனும்
மண்டையைப் பிழிவோம் என்று
மனத்தினில் எண்ணி எண்ணி
கண்ணீரைப் பொழிந்திடாமல்
கடுந்துயர் உள்ளம் கொள்ளும்;
திண்ணையில் பார்ப்பனர்கள்
தெருச்சோறுண் டுவகை பூப்பார்!

மூவாயுள் கடுஞ் சிறைக்குள்
மூடினார்சி தம்பரத்தைச்
சாவாயுள் விழுங்குதற்கும்
தவித்தது தமிழ் மானத்தை!
நோய்வாயில் புகுத்துதற்கும்
தோற்றது சிறை நொடிப்பு.
மாவாயில் திறந்ததோர்நாள்
மானவேள் வெளியில் வந்தான் .

உடல்பொருள் ஆவியெல்லாம்
உற்றநாட் டுரிமைப் போர்க்கு
கெடல்இல்லை என இழந்தோன்
கீழ்ப்பட்ட சிறையிருந்து
மடங்கலாய் வந்தான்; ஆனால்
ஆரிய மடியில் வாழ்ந்தோர்
அட்டவோ சிதம்பரத்தை
அணுகிடக் கூசினார்கள்,

நன்றி கெட்டுயிர் வாழ்கின்ற
காங்கிர சியக்கத்தார்கள்
பன்றிக்கும் கீழ்ப்பட்டோரே
பரங்கியன் சுரண்டற்குப்பின்
வென்றி என்றுவப் பதெல்லாம்
வெற்று வேட்டு ரிமை யாகும்
என்றிவர் வாழ்வார்? இல்லை
இடியுண்ட மரம்போல் வீழ்வார்

☆

# வ. உ.சி.யின் காலமும் இக்காலமும்

**குருசாமி மயில்வாகனன்,**

சமகாலத்து இந்தியச் சூழலையும் வ.உ.சி. காலத்து இந்தியச் சூழலையும் ஒப்பீடு செய்யும் இத்தலைப்பிலுள்ள சூழல் என்பதானது சமூகம், பொருளாதாரம் போன்ற பல அம்சங்களைக் கொண்டுள்ள துறையான அரசியல் துறையைக் குறிக்கிறது. வ.உ.சியின் காலத்து இந்தியச் சூழலும் சமகால இந்தியச் சூழலும் மிகவும் மாறுபாடானதும் வேறுபாடானதாகவும் இருக்கும் என நாம் கருதுவதற்கான பல வாய்ப்புகளிருந்தபோதும் சில ஒற்றுமைகளும் உள்ளன என்பதைச் சமகால இந்தியச் சூழல் வெளிப்படுத்துகின்றது.

முதலில் பெரியவர் வ.உ.சி காலத்து இந்தியச் சூழல் எவ்வாறு அமைந்திருந்தது என்பதைக் காணலாம். பெரியவர் வ.உ.சியின் காலம் என்பது எது?.

வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை எனும் பெயரைக் கொண்ட பெரியவர் வ.உ.சி 1872ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆந் தேதி பிறந்தார். அவர் மறைந்தது 1936ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆந் தேதியாகும். சுமார் 64 ஆண்டுகள் அவர் வாழ்ந்திருக்கிறார். அவர் காணவிரும்பிய இந்திய விடுதலையானது அவர் மறைந்து 11 ஆண்டுகள் கழித்துத்தான் இந்தியாவிற்குக் கிடைத்தது. அவருடைய செயல்பாட்டுக் காலத்திற்கும் நம்முடைய சமகாலத்திற்கும் இடையில் சுமார் 116 ஆண்டுகள் கடந்துள்ளன.

பெரியவர் வ.உ.சியின் காலத்து இந்தியச் சூழலானது அப்போதுதான் நவீனகால இந்திய விடுதலை உணர்வானது உருவாகத் தொடங்கியிருந்த காலமாகும். இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் மிக முக்கியமான ஆண்டான 1905ஆம் ஆண்டின்போது அவர் தீவிரமான அரசியலில் நுழைவதற்குத் தயாராக இருந்த காலமாகும். 1905ஆம் ஆண்டின் சிறப்பு என்ன?

1905ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆந் தேதிதான் அப்போதையை பிரிட்டிஷ் இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த ஜார்ஜ் கர்ஸன் என்பவர் இந்தியா மாகாணங்களில் ஒன்றாயிருந்த வங்காளத்தை இரண்டாகப் பிரிக்கவிருக்கும் பிரிட்டிஷ் அரசின் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார். வங்காளத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டிய அவசியம் அப்போதைய பிரிட்டிஷ் அரசிற்கு இருந்தது.

1857ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் இராணுவத்தில் இருந்த முஸ்லீம் மற்றும் இந்து சிப்பாய்கள் தங்கள் மதவேற்றுமைகளை மறந்து

ஒன்றுபட்டுக் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு எதிராகப் போராடினார்கள். சிப்பாய்ப் புரட்சி எனப்படும் அச்சண்டையினால் ஏராளமான உயிர்ச் சேதத்திற்கும் பொருட் சேதத்திற்கும் ஆளான கிழக்கிந்தியக் கம்பெனியானது தன்வசமிருந்த இந்தியாவை 1858ஆம் ஆண்டு பிரிட்டிஷ் அரசிடம் ஒப்படைத்தது. அதுவரையிலும் கிழக்கிந்தியக் கம்பெனியின் இந்தியாவாக இருந்த இந்தியா அப்போதிலிருந்து பிரிட்டிஷ் இந்தியாவாக மாறியது. மாறிய பிரிட்டிஷ் இந்தியாவின் இராணுவத்திற்குள் மீண்டும் ஒரு சிப்பாய்க் கிளர்ச்சி தோன்றிவிடக்கூடாது என்பதற்காகப் பலவிதமான நடவடிக்கைகளை இராணுவத்திற்கு வெளியிலும் உள்ளேயும் செய்தது பிரிட்டிஷ் அரசு. இராணுவத்திற்குள்ளே சிப்பாய்களுக்குள் முஸ்லீம், இந்து என்கின்ற மதப்பிரிவுகளின் வேற்றுமை ஒரு பகையாக நிரந்தரமாக இருக்கும் வகையில் திட்டமிட்டு பணிச்சேர்க்கை, பணியிட மாற்றம், பதவி உயர்வு பணிச் சலுகை போன்றவைகளைக் கடைப்பிடித்தது. இராணுவத்திற்கு வெளியே வங்காளத்தில் வசித்துவந்த முஸ்லீம்களைத் தனியாகவும் இந்துக்களைத் தனியாகவும் பிரிக்கும் பொருட்டு வங்கப்பிரிவினையை அறிவித்தார் கவர்னர் ஜெனரல். ஆனால் பிரிட்டிஷ் அரசின் எதிர்பார்ப்பிற்கு மாறாக வங்கப் பிரிவினைத் திட்டமானது இந்தியா முழுவதிலுமிருந்த மக்களிடையே மாபெரும் அரசியல் விடுதலை உணர்ச்சியைத் தோற்றுவித்தது. அந்த உணர்ச்சிக் கொந்தளிப்பில் புடம் போடப்பட்ட இந்தியத் தலைவர்கள் பலர். அவர்களில் பால கங்காதரத் திலகர், லாலா லஜபதி ராய், அரவிந்த கோஷ், விபின் சந்திர பாலர் போன்ற வட இந்தியத் தலைவர்கள் முக்கியமானவர்கள். அதேபோன்று தென்னிந்தியாவில் உருவான தலைவர்களில் முதன்மையானவர் பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை ஆவார். சி. சுப்பிரமண்ய பாரதியார், சுப்பிரமண்ய சிவம், ஜி. சுப்பிரமண்ய அய்யர் போன்றோரும் முக்கியமானவர்களாவர்.

1906ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் நாடு முழுதும் அறியப்பட்ட ஒரு தலைவராக இருந்தவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை. பின்னாளில் இந்தியாவின் தலைவர்களாக உருவெடுத்த காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, வல்லபாய் படேல், அம்பேத்கர் போன்றவர்கள் அப்போது அரசியலுக்கு அறிமுகமில்லாதவர்களாக இருந்தனர்.

வ.உ.சியின் காலகட்டமானது இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் பெரும் பங்கு வகித்த 'சுதேசியம்' எனும் அரசியற் கொள்கையானது புதிதாக அறிமுகமான காலகட்டமாகும்.

1885ஆம் ஆண்டு ஆலன் ஆக்டேவியஸ் ஹியூம் என்பவரது முயற்சியால் உருவாக்கப்பட்ட காங்கிரஸ் பேரியக்கமானது அப்போது இரு பெரும் பிரிவுகளாகப் பிரிந்திருந்தது. பழைய கட்சி மற்றும் புதிய கட்சி எனும் அவ்விரு பெரும் பிரிவினில் புதிய கட்சிப் பிரிவானது மஹாராஷ்டிராவின் அரசியல்

தலைவரான பால கங்காதரத் திலகரின் தலைமையை ஏற்றிருந்தது. அப்புதிய கட்சியின் சென்னை மாகாணப் பிரிவின் பொறுப்பாளராகத் திலகரால் நியமிக்கப்பட்டவர் வ.உ. சிதம்பரம் பிள்ளை ஆவார்.

புதிய கட்சி மற்றும் பழைய கட்சி ஆகிய இரு பிரிவினருக்கும் பல ஒற்றுமைகளும் சில வேற்றுமைகளும் இருந்தன. வேற்றுமைக்கான காரணங்களில் இரு பிரிவினரும் விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லாததால் காங்கிரஸ் பிளவுபட நேர்ந்ததை யாராலும் தடுக்க முடியவில்லை.

'சுதேசியம்' எனும் புதிதாக உருவாகியிருந்த அரசியல் கொள்கையினை இரு பிரிவினரும் ஏற்றுக் கொண்டிருந்த போதும் இரு பிரிவினருக்கும் அடிப்படையான வேறுபாடு ஒன்றிருந்தது.

சுதேசியம் என்பது உள்நாட்டு உற்பத்தியை ஆதரிப்பது என்ற அளவில் மட்டும் பழைய கட்சியினர் ஏற்றுக் கொண்டிருந்தனர். ஆனால், புதிய கட்சியினரோ உள்நாட்டு உற்பத்தியை ஆதரிப்பது மட்டுமில்லாமல் அன்னியப் பொருட்களைப் புறக்கணிப்பதும் சுதேசியத்திற்குள் அடங்கும் என வாதிட்டனர்.

புதிய கட்சியினரது சுதேசியக் கொள்கையாளராக முழுமையாக வாழ்ந்து காட்டிய ஒரே தலைவர் பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளைதான். சுதேசியக் கொள்கையின்படி முழுவதும் சுதேசியப் பொருட்களைப் பயன்படுத்தியதோடு அன்னியப் பொருட்கள் புறக்கணிப்பிற்காக தனது குழந்தைகளின் ஆடைகள் உட்பட அனைத்தையும் தீயிட அனுப்பியவர் பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை. அவரது முழுமையான சுதேசியப்பற்றுக்கு சாட்சியாக இந்தியா பத்திரிகையில் மகாகவி சுப்பிரமண்ய பாரதி எழுதிய பல கட்டுரைகள் விளங்குகின்றன.

சுதேசியக் கொள்கையைத் தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வந்தார் பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை. அதற்காக, சுதேசியப் பண்டகசாலையைத் தொடங்கினார். அதைத் தொடர்ந்து அவர் உருவாக்கியதுதான சுதேசியக் கப்பல் கம்பெனி ஆகும். சுதேசியக் கப்பல் கம்பெனி மூலம் அவர் கடும் முயற்சி எடுத்து வாங்கிவந்த கப்பல்களினால் அவரது புகழ் இந்தியாவெங்கும் பரவியிருந்தது. சுதேசக் கப்பல் நிறுவனம் மட்டுமில்லாமல் சுதேச பஞ்சாலை ஒன்றைத் தொடங்கும் திட்டமும் அவரிடமிருந்தது. அவ்வாறு தனக்கொரு திட்டமிருப்பதை அவர் வெளிப்படையாகவே அறிவித்திருந்தார்.

தங்களது ஆட்சியதிகாரத்தைக் கேள்விக்குள்ளாக்கும் எதையும் பிரிட்டிஷ் அரசானது அனுமதிக்கத் தயாராக இல்லை. சென்னை மாகாணத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியில் செயல்பட்ட பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளையின் செயல்பாடுகள் பிற மாகாணங்களுக்கு முன்னுதாரணமாக இருந்துவிடக் கூடாது என்பதாலும், பெரியவர் வ.உ.சிதம்பரம்

பிள்ளையின் சுதேசச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்தவும் பிரிட்டிஷ் கப்பல் கம்பெனி மற்றும் பிரிட்டிஷ் பஞ்சாலை முதலாளிகள் பிரிட்டிஷ் அரசுடன் சேர்ந்துகொண்டு கூட்டுச் சதி செய்தனர். பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளையை விலைக்கு வாங்கும் முயற்சியில் தோல்வியடைந்ததால், அவரை முடக்கும் வேலையை முதலாளிகள் பிரிட்டிஷ் அரசிடம் ஒப்படைத்தனர். அதன்படி பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளையையும் சுப்பிரமணிய சிவத்தையும் அரசை எதிர்த்துப் பேசினார்கள் எனும் அற்பக் காரணத்தைக் கூறிக் கைது செய்து சிறையிலடைத்தார்கள். இக்கைதுக்குப்பிறகு திருநெல்வேலியில் நடந்த நெல்லைக் கிளர்ச்சியானது தமிழகம் மறந்துபோன வீரமிக்க வரலாற்று நிகழ்ச்சியாகும்

1908ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12ஆந் தேதி சிறையிலடைக்கப்பட்ட பெரியவர் வ.உ. சிதம்பரம் பிள்ளை சுமார் 5 ஆண்டுகள் கழித்து 1912ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24ஆந் தேதி விடுதலை செய்யப்பட்டார்.

இந்த இடைப்பட்ட காலத்தில் இந்திய அரசியல் சூழ்நிலையானது பெருமளவில் மாற்றப்பட்டிருந்தது. மாண்டேகு சீர் திருத்தம் என்ற பெயரில் இந்திய மக்களிடம் பொங்கியிருந்த வீரமிக்க விடுதலை உணர்வைச் சீர்திருத்தச் சலுகைகள் மூலமாகக் கொஞ்சம் கொஞ்சமாக நீர்த்துப்போக வைத்திருந்தது பிரிட்டிஷ் அரசு. மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என அழைக்கப்பட்ட குஜராத்தைச் சேர்ந்த வழக்கறிஞர் இந்திய அரசியலின் மையப்புள்ளி ஆக்கப்பட்டார். அவருக்குச் சமமான இந்திய அரசியற் சிந்தனையாளர்கள் காந்தி எனும் விளக்கின் முன்னால் பிரகாசிக்க முடியவில்லை. காந்தியின் சொல்லுக்கு பிரிட்டிஷார் கட்டுப்பட்டதும் பிரிட்டிஷாரின் கோரிக்கைகளைக் காந்தி ஏற்றதுமான காலச்சூழல் கொண்டதாக இந்திய அரசியல் மாறியிருந்தது.

வ.உ.சி சிறை சென்ற 5 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் காலத்துத் தலைவர்களில் அரவிந்தர், பாரதி போன்ற சிலர் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தனர். திலகர் போன்ற சிலர் காந்தியின் தலைமையினை ஏற்றுக் கொண்டனர். சுதேசியம் எனும் கொள்கையானது வலுவற்ற அல்லது வெறும் அடையாளமான கொள்கையாக மாற்றப்பட்டிருந்தது. குறிப்பாகச் சென்னை நகரில் அப்போது நிலவிய அரசியல் சூழல் சுதேசியத்தை முழுவதுமாக மறந்திருந்து பிராமணர், பிராமணரல்லாதார் விவாதத்திற்குள் சிக்கியிருந்தது. அதனால் பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை தன்னளவில் சுதேசியவாதியாக வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இது அவர் வாழ்நாளிலேயே நடைபெற்ற மிகப்பெரும் மாற்றமாகும்.

இதனால் தமிழ் இலக்கியப்பணிகள் செய்வதில் தனது பிந்தைய வாழ்க்கையைக் கழித்த பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளை நாடு விடுதலையடைவதைப்

பார்க்காமல் சாகிறோமே எனும் பெரும் துயரம் தோய்ந்த மனதுடன் மறைந்தார். இனி இன்றைய சமகால இந்தியச் சூழல் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைப் பார்க்கலாம். சமகால இந்தியச் சமூக மற்றும் பொருளாதாரச் சூழலானது சிக்கல்கள் மிகுந்துள்ளதாகப் பல இந்தியப் பொருளாதார மற்றும் அரசியல் அறிஞர்கள் கூறுகின்றனர். திட்டங்களிலும் அறிவிப்புகளிலும் நாடு வளர்ச்சியை நோக்கிச் செல்வதாகக் கூறப்பட்டபோதிலும் பெரும்பான்மையான இந்திய மக்கள் வறுமையின் பிடியில் உள்ளதாகவே ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

1990ஆம் ஆண்டு பிற நாடுகளுடன் செய்யப்பட்ட காட் - டங்கல் எனும் ஒப்பந்தமானது இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடுகளைச் சார்ந்த நாடாக மாற்றியுள்ளதாகவும் அவ்வாய்வுகள் குறிப்பிடுகின்றன. நடைமுறையில் இந்தியச் சந்தையில் தினமும் உள்நாட்டுப் பொருட்களைவிட அன்னிய நாட்டுப் பொருட்களே அதிகம் விற்பனைக்கெனக் குவிகின்றன. விற்பனையாகின்றன.

குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள், தின்பண்டங்கள், பாக்கெட் உணவு வகைகள் உட்பட பிற நுகர்வுப் பொருட்களிலிருந்து முதியோர்கள் பயன்படுத்துகின்ற மருந்துகள் உள்ளிட்ட ஆகப்பெரும்பான்மையானவை பன்னாட்டுக் கம்பெனிகளின் பொருட்களாகவே உள்ளன என்பதிலிருந்து இந்தியப் பொருளாதாரம் பன்னாட்டுப் பொருளாதாரத்தால் தீர்மானிக்கப்படுகின்ற நிலையில் இருப்பதாக எதிர்க்கட்சிகளும் பல மேல்நாட்டு பத்திரிகைகளும் தெரிவித்திருக்கின்றன.

நகர்ப்புறக் கட்டுமானங்கள், சாலை வசதிகள், தகவல் தொடர்புகள், இராணுவம், போன்றவற்றில் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு இணையாக இந்தியா இருப்பினும் உள்நாட்டு உற்பத்தி, ஏற்றுமதி, விவசாயம், மருத்துவம், கிராமப்புற மேம்பாடு போன்ற பல அடிப்படையான துறைகளில் இந்தியாவின் சமகாலச் சூழலானது மிகமிகப் பின்தங்கிய நிலையில் இருப்பதாகவே ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. மிகுந்த இலாபத்தில் இயங்கி வந்த பல பொதுத்துறை நிறுவனங்கள் தனியார் நிறுவனங்களுக்கு விற்கப்படுவதன் மூலம் நாம் இதனை நேரடியாகக் காணலாம். இதுதவிர ஒன்றிய அரசின்மீது மாநில அரசுகள் முன்வைக்கும் அதிகமான குற்றச்சாட்டுகளையும் நாம் பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகிறது.

இவற்றுள் உள்நாட்டு உற்பத்தியானது மிகவும் நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிறது என்பதையும் காண முடிகிறது. மிகச்சாதாரணமான பொருட்களை உற்பத்தி செய்வதற்குக்கூட அன்னிய நாட்டுக் கம்பெனிகளுடன் கடுமையான போட்டி போட வேண்டியிருக்கிறது. உள்நாட்டுக் குளிர்பானம் மற்றும் பால் உற்பத்தித் துறைகள் மிகுந்த நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதாக

அத்துறைகளில் பெருமளவில் ஈடுபட்டுள்ள மாநிலங்களில் நடக்கும் மக்களின் போராட்டங்கள் காட்டுகின்றன.

ஆக, பெரியவரின் காலத்து இந்தியச் சூழலானது பல்வேறு விசயங்களில் மாறியிருந்த போதிலும் பெரியவர் வலியுறுத்திய சுதேசியம் எனும் உள்நாட்டு உற்பத்தி ஆதரவு மற்றும் அந்நிய நாட்டுப் பொருட்கள் புறக்கணிப்பு எனும் கொள்கை சமகால இந்தியச் சூழலுக்கு மிகவும் தேவைப்படக்கூடிய தொன்றாகவே இருக்கிறது.

இரு காலச் சூழலையும் ஒப்பிடுகையில் இந்தியத் தொழில் முனைவோர்கள் கூட்டமைப்பின் கூற்றின்படி உள்நாட்டு உற்பத்தியை வளர்க்க வேண்டியிருக்கிறது அதற்காகப் பெரியவர் வ.உ.சிதம்பரம் பிள்ளையைப் போன்ற சுதேசியத்திற்காகப் போராடும் தலைவர்களும் அவர்களின் கொள்கைகளும் இன்றும் தேவைப்படுகின்ற நிலையிலேயே இந்தியாவின் சமகாலச் சூழல் உள்ளது எனும் முடிவிற்கு நாம் வருகிறோம்.

☆ ☆ ☆



*வஉசி (1900) ஓவியர் சுந்தரம்*

# சுதந்திரம் காண்பாயோ சொல்

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

கைநோவக் கால்நோவக் கல்லுடைத்துச் செக்கிழுத்து
மெய்சோர்ந்தும் ஊக்கம் விடாதுநின்ற – ஐயன்
சிதம்பரம் அன்றுசிறை சென்றிலனேல், இன்று
சுதந்திரம் காண்பாயோ சொல்.

☆ ☆ ☆

# தமிழகத்தார் மன்னன்

பாரதியார்

வேளாளன் சிறைபுகுந்தான் தமிழகத்தார்
மன்னனென மீண்டான் என்றே
கேளாத கதைவிரைவிற் கேட்பாய்நீ
வருந்தலைஎன் கேண்மைக் கோவே!

தாளாண்மை சிறிதுகொலோ யாம்புரிவேம்
நீஇறைக்குத் தவங்கள் ஆற்றி
வேளாண்மை நின்துணைவர் பெறுகெனவே
வாழ்த்துதிநீ வாழ்தி! வாழ்தி!!

☆ ☆ ☆

# “ஒவ்வொரு இந்தியனும் ஒவ்வொரு ஜாதியாயிருந்தாலென்ன?”

ஆ. அறிவழகன்

இன்னும் ஐந்தே ஆண்டுகள்தான். வ.உ.சி. சேலம் ஜில்லா காங்கிரஸ் மாநாட்டில் (1927 நவம்பர் 5) பேசிய தலைமைப் பொழிவு நூறாண்டைத் தொட்டுவிடும். அவர் அன்று பேசிய பெருஞ்சொல் இன்றைக்கும் பெருஞ்சொல்லாகவே இருக்கிறது. இந்திய விடுதலைக்கு முன் 20 வருடங்களும், விடுதலைக்குப் பின் 75 வருடங்களும் அப்பெருஞ்சொல்லை நாம் சொல்லாகவே வைத்திருக்கிறோம்; அவசியம் செயல்படுத்த வேண்டிய பெருஞ்சொல் அவை என்பதை இப்போதாவது நாம் உணர வேண்டும்.

பெருஞ்சொல்லாக அவர் பேசியவற்றில் முக்கியமானவை :(1) சுய அரசாட்சி (2) வகுப்புவாரி பிரதிநிதித்துவம் (3) பிராமணரும் பிராமணரல்லாதாரும் ஆகியவை.

“சுய அரசாட்சி என்றால் என்ன? நாம் விரும்பும் சுய அரசாட்சி எது? அப்படிப்பட்ட சுய அரசாட்சியைப் பெறுவதற்கு வழிகள் யாவை? பெறுகிற சுய அரசாட்சியை எல்லா மக்களுக்குமாக தக்கவைப்பது எப்படி? என்கிற அடிப்படைக் கேள்விகளுக்கான பதில்களை வ.உ.சி. தமது சுய அரசாட்சிப் பொழிவில் தெளிவாக எடுத்துரைக்கிறார்.

‘சுய அரசாட்சி நான்கு வகைப்படும். (1) குடியாட்சி (Republic Government) (2) கோனாட்சி (3) சார்ந்த குடியாட்சி (Dependent Republic Government) (4) சார்ந்த கோனாட்சி (Dependent Monarchial Government)’ என்பதை விளக்கமாகச் சொல்லி, மேற்கூறிய நான்கு வகையான சுய அரசாட்சிகளுள் முன்னைய மூன்றில் ஒன்றை நாம் அடையவேண்டுமென்று நம் தேசத்தாரில் ஒருவன் சொல்வானானால், அதுவே இந்தியன் பினல்கோடு 124பி பிரிவுப்படி குற்றமாகுமோ என்று யான் அஞ்சுகின்றேன். ஆதலால் அவற்றைப்பற்றி யான் ஒன்றும் பேசாது அம்மூவகை;ச் சுய அரசாட்சிகளும் நமக்கு ஆகாதவை என்று தள்ளிவிடுகின்றேன்.

ஆகவே நாம் அடைய விரும்பும் சுய அரசாட்சி மேலே நான்காவது வகையாகக் கூறப்பட்ட சுய அரசாட்சியே. அவ்வரசாட்சிதான் நம் தேசத்தின் தற்கால

நிலைமைக்குப் பொருத்தமானதென்று கொள்ளத்தக்கது. நம் தேச பக்தர்களிற் சிலர் மேற்கூறிய நான்கு வகைச் சுய அரசாட்சிகளில் முதலாவது வகைச் சுய அரசாட்சி ஒன்றே தாம் வேண்டுவது எனக் கூறக் கேட்டிருக்கிறேன்.அக்கூற்றுத் தற்கொல்லியும், பயனிற்சொல்லும் ஆமென்று யான் கருதுகின்றேன். ஆகவே, நாம் அடைய விரும்பும் சுய அரசாட்சி நமது தேசத்து அகப்புறக்காப்புகள் முதலிய காரியங்களில் நாம் பூரண சுதந்திரமும் சுவாதீனமும் உடையவராயும் பிற தேசங்களை நட்பு, பகை, நொதுமல் என்ற மூன்றின் ஒன்றாகக் கொள்ளுதல் முதலிய காரியங்களில் பெரிய பிரிட்டன் (Great Britian) தேசத்து அரசைச் சார்ந்து அதன் ஆணைப்படி ஒழுகும் கடப்பாடு உடையவராயும் இருக்கும் சுய அரசாட்சியே'' என்கிறார் வ.உ.சி.

அவர் சொல்லும் நான்காவது சுய அரசாட்சி அதாவது 'சார்ந்த கோனாட்சி'யைப் பெறுவதற்கு வழி என்ன என்பதை வ.உ.சி. இப்படிக் குறிப்பிடுகிறார்:

"ஒரு பேரரசின் துணையைப் பெற்றுப் போர் புரிதல் அல்லது தேசம் முழுவதும் ஒரே காலத்தில் புரட்சி செய்தல், சுய அராட்சி வழி என்று சிலர் கூறுகின்றனர். நமக்கு ஆகா என்று நாம் தள்ளிய மேற்கூறிய முதல் மூன்று வகைச் சுய அரசாட்சிகளுக்கும் அவ்விரண்டில் ஒன்றுதான் வழி. ஆனால், நாம் அடைய விரும்பும் மேற்கூறிய நான்காவது வகைச் சுய அரசாட்சிக்கு அவ்வழிகளிற் செல்லுதல் அவசியம் இன்று. அன்றியும், அவ்வழிகள் தேசமக்கட்கும் பொருட்கும் அழிவும் கேடும் விளைவிப்பவை; நமது காங்கிரஸ் கோட்பாட்டுக்கு மாறுபட்டவை; நாம் கைக்கொள்ள முடியாதவை. ஆதலால் அவ்வழிகள் நாம் விரும்பும் சுய அரசாட்சியை அடைவதற்கும், நம் தேசத்தின் நிலைமைக்கும் பொருத்தமற்றவையென நாம் தள்ளிவிடுவோமாக.''

வெள்ளையனை எதிர்த்துக் கப்பல் விட்டவர்; சுதேசியம் குறித்துப் பொது மக்களிடம் விழிப்பை ஏற்படுத்தி அரசியல் விடுதலை இயக்கத்தில் அவர்களை ஈடுபடுத்தியவர்; வெள்ளைய முதலாளிகளுக்கு எதிராகத் தொழிலாளர்களை ஒன்றிணைத்து வெற்றி கண்டவர், கடுங்காவல் தண்டனையின்போதும் வெள்ளை அதிகாரிகளுக்குப் பணியாமல் சிம்ம சொப்பனமாய்த் திகழ்ந்தவர்'புரட்சியும் வன்முறையும் வேண்டாம்' எனச் சொல்வதை, சுய அரசாட்சி பெறுகிற நம் மக்களுக்கும், அவர்களின் பொருள்களுக்கும் கேடு விளைவிக்காதிருக்க வேண்டுமென்கிற பொது அக்கறையாகவும், இந்தியாவுக்குச் சிறிது சிறிதாக சுயாட்சி வழங்குகிற நிலை அப்போது வந்துவிட்டது என்பதன் வழியும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

அதே நேரத்தில் அத்தகைய சுய அரசாட்சியைப் பெறுவதற்கு மூன்று வழிகளைச் சுட்டிக் காட்டுகிறார் அவர். அவை: (1) ஒத்துழைத்தல்

(Co-operation); (2) ஒத்துழையாமை (Non-Cooperation); (3) ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும் (Responsive Cooperation). இந்த மூன்றிலும் அவர் தேர்ந்தெடுப்பது மூன்றாவது வழியான 'ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்' என்பதைத்தான். இத்தகைய வழியை வ.உ.சி.யின் அரசியல் குருவாக விளங்கிய திலகர் 1919இல் வெளிப்படுத்தினார்.

1919ஆம் ஆண்டு "இந்திய அரசுச் சட்டம்" (Government of India Act of 1919 ) பற்றிய விவாதத்தில் திலகர், சி.ஆர்.தாஸ், காந்தியடிகளிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. சி.ஆர்.தாஸ் சட்டத்தை முற்றிலும் நிராகரிக்க வேண்டும் என்றார். காந்தியடிகள் நிபந்தனையில்லாமல் ஒப்புக்கொள்ள வேண்டும் என்றார். இவ்விரு கருத்துகளுக்கு இடையே திலகர் நின்றார். பரஸ்பர ஒத்துழைப்பு (Responsive Co-operation) எனும் அணுகுமுறை ஏற்கத்தக்கது எனத் திலகர் கூறினார். காங்கிரஸ் மகாசபை அரசாங்கச் சீர்திருத்த சட்டங்களை அங்கீகரிக்காமல் கூடியவரை எந்தெந்த வழியில் ஒத்துழைக்கலாமோ அந்தந்த வழியில் ஒத்துழைத்தும், எந்தெந்த வழியில் அரசாங்கத்தைத் தாக்கி முட்டுக்கட்டை போடுவதுமான அணுகுமுறை இருக்க வேண்டும் என்றார் திலகர்''. ('ஜி.ஏ. நடேசன் பதிப்பாளர்-இதழாளர்-தேசபக்தர்', பெ.சு. மணி, சென்னை: பூங்கொடி பதிப்பகம், ப. 287).

மேற்சொன்ன மூன்று வழிகளுக்கும் தாம் நேசிக்கும் திருக்குறளிலிருந்தே எடுத்துக்காட்டுகளைச் சொல்லி நமக்கு விளக்குகிறார் வ.உ.சி.

'ஒத்துழைத்தல்' 'இரப்பான் வெகுளாமை வேண்டும்' என்னும் உண்மையையும், 'ஒத்துழையாமை' 'வேண்டாமை வேண்டவரும்' என்னும் உண்மையையும், 'ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்' 'தன்னெஞ்சறிவது பொய்யற்க' என்னும் உண்மையையும் உட்கொண்டுள்ளன. எந்த இரப்பு எந்த உண்மையை கொண்டிருப்பினும், எல்லா இரப்பும் இரப்புத்தான்.

'ஒத்துழைத்தல்' தமக்கு உரியவற்றைப் பிறர் தரினும் தராவிடினும், அது நமது விதியென்று கருதிப் பிறர்க்குப் பண்பு செய்யும் கிழவர் செயல் போன்றது. 'ஒத்துழையாமை' தின்பண்டம் முழுவதும் தமக்குத் தரும் வரையில் அதன் ஒரு பகுதியை ஏற்காது தாய் தந்தையரோடு கோபித்துக் கொண்டிருக்கும் குழந்தைகள் செயல் போன்றது. 'ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்' தமக்குரியவற்றைத் தந்தபோது உவந்தும், தராதபோது வெகுண்டும் நிற்கும் காளையர் செயல் போன்றது''.

இத்தகைய வ.உ.சி.யின் கோட்பாட்டை நாம் இன்றைய இந்தியாவில் பொருத்திப் பார்க்கவேண்டும். விடுதலை பெற்று மொழிவழியாய்ப் பல்வேறு மாநிலங்களாகப் பிரிந்து ஒருங்கிணைந்திருக்கும் இந்தியாவில், மாநிலங்கள் அனைத்தும் சார்ந்த

குடியாட்சியைத்(Dependent Republic Government)தான் பின்பற்றியாக வேண்டும். இது தம் மாநில உரிமையில் பூரண சுதந்திரத்தையும், பிற தேசங்களை நட்பு, பகை, நொதுமல் என்ற மூன்றின் ஒன்றாகக் கொள்ளுதல் முதலிய காரியங்களில் நடுவண் அரசைச் சார்ந்து அதன் ஆணைப்படி ஒழுகுவதாயும் உள்ள சுய அரசாட்சியாகவே இருக்கும்.

இத்தகைய மாநில சுயாட்சி இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறதா? நடுவண் அரசு கொண்டுவரும் பல்வேறு திட்டங்கள் -'ஒன் இந்தியா', 'ஒரே நாடு ஒரே ரேசன்', 'ஒரே நுழைவுத் தேர்வு', 'ஒரே நாடு ஒரே தேர்தல்' - நம்மை அச்சுறுத்துகின்றன.இவைஅனைத்துமே 'சர்வாதிகார' ஆட்சிக்கு வழிவகுக்கக் கூடியதாகவும், இந்திய மக்களுக்கிடையே சாதி, மத, இன, மொழி வேற்றுமைகளை அதிகப்படுத்துவதாகவும் அமைந்துவிடுமோ என்கிற அச்சம் என்னுள் எழுகிறது.

புதிது புதிதாக அறிவிக்கப்படும் திட்டங்களாக இவற்றை நாம் பார்ப்பதை விட,ச் சாதி, மத, இன, மொழி வாரியாக மக்களைப் பிளவுபடுத்தும் அரசியலாக நாம் பார்க்கத் தோன்றுகிறது.இது மீண்டும் அடிமைத்தனத்திற்கே இட்டுச்செல்லும். இத்தகைய பிரிவுகளுக்குப் பதிலாக 'வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை' வ.உ.சி. தமது பெருஞ்சொல்லில் முன்வைக்கிறார்.

Unity in Variety என்றபடி வேற்றுமைகளுள் ஒற்றுமை காண்டலன்றோ அறிவு? வேற்றுமை இல்லையெனில் ஒற்றுமையென்பதொன்றுண்டோ?" என்கிறவர், "வகுப்புவாரித் தொகுதிகள் ஏற்படுத்தப்படுமானால் ஜாதி வேற்றுமைகள் வளரப்போவதில்லை. அவை வளர்ந்தாலும் அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. ஒவ்வொரு இந்தியனும் ஒவ்வொரு ஜாதியாயிருந்தாலும்கூட, அதனால் நம் தேசத்திற்குக் கேடு ஒன்றும் உண்டாகப்போவதில்லை. நாம் வேண்டுவதெல்லாம் ஒற்றுமையொன்றே''

என்று முழக்கமிடுகிறார்.'சாதியை ஒழிப்போம்' என்று பல்லாண்டுகளாக நாம் பேசிக் கொண்டிருந்தாலும் இன்றைக்கும் தேர்தல் காலங்களில் கட்சிப் பாகுபாடின்றி, அந்தந்தத் தொகுதியில் எந்தெந்தச் சாதி வலுவாக இருக்கிறதோ அதன் அடிப்படையிலேயே வேட்பாளர்கள் நிறுத்தப்படுகிறார்கள். ஒவ்வொரு இந்தியனும் ஒவ்வொரு ஜாதியாயிருந்தாலும்கூட அவர்களுக்கிடையே இணக்கம் இருந்தால்போதும் என்கிற நடைமுறைச் சாத்தியத்தையே வ.உ.சி..யின் வரிகள் நமக்குக் காட்டுகின்றன.

சாதிய வேறுபாட்டால் சுய அரசாட்சிக்குட்பட்ட மக்களுக்குள் ஒற்றுமை இல்லாமல் போகாது என்பதை வலியுறுத்த, "உயர்வு, தாழ்வு இல்லாத ஒரே ஜாதியாருள்ளும், ஒரே குடும்பத்தினருள்ளும், ஒற்றுமையின்மையும்,

பகைமையும் கொலை முதலியனவும் நிகழக் காண்கிறோம். இதன்றியும், தம் ஜாதி உயர்வென்றும், பிறர் ஜாதி தாழ்வென்றும் கருதும், இருவேறு ஜாதியார், சிலர் ஒற்றுமைப்பட்டு அத்தியந்த நண்பர்களாக வாழ்கின்றதையும் காண்கிறோம். இக்காட்சியால் நம் தேசத்தாருள் நிலவும் ஒற்றுமையின்மை, பகைமை முதலியவற்றிற்கு முக்கியமான காரணம் ஜாதி வேற்றுமையும், அது பற்றிய உயர்வு தாழ்வும் அல்ல என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கத் தக்கது'' என்கிறார், அவர். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தைப் பற்றித் தெளிவாகச் சொல்லும் வ.உ.சி., பிராமணர்-பிராமணரல்லாதார் பிணக்கு பற்றியும் மிக விரிவாகத் தமது பெருஞ்சொல்லில் குறிப்பிட்டுள்ளார்.

"பிராமணர்கள் நம் தேசத்தில் சிறு தொகையினராயிருத்தலால், தம்முடைய உரிமைகளை மற்றை ஜாதியார்கள் கைப்பற்றிக் கொள்வார்கள் என்ற அச்சத்தால், சுய அரசாட்சியை உள்ளூர விரும்ப மாட்டார்கள் என்றும், அவர்கள் சுய அரசாட்சிக்குப் பாடுபடுவதுபோல் நடிப்பதெல்லாம் தம் உறவினருக்கும் ஜாதியாருக்கும் இராஜாங்க உத்தியோகங்கள் வாங்கிக் கொடுக்கும் பொருட்டே என்றும் பிராமணரல்லாதார் சொல்வது உண்மைதானோ என்றும் யானும் இப்பொழுது ஐயம் உறுகின்றேன்.''

வ.உ.சி.யின் ஐயப்பாட்டை நாம் கேள்விக்கு உள்ளாக்க வழியே இல்லாதவாறு இப்போதும் அது தொடர்வதை 'அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம்' என்கிற அரசாணைக்குப் பிராமணர்களிடமிருந்து வந்த எதிர்வினைகளை ஒப்பிட்டுக் கொள்ளலாம்.

இராஜாங்க உத்தியோகங்கள் முதலியவற்றில், தாழ்த்தப்பட்டிருக்கிற ஜாதியார்களின் எண்ணிக்கை விகிதப்படி அவர்கள் அடைய வேண்டிய உத்தியோகங்களை அவர்களும், தாழ்த்துகின்ற ஜாதியார்களின் எண்ணிக்கை விகிதப்படி அவர்கள் அடைய வேண்டிய உத்தியோகங்களை அவர்களும், இந்தியக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை விகிதப்படி அவர்கள் அடைய வேண்டிய உத்தியோகங்களை அவர்களும், முகமதியர்களின் எண்ணிக்கை விகிதப்படி அவர்கள் அடையவேண்டிய உத்தியோகங்களை அவர்களும் அடையும்படி நாம் ஏற்பாடு செய்ய வேண்டும்''.

'கீழ் ஜாதி', 'மேல் ஜாதி' என்கிற வார்த்தைகளைக்கூட வ.உ.சி. வெறுத்து ஒதுக்குகிறார் என்பதை 'தாழ்த்தப்பட்டிருக்கிற ஜாதியார்', 'தாழ்த்துகின்ற ஜாதியார்' என்று அவர் குறிப்பிடுவதிலிருந்தே நாம் அறிந்துகொள்ள முடியும். இப்படி உத்தியோகங்களைப் பங்கிட்டுக்கொள்ள நான்கு வகுப்புத் தலைவர்களும் (தாழ்த்தப்பட்ட ஹிந்துக்கள், தாழ்த்துகின்ற ஹிந்துக்கள், முகமதியர்கள், இந்தியக் கிறித்தவர்கள்) ஒன்றுகூடி உத்தியோக எண்ணிக்கை, அவற்றின் சம்பளத் தொகை, அதிகாரம், செல்வாக்கு ஆகியவற்றின்

அடிப்படையில் செய்துகொள்ள வேண்டும் என்றும், இவற்றைத் தீர்மானிப்பதற்கு ஒவ்வொரு ஜாதியிலும் நடுவு நிலைமையுள்ள சிலரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் சொல்லுக்குக் கட்டுப்படவேண்டும் என்றும், அப்படிக் கட்டுப்படாதவர்களை அந்தந்த ஜாதியிலிருந்து விலக்குதல் முதலியவற்றைச் செய்யலாம் என்றும் ஆலோசனை தருகிறார் வ.உ.சி.

வ.உ.சி.யின் இந்த ஆலோசனை நடைமுறைக்குச் சாத்தியமா என்பதைத் 'தமிழர் செல்வம்' என்றழைக்கப்பட்ட சர் ஏ.டி. பன்னீர்செல்வம் 1926களில் தஞ்சை மாவட்டத்தில் செய்து காட்டியதை நாம் இங்கே நினைவில் கொள்ள வேண்டும். நீதிக் கட்சியின் முடிசூடா மன்னராகவும், பெரியார் ஈ.வெ.ரா.வின் தொண்டராகவும் இருந்த சர் ஏ.டி. பன்னீர்செல்வம் தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக ( 1926-1930 ) இருந்தபோது தாழ்த்தப்பட்ட ஒருவருக்குப் பதவிகொடுத்துப் பணியாற்ற வைத்தார்.

"அவர் [ஏ.டி. பன்னீர்செல்வம்] தஞ்சை மாவட்டக் கழகத் தலைவராக இருந்தபோது பட்டுக்கோட்டை வட்டக் கழகத்துக்குத் தாம் நியமனம் செய்ய வேண்டியவரைத் தாழ்த்தப்பட்டோர் சமூகத்தினின்றே செல்வம் தேர்ந்தெடுத்தார். ஆனால் பட்டுக்கோட்டை வட்டக் கழகத் தலைவரான வி. நாடிமுத்துப் பிள்ளை அந்நியமனத்தை ஏற்க மறுத்தார். தாழ்த்தப்பட்டோர் ஒருவரை வட்டக் கழக உறுப்பினராக நியமனம் செய்து மற்றவர்களுடன் சரிசமமாக அவரை அமரச் செய்ய இயலாது என்று அவர் வாதாடினார். அப்பொழுது சென்னை முதலமைச்சராக இருந்த டாக்டர் பி. சுப்பராயனின் உதவியை நாடினார். தஞ்சை மாவட்டக் கழகத்திலிருந்து இப்பிரச்சினைபற்றிய விளக்கம் முதலமைச்சருக்கு அனுப்பப்பட்டது. இரு தரப்பினரின் விளக்கங்களையும் அறிந்த முதலமைச்சர், தஞ்சை மாவட்டக் கழகத் தலைவரால் நியமிக்கப்பட்டவர் பட்டுக்கோட்டை வட்டக் கழக உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தார். தமது தீர்ப்பு ஏற்கப்படாவிட்டால் பட்டுக்கோட்டை வட்டக் கழகம் கலைக்கப்படும் என்றும் அவர் அச்சுறுத்தினார். எனவே நாடிமுத்துப்பிள்ளை இத்தீர்ப்புக்குத் தலைவணங்க வேண்டியதாயிற்று. செல்வம் விரும்பியபடியே தாழ்த்தப்பட்ட ஒருவர் வட்டக் கழக உறுப்பினராகித் தொண்டு செய்ய முடிந்தது''. ('தமிழர் செல்வம்: சர் ஏ.டி. பன்னீர்செல்வம் வரலாறு', அமுதன் அடிகள், சர் ஏ.டி. பன்னீர்செல்வம் நூற்றாண்டு நினைவு வெளியீடு, 1990)

இதன் மூலம் சாதிப்பாகுபாடற்ற நியாயமான ஒரு தலைமை இருக்குமானால் வ.உ.சி.யின் ஆலோசனை சாத்தியம் என்பது தெளிவாகும்.இப்படிப்பட்ட ஜாதி, மதச் சண்டைகளால் நமக்குள் இருக்கும் ஒற்றுமையை நாமே குலைத்துக் கொள்வதையும் வ.உ.சி. எடுத்துக்காட்டத் தவறவில்லை.

“நமக்குள் ஏற்பட்டுள்ள ஜாதிச் சண்டைகளும், மதச் சண்டைகளும் நீங்கி நமக்குள் ஒற்றுமை ஏற்படும் வரையில் நாம் சுய அரசாட்சி அடைய வேண்டுமென்று பேசுதலும், முயற்சித்தலும் ஆகாயக் கோட்டை கட்டவேண்டுமென்று பேசுதலும், முயற்சித்தலும் போலாம்”

என்றும் எச்சரித்தார். நாம் சுய அரசாட்சி பெற்ற பிறகும், ஜாதிச் சண்டைகளோடும், மதச் சண்டைகளோடும் நமக்குள் ஒற்றுமை இருப்பதாக நமக்கு நாமே ஆகாயக் கோட்டை கட்டிக்கொண்டிருக்கிறோம்.

பெருஞ்சொல்லாக வ.உ.சி. குறிப்பிடும் ‘சார்ந்த குடியாட்சி’யையும், ‘ஒத்துழைத்தலும் ஒத்துழையாமையும்’ என்கிற கோட்பாட்டையும், வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தையும் முழுமையாக நடைமுறைப்படுத்துதலே இன்றைய தேவை.

☆ ☆ ☆



வ உ சி

# சீரிய கொள்கைச் சிதம்பரப் பதிகம்

தமிழ்மொழி ஞாயிறு ஞா. தேவநேயன்

நாட்டுப்பற் றால்முன்னே நாய்படாப் பாடுபட்ட
ஓட்டைப் பிடார ஒளிர்மறவன் – மாட்டன்று
நன்றிபா ராட்டாத நாடொரு நூற்றாண்டு
சென்றபின் செய்யும் சிறப்பு.

ஆலைத் தொழிலாளர் ஆற்றும் பணிக்கேற்ற
கூலித் திறம்பெறுங் கொள்கையின் – மேலும்
அடிமைத் தனமில்லா ஆட்சிதன் மானக்
குடிமை சிதம்பரத்தின் கோள்.

ஆங்கிலர்நா வாய்குழும்பின் ஆவுருபா வோரிலக்கம்
வாங்க மறுத்து வருந்தொல்லை – ஓங்கினுமே
கொள்கை விடாது குடிமாண் சிதம்பரம்தன்
உள்கை சிறந்தான் உயர்ந்து.

தனக்குச் சமமாகத் தன்மனைவி வாழ்ந்து
மனக்கினிய மந்திரியாய் மாணுங் – கணக்காக
இல்லறம் ஆற்றினான் ஈகைச் சிதம்பரம்தான்
வள்ளுவன் கண்ட வகை.

பிறப்பாற் சிறப்பில்லை யென்னும் பெருநூல்
அறப்பால் மனையோ டணைந்து – பிறப்பிழிந்தான்
என்னும் ஒருவனை இல்லம்வைத் துண்பித்தான்
மன்னும் சிதம்பரத்தின் மாண்பு.

*தாய்நாடே போற்றியெனுந் தக்கவங் கத்தொடரை*
*வாய்மொழியாற் கண்டித்த வன்தண்டல் – நாயகற்கே*
*வாயுள்ள நாளும் வலித்துரைப்பே னென்றுரைத்தான்*
*பாயும் சிதம்பரவேங் கை.*

*மாடுபோற் செக்கிழுத்து மட்டிபோற் கல்லுடைத்து*
*வேடுபோற் கேடா யுடையுடுத்துப் – பாடுபட்டான்*
*கேழ்வரகுக் கூழுண்டு கீழ்விலங்கிற் கீழ்விலங்கின்*
*தாழ்வுறுதற் கேசிதம்ப ரம்.*

*கொலையுங் கடுஞ்செயலுங் கூடாது வேற்றுரசு*
*குலையும் வகையெதிர்க்குங் கொள்கை – தலையாகக்*
*கொண்டான் சிதம்பரம் கூற்றாலும் ஆசுகொலை*
*கண்டோம் அவன்கண்ட னம்.*

*ஆற்றும் பணிமீட்டான் ஆங்கில னேனுமவன்*
*வேற்று மொழிப்பெயரை வேட்புடன்தன் – பேற்றுமகன்*
*பேராக இட்ட பெருந்தன்மை பாராட்டும்*
*சீராம் சிதம்பரம் செப்பு.*

*தொல்காப் பியப்பகுதித் தொல்லுரையும் ஒண்குறளின்*
*மல்கா வுரையொன்றும் மாண்டமிழ்க்கே – அல்காத*
*இன்னிலைப் புத்துரையும் ஏனைப் பதிப்புகளும்*
*துன்னிய வ.உ.சி. தொண்டு.*

☆ ☆ ☆



வ உ சி
அவர்களுடன்

அவரது முதல்
மனைவி
வள்ளியம்மாள்
அவர்கள்




வ உ சி
அவர்களுடன்

அவரது இரண்டாவது
மனைவி மீனாட்சி
அம்மையார்
அவர்கள்



வ உ சி இழுத்த செக்கு,,

கொழும்பு நகருக்கு வ.உசி. அவர்கள் விட்ட பயணிகள் கப்பல்






வ உ சி திருமண அழைப்பிதழ்



திருமணப் பத்திரிகை

(9-9-1901)

With the best compliments of

V. O. Chidambaram Pillai, Pleader, Tuticorin.

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார்.

பாரதிக்கும் எனக்கும் நட்பு ஏற்பட்டது.

சுப்பிரமணிய பாரதி என்னும் பெரியார் திருநெல்வேலி ஜில்லா எட்டயபுரம் சமஸ்தானம் எட்டயபுரத்தில் பிறந்தவர். அவர் தகப்பனார் பெயர் சின்னசாமி ஐயர். அவர் எட்டயபுரம் சமஸ்தானத்தில் ஒரு உத்தியோகம் புரிந்து கொண்டிருந்தார். அவர் காலத்தில் என் தகப்பனாரும் அச்சமஸ்தானத்தில் வக்கீலாக இருந்தனர். என் தகப்பனாருடன் அவர் என் சொந்த ஊராகிய ஓட்டப்பிடாரத்திற்கு அடிக்கடி வருவதுண்டு. அக்காலத்தில் என் வீட்டில் ஆசிரியர்க் [illegible], ஆங்கில மொழியில் [illegible] கொண்டிருந்தனர். அவ்விருவருள் ஒருவரில் ஏதேனும் ஒரு ஜோலியாக அவர் என் வீட்டுக்கு வருவார். [illegible] என் வீட்டுக்கு மேற்கேயுள்ள பழைய [illegible] [illegible]. அப்போது எனக்கு வயது 15 அல்லது 16 இருக்கும். அவர் என்னோடு [illegible] பேசிய [illegible]. அவர் ஒரு பெரிய மேதாவி என்று நான் நினைத்தேன். அவரிடம் நான் [illegible] அவருக்கு ஒரு மகன் பிறப்பதாகவும், அவன் அதி புத்திசாலியெனவும், அவன் சிறு பிள்ளையாயிருந்த பொழுதில் கவிகளைப் பாடுவானென்றும் என் தகப்பனார் என்னிடம் சொல்வதுண்டு. அச்சிறு பிள்ளைதான் சுப்பிரமணிய பாரதி என்று இப்பொழுது உலகமெல்லாம் புகழ்பெற்று விளங்குகின்றவர்.

இப் பெரியாரை நான் முதல் முதலாகப் பார்க்கும் பாக்கியம் பெற்றது அவர் சென்னையில் 'இந்தியா' என்னும் பெயர் பெற்ற தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியராயிருந்து அதனை நடத்தி வந்த காலத்திலேதான். அது 1906 ம் வருஷத்தின் [illegible] என்று நினைக்கிறேன். அப்போது நான் தூத்துக்குடியிலிருந்து சென்னை சென்றிருந்தேன். திருவல்லிக்கேணியில் [illegible] தெருவில் என் நண்பர் ஒருவன் வீட்டில் தங்கியிருந்தேன். அங்கிருந்து நான் [illegible] போகிற வழியில் [illegible] ஒரு பெரிய 'இந்தியா' வின் [illegible] திருமலாச்சாரியார் என்று தெரிந்தேன். ஒரு நாள் மாலை [illegible] நான் 'இந்தியா' வின் ஆசிரியரைப் பார்க்கக் [illegible] அவரிடம் [illegible]. [illegible] அவர் மாடியில் [illegible] நான் [illegible]. [illegible] அவர் தான் 'இந்தியா' வின் ஆசிரியரென்று [illegible] அவரை [illegible]. அவர் 'ஆம்' என்றார். அவரிடம் என் வரவைப் [illegible] சொன்னேன். உடனே அவர் மாடியின் [illegible] நோக்கி "பாரதி! உங்கள்

# கப்பலோட்டிய தமிழன் -திரைப்படம்

## சொன்ன செய்தியும்
## சொல்லாத சேதியும்

**நிழல் திருநாவுக்கரசு.**

கப்பலோட்டிய தமிழன் -திரைப்படம் 1961-ஆம் ஆண்டு பி .ஆர் .பந்துலுவின் பத்மினி பிக்ச்சர்ஸ் மூலம் வெளிவந்தது. 1936-இல் வ.உ .சி அமரராகிறார். 25 ஆண்டுகள் கழித்து 'கப்பலோட்டிய தமிழன்'திரைப்படம் ம.பொ.சி -யின் நூலை ஆதாரமாகக் கொண்டு எடுக்கப்படுகிறது. தமிழிலுள்ள வாழ்க்கை வரலாற்று [bio -pic ]படங்களில் இது முதன்மையானது. ஏனென்றால் வ.உ.சி.யை நேரே பார்த்தவர்கள், இந்தப்படத்தில் சிவாஜிகணேசனின் வேடப்பொருத்தத்தைப் புகழ்ந்திருக்கின்றனர்.இந்திய அளவில் எந்த விடுதலைப் போராட்ட வீரருக்கும் கிடைக்காத ''நிலையான திரைப்படக்கலையில் "வ.உ.சி வாழ்க்கை பதியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. படம் முழுவதும் ஸ்டுடியோவிலியே எடுக்கப்பட்டிருக்கிறது. விரல் விட்டு சொல்லக்கூடிய சில காட்சிகளே வெளிப்புறத்தில் எடுக்கப்பட்டிருக்கின்றன. திரைக்கதை வடிவமைப்பு கனகச்சிதமாக செய்யப்பட்டுள்ளது. எடிட்டிங் மூலம் தேவையான காட்சிகள் மட்டுமே காண்பிக்கப்பட்டுள்ளது.

வள்ளியப்பன், உலகநாதபிள்ளை சிதம்பரம் வழக்கறிஞராக வாழ்க்கையைத் தொடங்குவதும் ,'உப்பளம்'வைத்திருப்பதும் தொடக்கக் காட்சிகளாக வந்து அறிமுகம் செய்கிற போதே ,ஆங்கிலேயருக்கும் இந்திய விடுதலை போருக்குமான முரண்பாடு [conflict ] குறித்துப் போகிற போக்கில் சொல்லிவிட்டுப் போகிறது. தூத்துக்குடியில் இருந்த தமிழக முதலாளிகளின் உப்பு மூட்டைகளை இலங்கைக்கு கொண்டு செல்ல ஆங்கிலக் கப்பல்கள் மறுக்கின்றன. இதனையே முதல் முரண்பாடாக கொள்ளலாம். இது போன்ற முரண்பாடுகள் அடுத்தடுத்த காட்சிகளைக் கொண்டுவருகின்றன.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய 'நமக்கான கப்பலின் தேவை 'என்கிற கருத்து உந்த - பல்வேறு நபர்களிடம் பங்கு சேகரிக்கப்பட்டு 'சுதேசி கப்பல் கம்பெனி 'உருவாகிறது.

இந்திய தேசியக் காங்கிரசின் தீவிர செயல்பாட்டாளர்களான லாலா லஜபதிராய் ,பாலகங்காதர திலகர், சி .ஆர் .தாஸ், பாரதியார் முதலியவர்களுடன் இணைந்து தென்னிந்தியாவில் ஆங்கில ஏகாதிபதித்தியத்திற்கு எதிராக செயலூக்கமுள்ள போராட்டங்களான ,'அந்நியத் துணி எரிப்பு','ஆலைத்தொழிலாளர் போராட்டம்'போன்றவற்றை முன்னெடுக்கிறார்.ஆத்திரமடைந்த

வெள்ளையரசாங்கம் ,வ.உ .சி க்கு இரட்டை ஆயுள் தண்டனை அளிக்கிறது ;தம்பி இதை கேட்டவுடன் புத்தி பேதலித்து மனநோயாளியாகிறார். காந்திஜி வருகைக்கு முன் 1909 முதல் 1912வரை கோவை ,கண்ணனூர் சிறைகளில் செக்கிழுத்தும்,அதிகப்படியாக வேலைவாங்கியதால் உருக்குலைந்தும் போகிறார். சிறைக் கைதிகளுக்கான எந்தச் சலுகையும் வ.உ .சிக்கு மறுக்கப்படுகிறது. நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு விடுவிக்கப்படுகிறார்.

வ.உ.சிக்கு வழக்காடும் உரிமை பறிக்கப்படுகிறது. வீடு, உப்பளம், கப்பல் கம்பெனி எல்லாவற்றையும் இழந்து சென்னை பெரம்பூரில் இருந்து கொண்டு மண்ணடியில் மண்ணெண்ணை விற்கிறார்.வயது முதிர்ந்த காலத்தில் ஜேம்ஸ் ஆலனின் ,'அகமே புறம்', போன்ற குறுநூல்களை மொழி பெயர்க்கிறார்.திருக்குறள் மணக்குடவர் உரை, தொல்காப்பியம் பொருளதிகாரம் முதலிய நூற்களைப் பதிப்பிக்கிறார். திலக முனிவர், யான்கண்ட பாரதி, சுய வாழ்க்கை வரலாறு முதலியவை படைப்பதுடன் படம் முடிகிறது.

இந்தப்படம் வருவதற்கு முன்பே டி .கே .எஸ்.சகோதரர்களின் நாடகக்குழு வ.உ .சி நாடகத்தை நடத்தி வந்தது. அந்தக் குழுவினர் நடத்திய எல்லா நாடகங்களும் திரைப்படமானது குறிப்பிடத்தக்கது.நாடகத்தில் வ.உ.சி பாத்திரத்தை டி .கே. பகவதியும், சுப்பிரமணிய சிவா வேடத்தை ,டி .கே.சண்முகமும் நடித்தனர். வெள்ளைக்கார வின்ச் துரை கேள்விகளுக்கு வ.உ.சி சொல்லும் பதில்கள் நாடகத்தில் இருந்தது அப்படியே திரைப்படத்தில் வந்திருக்கிறது. இது போலவே பாரதி பாடல்களும் .

பாரதியும் வ.உ.சியும் திருநெல்வேலி மாவட்டக்காரர்கள். ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதில் இருவரும் ஒன்றாக இருந்தவர்கள். பாரதி ,நேரடியாகவும் மறைமுகமாகவும் வ.உ.சி.யைப் பல இடங்களில் பாடியிருக்கிறார். பாரதியாருக்குப் பிறகு அவரது உறவினர்கள் வறுமையின் காரணமாக பாரதி பாடல் உரிமையைச் செட்டியாரிடம் அடகு வைத்து விட்டார்கள். மீட்க முடியவில்லை; நாடகத்திலோ திரைப்படத்திலோ பயன்படுத்தக்கூடாது என்று ஏ.வி.எம் சொல்லிவிட்டார். அதன் பிறகு ,'பாரதி கவிதைகள் மீட்பு இயக்கம்' தோழர் ஜீவா, டி .கே. சண்முகம், ம .பொ .சி முதலியவர்களால் தொடங்கப்பட்டு நாடு முழுவதும் பிரச்சாரம் செய்யப்பட்டதால் செட்டியார் 'பாரதிக்கு விடுதலை 'தந்தார்.

ஏ.வி.எம்.மின் 'நாம் இருவர் ','வேதாள உலகம்' முதலிய படங்களில் பாரதி பாடல்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டது.

கப்பலோட்டிய தமிழன் -திரைப்படத்தில் பாரதி பாடல்கள் பெருமளவு சரியான இடங்களில் பொருத்தத்துடன் பயன் படுத்தப்பட்டது .கர்நாடக சங்கீத வித்துவான்கள் பாடியதை விடச் சினிமாவே பாரதி பாடல்களைப்

பொதுமக்களிடம் கொண்டு சென்றது. படத்தில் எஸ்.வி .சுப்பையா, பாரதியாராகவே மாறினார். ஆஷ் துரையாக அசோகனும், வின்ச் துரையாக எஸ்.வி .ரங்காராவும் அற்புதமாக நடித்தனர்.

வாஞ்சி நாதனாக பாலாஜி நடிக்கிறார்.ஆஷ் கொலை வழக்கு ,காங்கிரசுக்காரர்களை ஒடுக்கியதால் கொல்லப்பட்டார் என்று ஆவணங்கள் சொன்னாலும், சமூகரீதியில் அன்றைக்கு விடுதலைக்கு போராடியவர்கள் மத்தியில் கூட சாதி உணர்வு இருந்ததை வேறொரு நிகழ்வும் சுட்டிக்காட்டுகிறது.ஆஷ் துரை ,தாழ்த்தப்பட்ட கர்ப்பிணிப் பெண்ணைத் தனது சாரட்டில் வைத்து மருத்துவமனைக்கு அக்ரஹாரம் வழியாக அழைத்துச் சென்றது வாஞ்சிநாதனுக்கு பிடிக்கவில்லை என்பதும் ஒரு காரணம். இதற்கு மற்றொரு நிகழ்வையும் சுட்டலாம். சேரன்மாதேவியில், காங்கிரஸ் நிதியில் இருந்து நடத்தப்பட்ட பள்ளியில் ,வ.வே.சு .அய்யர் -பார்ப்பனர்களுக்குத் தனி சாப்பாடு, பார்ப்பனரல்லாதாருக்குத் தனி சாப்பாடு என்று கடைபிடித்தார். இவர்தான் வாஞ்சிநாதனுக்குத் துப்பாக்கி கொடுத்தவர்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் பேரியக்கத்தை உருவாக்கிய வ.உ.சி, பெரியார், திரு.வி.க, வரதராஜீலு நாயுடு போன்றவர்கள் எல்லோருமே அதிலிருந்து விலகிவிட்டதை ம.பொ.சி. சொல்லவில்லை.

முதுமைக்காலத்தில் தன் மகனுக்கு வேலைவாய்ப்புக்காகப் பல பெரியவர்களுக்கு வ.உ.சி. கடிதம் எழுதியும் யாரும் உதவவில்லை. இதுதான் சிறந்த விடுதலை வீரரான வ.உ.சி.க்குத் தமிழகம் செய்த கைம்மாறு.

☆ ☆ ☆

# குலவு பிள்ளைச் சிதம்பரம்

நாமக்கல் கவிஞர்

பேசிவிட்டே சுயராஜ்யம் பெறலாம் என்று
பெரியபல தீர்மானக் கோவை செய்து
காசுபணப் பெருமையினால் தலைவ ராகிக்
காங்கிரசை நடத்தியதைக் கண்டு நொந்து
'தேசநலம் தியாகமின்றி வருமோ?' என்று
திலகர்பிரான் செய்தபெருங் கிளர்ச்சி சேர்ந்தே
ஓசைபடா துழைத்தசில பெரியோர் தம்முள்
உண்மைமிக்க சிதம்பரனும் ஒருவ னாகும்.

உழுதுபல தொழில்செய்தே உழைப்போ ரெல்லாம்
உணவும்உடை வீடின்றி உருகி வாடப்
பழுதுமிக அன்னியர்க்குத் தரக ராகிப்
பசப்புகின்ற வீணருக்கோ சுகங்கள்! என்றே
அழுதுருகித் தொழிலாளர் இயக்கம் கண்டே
அந்நாளில் சிதம்பரன்முன் நட்ட வித்தாம்
விழுதுபல விட்டபெரு மரமாய் இன்று
வெவ்வேறு கிளைகளுடன் விளங்கக் காண்போம்.

கள்ளமற்றுக் கலகலத்த பேச்சுக் கேட்கும்;
கறுப்பெனினும் சிரிப்புமுகம் கருணை காட்டும்;
குள்ளமென்னும் ஓர்உருவம் இருகை கூப்பிக்
குண்டெடுத்துக் கடைந்ததெனக் குலுங்க நிற்கும்;
வெள்ளையன்றி வேறுநிறம் அறியா ஆடை
வேதாந்த சித்தாந்த ஒளியே வீசும்;
கொள்ளைகொள்ளை சிறையிருந்த குறிகள் தோன்றும்
குலவுபிள்ளைச் சிதம்பரத்தை நினைவு கூர்ந்தால்.

☆ ☆ ☆

# தமிழ்ப்பதிப்புவரலாற்றில் வ.உ.சி. அவர்களின் தொல்காப்பியப் பதிப்புகள்

முனைவர் **பா. ஜெய்கணேஷ்**

இந்திய சுதந்திரப் போராட்ட வரலாற்றில் மட்டுமல்லாமல் தமிழ் இலக்கிய மீட்சி வரலாற்றிலும் தனித்துவம் வாய்ந்தவராகச் செயல்பட்டவர் வ.உ.சிதம்பரனார் அவர்கள். சுதந்திரப் போராட்டக்களத்தில் மட்டுமல்ல தமிழ்ப்பதிப்புக் களத்திலும் தனக்கான தனிமுத்திரையைப் பதித்தவர். தொல்காப்பியத்திற்கும், திருக்குறளுக்கும் எழுதப்பட்ட உரைகளில் யாரும் கவனம்செலுத்தாத குறிப்பிடத்தக்க உரைகளைப் பதிப்பித்துத் தமிழ்ப்பதிப்பு வரலாற்றிற்கும், இலக்கிய வரலாற்றிற்கும் வளம் சேர்த்தவர்.
சிறைவாசத்தில் தமிழ்வாசம் நுகர்ந்ததோடு அவ்வாசத்தைத் தலைமுறை கடந்து பரப்ப நினைத்தவர். வ.உ.சி. என்னும் பன்முக ஆளுமையைச் சுதந்திரப் போராட்டத் தியாகி என்னும் ஒற்றைக் குடுவையில் அடைக்க முடியாத அளவிற்கு அவரின் செயல்பாடுகள் பரந்து விரிந்தன. வ.உ.சி. அவர்களின் பரந்து விரிந்த இப்பணியில் அவரின் தொல்காப்பியப் பதிப்புப்பணியை விளக்கி உரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

வ.உ.சி. அவர்களின் பதிப்புப்பணி 1812-ஆம்ஆண்டு தமிழ்ப் பேரிலக்கியங்களில் ஒன்றான திருக்குறள் அச்சில் நிலைபெறுகிறது. திருக்குறளைத் தொடர்ந்து தமிழின் அனைத்துவகையான நூல்களும் அச்சில் ஏறத்தொடங்கின. பதிப்பாசிரியர்கள் என்னும் தனித்துறை சார்ந்த ஆளுமைகள் இக்காலகட்டத்தில் உருவாகினர். சுவடிகளில் அழிந்து போகக் கிடந்த நூல்களையெல்லாம் மீட்டு அச்சில் ஏற்றினர். பதிப்புகளில் பல நிலைப்பட்ட பதிப்புகளை உருவாக்கத் தொடங்கினர். கல்விவளர்ச்சிக்கும் தமிழ்வரலாற்றை மறுகட்டமைப்பு செய்வதற்கும் இப்பதிப்பாசிரியர்கள் வழங்கிய கொடை ஏராளம். ஆறுமுக நாவலர், சி.வை.தா., உ.வே.சா., எஸ்.வையாபுரிப்பிள்ளை என்னும் பதிப்பாளுமைகளை நீண்ட நெடுங்காலமாக முன்வைத்த தமிழ்ச்சமூகம் இத்துறையில் நெடுங்காலமாகக் கவனம் பெறாமல் இருந்த பதிப்பாசிரியர் வ.உ.சி. அவர்களையும் சமீபகாலமாகக் கவனப்படுத்தத் தொடங்கியது. நான்கு நூல்களை மட்டுமே வ.உ.சி. பதிப்பித்திருந்த போதிலும் தமிழ்ச்சமூகம் கவனத்தில் கொள்ளாத தொல்காப்பியம், திருக்குறள் ஆகியவற்றின் உரைகளை வ.உ.சி. மீட்டெடுத்துத் தந்த பின்புலமே இத்தகு அடையாளப்படுத்தலுக்கும் காரணமாக அமைந்தன. திருக்குறள் மணக்குடவர் உரையையும், தொல்காப்பிய எழுத்ததிகார, பொருளதிகார இளம்பூரணர் உரையையும் பதிப்பித்து

வழங்கியதன் வழி வ.உ.சி. என்னும் பதிப்பாசிரியர் தமிழ்ப்பதிப்பு வரலாற்றின் முகமாகவும் மாறி நிற்கின்றார்.

முன்பே பதிப்பிக்கப்பட்ட ஒருநூலை மீண்டும் மறுஅச்சாகக் கொண்டு வந்து பதிப்பாசிரியர் என்னும் அடையாளம் பெற்றவர் அல்லர் இவர். சிறைக்குப் பிறகான வாழ்விற்கு இடையிலும் பல்வேறு துயரங்களுக்கு மத்தியிலும் தமிழின் சுவடிகளைத் தேடிக் கண்டடைந்து அவற்றை அச்சில் ஏற்றித் தமிழ் வளர்ச்சி வரலாற்றிற்குப் பெருந்துணை புரிந்தவர் இவர் ஒருவரே.

## வ.உ.சி. அவர்களின் தொல்காப்பியப் பதிப்பு உருவான பின்புலம்

1908-ஆம் ஆண்டு ஆங்கிலேய அரசால் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்ட வ.உ.சி. அவர்கள் சிறைவாழ்க்கையைத் தம் வாசிப்புப் பின்புலத்தால் அர்த்தப்படுத்திக் கொண்டார். திருக்குறள் மீது தீராக்காதலும் பற்றும் கொண்ட வ.உ.சி. தொல்காப்பியத்தையும் படிக்கத் தொடங்கினார். 1910 ஆம் ஆண்டு சிறையில் இருந்தபோது தொல்காப்பியப் பொருளதிகாரத்தை வாசிக்கத் தொடங்கிய இவர் அதன்கடின நடைகண்டு உரை எழுதவும் தொடங்கினார்.

“தொல்காப்பியத்தைப் படிக்கும் பாக்கியம் எனக்கு 1910- ம் வருடம் கிடைத்தது. அதன் பொருளதிகாரத்தை யான் படித்தபோது, அதில்வேறு எம்மொழி இலக்கணத்திலும் காணப்படாத நிலப்பாகுபாடு, நிலங்களின் மக்கள், ஏனைய உயிர்கள், மரங்கள், செடிகள், மலர்கள், மக்களதுஒழுக்கங்கள், பழக்கவழக்கங்கள் முதலியன கூறப்பட்டிருக்கக் கண்டேன். இவ்வொப்புயர்வற்ற நூலைத்தமிழ் மக்கள் படியாததற்கு ஒருகாரணம் இந்நூலிற்கு ஆன்றோர் இயற்றியுள்ள உரைகளின் கடின நடையென்று உணர்ந்தேன். இந்நூலைத் தமிழ்மக்கள் யாவரும் கற்கும்படி எளிய நடையில் ஓர் உரை எழுதவேண்டுமென்று நினைத்தேன். உடனே எழுத்ததிகாரத்தின் முதற்சில இயல்களுக்கு உரையும் எழுதினேன். ( தொல்காப்பியப் பதிப்புரைகள், ப. 167 ).

என்னும் வ.உ.சி.யின் கூற்று தெளிவுபடுத்துகிறது. உரை எழுதத் தொடங்கிய வ.உ.சி.அவர்கள் 1912 ஆம் ஆண்டில் விடுதலையான பிறகு, சென்னை பெரம்பூரில் வசித்த காலத்தில் தாம் எழுதிய தொல்காப்பிய உரையை நிறைவு செய்யும் பொருட்டுச் செல்வக் கேசவராய முதலியார் அவர்களைச் சந்தித்து அவரோடு இணைந்து உரையைச் சரிபார்க்கத் தொடங்குகிறார். அந்தக் காலத்தில் தி.த. கனகசுந்தரம்பிள்ளை அவர்களிடமிருந்து வ.உ.சி. அவர்களுக்குத் தொல்காப்பிய இளம்பூரண எழுத்ததிகார அச்சுப்புத்தகமும், சொல்லதிகார ஏட்டுப்பிரதிகள் சிலவும் பொருளதிகார ஏட்டுப்பிரதி ஒன்றும் கிடைக்கிறது. இளம்பூரணர் உரையை வாசிக்கத் தொடங்கிய வ.உ.சி. அவர்கள் அவ்வுரையின் சிறப்புணர்ந்து தாம் உரை எழுதுவதைக் கைவிடுகிறார். உரை எழுதும் முடிவைவிட்டு அந்த இளம்பூரணர் உரையைப் பதிப்பித்துவிட

வேண்டும் என்னும் உந்துதலைப் பெற்றுத் தொல்காப்பியப் பொருளதிகாரத்தையும் எழுத்ததிகாரத்தையும் பதிப்பிக்கத் தொடங்குகிறார். இளம்பூரணத்தை யான் படித்த போது அதன் உயர்வும், சிறப்பும், எளிய நடையும் தொல்காப்பியத்திற்கு யான் உரை எழுதுவது மிகை யென்று நினைக்கச் செய்தன. பின்னர் என் உரையைப் பூர்த்தி செய்யும் எண்ணத்தை விடுத்து, ''இளம்பூரணத்தை அச்சிட்டு வெளிப்படுத்த எண்ணினேன். முதலில் எழுத்ததிகாரத்தை ஒரு புத்தகமாகவும், பின்னர்ப் பொருளதிகாரத்தின் அகத்திணையியலையும், புறத்திணையியலையும் ஒரு புத்தகமாகவும் அச்சிட்டு வெளிப்படுத்தினேன்''. ( தொல்காப்பியப் பதிப்புரைகள், ப. 167)

என்னும் வ.உ.சி. அவர்களின் கூற்று தெளிவுபடுத்துகிறது. தொல்காப்பியத்தின் சிறப்பை உணர்ந்து அதற்கான உரை எழுதவேண்டும் என்று நினைத்தவர் தொல்காப்பிய இளம்பூரணர் உரையைப் படித்தபிறகு அந்த உரையே சிறந்தது, அதனை எப்படியாவது தமிழ்ச்சமூகத்திற்குப் பதிப்பித்து வழங்கிடவேண்டும் என்று உறுதிபூண்டு பதிப்பித்து வழங்கியமுறை வ.உ.சி. என்னும் தமிழ்ப்பதிப்பாளுமையைத் தனித்து அடையாளப்படுத்துவதற்குக் காரணமாக அமைகின்றது.

□

## வ.உ.சி. அவர்களின் தொல்காப்பியப் பதிப்புகள்

- தொல்காப்பியப் பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல் - இளம்பூரணர்உரை - 1919
- தொல்காப்பிய எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை - 1928
- தொல்காப்பியப் பொருளதிகாரம் களவியல், கற்பியல், பொருளியல் - இளம்பூரணர் உரை - 1933
- தொல்காப்பியப் பொருளதிகாரம் மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல் - இளம்பூரணர் உரை - 1935
- தொல்காப்பியம் பொருளதிகாரம் ஒன்பது இயல்களும் - இளம்பூரணர் உரை- 1935

வ.உ.சி. அவர்கள் தொல்காப்பியத்தைப் பதிப்பிப்பதற்கு முன்பு தொல்காப்பியத்திற்குப் பல பதிப்புகள் வெளிவந்திருந்தன. 1847 ஆம் ஆண்டு தொல்காப்பிய நச்சினார்க்கினியர் எழுத்ததிகார உரை மழவை மகாலிங்கையரால் முதன்முதலாகப் பதிப்பிக்கப்பெற்றது. அதன் பிறகு சாமுவேல்பிள்ளை, ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, சோடசாவதானம் சுப்பராயசெட்டியார், பவானந்தம்பிள்ளை, ரா. இராகவையங்கார் ஆகியோர் தொல்காப்பியத்தைப் பதிப்பித்திருந்தனர். இதில் தொல்காப்பிய மூலம், நச்சினார்க்கினியர் உரை, பேராசிரியர் உரை, எழுத்ததிகார இளம்பூரணர் உரைஆகியன மட்டுமே பதிப்பிக்கப்பட்டிருந்தன.

இவ்வுரைகளில் காலத்தால் தொன்மையானதும் எவரும் உள்நுழைந்து வாசிப்பதற்கு எளிமைத்தன்மை கொண்டதுமான ஒரேஉரை இளம்பூரணர் உரைமட்டுமே. இன்றளவும் கல்விப்புலத்திலும் வாசிப்புத்தளத்திலும் மிக வலுவான உரையாக இருப்பதும் இவ்இளம்பூரணர் உரைமட்டுமே. இந்த உரைக்கு அக்காலகட்டத்தில் பதிப்பாசிரியர்கள் பெரிய முக்கியத்துவம் வழங்கவில்லை என்பதை அக்காலத்தைய பதிப்புகளில் இருந்தே அறிய முடிகிறது. எழுத்ததிகார இளம்பூரணர் உரை மட்டுமே 1868-ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டபோதிலும் 1919-க்கு முன்புவரை இளம்பூரணரின் சொல்லதிகாரம், பொருளதிகார உரைகள் கவனத்தில் கூடக் கொள்ளப்படவில்லை என்பதும் அவ்வுரையின் பெருமையை வ.உ.சி. அறிந்து அவற்றைப் பதிப்பித்து வெளியிட்டுவிட வேண்டும் என்ற அவரின் செயல்பாடுமே தொல்காப்பிய இளம்பூரணர் பொருளதிகார உரையை இன்றைய தலைமுறைக்குப் பாதுகாப்பாகக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறது.

## தொல்காப்பியப் பொருளதிகார, எழுத்ததிகாரப் பதிப்புகள்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் முதல் இரண்டு இயல்களான அகத்திணையியலையும் புறத்திணையியலையும் இளம்பூரணர் உரையோடு வ.உ.சி. அவர்கள் முதன்முதலாகப் பதிப்பித்து வெளியிடுகிறார். வ.உ.சி. அவர்கள் பதிப்பித்து வெளியிட்ட இந்த முதல் இரண்டு இயல் பதிப்பின் காலத்தை ஆய்வாளர்கள் பலரும் கண்டறியமுடியாதநிலையிலேயே இருந்தனர். அதன் முகப்புப்பக்கத்தில் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு இல்லாததும், முன்னுரை இல்லாததுமே இக்குழப்பத்திற்குக் காரணமாக அமைந்துவிட்டது. பதிப்பு நுட்பங்கள் வளர்ச்சி பெறாதகாலத்தில் இவை எதுவும் குறைஇல்லை. ஆனால் ஆண்டைத் துல்லியமாகக் கணிக்க முடியாமல் போனதால் 1921 ஆம் ஆண்டு என்று ஏதோ ஒருபதிப்பில் எழுதி வைக்கப்பட்ட குறிப்பைக்கொண்டே ஆய்வாளர்கள் இப்பதிப்பு 1921 ஆம் ஆண்டு என்று குறிப்பிட்டுவந்தனர்.

1921-ஆம் ஆண்டு என்று குறிப்பிட்டால் வ.உ.சி.யின் தொல்காப்பியப் பதிப்பு இரண்டாம் பதிப்பு முயற்சியாக மாறி விடுகிறது. ஏனென்றால் 1920-ஆம் ஆண்டு கா. நமச்சிவாய முதலியார் இதே இரு இயல்களை இளம்பூரணர் உரையோடு பதிப்பித்து வெளியிட்டு இருந்தார். அதனால் வ.உ.சி. பதிப்பு இரண்டாம் பதிப்பாகவே எல்லாத் தொல்காப்பியப் பதிப்பு ஆய்வாளர்களாலும் கருதப்பட்டு குறிப்பிடப்பட்டு வந்தது. இதனை ஆராய்ந்து வ.உ.சி. அவர்களின் பதிப்பு 1921 இல் வந்தது அல்ல. அது 1919 ஆம் ஆண்டே வெளியிடப்பட்டது என்ற உண்மையைக் கண்டறிந்து நுட்பமானத் தரவுகளோடு முதன்முதலாகத் தமிழுலகிற்கு வழங்கியவர் ஆய்வாளர் பொ.வேல்சாமி அவர்களே (மானுடம், ப.7). 1918-1919 ஆம்

ஆண்டு வெளிவந்த செந்தமிழ் இதழின் மதிப்புரையை அடிப்படையாகக் கொண்டு பொ.வேல்சாமி அவர்கள் இக்கருத்தை நிறுவுகிறார்.

‘‘ஸ்ரீமான் வ.உ.சிதம்பரம்பிள்ளையவர்கள் அகத்திணையியலும் புறத்திணையியலுமாகிய பாகத்தை அச்சிட்டிருக்கிறார்கள். அதன்பிரதி யொன்றெனக்கு அளிக்கப்பட்டதை அவகாசம் கிடைத்தபொழுது இடையிடையே படித்துப் பார்த்தேன். அது படிப்பவர்களுக்கு உரைப்பகுதி நன்கு விளங்கும்படி பத்திபிரித்து நல்ல காகிதத்திற் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. அச்சில் வெளிவந்ததும் வெளிவராததுமான உதாரணச் செய்யுள் பலவற்றிற்கும் ஆதாரம் காட்டி நன்கு பரிசோதித்துப் பதிக்கப் பட்டு வருவதாய்த் தெரிகிறது. இன்னும் முன்னும் பின்னும் அடுத்தடுத்துத் தொடுத்து ஒரு புத்தகமாம் படி ஏனைப் பகுதிகளையும் அச்சிட்டு வெளியிடக் கருதிய குறிப்பும் காணப்படுகின்றது. (செந்தமிழ்த்தொகுதி, 1918 -1919, ப. 448)

என்று அந்த மதிப்புரை அமைகின்றது. செந்தமிழ் இதழில் வெளிவந்த இந்த மதிப்புரையை அடிப்படையாகக் கொண்டே பொ.வேல்சாமி அவர்கள் இந்தப்பதிப்பு 1919 ஆம் ஆண்டே வெளிவந்தது என்று உறுதிப்படுத்துகிறார்.

இவரின் இந்த கண்டுபிடிப்பினால் வ.உ.சி. அவர்களின் பொருளதிகார இளம்பூரணர் உரைப் பதிப்பே முதல்பதிப்பு என்றும். 1920-ஆம் ஆண்டில் வெளிவந்த கா. நமச்சிவாய முதலியாரின் பதிப்பிற்கு முன்பாக வெளிவந்த பதிப்பு என்றும் உறுதி செய்ய முடிகிறது.

இப் பதிப்பைத் தொடர்ந்து 1933-ஆம் ஆண்டில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் அடுத்த மூன்று இயல்களைப் பதிப்பித்து வெளியிடுகின்றார். இப்பதிப்பானது வாவிள்ள இராமஸ்வாமி சாஸ்த்ருலு அண்ட்ஸன்ஸ் அச்சுக்கூடம் வழி வெளிவருகிறது. இப்பதிப்பில் ஒரு பக்கப்பதிப்புரை இடம் பெறுகிறது. அப்பதிப்புரையில் இந்தப் பதிப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட சுவடிகள் குறித்தும் இந்தப் பதிப்பில் இளம்பூரணர் உரை இல்லாத இடத்தில் நச்சினார்க்கினியருரை எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது குறித்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சுவடிகள் குறித்துக்கூறும் போது,

“இதனை வெளியிடுவதற்குக் கிடைத்த கடிதப்பிரதிகளில் ஒன்று காலஞ் சென்ற த.மு.சொர்னம்பிள்ளையவர்களுக்குரியதாகும். அவர்கள் பிரதி செய்யும் பொழுது உரையில் இல்லாதபல சொற்றொடர்களை இடையிடையே பெய்திருக்கிறார்கள் என்பது பல காரணங்களால் ஊகிக்கக்கூடியதாயிருக்கிறது. பிறிதொரு பிரதி ஸ்ரீமான் தி.நா. சுப்பிரமணிய ஐயரிடமிருந்து கிடைத்தது.

இது சொர்னம்பிள்ளையவர்களது பிரதியைப் பார்த்து எழுதிய கடிதப் பிரதிகள் பிரதியென்று தெரியவருகிறது. இதிலும் பலவகையான இடைச்செருகல்கள் உள்ளன. மூன்றாவது பிரதி ஸ்ரீமான் எஸ்.வையாபுரிப்பிள்ளையவர்களுக்குரியது. இது 1912ல் ஸ்ரீமான் தி.த.கனகசுந்தரம்பிள்ளையவர்கள் ஏட்டுப்பிரதியைப் பார்த்து எழுதிய கைப்பிரதியாகும். இதுவே இடைச்செருகல்களைத் தெரிந்துகொள்வதற்கும், மூலத்தின் சுத்தபாடத்தை நிச்சயிப்பதற்கும் பெரிதும்பயன்பட்டது. இதனையே த.மு. சொர்னம்பிள்ளையவர்கள் இரவலாகப் பெற்றுத் தமக்குத் தோற்றியவாறு பலவிடங்களில் மாற்றியுங்கூட்டியுங் பிரதிசெய்து கொண்டார்கள். ( தொல்காப்பியப்பதிப்புரைகள், ப. 156)

- என்று பதிவுசெய்கின்றார். தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணர் உரைக்கு ஒரே சுவடி மட்டும் இருந்ததையும், அந்த ஒரு சுவடியில் இருந்தே மற்றவை பிரதி செய்யப்பட்டன என்பதையும் இதன் மூலம் அறிய முடிகிறது. இதில் தெளிவாகப் பிரதி செய்து வைத்த எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களே இந்தப்பதிப்பிற்கும் உதவிசெய்தார் என்பதை வ.உ.சி. அவர்கள் பின்னர் பதிவு செய்கின்றார்.

தொல்காப்பியத்திற்கு வெளிவந்த இந்தப் பதிப்பிற்குப் பிறகு 1935-ஆம் ஆண்டு தொல்காப்பியப்பெ பாருளதிகார இறுதி நான்கு இயல்களையும் இளம்பூரணர் உரையோடு பதிப்பித்து வெளியிடுகின்ற வ.உ.சி. அவர்கள் அதில் மூன்று பக்க அளவில் ஒரு முன்னுரையும் எழுதுகின்றார். நூலை அச்சிட்ட வாவிள்ள குழுமத்தினரின் பிரசுரிப்போர் முன்னுரை ஒன்றும் இதில் இடம் பெறுகின்றது.

வ.உ.சி. அவர்கள் தம் முன்னுரையில் குறிப்பிடத்தக்க சில செய்திகளைப் பதிவுசெய்கின்றார். தொல்காப்பியம் படிக்க முற்பட்டது, அதனைப் பதிப்பிக்க முனைந்தது, அதற்கு வையாபுரிப்பிள்ளை அவர்களின் உதவியை நாடியது, ரா.ராகவையங்கார் சுவடிகள் வழங்கியது, உதவி செய்தோர் குறித்துப் பதிவு செய்தது என இம்முன்னுரை அமைகின்றது.

வ.உ.சி.அவர்களின் 1933, 1935-ஆம் ஆண்டுகளில் வெளிவந்த பதிப்புகளுக்கு எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களின் உதவி எத்தகையது என்பதை வ.உ. சி. அவர்கள் தம் பதிப்பு முன்னுரையில் பின்வருமாறு பதிவு செய்கின்றார்.

"சில வருடங்களுக்குப் பின், தமிழ்த்தொன்னூல்களின் ஏட்டுப் பிரதிகளைப் பலவிடங்களில் தேடிப்பெற்றுப் பரிசோதித்துக் கொண்டு வருந்தமிழ்ப்பேரகராதி ( Tamil Lexicon ) எஸ். வையாபுரிப்பிள்ளை (பி.ஏ.,பி.எல்.,) அவர்களின் நட்பு எனக்குக் கிடைத்தது. அவர்களிடம் இளம்பூரணப் பொருளதிகாரத்தின் பிந்திய இயல்களை அச்சிட இயலாமலிருக்கிற நிலைமையைத்

தெரியப்படுத்தினேன். என் உண்மைத் தேசாபிமானத்தையும் பாஷாபிமானத்தையும் கண்டு, அவ்வியல்களை அச்சிடுதல் சம்பந்தமான ஆசிரியர் வேலைகளைத் தாமே செய்வதாகப் பிள்ளையவர்கள் வாக்களித்தார்கள்''. (தொல்காப்பியப் பதிப்புரைகள், ப. 168) என்று இப்பதிப்புக் குறிப்பு அமைகின்றது.

எஸ். வையாபுரிப்பிள்ளை இப்பதிப்பில் என்னவெல்லாம் செய்தார் என்பதையும் வ.உ.சி. அவர்கள் பதிவுசெய்கின்றார்.

''காயிதப் பிரதிகளை ஏட்டுப் பிரதிகளோடு ஒப்புநோக்கிக் காயிதப் பிரதியிற்கண்ட வழுக்கள் முதலியவற்றைக் களைந்தும், அச்சுத்தாள் (புரூவ்)களைச் சரிபார்த்துத் திருத்தியும், மேற்கோட் செய்யுள்களின் நூற்பெயர் முதலியவற்றைத் துலக்கியும், முதலில்களவியல், கற்பியல், பொருளியல் இம்மூன்றையும் அச்சிடுவித்து ஒரு புத்தகமாக்கித் தந்தார்கள். இப்போது ஏனைய இயல்களையும் புத்தகவடிவில் வெளிவரச்செய்தார்கள். இவ்வேழு இயல்களுக்கும் பெயரளவில் பதிப்பாசிரியன்யான்; உண்மையிற் பதிப்பாசிரியர் திரு. வையாபுரிப் பிள்ளையவர்களே. அவர்கள் செய்த நன்றி என்னால் என்றும் உள்ளற்பாலது''. (தொல்காப்பியப்பதிப்புரைகள், ப. 168) இந்தக்குறிப்பில் வ.உ.சி. அவர்களின் நேர்மை புலப்படுகின்றது.

வையாபுரிப்பிள்ளை என்னும் மனிதரின் உழைப்பை முழுமையாகப் பதிவுசெய்ததோடு பின்னால் இதே ஆண்டில் வெளிவந்த தொல்காப்பியப் பொருளதிகார இளம்பூரணர் உரைமுழுமைப் பதிப்பில் தன் பெயரோடு எஸ்.வையாபுரிப்பிள்ளை அவர்கள் பெயரையும் இணைத்துப் பதிவு செய்தது வ.உ.சி. என்னும் ஆளுமையை அடையாளப் படுத்துகிறது. இவ்வாறு வையாபுரிப்பிள்ளை அவர்களின் பெயரை இப்பதிப்பில் ஏன் இடம் பெறச்செய்தார் என்பது குறித்து பெருமாள்முருகன்அவர்கள்,

''1936-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித் துறைத்தலைவர் பதவிக்கு வையாபுரிப்பிள்ளை முயன்றார். அதற்கு இந்தத் தொல்காப்பியப் பதிப்பு உதவும் என்பதை முன்னுணர்ந்த வ.உ.சி.. அவர் பெயரையும் இணைத்து முழுநூலை வெளியிட்டிருக்கவேண்டும். வ.உ.சி., வையாபுரிப்பிள்ளை இருவருக்கும் முக்கியமான ஒருநூல் வெளியாக வேண்டும் என்பதுதான் கவனத்தில் இருந்திருக்கிறது. தம்பெயர் இடம் பெறவேண்டும் என்னும் வேட்கையில்லை. அதேசமயம் வையாபுரிப்பிள்ளையின் பெயர் இடம்பெறுவதால் அவருக்குக் கிடைக்கப்போகும் நன்மையை வ.உ.சி. அறிந்திருக்கிறார். அந் நன்மையைக் கருதி அவர் பெயரையும் இணைத்து முழுமையான பொருளதிகார இளம்பூரணத்தை வெளியிட்டிருக்கிறார்''. (தமிழ்த்தடம், ப. 32)

என்று பதிவு செய்கின்றார். வையாபுரிப்பிள்ளை அவர்களின் பெயரை வ.உ.சி. அவர்கள் போடவில்லை என்றாலும் வையாபுரிப்பிள்ளை அவர்கள் கேட்டிருக்கப்போவதில்லை. ஆனால் வ.உ.சி. அவர்கள் வையாபுரிப்பிள்ளை உழைப்பிற்கு மரியாதை தந்ததோடு, அதனால் அவருக்குக் கிடைக்கபோகும் அல்லது தமிழுலகிற்குக் கிடைக்கப்போகும் நன்மையை அறிந்து அவரின்பெயரை இப்பதிப்பில் இணைத்துச் சென்றிருக்கிறார்.

1919 ஆம் ஆண்டு தொடங்கிய தொல்காப்பியப் பொருளதிகார உரைப்பதிப்பானது 1935 ஆம் ஆண்டு முழுமை பெறுகிறது. இடைப்பட்ட காலத்தில் எத்தனையோ நெருக்கடியில் வ.உ.சி. அவர்கள் இந்தநூலை வெளியிட்டுத் தமிழின் நெடுங்காலப் பயணத்திற்குப் பெருந்துணை புரிந்துள்ளார். இதற்குஇடைப்பட்டகாலத்தில் 1868 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டு மறுபதிப்பே பெறாதிருந்த தொல்காப்பிய இளம்பூரணர் எழுத்ததிகார உரை 1928 ஆம் ஆண்டு மீண்டும் வ.உ.சி. அவர்களால் மறுபதிப்பு செய்யப்பட்டுத் தமிழுலகிற்கு வழங்கப்பட்டது.

பதிப்பை நேர்த்தியாகவும், வாசிப்போருக்குப் பயனுடையதாகவும் மாற்றித்தர வேண்டும் என்ற நோக்கில் வ.உ.சி. அவர்கள் உருவாக்கிய இப்பதிப்புகள் தமிழின் பெரும் ஆவணங்கள். தி.த.கனகசுந்தரம் பிள்ளையிடமிருந்து கிடைத்த அந்த ஒற்றைச்சுவடியை வ.உ.சி. அவர்கள் நூலாக்கம் செய்யாமல் விட்டிருந்தால் தமிழின்தொன்மை இலக்கணநூ லான தொல்காப்பியத்தின் முதல் உரையாகச் சொல்லப்படுகின்ற இளம்பூரணரின் தொல்காப்பியப்பொருளதிகார உரையினைத் தமிழ்ச்சமூகம் காணாமலே போயிருக்கலாம்.

பயன்பட்டநூல்கள்


1. இளமாறன், பா., தொல்காப்பியப் பதிப்புரைகள், பரிசல்பதிப்பகம், சென்னை, 2021
2. சங்கரவள்ளிநாயகம், அ., வ உ சி வாழ்க்கை வரலாறும் இலக்கியப்பணிகளும், மலர்புக்ஸ், சென்னை, 2022
3. பெருமாள்முருகன், உண்மைப் பாஷாபிமானம்: வ.உ. சிதம்பரம்பிள்ளை பதிப்புகள், தமிழ்த்தடம், காலாண்டு ஆய்விதழ், ஜீன் - ஆகஸ்டு - 2022
4. வெங்கடடேசன், இரா., தமிழ்ப்பதிப்பு வரலாற்றில் செவ்வியல் நூல்கள், இராசகுணா பதிப்பகம், சென்னை, 2011.
5. வேங்கடசாமி, மயிலைசீனி., பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்இலக்கியம், மெய்யப்பன்தமிழாய்வகம், 2001.
6. வேல்சாமி, பொ., தொல்காப்பியபொருளதிகார இளம்பூரணர் உரைமுழுமையும் முதன்முதலாக அச்சிட்டு வெளிப்படுத்தியவர் வ.உ.சிதம்பரம்பிள்ளையே!, மானுடம் ( சமூக - அரசியல் - பண்பாட்டுக் காலாண்டிதழ் ), நவம்பர் - சனவரி 2022.


✯ ✯ ✯

# சிதம்பரம் பிள்ளை
# தியாகப்பூக் கொல்லை

**கவிஞர் முத்துலிங்கம்**

வெள்ளையரை முதன்முதலில் விரட்டுதற்கு
வித்திட்ட தமிழ்நாட்டில், பரங்கியர்க்குக்
கொள்ளைவைக்க வேண்டுமென்ற கட்டப் பொம்முக்
கோன்ஆண்ட நெல்வேலிச் சீமை தன்னில்
பிள்ளையொன்று அவனைப்போல் வேண்டு மென்று
பெற்றோர்கள் தவமிருக்க; தமிழர்க் கெல்லாம்
பிள்ளையெனத் தோன்றியவர் இந்தப் பிள்ளை
பேர்சிதம் பரம்பிள்ளை! சைவப்பிள்ளை!

நடக்கின்ற சிறுவயதில் இந்தப் பிள்ளை
நடைவண்டி இழுத்தபிள்ளை! எனினும் வீழ்ந்து
கிடக்கின்ற பாரதத்தாய் நிமிர்ந் தெழுந்து
கீழ்த்திசையில் சுதந்திரமாய்த் தனது காலால்
நடப்பதற்குச் செக்கிழுத்து நடந்த பிள்ளை
நாம்தமிழர் எனும் உணர்வைத் தந்தபிள்ளை!
திடமான திலகர்வழிக் காங்ரஸ் மீது
சிந்தை வைத்துச் சிறைசென்ற வீரப் பிள்ளை!

ஏகாதி பத்தியத்துக் கப்பலுக்கு
எதிர்க்கப்பல் ஓட்டியவர் இந்தப் பிள்ளை!
ஆகாயம் கவிந்துள்ள இந்த மண்ணில்
அவரைப்போல் ஒரு பிள்ளை கிடைப்பதில்லை!
வாகான சுதந்திரத்தைப் பெறுவ தற்கு
வடநாட்டார் பலதியாகம் செய்தபோதும்
ஏகாதி பத்தியத்திற் கெதிர்ப்புக் கூறி
எதிர்க்கப்பல் விட்டவர்கள் வடக்கே இல்லை!

*கோவைநகர்ச் சிறைதனிலே கைதி கட்கு*
*குறள்கூறி அறிவுதந்த பிள்ளை! கம்பன்*
*பாவைமிக விழைந்தபிள்ளை! ஆங்கி லத்தைப்*
*படித்துவிட்டுத் தாய்மொழியை மறந்து விட்ட*
*தேவையில்லாத் தமிழர்களை உமிழ்ந்த பிள்ளை!*
*தேசபக்தி கொண்ட பிள்ளை! பொருள்தி ரட்ட*
*நாவைஉப யோகிக்க நினையாப் பிள்ளை!*
*நறுந்தமிழ்க்கே உபயோகம் செய்த பிள்ளை!*

*பிள்ளைத்தமிழ் கேட்கையிலே பெற்றோர்க்குப்*
*பெருகிவரும் பேரின்பம்! ஆனால் இந்தப்*
*பிள்ளைதமிழ் கேட்கையிலே தேச பக்தி*
*பெருகியது நாட்டினிலே! இப்பிள்ளை மேல்*
*பிள்ளைத்தமிழ் நான்பாடப் பலநா ளாகப்*
*பெருவிருப்பம் கொள்கின்றேன்; ஆனால் இங்கே*
*வெள்ளைத்தாள் இதற்குமேல் சுமக்கா தென்று*
*விளைகின்ற என்பாட்டில் 'தளை' செய்கின்றேன்.*

☆ ☆ ☆

# “தத்துவ ஞானிகள் தன்மை குன்றார்”

**திருமூலர்முருகன்**

‘வ.உ.சி.யின் வீரஞ்செறிந்த தியாக வாழ்வுக்கு உருவகமாகக் கப்பலும், செக்கும் அமைந்து விட்டன. ஆனால், உண்மையில், பன்முகத்தன்மை வாய்ந்த அவருடைய வாழ்க்கை இவ்வுருவகங்களுக்கு அப்பாற்பட்டும் விரிந்து நிற்கின்றது‘(ப.17, வ.உ.சி.யின் சிவஞானபோத உரை, ப.ஆ. ஆ.இரா. வேங்கடாசலபதி) என்று ஆய்வாளர் ஆ.இரா. வேங்கடாசலபதி குறிப்பிடுவதிலிருந்து வ.உ.சி. ஆங்கிலேயர்களுக்கு எதிராகக் கப்பல் ஓட்டியவர், இந்திய விடுதலைப் போரில் பங்கேற்றதற்காகச் செக்கிழுத்தவர் என்பதோடு வ.உ.சி.யின் வாழ்வைச் சுருக்குவது வரலாற்றுப் பிழையாகிவிடும். இதனையெல்லாம் கடந்து இறையியல், தத்துவம், மெய்ஞ்ஞானம் எனத் தன் அறிவை விரிவுசெய்து கொண்டவர் வ.உ.சி. இவர் சைவமரபினர் என்பதால் சைவ சமயக் கருத்துக்கள் அவருள் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. சட்டம் பயின்று வழக்குரைஞராகப் பணியாற்றினாலும், விவேகானந்தர் மடத்தைச் சேர்ந்த இராமகிருட்டிணானந்தர், திலகர், பாரதியார், அரவிந்தர், சுவாமி வள்ளிநாயகம் ஆகியோருடன் இருந்த தொடர்பு வ.உ.சி.யின் மன உலகில் தாக்கத்தை ஏற்படுத்தின. கைவல்லிய நவநீதம், ஞானவாசிட்டம், சிவஞானபோதம், திருக்குறள், திருமந்திரம், நல்லாப்பிள்ளை பாரதம், பகவத்கீதை, திருவிளையாடல் புராணம், இராமாயணம், ஜேம்ஸ் ஆலனின் ஆன்மிக நூல்களான அகமே புறம், மனம் போல வாழ்வு ஆகிய நூல்களின்வழி இறையியல் குறித்தும் மெய்ஞ்ஞானம் குறித்தும் ஆழமான அறிவைப் பெற்றிருந்தார். ‘கைவல்லியம் எனும் கருத்துயர்நூலும்/ விசாரசாகரமும் வேறொரு சிலவும்/ விசாரம் புரிந்து மெய்ப்பொருள்கண்டு/ துன்பமும் இன்பமும் துணையெனக் காணும்/ நன்பதம் தெரிந்தேன்; நன்கதில் நின்றிலேன்.‘ (ப.39, வ.உ.சி. சுயசரிதை)என்று வ.உ.சியின் சுயசரிதையிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது. இதனூடாக வ.உ.சி. அடைந்த மெய்ஞ்ஞானத்தை அகப் பார்வையாகக் காண முயல்வது இக்கட்டுரையின் நோக்கம்.

மெய்ஞ்ஞானம் என்பதைச் சமயத்திற்குள் அடக்கிப் பார்க்கவேண்டிய அவசியம் இல்லை. மெய்ஞ்ஞானம் என்பதற்கு ’உண்மையறிவு’ (True knowledge) என்றும் ’விடுதலை பெற்ற மனம்’ என்றும் பொருள். ஒருவருடைய மனத்துணிவிற்கும், போலித்தனமற்ற தன்மைக்கும் அவர்பெற்ற மெய்ஞ்ஞானமும் ஒரு காரணமாகும். வ.உ.சி.யின் மிக விரிவான மனவியல் ஆராய்ச்சியில் குறிப்பிடத்தக்கவர் ஜேம்ஸ் ஆலன். அவருடைய ’அகமே புறம்’ என்ற நூலின் மொழிபெயர்ப்பில், “ஒருவனது வாழ்க்கையின் கேடுகள் அவனது மனத்தின் கேடுகளே. அவற்றின் நிவர்த்தி அகத்திலிருந்து கிரமமாக உண்டாக

வேண்டுமேயன்றிப் புறத்திலிருந்து திடீரென்று செய்து கொள்ளத் தக்கதன்று. நாள்தோறும், நாழிகைதோறும், மாசற்ற நினைப்பை நினைத்தற்கும், குற்றத்துள்ளும் கலக்கத்துள்ளும் விழக் கூடிய சந்தர்ப்பங்களில் குற்றமும் கலக்கமுமற்ற நிலைமைகளைக் கொள்வதற்கும் மனத்தைப் பழக்க வேண்டும். கருங்கல்லில் வேலை செய்கிற பொறுமையுள்ள சிற்பியைப்போன்று, சரியாக வாழ்க்கையை அடையக் கோருகிற மனிதன், தனது மனமாகிய கருங்கல்லிலிருந்து மிகவும் அருமையான கனவுகளின் இலட்சியத்தை அடையும்வரையில் ஒவ்வொருநாளும் சிறிதுசிறிதாக வேலைசெய்து வரவேண்டும்'' (பக். 33,34 ஜேம்ஸ் ஆலன், அகமே புறம், மொ.பெ. வ.உ.சி. 1916) என்ற ஜேம்ஸ் ஆலனின் கருத்துகளின் அடிப்படையில் வ.உ.சி.யின் மனப்பயிற்சியைப் புரிந்துகொள்ள முடியும். மொழிபெயர்ப்பு நூலாக இருப்பினும், ஜேம்ஸ் ஆலனின் கருத்துகளை வ.உ.சி. தன்னுள் முழுமையாகக் கரைத்துக்கொண்டதாகக் காணமுடிகின்றது. மனம்குறித்தபார்வையில்வ.உ.சி. வேறுபடுவதற்குக் காரணமாகப் பின்வரும் கருத்துகளைப் பார்க்கலாம்.

"ஒவ்வொரு பலஹீனமும் பலமும், சுத்தமும் அசுத்தமும் அவனால் உண்டானவையே; மற்றொருவனால் உண்டானவையல்ல. ஆகவே, அவைகளை மாற்றக்கூடியவன் அவனே; மற்றொருவனல்லன். அவனது நிலைமையும்அவன் தேடிக் கொண்டதே; மற்றொருவன் தேடியதன்று. அவனது துன்பமும் இன்பமும் அகத்திலிருந்தே வெளிவந்தவை. அவன் எங்ஙனம் நினைக்கிறானோ அங்ஙனமே இருக்கிறான்; அவன் எங்ஙனம் நினைத்து வருகிறானோ அங்ஙனமே இருந்து கொண்டிருக்கிறான்." (ப.51, ஜேம்ஸ் ஆலன், மனம்போலவாழ்வு. மொ.பெ. வ.உ.சி. 1916 ) என்ற ஜேம்ஸ் ஆலனின் கருத்துகளை மிக ஆழமாக வ.உ.சி. மொழிபெயர்த்திருக்கிறார். ஒரு மனிதனின் துன்பமும் இன்பமும் அகத்திலிருந்து தோன்றியவை என்ற கருத்து, விதிக்கோட்பாட்டிற்கு முற்றிலும் எதிரானது. எல்லாம் தலைவிதிப்படிதான் நடக்கும் என்று நம்பி, வாழ்வை இழந்த மக்களைக் கண்டு வ.உ.சி. மனம் வெதும்பி, அவர்களின் மன அடிமைத்தனமே எல்லாவற்றுக்கும் காரணம் என்றெண்ணி மக்களுக்கு மனவிடுதலையை அறிவுறுத்துகிறார். ஜேம்ஸ் ஆலனின் கருத்தை வ.உ.சி.யும் மன விடுதலைக்கான கைவிளக்காகக் கொண்டார் என்பது தெளிவாகிறது.

வ.உ.சி. தன்மனத்தை மெல்லமெல்ல செம்மையாக்கி, மெய்ஞ்ஞான நிலைக்குக்கொண்டு செல்கிறார். ஒழுக்கமற்ற மெய்ஞ்ஞானம் பெரும்பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அறிந்திருந்த வ.உ.சி, "மெய்ப்பொருளை அடையமுயலும் மாணவனும் தவறுகளால் தளராது, கஷ்டங்களால் பலமடைந்து, சரியான நினைப்புகளை நினைத்துக்கொண்டும், சரியானசெயல்களைச் செய்துகொண்டும் வரவேண்டும். ஒழுக்கத்தைக் கைக்கொண்டபொழுது அவன் மனம் மெய்ஞ்ஞானத்தில் விரிவுறுகின்றது.

அம் மெய்ஞ்ஞானமே அவன் ஜேமமாக அமரத்தக்கநிலை" (ப.39, ஜேம்ஸ்ஆலன், அகமே புறம், மொ.பெ. வ.உ.சி. 1916) என்ற ஜேம்ஸ் ஆலனின் ஆழமான கருத்தை அழகாக மொழிபெயர்ப்பு செய்ததிலிருந்து, வ.உ.சி.யின் மனவோட்டத்தை அறிந்துகொள்ளமுடிகிறது. மூலநூலை, முழுதுமாக உள்வாங்கிக்கொண்டவனால் மட்டுமே, முழுமையான மொழிபெயர்ப்பைச் சாத்தியமாக்க இயலும். வ.உ.சி. சட்டம் படித்தவர். அவருடைய ஆங்கிலப் புலமைக்குப் பலசட்டநூல்களை மொழிபெயர்ப்பு செய்திருக்கலாம். பல வரலாற்றுநூல்களை மொழிபெயர்ப்புசெய்திருக்கலாம். ஆனால் மனத்தைச்செம்மையாக்கும் நூல்களை ஏன் மொழிபெயர்க்கவேண்டும்? மேற்குறிப்பிட்ட ஜேம்ஸ் ஆலனின் மூன்று நூல்களும் மனவிடுதலை பெறுவதற்கான நூல்கள். மெய்ஞ்ஞானத்தைவிதைக்கும்நூல்கள். இந்நூல்களைச் சிறையிலிருந்தவாறே மொழிபெயர்ப்புச் செய்துள்ளார். கொந்தளிப்பான சூழலில் வ.உ.சி.யை மிகஆழமாகப் பாதித்த நூல்களாக மேற்கண்ட நூல்களைக் கூறலாம். மேலைநாட்டு நூல்கள் மட்டுமே வ.உ.சி.யைப் பாதித்ததா என்றால் இல்லை. அவர் கருத்தூன்றிப் படித்த திருக்குறளும் அவருடைய மெய்ஞ்ஞான நிலைக்குத் துணைநின்றது.

விதி நம்பிக்கை இந்திய மக்களின் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது என்பதை முன்னர்ச் சுட்டியிருந்தோம். விதி நம்பிக்கை மக்களை எழுச்சியுறாமல் தடுக்கும் அரணாக இருந்ததை நன்குணர்ந்த வ.உ.சி. தன்னுடைய 'மெய்யறிவு' நூலில் பின்வருமாறு எழுதுகிறார்.

"விதிவிதி யென்று ஆழ்கின்றார் வீணாகத் துன்பில்
விதிவிதிக்கத் தம்மையன்றி வேறு - பதியொருவன்
உண்டென்று நம்பி ஒருசிலரிங் கன்னாரின்
கண்டறியேன் பேதையரைக் காண்" (கக)

விதியை நம்பியிருப்பவன் பேதையென்று உரைக்கிறார். விதியை நம்புவதே துன்பத்திற்குக் காரணம் என்று வ.உ.சி. வலியுறுத்துகிறார். அவருடைய காலகட்டத்தில் அறியாமை தலைவிரித்தாடிய நிலையில் விதிக்கு எதிராக எழுதியதைப் புரட்சிக் கருத்து என்று கூறுவதில் தவறில்லை.

"மனந்தான் உனக்கு வசப்பட்டு அடங்குந்
தினந்தான் உனக்கு நலன்சேர்நாள்" ( மெய்யறிவு - வ.உசி.-1915 - )

விதியிலிருந்து விடுபட்டு, அலைந்து திரியும் மனத்தைத் தன்வசப்படுத்தும் நாள்தான் நலன் உண்டாகும் நாள் என வ.உ.சி. உரைப்பதிலிருந்து, மனத்தைச் செம்மையாக்க வேண்டும் என்ற கருத்தில் உறுதியாக இருந்தார் என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது. வ.உசி. மெய்ஞ்ஞானத்தை உணர்ந்தவர் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் அ.சுப்பிரமண்யபாரதியின கருத்தைக் கொள்ளலாம்.

“இந்த உத்தமர் (வ.உ.சி.) சர்க்காரால் கொடுக்கப்படும் திவான்பகதூர், ராவ்பகதூர் முதலிய பட்டப்பெயர்களுக்கெல்லாம் ஆசைப்படாதவராயிருந்தார். பதவி வேட்டைக்காரர்களையும், பட்ட வேட்டைக்காரர்களையும் துரும்பெனமதித்தார். அதனால் அழுக்கற்ற தூயஉடம்பு தாங்கியவரான மதிப்பிற்குரியவரானார்” (ப.21, அ.சுப்ரமண்யபாரதி, தமிழ்ப்பெரியார்வ.உ.சி., தொ.ஆ. ஆ.அறிவழகன், அக்டோபர் 2021) பதவியில் அமர்வதற்கான தகுதியும், பட்டங்களைப் பெறுவற்கான திறமையும் பெற்ற வ.உ.சி., அவற்றையெல்லாம் துரும்பென ஒதுக்கித்தள்ளியது அவருடைய மனத்திண்மையை வெளிக்காட்டுகிறது. வசதியான குடும்பத்தில் பிறந்தவர், வசதிகளைத் துறந்தாலும், இறுதிவரையில் தன்கொள்கையிலிருந்து மாறாமல், யாருக்கும் அடிபணியாமல் வாழ்ந்த மனத்திண்மையை ஆங்கிலேயரும் மதித்தனர்.

வ.உ.சி. எந்தவொரு செயலை எடுத்துக்கொண்டாலும், அதில் தீவிரமாக இயங்கும் தன்மைகொண்டவர். பட்டும்படாமல் செயலாற்றுவது அவரால்முடியாது. தேசபக்தியில்தீவிரமாக ஈடுபட்டதைப்போன்றே, வேதாந்த பக்தியிலும் மிகத்தீவிரமாக ஈடுபட்டார் என்பதை பி.ஸ்ரீ. தான்நேரில் கண்ட காட்சியைக் கூறுவதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

“1905ஆம்ஆண்டில், அதாவது வங்காளப்பிரிவினை நடந்து அரசியல்கிளர்ச்சி ஓங்கியிருந்த அந்தஆண்டிலே சிறுவனாக இருந்தநான், வக்கீல் சாதுகணபதியின் அலுவலகத்தில் சிதம்பரம்பிள்ளையை முதல்முதல்பார்த்தேன். சிந்தையில் துணிவும், செம்மையும் முகத்திலும் கண்களிலும் குதிக்கொண்டன. அப்போது அங்கே நடந்துகொண்டிருந்த சம்பாஷனையின் பயனாக, தேசபக்தியைக் காட்டிலும் வேதாந்தபக்தியே இவருள்ளத்தைக் கவர்ந்திருப்பதாய் ஊகித்துக்கொண்டேன்.” ( ப.38, பி.ஸ்ரீ., தமிழ்ப்பெரியார் வ.உ.சி., தொ.ஆ. ஆ.அறிவழகன், அக்டோபர் 2021 )

வேதாந்தக் கருத்துகளில் வ.உ.சி.க்கு இருந்த ஈடுபாட்டை பி.ஸ்ரீ.யின் நேரடி வாக்குமூலம் தெளிவுபடுத்துகிறது. போலியான வேதாந்தத்தைப் பேசிக்கொண்டு, திண்ணையில் உட்கார்ந்து நேரத்தைப் போக்கும் புரிதலற்ற வீணர்களைப்போல வ.உ.சி. வாழவில்லை. திலகரை அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டாலும், விவேகானந்தரின் வேதாந்தக்கருத்துகள் வ.உ.சி.யின் உள்ளத்தை வலுவாகப் பாதிப்படையச் செய்திருக்கிறது என்பதை பி.ஸ்ரீ. பின்வருமாறு கூறுவதிலிருந்து அறியலாம்.

“பிள்ளையின் தேசபக்தி விவேகானந்த வேதாந்தத்தில் வேரூன்றி, திலகரின் அரசியல்ஞானம் என்ற நீர்பாய்ச்சப்பெற்று, ஒரு மதாவேசம் போல்வளர்ந்து விட்டது. அந்தத்தேசிய வெறியினால் தூத்துக்குடியும் திருநெல்வேலியும் கடல்கொந்தளிப்பது போல்கொந்தளிக்கத் தொடங்கி விட்டன.” ( ப.39, பி.ஸ்ரீ. மு.சு. நூல் ) வ.உசி.யின் தேசபக்திப் பின்னணியில்

விவேகானந்தரின் வேதாந்தக்கருத்தியல் துணைநின்றதை பி.ஸ்ரீ.யின்கருத்தின் வழிஅறிந்து கொள்ளமுடிகிறது. வ.உ.சி.யின் கொந்தளிப்பான செயல்பாட்டிற்கு வேதாந்தக்கருத்தியலே முழுதும் துணைநின்றது என்றுசொல்வதற்கில்லை. வரலாறும், சட்டமும் பயின்றதன் காரணமாக, ஒருநாடு, மற்றொரு நாட்டிற்கு அடிமையாக இருப்பது சமூகவிஞ்ஞானத்திற்கு எதிரானது என்ற பரந்துவிரிந்த வ.உ.சி.யின் அறிவுத்தெளிவு, இந்தியவிடுதலை போராட்டத்தில் அவரை வெகுண்டெழச் செய்தது. திலகரின் தலைமையும், வேதாந்தமும் அதற்குத் துணையாக இருந்தது என்பதே சரியான நிலைப்பாடாக இருக்கும்.

வ.உ.சி.யின் மெய்ஞ்ஞான உணர்விற்கு வேதாந்தம் மட்டுமே காரணமாக இருக்கவில்லை. சைவசித்தாந்தமும் உறுதுணையாக இருந்தது. சைவமரபினராகப் பிறந்தவருக்கு, சைவ சித்தாந்தத்தின் பாதிப்பு இருந்திருக்கிறது. சைவ சித்தாந்தச்சபைகளில் வ.உ.சி. பேசிய உரைகள் இதற்குச் சாட்சியங்களாகும். மேலும், சைவசித்தாந்தநூலான 'சிவஞானபோதத்திற்கு' உரை எழுதியதையும் சான்றாகக்கொள்ளவேண்டும். சமயத்தத்துவங்களை ஆழமாக உள்வாங்கிக்கொண்ட வ.உ.சி., தத்துவங்களைக் கொண்டு மக்களைப் பிளவுபடுத்தவேண்டும் என்றோ, தத்துவச்சார்புநிலையைக் கைக்கொண்டு வசதிவாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும் என்றோ துளியளவும் எண்ணியவரில்லை. சைவசித்தாந்தம், வேதாந்தம் இரண்டையும் நன்குஉணர்ந்த வ.உ.சி. அவற்றின் மூலம் தன்மனத்தைச் செம்மைப்படுத்திக் கொண்டு, தெளிவுபெற்று, தத்துவங்களின் வாயிலாக மெய்ஞ்ஞானம் பெற்று, தான் பெற்ற மெய்ஞ்ஞானத்தைத் திண்ணைப் பேச்சாக முடக்கிக்கொள்ளாமல், இந்தியவிடுதலையை முன்னெடுக்கும் கூரியவாளாக மடைமாற்றம் செய்துகொண்டார். தத்துவங்களில் வேறுபாடுகளைக்கண்டு, உயர்வு, தாழ்வைப்பேசாமல் சமய ஒற்றுமையை நிலைநிறுத்தியவர் என்பதை ப. ஜீவானந்தம் கூற்றிலிருந்து புரிந்துகொள்ளமுடியும்.

"வ.உ.சி.யின் தத்துவஞானத்தில், வேதாந்த சித்தாந்தச் சண்டையில்லை. அதில், சாதிமதபேதங் கடந்த சமரஸம் காட்சிஅளிக்கிறது. ஆஸ்திக சமயங்களெல்லாம் ஒன்றேயாகி விளங்குகிறது. ஆஸ்திகசமயம், நாஸ்திகசமயம் என்ற வேற்றுமைதாண்டிய நிலையும் காணக்கிடக்கிறது. எனவே, அவருடைய தத்துவதரிசனம், எண்ணம் முதல்வாதத்தின் மிகமிகஉயர்ரகம்எனலாம். ( ப.115, ப. ஜீவானந்தம், தமிழ்ப்பெரியார் வ.உ.சி. தொ.ஆ. ஆ.அறிவழகன் ) வ.உ.சி.யின் தத்துவஞானம் சாதாரணமானது இல்லை. மிகமிக உயர் ரகம் என்று ப. ஜீவானந்தம் கூறியதிலிருந்து, வ.உ.சி.யின் விசாலமான மனமும், பிரிவினை கடந்தசமரச உள்ளமும் தெளிவாகிறது.

"வ.உ.சி. மெய்ஞ்ஞானம் பெற்றவர் என்பதை அவருடைய செயல்பாட்டின்மூலம் புரிந்துகொண்டாலும், அவரேதான் 'மெய்ஞ்ஞானம்

’பெற்றதை,“தமிழ்ச்சிவஞான போதச்சூத்திரங்களின் சொற்களையும், எனது சொந்தமெய்ஞ்ஞானத்தையும் ஆதாரமாகக்கொண்டும், சிவஞான போதச்சூத்திரங்களுக்கு ஸ்ரீசிவஞானசுவாமிகள் இயற்றியுள்ள சிற்றுரையின் பிண்டப்பொழிப்புரைகளையும், தமிழகராதியையும் துணையாகக்கொண்டும் இவ்வுரைஇயற்றியுள்ளேன்.” (ப.28, இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.யின் சிவஞானபோதஉரை, ப.ஆ. செ.திவான், செப்.2008) சிவஞானபோத உரையில் குறிப்பிட்டுள்ளார்.

“மெலிந்தஉடம்பொடும் நலிந்தமனமொடும் மெய்ப்பொருள்தொழுது மெய்ப்பொருள்கண்டு மெய்ப் பொருள்ஆகி விளங்கினேன் சிலநாள்” (ப.152, வ.உ.சிதம்பரனார்வாழ்க்கைவரலாறு) இதுமட்டும் இல்லாமல் சுயசரிதையிலும் தான் மெய்ஞ்ஞானம் பெற்ற நிலையைப் பதிவுசெய்துள்ளார்.

வ.உ.சி.யின் சொற்பொழிவுகளையும், நூல்களையும் (மெய்யறிவு, மெய்யறம், பாடல்திரட்டு, சுயசரிதை) உற்றுநோக்கினால் அவர்சமயம் சார்ந்த கருத்துகளால் பெரிதும் ஈர்க்கப்பட்டார் என்பது புலனாகும். அவருள் சமயக்கருத்துகள் பெரும்பாதிப்பை ஏற்படுத்தின. சமயக் கருத்துகளை உள்வாங்கிக்கொண்டு, அதில் உள்ளதை உள்ளவாறே ஏற்றுக்கொள்ளாமல் பாகுபாடுகளை உண்டாக்கும் கருத்துகளை விலக்கி, மக்களின் ஒற்றுமையையும், உயர்வையும் உண்டாக்கும் சமயக்கருத்துகளை ஏற்றுக்கொண்டதே வ.உ.சி.யின் மெய்ஞ்ஞானம். இக்கருத்தை வ.உ.சி. சிவஞானபோத உரையில் இடம்பெற்ற சிவஞானபோத வரலாற்றுப் பகுதியிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

“சிவஞானபோதச் சிற்றுரையால் யான்கண்டஉண்மை: இவ்வுலகத்தின் கண்தோன்றி நிலவுகின்ற சமயங்கள்பல. அவற்றுள், கடவுள் இல்லை யென்று சொல்லும் சமயம் ஒன்று. அதனை நாஸ்திகசமயம் என்பார் ஆன்றோர். மற்றைய சமயங்களெல்லாம் கடவுள்உண்டென்று சொல்பவைகளே. அவற்றை ஆஸ்திகசமயம் என்பர்ஆன்றோர். நாஸ்திகசமயத்தினர் அண்டங்களின் அமைப்பும், ஒவ்வோர் அண்டத்திலும் சிருஷ்டி, சம்ஹாரம் ஒழுங்காகநிகழ்ந்து வருதலும் இயற்கையின் சக்தியால் என்றுசொல்லுகின்றனர். ஆஸ்திகசமயத்தினர்களோ அவைகளெல்லாம் ஒழுங்காகநிகழ்ந்து வருதல் கடவுள்சக்தியால் என்று சொல்லுகின்றனர். நாஸ்திகரது இயற்கையைத்தான் ஆஸ்திகர்கடவுளென்று கூறுகின்றனரென்று நாஸ்திகரும், ஆஸ்திகரது கடவுளைத்தான் நாஸ்திகர் இயற்கையென்றுகூறுகின்றனரென்று ஆஸ்திகரும் கொள்வரேல், இவ்விருசமயங்களுள்ளும் வேற்றுமையில்லை ( ப.47, இலக்கியப்புரட்சியாளர் வ.உ.சி.யின் சிவஞானபோதஉரை, ப.ஆ. செ.திவான்- 2008 ) என்ற வ.உ.சி.யின் உள்ஆழத்தை நுட்பமாகப்பார்க்கவேண்டும். அவர்தம் மெய்ஞ்ஞானத்தை ஆத்திகத்திலிருந்து மட்டும் பெறவில்லை.

நாத்திகத்திலிருந்தும் பெற்றார் என்பதை அவருடைய கருத்தின்வழியே அறிந்துகொள்ளமுடிகிறது. கடவுள் உலகத்தைப்படைத்துக் காப்பவன் என்பதுகடவுள் ஏற்பாளர்களின்வாதம். இயற்கையே காரணம்என்பது கடவுள்மறுப்பாளர்களின் வாதம். இருசாராரின் கருத்துகளையும் நடுநின்று அலசி ஆய்ந்து பார்த்து ஏற்பனவற்றை ஏற்றுவ.உ.சி.யின் செம்மையான மனப்பக்குவத்தை உளம்கொள்ளவேண்டும். இதுமட்டுமின்றிக் கடவுள்ஏற்பாளர்களில் சைவம், வைணவம் உள்ளிட்ட பலபிரிவினர்கள் தத்தம்சமயத்திற்கு உயர்வு சேர்க்கும் கருத்துகளையும் இறைநெறிகளாகக் கட்டமைத்தனர் என்பதை,

"இவ்வுலகத்திலுள்ள ஆஸ்திக சமயத்தார்களெல்லாம் தத்தம் சமயக்கடவுள் சர்வசக்தியும், சர்வஞானமும், சர்வவியாபகமும் வாய்த்தவரென்று ஒப்புக்கொண்டும், ஒவ்வோர் ஆஸ்திகசமயத்தினரும், தத்தம்சமயமே மெய்யான அல்லது உயர்ந்த கடவுளென்றும், மற்றைய சமயங்களெல்லாம் பொய்யான அல்லது தாழ்ந்த சமயமென்றும், மற்றைய சமயக்கடவுளெல்லாம் பொய்யான அல்லது தாழ்ந்தகடவுளென்றும் கூறிவேறுபடுகின்றனர். சர்வசக்தியும், சர்வஞானமும், சர்வவியாபகமும் உள்ள பொருள் ஒன்றுதான் இருக்கமுடியுமே யன்றி, ஒன்றற்குமேல் இருக்கமுடியாதென்பது அறிவுடைய ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளத்தக்க உண்மை ( ப.47, வ.உ.சி. மேலது ) என்பதை வ.உ.சி. துணிவோடு பதிவு செய்திருக்கிறார். சமயங்களில் உள்ள 'ஒருமைநிலையை' உணர்ந்து கொண்டதே வ.உ.சி.யின் மெய்ஞ்ஞானம் என்று உறுதிப்படக்கூறலாம். அதேநேரத்தில், அக்கட்டமைப்பைக் கண்மூடித்தனமாக எதிர்க்காமல், அவற்றில் உள்ள நேர், எதிர்க்கருத்துகளை உள்வாங்கி, மக்கள் நலனிற்கு உகந்தவற்றைக் கொண்டும், மக்கள் நலனிற்குத் தீங்கிழைப்பதனை விலக்கவும் செய்தார். அதேபோல, நாத்திகர்களின் வாதங்களில் உள்ளடங்கிய நேர்/எதிர்க் கருத்துகளை உள்வாங்கி மக்களின் வளர்ச்சிக்கான கருத்தை ஏற்றுக் கொண்டதும், வ.உ.சி.யின் தனிச்சிறப்பான பண்பாகும்.

நாத்திகம், ஆத்திகம் என்ற எதிரெதிர் நிலைகளில், ஒன்றைப் பற்றிக்கொண்டு, பற்றிக்கொண்ட காரணத்தால், அதில் உள்ள முரண்களை ஏற்றுக்கொள்ளும் நிலைப்பாட்டிலிருந்து விலகி, இரண்டிலும் உள்ள நேர்/எதிர் கருத்துகளை அலசி ஆராய்ந்து பார்த்து நீதியை ஏற்றும், அநீதியைப்புறந்தள்ளியும் சார்பற்றநிலையில் நிற்பது வ.உ.சி.யின் தனித்தன்மை.

"புதுமைநாட்டமும் மக்கள்நலமும் மனத்தில்கொண்ட வ.உ.சி. கடுஞ்சைவத்தைக் கடுமையாக எதிர்கொண்டிருக்கிறார். இருப்பினும், ஒருஎல்லைக்குட்பட்ட அவருடைய சீர்திருத்த எண்ணங்கள். வேதாந்தத்தோடு (வைதீகம்) சித்தாந்தத்தைச் சமரசம் காண வைத்துள்ளன என்பதை சி.சு. மணிதம் ஆய்வுரையில் நுட்பமாக விளக்கியுள்ளார். ஆனால்,

அதேவேளையில் சித்தாந்திகளால் கடுமையாக மறுக்கப்பட்ட நாத்திகக்கொள்கையினையும் அணைத்துச்செல்லவ.உ.சி. முயன்றிருக்கிறார் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது". ( ப.26, வ.உ.சி.யின் சிவஞானபோத உரை என்ற நூலில் வ.உ.சி.யும் சைவ சித்தாந்தமும் என்றதலைப்பில் ஆ.இரா.வேங்கடாசலபதி எழுதியிருப்பது பொருத்தமாக இருக்கிறது. ) வ.உசி.யின் மெய்ஞ்ஞானத்தை இந்நிலையிலிருந்து புரிந்துகொள்ள வேண்டும். மேற்கூறிய ஆத்திகம் அல்லது நாத்திகத்தில் ஏதேனும் ஒன்றைக் கைக்கொண்டு, ஒருசாரார்பக்கம் நின்றால், வாழ்க்கை வசதிகளும், புகழும் கிடைத்திருக்கும். ஆனால், சில கருத்துகளோடு முரண்பாடு ஏற்பட்டால், அதனை வெளிப்படுத்தமுடியாமல் சமரசம்செய்துகொண்டு, அதற்கான நியாயங்களைச் சொல்லிக்கொண்டு இருக்கவேண்டியிருக்கும் என்பதை வ.உ.சி. தெளிவாக உணர்ந்திருந்தார்.

'ஆராலும் என்னைஅமட்டஒண்ணாது' என்ற என்னுடைய கட்டுரையில் (தொகுப்பாசிரியர்ஆ.அறிவழகன், ஆராலும் என்னைஅமட்ட ஒண்ணாது, 2021) வ.உ.சி.யின் மனஉறுதிக்குத் திருமூலரின் திருமந்திரமே காரணம் எனஎழுதியிருந்தேன். ச.தமிழ்ச்செல்வன் இக்கருத்தை மறுத்து, தாமரை இதழில் எழுதியிருந்தார். வ.உ.சி.யின் மனஉறுதிக்குத் திருமூலரின் திருமந்திரமும் துணைநின்றிருக்கிறது என்றுகருத இடமிருக்கிறது. சைவ மரபினராகப் பிறந்ததால் சைவசித்தாந்தம் இயல்பாகவே அவர்மனத்தை ஊடுருவிமெய்ஞ்ஞானபாய்ச்சலுக்குத் துணையாக இருந்திருக்கும். சைவக்குடும்பத்தில் பிறந்தது மட்டுமன்றி, சைவசித்தாந்த நூல்களைக் கற்றும், சைவசித்தாந்தசபைகளில் சொற்பொழிவாற்றியதையும் (திருமந்திரநகர் சைவ சித்தாந்த சபையின் இருபத்திரண்டாவது வருடபூர்த்திக்கொண்ட மகாசபை அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் பொ.பாண்டித்துரைத்தேவரவர்களை (1905) வாழ்த்திவழுத்திய ஆசிரியப்பா) சிவஞானபோதத்திற்கு உரை எழுதியும் சான்றாகக் கொண்டு பார்க்கும்போது, வ.உசி.யின் மெய்ஞ்ஞானப்பார்வையைத் தெளியமுடியும். திருமூலரின் திருமந்திரமும் வ.உ.சி.யை ஆழமாகப்பாதித்தது என்பதற்கு, தைமாதம் 1936-ல் 'ஊழியன்' இதழில் வ.உ.சி. எழுதிய 'கடவுளைக்காண்டல்' என்ற கட்டுரை (ப.91, வ.உ.சி.யின் சிவஞானபோத உரை ப.ஆ. ஆ.இரா. வேங்கடாசலபதி, 2022 ) சான்று.

இக்கட்டுரையில் உலகத்திற்கும்கடவுளுக்கும் இடையிலான தொடர்பைக் கூறும் திருமந்திரப்பாடலைக் குறிப்பிட்டு;

மரத்தை மறைத்தது மாமத யானை;
மரத்துள் மறைந்தது மாமத யானை;
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்;
பரத்துள் மறைந்தது பார்முதற் பூதமே. ( 2264 )

கடவுளுக்கும், உலகத்திற்குமுள்ள தொடர்பைவிளக்குகிறார். கடவுள், ஞானம்என்பதற்கு, திருவள்ளுவரின் கருத்தின்துணைகொண்டு, “(இவ்வுலகத்திலுள்ள) எந்தப்பொருள் எந்தவடிவோடு தோன்றினாலும் அப்பொருளின்கண் (அப்பொருளுக்குஆதாரமாயுள்ள) மெய்ப்பொருளைப் பார்ப்பதே கடவுளின்வடிவேயென்பதும், ஒவ்வொன்றிற்கும் ஆதாரமாயுள்ளது கடவுளேயென்பதும் வெளிப்படை. ஆதலால் யான் உலகப் பொருள்களுக் கெல்லாம் ஆதாரமாயுள்ள மெய்ப்பொருளை என் அறிவால் அறிகின்றேன்; உலகப்பொருள்களையெல்லாம் கடவுளின்வடிவாக என் கண்ணால் காண்கின்றேன்; என் மனத்தால் நினைக்கின்றேன்; என் வாக்கால் சொல்கின்றேன். நண்பர்களே! என்னைப்போலவே நீங்கள் ஒவ்வொருவரும் கடவுளை உங்கள் அறிவால் அறியலாம்; கடவுள்வடிவை உங்கள்கண்ணால் காணலாம்; உங்கள் மனத்தால் நினைக்கலாம்; உங்கள் வாக்கால் சொல்லலாம்'' என்ற இடத்தைச் சென்றடைந்தார். இதற்குமேலும் ஒருபடிமேலே சென்று அறிவாளிகள் தான் கடவுள் என்றநிலைக்குச் செல்கிறார். கைவல்யம், ஞானவாசிட்டம், சிவஞானபோதம், திருக்குறள், திருமந்திரம், ஜேம்ஸ்ஆலன் (மேல்நாட்டு மெய்ஞ்ஞானி) என மிக நீண்டதூரம் இறையியல் நெறிகளையும், மெய்ஞ்ஞானத்தையும் உள்வாங்கியவராகிய வ.உ.சி. கடவுள் குறித்துப்பின் வருமாறு கூறுகிறார்:

“யான் என்று நினைக்கும் அறிவணுக்கள் பல நினைப்பை விடுத்தபின் அவ்வறிவணுக்கள் ஒன்றேயாம். அவ்வுண்மைபற்றியே திருமூலரும் “சீவனெனச் சிவனென்ன வேறில்லை; சீவனார் சிவனாரை யறிகிலர்; சீவனார் சிவனாரையறிந்தபின்; சீவனார் சிவனாயிட்டிருப்பரே” என்று திருவாய் மலர்ந்தருளினார். ஆதலால், உயிர்கள் வெவ்வேறாய்ப் பலவாயிருப்பினும், அவை, கடவுளையுணர்ந்தபின் கடவுளோடு ஐக்கியமாய் கடவுளேயாகி நிற்கும்” ( ப.25, வ.உ.சி. ‘உலகமும் கடவுளும்’ கட்டுரை, துன்பத்தின் கற்பனை, தொ.ஆ. செ. திவான், ஜனவரி 1999 ).

வ.உ.சி.யின் வாழ்க்கையைச் சிறைக்குச்செல்வதற்கு முன், சிறையிலிருந்தது, சிறையிலிருந்து விடுதலையான பின்பு என மூன்றாகப் பிரிக்கலாம். 1908 ஆம் ஆண்டு திருநெல்வேலி எழுச்சியை முன்னின்றுநடத்திய போது இருந்த வ.உ.சி., தன் எதிர்ப்புணர்வை மடைமாற்றம் செய்துகொண்டாரே ஒழிய, அதிலிருந்து பின் வாங்கவில்லை. ஆங்கிலேய எதிர்ப்பின் காரணமாகத் தன்பொருளாதாரத்தை இழந்த வ.உ.சி., இறுதியாகத் தமிழ்நூல்களைப் பதிப்பிப்பதோடு சமயப்பணியிலும் ஈடுபட்டாலும், உண்மைநெறியிலிருந்து சற்றும்விலகவில்லை. சமயங்கள் குறித்த கருத்துகளை நன்கு அறிந்தவராக இருப்பினும், தன்சொந்த வசதி கருதி, எந்தவொரு சமயத்தையும் தூக்கிப் பிடிக்காமல், சமயங்களின் ஊடாகத் தான் அடைந்த மெய்ஞ்ஞானத்திலிருந்து, தான் கண்டஉண்மையை வெடிப்புறக்கூறினார்.

தனக்குப் பொருளாதாரப்பிரச்சனை இருந்தும், அதன் பொருட்டுச் சாய்வு இல்லாமல், ஒருநெறியில் நின்றதே வ.உ.சி.யின் சிறப்பு. எந்த வொன்றின் மீதும் எதிர்பார்ப்போ, தத்தளிப்போ இல்லாமல் தன் கொள்கையில் உறுதியாக இருந்தார். வெறும் நூல்களை மட்டும் கற்று, வாழ்க்கையை எதிர்கொண்டவரல்லர். ஆங்கிலேயர் அலறும்வண்ணம் மிகப் பெரியபோராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்திய துணிச்சல் மனம் கொண்டவருக்கு, தத்தளிப்பு எண்ணம் வருவதற்கு வாய்ப்புக் குறைவு. களப்போராளியாக இருந்தவருக்கு, தான் எதிர்கொண்ட அனுபவத்தின் கனம் தெரிந்திருக்கும். புத்தகங்களை மட்டுமே படித்துவிட்டு எழுதுபவர்களுக்கும், களப்போராளியாக இருந்துகொண்டு எழுதுபவர்கள் கருத்துகளுக்கும் வேறுபாடு இருக்கும்.வழக்கறிஞராகப் பணியாற்றிய அனுபவம் மிக்கவராதலால், தன்திறமையான வாதங்கள் மூலம் ஆங்கிலேயரையே அலறவைத்தவருடைய சிந்தனையில் மேகமூட்டம் இருந்திருக்காது. எவ்வுயிரிடத்தும் அன்பாயிரு! எல்லோரும் ஓர்குலம் என்பதே வ.உ.சி.யின் கொள்கை என்ற (திரு.வி.க. வின் கருத்தை மேற்கோள் காட்டி) உண்மையில் இதுவே வ.உ.சி.யின் சமய நெறி என்ற ஆ. சிவசுப்பிரமணியனாரின் (காக்கைச் சிறகினிலே, நவம்பர் இதழ்) கருத்தைக் கவனத்தில் கொள்ளவேண்டும். மேற்கண்ட சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு, கட்டுரையின் முடிவாக “மக்களின் அறியாமையை நீக்கி, அடிமை உணர்வை விலக்கி, அலைபாயும் மனதைச் செம்மையாக்கி, ஒழுக்க நெறியை மேற்கொள்ள வைப்பதே வ.உ.சி.யின் மெய்ஞ்ஞானம்.

☆ ☆ ☆

# அரசியல் அரிச்சந்திரன்

கவிஞர் சுரதா

கூன்விழுந் திருந்த நாட்டின்
கூனலை நிமிர்த்த வந்த
வான்புகழ்த் தலைவ ரான
வ.உ.சி. புரட்சி செய்ய
நான்வரு கின்றேன் என்று
நவின்றவ ராவார். இன்பத்
தேன்சுவைக் கவிஞ ராவார்.
தென்னாட்டுத் திலக ராவார்.

வடக்கே ஓர்திலகர்; தெற்கே
வ.உ.சி. இல்லை என்றால்
விடுதலை வேக மிங்கே
வீழ்ச்சியுற் றிருக்கும். மேலும்,
படிக்கட்டு தன்னில் குந்திப்
பழங்கதை பேசும் நாட்டில்,
கொடுப்பதை வாங்கும் பிச்சைக்
கொள்கைதான் வளர்ந்தி ருக்கும்.

கொட்டாவித் தலைவ ரெல்லாம்
குனிந்துகொண் டிருந்த நாளில்,
வெட்டாத வாளும்; நன்கு
விளையாத நிலமும்; கைக்கே
எட்டாத கனியும் காயும்
இருந்தென்ன? வெள்ளைக் காரன்
பட்டாளம் என்ன செய்யும்
பார்க்கின்றேன் ஒருகை என்றார்.

வெள்ளாட்டின் தலையைக் காட்டி
ஓநாயின் கறியை விற்கும்
கள்ளிமுள் நெஞ்சம் கொண்ட
கயவர்வாழ் உலகில், அந்தப்

பிள்ளையோ தூய்மை யான
பிள்ளைப்பால் போன்றி ருந்தார்.
வெள்ளியா கறுக்கும், கட்டி
வெண்ணையா நீரில் மூழ்கும்?

இன்றுள்ள தலைவ ரெல்லாம்
ஏதேதோ செய்து செய்து,
குன்றுபோல் செல்வம் சேர்த்துக்
குவிப்பதாய்ச் சொல்கின் றார்கள்.
அன்றைய தலைவர் பிள்ளை
ஆதலால், பணமோ காசோ
ஒன்றுமே சேர்த்தா ரில்லை!
உயர்ந்தவன் புகழ்தான் சேர்ப்பான்.

கனிதரும் மரங்கள், அந்தக்
கனிகளைப் புசிப்ப தில்லை.
தனிச்சுடர் வழங்கும் தீபம்
தனக்காக எரிவ தில்லை.
மனிதருள் சிறந்தோ ரெல்லாம்
மற்றவர்க் காக வேண்டி
அனைத்தையும் இழப்பர். வாழ்வில்
அனைத்தையும் இழந்தார் பிள்ளை.

தகுதியும் திறனும் கொண்ட
தலைவனே வெற்றி காண்பான்.
அகரமே முதலில் நிற்கும்
அவர்நின்றார். சிறந்த முத்து,
மகரமீன் தலையி லன்றி
மற்றமீன் தலையில் என்றும்
அகப்பட்டு விடுவ தில்லை
அவர்போன்றோர் இப்போ தில்லை!

☆ ☆ ☆

# சுதேசியம் ஒன்றே சுகம்பல அளிக்கும்

முனைவர் **யாழ்.சு.சந்திரா**

செகமெலாம் புகழ் சுதேசிக்கு இறைவன் இவனே
சிதம்பரச் செயசிங்கமே

என்ற தொடர் சிதம்பரனாருக்குச் சுதேசியத்தின் மீதிருந்த கொள்கைப் பிடிப்பை, செயற்பாட்டின் சிறப்பைக் காட்டுகிறது எனலாம். திரு.தெய்வநாயகம்பிள்ளை எழுதிய ஜெயவீர சிந்து என்ற படைப்பில் இடம்பெறுகிறது இத்தொடர். (திவான்.செ., வ.உ.சி. புகழ்பாடிய முன்னோடிகள், ப.16) ஆம். வந்தேமாதரம் என்ற மந்திரச்சொல்லை மாநிலம் முழுதும் ஒலித்தமையால் வந்தேமாதரம்பிள்ளை எனப் போற்றப்பட்ட சிதம்பரனார் சுதேசிப்பிள்ளையாகப் பேருருக் கொண்டமையை ஆய்வின் செல்நெறியில் காண்போம்.

## சுதேசியம் : பொருள்

சுதேசியம் என்ற சொல்லுக்கு, தனது நாட்டில் செய்த பொருள் எனத் தமிழ் அகரமுதலி பொருள் தருகிறது. ‘சுதேசியம்’ என்பது சொந்த நாடு எனச் சென்னைப் பல்கலைக்கழக லெக்சிகனும் ஷே.பி. பேப்ரியஸ் தமிழ் ஆங்கில அகராதியும் பொருள் தருகின்றன. மேலும் சுதேசியம் என்பது நாட்டிற் செய்த பண்டம் எனத் தமிழிலும் என ஆங்கிலத்திலும் பொருள் தருகிறது, பேப்ரியஸ் அகராதி.

சுதேசி, சுதேசம், சுதேசியம் என்ற சொற்கள் அந்நியர், நமது தேசத்தை ஆண்டபோது உருவான ஒரு சொல்லாகும். அந்நியர் ஆட்சியில் நமது நாட்டில் பிறந்தவர்களைச் சுதேசி என்றனர். நாம் பிறந்த மண் சுதேசம் எனப்பட்டது. உள்நாட்டில் உற்பத்தி செய்தலும், செய்யப்பட்ட பொருள்களும் சுதேசியம் என்ற சொல்லுக்குள் சுழல்கின்றன எனலாம். இந்திய நாட்டின் அடிமைச் சூழலில் உருவான இச்சொல் இந்திய விடுதலைப் போராட்டத்தின் அடிநாதமாக அமைந்தது எனலாம்.

## சுதேசி இயக்கம்:

1905-ஆம் ஆண்டு அக்டோபர் 16-ஆம் நாள் வைஸ்ராய் கர்ஸான் பிரபுவினால் ஏற்படுத்தப்பட்ட வங்கப்பிரிவினை நாடு முழுவதுமான சுதந்திரப் போராட்ட இயக்கத்திற்குப் பெரும் எழுச்சியை அளித்தது எனலாம். மேலும் பிரிட்டிஷாரின் பிரித்தாளும் சூழ்ச்சியையும் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தியது எனலாம். பேரெழுச்சி கொண்ட வங்கத்தில் வந்தேமாதரம் என்ற முழக்கமும் சுதேசியம் என்ற கோட்பாடும் எழுந்தன.

1906-ஆம் ஆண்டு கல்கத்தாவில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் சுதேசியக் கோட்பாடு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. தாதாபாய் நவ்ரோஜி தலைமையில் நிறைவேறிய இத்தீர்மானத்தில், முழுமையான விடுதலை அடைய அந்நியப் பொருள்களைப் புறக்கணிப்பதும் உள்நாட்டில் பொருள்களை உற்பத்தி செய்வதும், நமது நாடு சார்ந்த கல்வி முறைகளைச் செயற்படுத்துவதும் அடங்கியிருந்தன.

சுதேசி இயக்கம் பற்றிய தீர்மானத்திற்கான செயற்பாடுகளில் காங்கிரஸ் பேரியக்கத் தலைவர்கள் வேறுபட்டனர். இந்தத் தீர்மானம் சார்ந்த இயக்கம் தற்காலிகமானது எனவும் பகிஷ்கரிப்பு என்பதனைப் பிரிட்டிஷ் அரசாங்கம் தவறாகப் புரிந்து கொள்ளக் கூடாது எனவும் எண்ணினர். அதாவது எதிர்ப்பினைப் பெரிதாக வெளிப்படுத்த மிதவாதிகள் ஆர்வம் கொள்ளவில்லை.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மீதான எதிர்ப்பினைத் தீவிரமாகவும் வெளிப்படையாகவும் காட்ட முற்பட்டவர்கள். தீவிரவாதிகள் எனவும், புதிய கட்சியினர் எனவும் அடையாளப்படுத்தப்பட்டனர். இந்தத் தீவிரவாதப் பிரிவில் திலகர், பிபின் சந்திரபால், லாலா லஜபதிராய், அரவிந்தர் ஆகியோர் இருந்தனர்.

சுதேசி இயக்கம் பற்றி, புறக்கணிப்பு என்பது யுத்தத்திற்கு ஒரு மாற்றாகும். தென்னாப்பிரிக்காவில் போயர்கள் யுத்தம் தொடுத்தது போல் நாங்கள் யுத்தம் தொடுக்க இயலாது. எங்களுக்கு அடுத்து வாய்த்த சிறந்தவழி பிரிட்டிஷ் சாமான்களை வாங்க மறுப்பதேயாகும். இதுவே சுதேசி, பகிஷ்கார இயக்கத்தின் பின்னேயுள்ள உணர்வோட்டமாகும் எனத் திலகர் விளக்கம் அளிக்கிறார். ( மணி. பெ.சு., (மொ.ஆ.), நவபாரதச் சிற்பிகள் வ.உ.சிதம்பரம்பிள்ளை, ப.81). இவ்வாறு உருவான சுதேசி இயக்கம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது என்பது வரலாற்றின் பதிவாகும்.

## சென்னை மாகாணத்தில் சுதேசி இயக்கம்:

அன்றைய சென்னை மாகாணம் என்பது தமிழகம் மட்டுமல்லாமல் ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களின் சிலபகுதிகளை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது. சுதேசி இயக்கத்தைத் தமிழகத்தில் சென்னை மாகாணத்தில் முன்னெடுத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர், ஜி. சுப்பிரமணியஜயர் ஆவார். தமது இந்து, சுதேசமித்திரன் ஆகிய இதழ்கள் மூலமாகவும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும், சுற்றுப்பயணங்கள் மூலமாகவும் சுதேசி இயக்கப் பிரசாரத்தை நடத்தினார் (மேலது).

சென்னை சுதேசிய நிதியும் தொழிற்சங்கமும் எனும் அமைப்பினை உருவாக்கினார். இருபத்தியோரு வயதானவர்களை உறுப்பினராகச் சேர்த்துக்

கொண்டார். ஆண்டுச் சந்தா ரூபாய் மூன்றாகும். இந்த அமைப்பின் வழி நமது நாட்டின் கைத்தொழில்கள், மேலை நாட்டுத் தொழில் கற்றல், கற்றவற்றை நமது நாட்டில் உருவாக்குதல், என உற்பத்தி, வணிகம் ஆகியவற்றிற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தனர். மேலும் இவை தொடர்பான செய்திகளை மக்களிடம் சொற்பொழிவு மற்றும் துண்டு அறிக்கைகள் வழி வெளியிடவும் முற்பட்டனர்.

சென்னையில் செயற்பட்டு வந்த இந்த அமைப்பினைப் பற்றி பாரதியார் தமது இந்தியா இதழிலும் அரவிந்தர் தமது வந்தேமாதரம் இதழிலும் எழுதியுள்ளனர். ஜி. சுப்பிரமணிய ஐயரின் சுதேசமித்திரன் இதழில் பணியாற்றிய பாரதியும் அவரது நண்பர் சிதம்பரம்பிள்ளையும் ஐயருடன் சேர்ந்து சுதேசிய நிதிக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்து சென்னையில் சொற்பொழிவுகளை நிகழ்த்தி உள்ளனர். (மேலது, ப.84)

சுதேசியப் பொருள்கள் மற்றும் இயக்கம் சார்பான கருத்துக்களை மக்களிடத்தில் பரப்புவதற்காக 1907-ஆம் ஆண்டு தமது நண்பரும் சட்டக்கல்லூரி மாணவருமான வி.சக்கரைச் செட்டியாரைத் தலைவராகக் கொண்டு சுதேசி வஸ்து பிரசாரிணி சபை என்ற அமைப்பைப் பாரதியார் சென்னையில் உருவாக்கினார். ஒவ்வொரு வாரமும் சென்னையில் குறிப்பிட்ட இடங்களில் இச்சபையின் சார்பாகச் சுதேசக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டமையைப் பாரதியார் தமது இந்தியா இதழில் (08-06-1907) குறிப்பிட்டுப் பாராட்டுகிறார்.

சுதேசி இயக்கம் சார்பாகச் சென்னையில் பாரதியார் ஏனைய விடுதலை இயக்கத்தவரோடு இணைந்து பாலபாரத சங்கம் என்ற ஓர் அமைப்பினையும் உருவாக்கினார்.

வங்காளப் பிரிவினையின் நல்விளைவுகளுள் ஒன்றான சுதேசி இயக்கம் தமிழகத்தில் ஒரு புதிய எழுச்சியை உருவாக்கியது எனலாம். இவ்வாறு தமிழகத்தில் ஜி. சுப்பிரமணிய ஐயர், பாரதி முதலியவர்களது முன்னெடுப்பில் சிதம்பரனாரும் கைகோர்த்துள்ளார். அதாவது, தமிழகத்தில் சிதம்பரனார், பாரதி முதலிய நட்பு வட்டத்தினர் சுதேச இயக்கத்தை உருவாக்கியுள்ளனர் எனலாம். இந்தப் பின்னணியில் சிதம்பரனாரின் சுதேசியத்தைக் காணமுற்படுவது சரியான புரிதலை அளிக்கும்.

## சுதேசியம் அளிக்கும் சுகம்:

மரபார்ந்த சைவக் குடும்பத்தில் பிறந்த சிதம்பரனாருக்குத் தமிழ் இலக்கியம், திருமுறைகள், சித்தாந்த நூல்கள் ஆகியவற்றில் இயல்பாகவே பரிச்சயமிருந்தது. அவற்றோடு அக்காலகட்டத்தில் நெல்லை வட்டாரத்தில் எழுந்த வேதாந்தச் சூழலில் அவர் வேதாந்தப் பயிற்சியும் பெற்றிருந்தார்.

தமது அத்தையுடன் சென்னை சென்ற சிதம்பரனார் இராமகிருஷ்ண இயக்கத்தைச் சேர்ந்த துறவி இராமகிருஷ்ணானந்தரைச் சந்திக்க நேர்ந்தது. அச்சந்திப்பின்போது துறவி நாட்டிற்கு என்ன செய்தாய் என வினவினார்; எல்லாம் மாயை என வேதாந்தப் பற்றில் விடை தந்த சிதம்பரத்தை நோக்கி, சுதேசியத்தின் சுகத்தினைத் துறவி அறிவுறுத்துகிறார். அன்று சுதேசியம் என்னும் விதை சிதம்பரனார் உள்ளத்தில் முளைவிடத் தொடங்கிவிட்டது. இதனைச் சிதம்பரனார் தமது சுயசரிதையில்,

> இராம கிருட்டிணா னந்தனைக் கண்டேன்
> 'தராதலம் பரவிச் சாரும் சுதேசியக்
> கைத்தொழில் வளர்க்கவும் கைத்தொழில்
> கொள்ளவும் எத்தகை முயற்சி இயற்றினை' என்றான்
> "கனவினை நிகர்த்துக் காணும் இவ்வுலகின்
> நினைவினைக் கொண்டென்? நீள்வினை யாற்றியென்
> கீழ்கோ டுயர்ந்தென்? மேல்கோ டுயர்ந்தென்?
> வாழ்வோ தாழ்வோ மாய்கையே!" என்றேன்.
> "சுதேசியம் ஒன்றே சுகம்பல அளிக்கும்
> இதே என் கடைப்பிடை" என்றனன், அவனுரை
> வித்தென விழுந்தது மெல்லிய என்னுளம்;
> சித்தம் அதனைச் சிதையாது வைத்தது"

எனக் குறிப்பிடுகிறார். (அரசு.வீ., (தொ.ஆ.), வ.உ.சி. நூல் திரட்டு, ப.53)

அந்த ஆண்டு கார்த்திகை மாதம் ஜப்பான் தேசம் செல்லும் வழியில் தூத்துக்குடி வந்த இரு வங்காளிகள் வங்கதேசத்தில் வளரும் சுதேசி இயக்கம் பற்றி எடுத்து உரைத்தனர் எனவும் தமது சுயசரிதையில் சிதம்பரனார் குறிப்பிடுகிறார். மேலும், தூத்துக்குடித் துறைமுகத்தில் வந்து இறங்கிய அபேதானந்தர், பிரமானந்தர் முதலிய இராமகிருஷ்ண மடத்துத் துறவிகளுக்கு மிகப்பெரும் வரவேற்பை அளித்துள்ளார். இவ்வாறு வங்காளதேசம் சார்ந்த இராமகிருஷ்ணமடத்துத் துறவிகளால் தூண்டப்பட்ட சிதம்பரனார், தூத்துக்குடியில் சுதேசி இயக்கம் சார்பாகப் பல அமைப்புகளை ஏற்படுத்தினார். வழக்கறிஞராகத் தமது பணியை ஆற்றிய கப்பலோட்டிய தமிழருக்குப் பாரதி முதலிய நண்பர்களின் விடுதலை இயக்கம் மற்றும் சுதேசி இயக்கம் சார்பான செயல்பாடுகளும், அன்று தமிழகத்தில் வெளிவந்த இதழ்கள் (ஏனைய வெளிநாட்டிதழ்கள் பலவும்) மூலம் தெரிந்த செய்திகளும் சுதேசியச் செயற்பாடுகளுக்கு விதையாக விழுந்தது எனலாம்.

## சிதம்பரனாரின் சுதேசி அமைப்புகள்:

இராமகிருஷ்ணானந்தரால் சிதம்பரனார் உள்ளத்தில் விழுந்த சுதேசி

விதை கொஞ்சமாக முளைவிடத் தொடங்கியது. அதன் விளைவாகக் கைத்தொழில் வளர்சங்கம், தருமசங்கம் என இரண்டு அமைப்புகளைத் தூத்துக்குடியில் உருவாக்கினார். இந்த அமைப்புகள் பின்னர் சுதேசிப் பண்டகசாலை, தருமநெசவு சங்கச் சாலை, ஜனசங்கம் என வடிவம் பெற்றது. இந்தச் சுதேசிய அமைப்புகள் சுதேசி நாவாய்ச் சங்கம் என்ற கப்பல் நிறுவனத்தைத் தொடங்குவதற்கு முன்பே சிதம்பரனாரால் தொடங்கப்பட்டவை என்பது கருத்தில் கொள்ள வேண்டிய குறிப்பாகும்.

சுதேசியம் என்ற வித்து இரண்டிலை கொண்டு எழுந்த வித்தாகிப் பின் செழித்து வளர்ந்து கனி தந்தது என இந்தச் சுதேச அமைப்புகள் பற்றிச் சிதம்பரனார் தமது சுயசரிதையில்,

தூற்றுக் குடிசைத் தொழில்வளர் சங்கம்
சாற்றுதற் கரிய தருமசங்கம்
எனவிரண் டிலைகொண் டெழுந்ததவ் வித்து

எனவும்

... ... இறைவன் குணத்தொடு
தருமம் புரிதரக் கனிதரும் நமது
தரும சங்க நெசவு சாலை
நாடுசேர் சுதேசிய நாவாய்ச் சங்கம்
பாடுசேர் சுதேசியப் பண்டகசாலை

எனவும் குறிப்பிடுகிறார். (மேலது, பக்.53-54)

சுதேசியப் பண்டகசாலை என்பது நமது நாட்டில் உற்பத்தியான பொருட்களை வாங்கி மக்களுக்கு விற்பனை செய்கின்ற வணிக நிறுவனமாக இயங்கியது. இந்நிறுவனத்தின் விதிகளும் செயற்பாடுகளுமே சிதம்பரனாரின் கப்பல் நிறுவனத்திற்கு அடிப்படையாக இருந்தது எனலாம்.

தரும சங்க நெசவு சாலைக்காக ஒரு நூற்பாலையைக் கட்டி, சிதம்பரனார் வேலையைத் தொடங்கினார். ஆனால், அந்நிறுவனத்திற்கு முதலீடு செய்வதற்கு வாக்களித்த பலர் பின்வாங்கியதால், அந்த அமைப்பு செயற்படவில்லை என்பார் திறனாய்வாளர் (மணி.பெ.சு., மு.நூ., ப.88)

கப்பல் நிறுவனம் நிறுவிச் செயற்பட்ட சிதம்பரனார் மேல் இராஜநிந்தனைக் குற்றம் சாட்டிய ஆங்கிலேய அரசு அவருக்கு இரட்டை ஆயுள்தண்டனை விதித்துச் சிறைதண்டனை அளித்தது. விடுதலை பெற்று சென்னை வந்த செக்கிழுத்த செம்மல், 1921-ஆம் ஆண்டு அக்டோபர் 11-ஆம் தேதியன்று சென்னை விவசாயக் கைத்தொழில் சங்கம் லிமிடெட் என்ற அமைப்பை ஏற்படுத்தினார். இந்தச் சங்கத்தின் பங்கு ஒன்றின் விலை ரூபாய் பத்து ஆகும். அப்பங்குத் தொகையையும் பல தவணைகளாகச் செலுத்தலாம்

என விதிவகுத்தார். (ஆறுமுகம்.கெம்பு., வ.உ.சிதம்பரனார் வரலாறு, பக்.30-31) இவ்வாறு ஏழை எளிய விவசாயிகள், தொழிலாளர்களின் வாழ்க்கை உயர்த்துதற்குச் சுதேசியத்தை வழியாக்கினார். மேலும், சுதேசிக் கைத்தொழில்கள் மூலம் உற்பத்தியாகும் பொருட்களால் உள்நாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வாய்ப்பு ஏற்படும் எனக் கருதினார், சிதம்பரனார். தரிசாக இருக்கும் விளைநிலங்களைச் சங்கத்தின் வழியாக வாங்கி நவீனமுறையில் விவசாயம் செய்யவும் ஏற்பாடு செய்வதன் வழி வேலைவாய்ப்பும் தன்னிறைவும் பெறலாம் என எண்ணினார். இவ்வாறான முற்போக்குத் திட்டங்கள் அச்சங்கத்தின் நோக்கங்களாக அமைந்தன.

## சுதேசி இயக்கத்தில் செயல்பாடுகள்:

தமது சுதேசி இயக்கச் செயற்பாடுகளுக்காகவே, சுதேசிப் பிரச்சார சபை என்ற அமைப்பைச் சென்னையில் சிதம்பரனார் ஏற்படுத்தினார் என்பர் திறனாய்வாளர் (மேலது, ப. 31)

சுதேசி இயக்க வளர்ச்சிக்காகச் சிதம்பரனார் தமது மன, மொழி, மெய்யால் செயற்பட்டார் எனலாம். தமது சுயசரிதையில்,

வேலிபிடித்து வேறுளம் கொண்ட
போலிச் சுதேசியம் பொய்யுரை மிருகம்
நெருங்கிட விடாது. நினைவொடு காத்து
தர்க்கமெனும் தகுமண் வெட்டியால்
வர்க்கப் பாத்தி வரிசையாய்ச் செய்து
ஜகத்தினை என்றும் தன் வசப்படுத்தும்
அகத்தின் கேணியின் அருளின்நீரை
நாவெனும் துலாவால் நாளும் இறைத்து
'தா' எனும் இன்சொலின் தகளியால் வார்த்துப்
பலபல சங்கக் கிளையுடன் அச்செடி
வலனிதம் பெற்றிட மதிகொடு வளர்த்தேன்

எனக் குறிப்பிடுகிறார். (அரசு.வீ., மு.நூ., ப.54). அதாவது போலிச் சுதேசியம் நெருங்கவிடாது வேலி போடுகிறார்; நண்பர்களோடு இணைந்து தர்க்க மண்வெட்டியால் கொத்துகிறார்; தன் உள்ளத்தில் ஊறிய அருள் எனும் நீரை வார்க்கிறார்; சொற்பொழிவு எனும் துலாவால் அந்நீரை இறைக்கிறார்; பலரிடமும் பொருள் பெறுவதைத் தகளி என்கிறார். பல்வேறு கிளைச் சங்க அமைப்புகள் வழி சுதேசிய வித்து செடியாகிறது. இராமகிருஷ்ணானந்தர் ஊன்றிய சுதேசிய விதையை இவ்வாறு சிதம்பரனார் வளர்த்தெடுக்க, அது மூன்று கனிகளைத் ( தரும சங்க நெசவு சாலை; சுதேசிய நாவாய் சங்கம்; சுதேசியப் பண்டக சாலை) தருகிறது என உருவகப்படுத்தித் தமது சுதேசியச்

செயற்பாடுகளை விவரிக்கிறார். மேலும், பாரதி, ஜி. சுப்பிரமணிய ஐயர் உள்ளிட்டவர்களுடன் தொடக்கத்திலும் (1905 ரூ 1906களில்) வி.சக்கரைச் செட்டியார், முதலியவர்களுடன் பின்னரும் (1920-- 21களில்) செயற்பட்டார்.

சுதேசியம் பற்றி 1906-ஆம் ஆண்டு செப்டம்பர் 26-இல் மதுரை நகரில் பாண்டித்துரைதேவர் தலைமையில் சொற்பொழிவுகளைச் சிதம்பரனார் நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தகுந்தது ஆகும். (மணி.பெ.சு., மு.நூ., ப.92)

## சுதேசிபிமானம் கட்டுரை:

வள்ளிநாயகம் சுவாமிகள், மூ.ரா.கந்தசாமிக் கவிராயர் ஆகியவர்களுடன் இணைந்து சிதம்பரனார் நடத்திய விவேகபாநு இதழில் சுதேசபிமானம் என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றினை எழுதியுள்ளார். அக்கட்டுரை சிதம்பரனாரின் சுதேசியம் பற்றிய கொள்கை விளக்கம் எனலாம்.

சுதேசபிமானம் எனும் தொடர்மொழியானது சொந்த தேசத்தின் மீது அன்புடைமை எனப் பொருள்படும்' எனத் தொடங்கும் அக்கட்டுரையில் சுதேசம் என்ற சொந்த நாட்டிற்கு அவர் தரும் விளக்கம் தருக்க முறையிலான சிறப்புடையது.

... அவருக்குத் தெரிந்த வரையிலும் முதற்காரராயிருந்த முப்பாட்டன், முப்பாட்டி முதலிய முன்னோர் பிறந்த தேசமெதுவோ அதுவே அவருக்குச் சுதேசமெனலாம் என்கிறார். மேலும் அபிமானம் எனது அன்பு ...அ ன் பு என்பது தொடர்புடையார் மாட்டுத் துன்பம் கண்டவழி துக்கிக்கவும் சுகம் கண்டவழி சுகிக்கவும் காரணமாக நிற்குமோர் அகநிகழ்ச்சி யேயாம்' என்பார். இந்தச் சுதேசபிமான ஒவ்வொருவரிடமும் உள்ள இயற்கைக்குணம் என்று விளக்க முற்படுகிறார். இந்தச் சுதேசபிமானத்தை வெளிப்படுத்தும் சமயமாக தாயினும் மேலான தேசத்திற்கு நேரும் துயரைத் துடைப்பது என்கிறார்.

சுதேசத்தார்க்கு அன்னமின்னை, ஆடையின்மை, சுகமின்மை முதலிய வறுமை நேருங்கால் சுதேசாபிமானமுள்ள ஒவ்வொருவரும் அவரவராலியன்றவரை அன்னம், ஆடை, மருந்து முதலியவற்றை உதவி அவ்வறுமைகளை நிவர்ப்பதுடன் சுதேசத்தார் அவ்வறுமைகளைப் பின்னரும் அடையாது வாழும்படிக்கான செயல்களைத் தேர்ந்து செய்யவும் வேண்டும். சுதேசத்தில் கடவுள் ஞானம், கல்வியறிவு, பொருள் முதலியவற்றைச் சுதேசத்தார்க்கு அளிக்கவேண்டும். பலர்கூடி அன்னசாலை, ஆடைசாலை, வைத்தியசாலை, ஞானசபை, பள்ளிக்கூடம், கைத்தொழிற்சாலை முதலியன ஏற்படுத்திச் சுதேச வறுமைகளைப் பின்னர் வராது நீக்கவும் வேண்டும். ஆனால் சுதேசத்தார் சுயார்ச்சிதம் இழந்து அன்னியர்க்கு அடிமைப்பட நேருமானால்

அவ்வடிமைத்தனத்தினின்றும் அவரை நீக்கிச் சுயார்ச்சிதம் பெறுதற்குச் சுதேசத்தாரெல்லாரும் ஒன்றுகூடி ஒற்றுமையுடன் வேலை செய்ய வேண்டும் (ப.304)என விவரிப்பார்.

சுதேசபிமானத்திற்குத் தடையாயிருப்பது அவரவர் ஜாதியின் மீதும் மதத்தின் மீதும் கொண்ட பற்றும் என்று உரைக்கும் சிதம்பரனார் சுதேசம் சுகமாக வாழ நாமும் சுகமாக வாழ்வோம் என அடையும் பயனை எடுத்துரைக்கிறார். ( விவேகபாநு, பிப்ரவரி 1906, தொகுதி-5; புத்தகம். 2 )

## சிதம்பரனாரின் சுதேசியக் கொள்கை:

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வதே சிதம்பரனாரின் சுதேசியக் கொள்கையாக இருந்தது. ஆகவேதான் தனது மெய்யறம் நூலில் உழவு, வணிகம், கைத்தொழில் முதலிய உற்பத்தி சார்ந்த செயற்பாடுகளுக்குத் தனித்தனி அதிகாரங்களைத் தருகிறார்.

வித்திற்காமெரு மெத்த விடுத்தல்
வேர் செலும் ஆழம் ஏர் செல உழுதல்
விற்கத் தக்க விலையுடை யதுபொருள்
செலவெலாம் கூட்டிச் சிறிதேற்றி விற்றல்

என உழவையும்

வாணிகம் பண்ட மாற்று நற்றொழில்
கவெலாங் கூட்டிச் சிறிதேற்றி விற்றல்

என வணிகத்தையும்

மெய்யுறுப்புக் கொடு செய்வது தொழிலே
தொழிலை எனில் உலகழிவது திண்ணம்
தொழிலிலார் வறுமையுற்று அழிவெலாம் அடைவர்
படைக்கலம் அனைத்தையும் பண்பொடு பயில்க

எனத் தொழிலையும் எடுத்து விளக்குகிறார். (அரசு.வீ., மு.நூ., பக்.325 ரூ 345)

தனது கப்பல் நிறுவனத்தின் பங்குகளை இந்தியர் இலங்கையர் மற்றும் ஆசியர்களுக்கு மட்டுமே விற்க வேண்டும் எனவும் அவர்களுக்கு அத்தொழில் பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் விதிகள் வகுக்கிறார். ( மணி.பெ.சு., மு.நூ., ப.99 ) மேலும் கப்பல் ஓட்டும் தொழில், உருவாக்கும் தொழில் அவர்களுக்கு மட்டுமே பயிற்சி அளிப்பது, வியாபாரம் செய்வதும், ஏனைய சுதேசியக் கைத்தொழில்கள் செய்வது என எட்டு நோக்கங்களையும் குறிப்பிடுகிறார். இதன் மூலம் சுதேசியம் என்ற கொள்கையைக் கொண்டு இந்திய நாட்டினைத் தொலைநோக்குப் பார்வையுடன் வளரச் செய்வது சிதம்பரனாரின் வழிமுறையாக இருந்தமையை உணரமுடிகிறது.

## சிதம்பரனார் வாழ்வில் சுதேசியம்:

சென்னை ஜனசங்கம் சார்பில் தூத்துக்குடியில் உருவான ஜனசங்கத்தின் உறுப்பினர் விண்ணப்பபடிவம் சிதம்பரனாரின் அந்நிய நாட்டுப் பொருள்களின் புறக்கணிப்பு முறையின் விளக்கமாக அமைகிறது எனலாம்.

அடியில் கையொப்பமிட்ட நான் அந்நிய ஆடைகளை, சக்கரையை, எனாமல்புச்சுள்ள பாத்திரங்கள் மற்றும் அந்நியப் பொருட்களை முடிந்த அளவு முற்றிலுமாக பகிஷ்கரிப்பேன் என்று பற்றுறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன் (மேலது, ப.90) என்பது வெறும் ஏட்டளவில் இன்றி அவரது வாழ்விலும் நிகழ்ந்த ஒன்றாகும்.

வ.உ.சி.யின் ஜீவியசரிதச் சுருக்கத்தில், அவர் வீட்டில் ஒரு பரதேச சாமானைக்கூடக் காணமுடியாது. அவர் பல நாட்களாய் வைத்திருந்த கைகடியாரத்தைக்கூட ஒருவருக்குக் கொடுத்துவிட்டாரெனில், நாம் இனிக் கூறவேண்டுவதென்னவிருக்கிறது? அம்பட்டனிடம் சுதேசியக்கத்தி இல்லாவிடில் சவரம் செய்து கொள்ளாமலே இருந்துவிடுவார். பரதேசித்துணி தரித்தவன் முகத்தை நேராகப் பார்க்க மாட்டார். இதெல்லாம் வீராவேசப் பைத்தியம் என்று பலர் கருதுவார்கள். (ரெங்கையா முருகன் ரூ சக்ரா ராஜசேகர், வ.உ.சி. வரலாற்றுச் சுருக்கம், ப.35) என்ற குறிப்பு சொந்த வாழ்க்கையில் சிதம்பரனார் கைக்கொண்ட சுதேசப் பற்றிற்குச் சான்றாகிறது.

தான் சுதேசப் பொருட்களைப் பயன்படுத்துகிறேன் என்ற மண்டையம் ஸ்ரீநிவாசாசாரியாரைப் பாரதி சென்னையில் தங்கியிருந்த சிதம்பரனார் வீட்டிற்கு அழைத்துச் சென்று காட்டிய நிகழ்வு அவரது வாழ்க்கை வரலாற்றை எழுதிய ஆசிரியர்கள் பலராலும் குறிப்பிடப்படுகிறது. மேலும் தமது மெய்யறம் நூலின் முதற்பக்கத்தில், காகிதம், மை, கட்டுநூல் முதலியனவெல்லாம் சுதேசியம் என்று குறிப்பிடுவதும் இங்கு இணைத்து எண்ணத்தக்கதாகும்.

## முடிவுரை:

தொண்டின் திருவடிவமாகவும் தூயதமிழ்ப் பொன்னுருவமாகவும் திகழ்ந்த சிதம்பரனார் ‘சுதேசியம்’ என்ற கொள்கையைக் கண்ணெனப் போற்றினார்; உயிரென வளர்த்தார். அதனையே தமது வாழ்வாகவும் கொண்டார். ஆம். சுதேசியப்பிள்ளையாக உயர்ந்தார்; சிறந்தார்.

துணைநூற் பட்டியல்

1. அரசு.வீ., (தொ.ஆ.), வ.உ.சி.நூல்திரட்டு, புதுமைப்பித்தன் பதிப்பகம், 2002
2. ஆறுமுகம்.கெம்பு, வ.உ.சிதம்பரனார் வரலாறு, செந்தூரான் பதிப்பகம், 1991

3. குருசாமி மயில்வாகனன், கப்பலோட்டிய கதை, நிவேதா பதிப்பகம், 2021
4. திவான்.செ., (தொ.ஆ.), - வ.உ.சி. புகழ்பாடிய முன்னோடிகள், ( சுஹைனா பதிப்பகம், 1999 )
5. மணி.பெ.சு., (மொ.ஆ.) நவபாரதச் சிற்பிகள் வ.உ.சிதம்பரம்பிள்ளை, பப்ளிகேஷன்ஸ் டிவிஷன் செய்தி ஒலிபரப்பு அமைச்சகம், 1995
6. ரெங்கையா முருகன் ரூ சக்ரா ராஷசேகர் (ப.ஆ.ள்) வ.உ.சி. வரலாற்றுச் சுருக்கம், சக்ரா பதிப்பகம், 2021
7. இந்தியா இதழ்கள் தொகுப்பு
8. விவேகபாநு இதழ்கள் தொகுப்பு

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

தொ.ஆ - தொகுப்பு ஆசிரியர்
ப.ஆ - பதிப்பு ஆசிரியர்
மொ.ஆ - மொழிபெயர்ப்பு ஆசிரியர்

☆ ☆ ☆



# புத்தகப் பேழை




தோழர் **பொழிலன்** அவர்கள் அரிதின் முயன்று தமிழ்நாடு குறித்துப் பல்வேறு தரவுகளைத் தொகுத்து இந்நூலில் வழங்கி உள்ளார். தமிழ்நாடு குறித்துத் திரு.வி.க., சாமி சிதம்பரனார், பூபேசு குப்தா, பெரியார், ஜீவா, மணலி கந்தசாமி, பாவாணர், பாரதிதாசன், பெருஞ்சித்திரனார் போன்ற பல்வேறு அறிஞர்களது கருத்துக்கள் பதிவிடப் பட்டுள்ளன.

தமிழ்நாட்டு வரலாற்றில் தமிழ் - தமிழ்நாடு குறித்து கி.மு. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.2020 வரை மேற்கொள்ளப்பட்ட பல்வேறு முன்னெடுப்புகளை வரிசையாக இந்நூல் அறியத்தருகிறது.

தவிரவும், பழந்தமிழ் வேளிர்கள், கழகக்கால நாட்டுப் பிரிவுகள், வரலாற்றுக் காசுகள், இலக்கியச் செய்திகள், தமிழ்நாட்டு நீர்நிலைகள் போன்ற எண்ணற்ற தரவுகளும் இதில் உள்ளடங்கி உள்ளன.

பக்கங்கள் -- 368 விலை -- உரு.450.
தொடர்புக்கு --
86080 68002,
90929 48002.

வெளியீடு - மன்பதை பதிப்பகம், சென்னை

**மூ. அப்பணசாமி,** அவர்கள் நாடறிந்த எழுத்தாளர், ஆய்வாளர். சிறந்த மார்க்சியச் சிந்தனையாளரான டி.டி. கோசம்பி அவர்களது வாழ்வு மற்றும் ஆய்வு குறித்து வெளியாகியுள்ள கோசாம்பி குறித்து ஆ. சிவசுப்பிரமணியன் / ந. முத்து மோகன் / சௌ. குணசேகரன் / க.காமராசன் ஆகியோரது காத்திரமான கட்டுரைகளையும் இந்நூல் உள்ளடக்கி உள்ளது.

கோசம்பியின் வாழ்க்கையை மிக விரிவாக விவரிப்பதோடு, அவரது பல்வேறு அடர்த்தி மிகு சிந்தனைகளையும் செறிவாகப் பதிவு செய்துள்ளது.


தமிழில் கோசாம்பி குறித்து இவ்வளவு விரிவான நூல் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. அந்த வெற்றிடத்தை நிரப்பும் காலப் பொருத்தப்பாடு மிக்க இந்நூல், அறிவுப்புலத்தில் புதிய திறப்புகளை நல்கக் கூடியதாக விளங்குகிறது.

பக்கங்கள் -- 304 விலை - உரூ.400

தொடர்புக்கு -- 98400 27712 88389 69909.

வெளியீடு - ஆறாம் திணை, சென்னை







டெர்சு உஸாலா எனும் பயணக்குறிப்பு நூல், இரசிய மொழியிலிருந்து ஆங்கிலம் வழியாக முதன்முறையாகத் தமிழில் மொழிபெயர்க்கப் பட்டு வெளியாகி உள்ளது. 1902. 1906. 1907 ஆண்டுகளில் சோவியத் இரசியாவி லிருந்து புறப்பட்டு, மழை, வெள்ளம், புயல் ஆகியவற்றின் ஊடாகப் பயணம் சென்ற ஓர் இராணுவ அதிகாரியின் பயணத்தை **அவை நாயகன்** அவர்கள் சுவைபட மொழியாக்கம் செய்துள்ளார்.

இயற்கையோடு இயைந்து வாழ வலியுறுத்தும் முன்னோடிப் படைப்பு என்பதாக இது அறிமுகமாகிறது. இப்படைப்பு, இருமுறை திரைப்படமாக உருவாக்கப்பட்டு உலகெங்கிலும் வாழும் இயற்கை ஆர்வலர்களைக் கவர்ந்துள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

பக்கங்கள் -- 415 விலை -- உரூ.300. தொடர்புக்கு -- 94430 22655 98420 47855. வெளியீடு - ஓசை பதிப்பகம், கோவை ☆


---

ராம் ராவ், மகாராஷ்டிராவில் உள்ள ஹிவாரா கிராமத்தில் வாழ்கிறார். அவர் எதற்காகத் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டார், அதன் பின்னரான அவரது வாழ்வு எப்படி இருந்தது, ஒரு விவசாயியின் அன்றாட வாழ்வு எத்தகையது என்ற அடிப்படைக் கேள்விகளின் ஊடாக விதர்பாவில் என்ன நடக்கிறது, உண்மையில் பருத்தி விவசாயத்தில் என்ன சிக்கல், ஒட்டுமொத்தமாக விவசாயத்தில் என்னதான் சிக்கல் என்ற கேள்விகளுக்கான விடையைத் தேடி ஆசிரியர் மேற்கொள்ளும் பயணமாக இந்த நூல் அமைந்துள்ளது.




நாக்பூரைச் சேர்ந்த பத்திரிகையாளரான ஜெய்தீப் ஹார்திகர், விவசாயிகளின் தற்கொலைகள் குறித்தும், பருத்தி விவசாயத்தில் உள்ள சிக்கல்கள் குறித்தும் பல ஆண்டுகளாக எழுதி வருபவர். அவரது இந்த முக்கிய நூலைப் **பூங்குழலி** அவர்கள் மிகச் சிறப்பாக மொழியாக்கம் செய்துள்ளார்.

பக்கங்கள் -- 306. விலை -- உரூ. 350.
தொடர்புக்கு -- 98400 70870. ☆





இயற்பியல் பேராசிரியரான இராசேசுவரி அம்மையார் இளங்கலை ( 1928 ) முதுகலை ( 1931 ) பட்டங்களில் சென்னை மாகாணத்திலேயே முதல் இடத்தைப் பெற்று, சாதி ஆதிக்கம், ஆணாதிக்கம் ஆகியவற்றை வீழ்த்தி, மிகச்சிறந்த அறிவியல் கட்டுரைகளை ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கு முன்பே தமிழில் எழுதிக்குவித்து முன்னோடியாகத் திகழ்ந்தவர். அக்காலத்தில் புகழ்வாய்ந்த தமிழ்த்தென்றல் இதழில் அவரது கட்டுரைகள் தொடர்ந்து வெளிவந்தன.

எளிய தமிழில் சிறந்த முறையில் எழுதப்பட்ட கட்டுரைகளை **கோ. ரகுபதி** அவர்கள் தொகுத்து இந்த நூலில் வழங்கி உள்ளார். தொகுப்பாசிரியர் ரகுபதி அவர்கள், இந்து சாதியக் கட்டமைப்பு, இதனால் சுரண்டப்பட்டு ஒடுக்கப்படும் சாதியற்றோர் குறித்து ஆய்வுக் கட்டுரைகளையும், நூல்களையும் தொடர்ந்து எழுதி வருவது குறிப்பிடத்தக்கது.

பக்கங்கள் --268 விலை -- உரூ.280. இரண்டு நூல்கள் வெளியீடு - தடாகம்

---




ஆங்கில முறை மருத்துவரான **சு. நரேந்திரன்** அவர்கள் மன்னர் சரபோஜி குறித்து மிக விரிவாக எழுதியுள்ள இந்நூலில், மன்னரது வரலாறு பற்றியும், மருத்துவம் / தொழில்நுட்பம்/ கலை ஆகியவற்றில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு பற்றியும் பல்வேறு தரவுகளின் அடிப்படையில் சுவைமிக்க செய்திகளைத் தொகுத்தளித்துள்ளார். தவிரவும், கிறித்துவம், இஸ்லாம் உள்ளிட்ட சமயங்களுக்கு சரபோஜி ஆற்றிய பணிகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் சரபோஜி மன்னரின் இறுதி நாள்கள் மற்றும் மராட்டிய அரசின் முடிவு ஆகியனவும் இதில் பதிவு செய்யப் பட்டுள்ளன.

ஆங்கில மருத்துவரான நரேந்திரன் அவர்கள், தமிழில் மருத்துவத்தைக் கற்பிக்க முடியும் என்பதில் அழுத்தமான நம்பிக்கை உடையவர்.தமிழ் பயிற்று மொழி / ஆட்சி மொழி குறித்து விரிவான நூல்களை படைத்தவர். இவரது ஆழ்ந்த ஆய்வுக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாய் இந்நூல் அமைந்துள்ளது.

பக்கங்கள் -- 304 விலை -- உரூ.380. வெளியீடு - என்சிபிஎச்., சென்னை

# வ உ சி யின் நூல்கள்

**வ.உ.சி.யின் நூல்கள்**

1. எனது பாடல் திரட்டு 2. மெய்யறம் 3. மெய்யறிவு
4. சுயசரிதை 5. எனது அரசியல் பெருஞ்சொல்
6. வி.ஓ.சி. கண்ட பாரதி

**பதிப்பித்த நூல்கள்**

1. திருக்குறள் (அறத்துபால்) மணக்குடவர் உரையுடன் 2. தொல்காப்பியம் (அகத் திணையியல், புறத் திணையியல்) இளம் பூரணர் உரையுடன் 3.தொல் காப்பியம் எழுத்ததிகாரம் ( உருபியல், உயிர் மயங்கியல் ) இளம்பூரணர் உரையுடன், 4. தொல் காப்பியம் பொருளதிகாரம் ( களவியல் முதல் செய் யுளியல் ஈறாக) வையாபுரிப் பிள்ளையுடன் இணைந்து 5. இன்னிலை

**உரையெழுதிய நூல்கள்**

1. திருக்குறள் (அறத்துப்பால்) 2. சிவஞானபோதம்

**மொழிபெயர்த்த ஜேம்ஸ் ஆலனின் நூல்கள்**

1. அகமே புறம் 2. மனம் போல் வாழ்வு
3. வலிமைக்கு மார்க்கம் 4. சாந்திக்கு மார்க்கம்.

இவை தவிர வ.உ.சி., தாம் வாழ்ந்த காலத்தில் பல்வேறு பத்திரிக்கைகளில் கட்டுரைகள் எழுதியுள்ளார்.

☆ ☆ ☆